உ

பரமபதிதுணை

அரிச்சந்திர நாடகம்.

இஃது

சிவகங்கை ம-ா-ா-ஸ்ரீ,

சிவசாமி அவர்கள்

-மதுரை அணஞ்சபெருமாள்பிள்ளை அவர்கள்

அழகிரிசாமி பாகவதரவர்கள்

நாடகமாடக்கூடிய

வர்ண மெட்டுகளுஞ் சேர்த்து.

மதுரை புஸ்தகஷாப்

மு. ஆவுடையப்பபிள்ளை

அவர்கள் விருப்பத்தின்படி

மதுரை, இ. ரா. ம

குருசாமிக்கோனவர்களால்

பூவிருந்தவல்லி,

சுந்தரமுதலியாரது,

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1897.

Registered Copy Right

OFFICE OF ... 6 - OCT 97 ... MADRAS.

உ

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் யாவருக்கும், அச்சுக்கூடத் தலைவர்களுக்குந் …
…படுவது யாதெனில்,—

மாறுகுடி ம-ள-ள-ஸ்ரீ, முத்துக்கிருஷ்ண உபா…
ரவர்களாலியற்றிய நாதன "அரிச்சந்திரநாடகம்" என்னும்
அலங்காரத்தை மதுரை. இ-ரா-ம "குருசாமிக்கோனாரா…
லல் அச்சிட்டு விலைக்கு ரிஜிஸ்தர் செய்திருப்பதால் இ…
கத்தை யாதாமொருவர் அச்சிடுவரேல் 1887 ஷு 25
ஆக்டு 20-வது பிரிவு 6-வது உட்பிரிவின் விதிப்படி
…கொள்ளும் நஷ்டத்திற்கும், பினால்கோடு செக்ஷன் குற்றத்திற்கு…
…ரவாளிகளாகவேண்டுமென்பதைக் கவனிக்கக் கோருகிறேன்.

இங்ஙனம்,

இ. ரா. ம. குருசாமிக்…

உ

இப்புத்தகத்தை அச்சிட்டுத் தரவேண்டுமென்று
நெடுங்காலமாகக் கேட்டுக்கொண்டு வந்த
கனவான்களின் பெயர்கள்.

ம-ள-ள-ஸ்ரீ, மதுரை-இராமாயணச்சாவடி கீழத்தெரு பஜனை…
,, க்கூடத்து ஏஜண்டு இருளப்பக் கோனாரவர்கள்
,, மதுரை தெ. தெரு ஆ-சி-இராமசாமிக்கோனார…
,, கல்லணை உபாத்தியாயர் முத்தழகரய்யங்காரவர்க…
,, மதுரையைச் சேர்ந்த காமாட்சிபுரம் பெரியா…
,, ளையென்னும் வீரபத்திர அம்பலகாரவர்கள்.

,, மதுரையைச் சேர்ந்த - ஆரப்பாளையம் - மூ…
ருட்டவேளார் மகன் மூக்கவேளாரென்னும் …
கருப்ப வேளார்வர்கள்,

,, மதுரை புதுமண்டபம் புஸ்தக ஷாப்
,, ச. முத்தையபிள்ளையவர்கள்.

,, ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூகா சுந்தர பாண்டிய…
க-மாரியப்பபிள்ளையவர்க…

,, தெ. சுந்தரபாண்டியத்தைச்சேர்ந்த அகத்தாபட்…
கா-இராமசாமித்தேவரவர்க…

,, சிவகாசியிலிருக்கும் ச-மாணிக்க நாடாரவர்கள்

உ

பரமபதிதுணை,

சிறப்புப்பாயிரம்.

இஃது

மதுரைஜில்லா மேலூர்த்தாலூக்கா கொட்டாம்பட்டி

மகா-ராஜ-ராஜஸ்ரீ,

மருதக்கோனாரவர்கள் குமாரராகிய

எம். கருப்பையாப்பாவலரவர்கள்

இயற்றியது,

நிலைமண்டில வாசிரியப்பா.

ார்பல தாமரைக் காடு பூத்துச்
சீர்தரு மந்தாரத் தேனின் றூங்கு
பார்க்கடல் நாப்பண் பள்ளிகொண்ட
சேற்கடக் கண்முலைத் தெய்வத் திருமின்
காதலன் மதனைக் காதல னாகப்
பூதலந் தன்னிற் புகழப் பெற்றோன்
உந்திபூத்த வொரு மலர் பூத்த
மந்திர மோற்று மாமறைத் தலைவன்
படைத்த கடல்சூழ் பாருல கத்தி
னிடைத்த னெழிலுக் கெதிரிலை யென்றே
உள்ளபஃறேயங் களுக்கொரு திலகங்
கள்ளவிழ் மலரிற் காரள மதுவை
யுண்டு பாடிட வொருநெடுந் தோகை
கொண்டு விரித்துக் குயில்காண மயில்கள்
ஆடித் திரியு மழகுயர் சோலைகள்
நீடித் திருக்கற் பகமொடு மேயங்
கொண்ட தெனத்த கும்புகழ் மாட்சியுங்
கண்டனன் சொன்னடைக் கண்டனம் வான்முலை
கண்டனன் கனுமோர் கண்டன மடைய
வண்டனந் தங்கெசட்டர் வான்குழல் காட்டும்
பள்ளிய ருடனே மதுக்குடி மள்ளர்கள்

சிறப்புப்பாயிரம்.

ஒள்ளிய வயலுள் ளுயரலங் கலினுற்
லம்பிட் டிழுமொலி சலஞ்சலவொலியோ
டிலகுற வாரியி னேழொலி யென்னத்
திகழ்த லான்மேகஞ் செறிந்து மயங்கும்
இகழ்[illegible]லின் மந்திக ளிரைச்சலில் வெருவித்
தெ[illegible]கி லொளிழிக்கத் தேங்காய்க் குலைகள்
அயிற்குயர் தேங்கா யடை மாங்கனியிற்
கதலிக் குலையிற் கனிமுட் பலவிற்
சிதறி விழலுந் தீங்கனி கனிபு
மது[illegible]டைந் தொழுகி வாரிப்பெருக்காய்
[illegible]துகுளங் கூவ மெனத் தெரியாமல்
மயங்கப் பெருகி மருதத் திணையிற்
[illegible]யங்க மணிபோற் பொலிசெங் நெற்கள்
விளையப் பாயும் விளம்பரு வளமார்
களையப் பாத்தி கழக்கொளுங் கோசலை
நாட்டினிற் றேவர் நகரும் நாணக்
காட்டி மாடங்கள் ககன மளாவிச்
சந்திர சூரியர் தம்மொளி மழுங்கத்
தந்திர வொளியாற் றுக்குந் தகைமை
அயோத்தி நகரத் தரசு புரிந்த
சுயோத்திற் கூறுஞ் சுருதி முறையின்
[illegible] கடவர் மனுகுல மன்னன்
கரம்புகல் கற்ப கத்தரு வென்னத்
தருங்கொடை யாளன் தரும வுருவான்
மருங்குடை வாளுறை வாங்கா நிபுணன்
சத்திய வானரிச் சந்திர ராஜன்
உத்தம வாய்மைக் கும்பொய் யினுக்கும்
உள்ளபெருமையு முணைக்கருஞ் சிறுமையுந்
தள்ளரு முலகத் தவரெலாங் கண்டு
கொண்டியத் தன்றனிக் குடைநிழ லரசும்
பெண்டும் பிள்ளையும் பெயர் வுறத் தோற்றுத்
தானும் புலையன் றனக் காளாகி
மானந் தனையே மதித்து மயானங்
காத்துல காண்டு காட்டிய கதையைப்
பார்த்தவர் சித்தம் பதியவே வீர

சிறப்புப்பாயிரம்.

ஆசுகவிமுன் னறைந்தது விருத்தமாய்ப்
பேசிட லாச்சென் பின்னோரிற் சிலர்
பகர்ந்து வெள்ளைப் பாவா னாலுஞ்
சகந்தனின் முன்னாரிச் சந்திர வரசற்
குற்றதை நேரி லுவந்து பார்க்கப்
பெற்றதைப் போலும் பேறிலை யென்றே
நாடகத் தார்க்கு நாடக மாக
நாடக மாக்கி நடித்துக் காட்டல்
மேன்மை யென்றுன்னி விளங்கிய கல்வியிற்
கோன்மை கொண்ட குணப்பெருங் கொண்டல்
நானா விதமாய் நவிலும் வளமார்
மானா குடிப்பதி வாழ்வுறுஞ் சீரான்
முத்துக்கிருஷ்ண முதல்வனுங் கழனியில்
நத்துக் குழாங்கள் நன் கனியாக
ஊர்ந்து குக்குஞ் சீரொளி மணிகளால்
தேர்ந்து வெண்மதியைச் சிரித்தலை யக்கும்
வளமா ரெழுமலை மன்னவர் மன்னன்
உளமா ரெழுமலைக் கோடெனக் கும்பலைச்
சாலவுங் கல்வியிற் றழைத்து வென்றோன்
பால கிருட்டினப் பண்பா வலனும்
பகர வொண்ணாப் பல்வள மோங்கிய
நகரம் வாழ் முத்துச் சாமி நாவலனும்
எப்பா வாகினு மிமைப் பிற்பாடும்
அப்பாவுக் கவி யருண்மழை முகிலும்
கொற்றவர் யாவருங் கொண்டாடத் தமிழ்
கற்றவர் களிலனே கர்களு மியற்றித்
தந்தன ரம்புவிஸ் தலைச்செய் வினைகுறி
உந்தி விளைத்தெய் யும் வகை யறியாத்
தன்மையேபோ லியற்றியத் தரவலா ரன்றி
நன்மையே யிசையொடு நடித்துப் பாடத்
தக்கவ ரலரோ தக்கவர் தாமே
அக்கவி ராஜர்கள் யாவரையும் யாங்
கண்டே மில்லை யாயினுங் கூறிசை
கொண்டே யமைந்த கோனிலா வத்தமிழ்
நாடகப் பாவை நன்றா யாய்ந்து

சிறப்புப்பாயிரம்.

நாடகத் தியார்க்கு நவிலைம் புலன்களும்
இன்ப மடைய விசையே ழிசைய
அன்பிரா கங்கட் கமரு தாளங்கட்
கெப்பே தங்களு மேரு வண்ணம்
ஒப்பே இதற்கென வுருகப் பாடி
ஆடிக் [illegible]ாட்டிய வநேகருள் வயல்செற்
சா[illegible] காட்டிய சாறுகள் பாய்ந்து
விளையு நல்வளமார் வேதிய ரேங்கல்
வளரு பு[illegible]மலை மன்னவர் திலகன்
சங்கீ தத்தின் றன்மையே வோருரு
வந்தெ[illegible]ண் டிங்கு வந்தது போலும்
வந்தவ னழகினின் மன்மத னனையான்
செந்தமி ழாய்ந்தவர் சினேக மறவான்
தவ[illegible]ற் றனதனுங் [illegible]னதாய் நிற்க
வினைத்திற் கினமா யிப்புவி வாழ்வோன்
தவசா மியமாய்த் தனையிற் பிறந்த
சிவசா மிப்பெயர்ச் சேமா னோடும்
மதுரைய தொழுகு மரைமலர்த் தடஞ்சூழ்
மதுரைப் பதித்தரு மதுரை யாறேன்
கங்கை குலத்தன் கல்வி நலத்தன்
சங்கையி லிங்கித சங்கீதத்தன்
சப்த சுரங்களுந் தவறு திங்கித
சப்தத்துடன் பார்த் தவர்கேட் டவரெலாம்
மயங்கப் பாடி வழுவிலா நல்லபி
நயங்கற் பனையொடு நடிக்கவும் வல்லான்
அணஞ்சிய பெருமா ளோடிய வள்ளலும்
மணஞ்செறி தண்டா மரையினிற் பிள்ளைச்
சங்கின முறங்கத் தாலாட் டுவபோல்
பொங்குசிர் வண்டினம் புறமுலாய்ப் பாடும்
அனந்தங் கருவென் றடைகிடந் தோங்கும்
அனந்தங் கதிர்வளை யார்ந்தா ரங்களைச்
சொரிகுளங் காவஞ் சுகமார் மேலைச்
சொரிகுள மென்னுந் தொன்னகர் வாழ்வோன்
தனதனும் வெள்ளைச் சாமி சகோதரன்
இளமுட னிராகத் தியல்பெலா மறிந்து
பாடவு மாடவும் பண்பு தெரிந்தோன்
வேட னழகினு மிக்கோன் கைக்கோர்
கொம்புச் சாமியைக் கும்பிடக் கும்பிடிங்

சிறப்புப்பாயிரம்.

தம்புச் சாமித் தயாள நிதியும்
ஒக்கு மூரில்லா வொக்கூர் சுப்ப
டக்குரி சிலுமா வனந்த வளமார்
மங்கலஞ் செறிய வளர்தரும் பட்ட
மங்கலஞ் செறியு மட்குலா லக்குலச்
சின்னத் தம்புச் செயசிம் மோரும்
பன்னுந் தமர்கள் பலருங் கூடிச்
சுதிமுறை யினிலெட் டுணைக் குறையா
ததிமகிழ் வாக ஆடிப் பாடி
கண்டவ ரமிக்கக் காட்டிய காட்சியைக்
கண்டோவ் வொருவருங் களறும் புகழ்ச்சிக்
கவிலை யன்றோ ரமைவுடன் பாடும்
வளமிகு விருத்தங் தருக்களை வாங்கி
ஒருங்கு கூட்டி யோர்புத் தகமாய்த்
தருங்குணங் கொண்டு தமிழா ராய்ந்த
வித்துவான் களையு மேற்பார்க்கச் செய்
தித்தகை யதனி லெழுதா வெழுத்திற்
பொருத்திப் பொறித்துப் புத்தக மாக்கித்
திருத்தி பெறவிச் செகத்தவர்க் கெல்லாந்
தந்தன னன்னோன் சற்குண மேரு
தஞ்சனம் நல்லறத் தாற்பா லிப்போன்
திருமால் பத்தியே செய்யவெஞ் ஞான்றும்
பெருமா லாகியே பிரபல சீமான்
துங்க நல்லாயர் மரபினிற் றோன்றித்
தங்கு மிராம சாமிக் குமரனன்
செய்தவப் பாலன் செந்தமி ழாற்றிரு
வெய்தவப் பாவலர்க் கீந்திடும் வள்ளல்
நம்பா லன்பும் நட்புங் கொண்டிங்
கம்பால் போல வண்மையுஞ் சீரான்
கற்றவ ருளம்வியக் கத்தரும் நூல்க
ளூற்றவை யெல்லா முகந்தச் சிட்டு
புத்தக மாக்கிப் புவியோர்க் கீயுஞ்
சித்தமிக் குடையோன் றிகழ்மதிக் குடையோன்
இம்மா னிலத்தோ ரேற்று பாகவத
அம்மானை முதல னேக நூல்களை
அச்சிட் டுதவிய வன்பனம் பொன்னுற்
கச்சிட் டியர்தாக் கலைக மட்டவா
ருங்குரு சாமியென் றுட்கொளு மதனை யொக்
குங்குரு சாமிக் கொற்றனன் றுணை.

உ

பரமபதிதுணை.

வி ள ம் ப ர ம்.

...தனடியில் கண்ட புஸ்தகங்கள் மதுரை புதுமண்டபம்பு...
கடை இ - ரா - ம - குருசாமிக்கோனுராகிய என்னிடத்தில் கி...
துக்கு பெற்றுக் கொள்ளலாம்.

		ரூ.	அ.
...னுபோகவயித்திய பிரம்மரகசியம் புத்தகம்	க-க்கு	,,	8
௸ இரண்டாம்பாகம்	க-க்கு	,,	8
௸ மூன்றும்பாகம்	க-க்கு	,,	8
௸ நான்காம்பாகம்	க-க்கு	,,	8
௸ நான்குபாகமும் ஒரேகட்டடமாய் வேண்டியவர்க்கு	க-க்கு	1	8
பாகவத அம்மானை செட்டு	க-க்கு	1	4
அழகர்வர்ணிப்பு	க.க்கு	,,	1
இராமாயணக்கும்மி	க-க்கு	,,	1
ஆ. மூக்கவேளாரவர்கள் அரிச்சந்திரநாடகம்	க-க்கு	1	,,
மாதர்நீதி அம்மானை	க க்கு	,,	4
...யம் சுந்தரிகலியாண அம்மானை	க-க்கு	,,	4
முத்துசாமி முனிவர். விஞ்ஞானதீபம்	க-க்கு	,,	8
சிவசாமி அரிச்சந்திரநாடகம்	க-க்கு	1	4
...வசாமி அழகேந்திரசபாநாடகம்	க-க்கு	1	2
மதுரை. அணஞ்சிபெருமாள்பிள்ளையவர்கள் புவனேந்திரன்நாடகம்	க-க்கு	,,	12
அபிமன்னன்சுந்தரிநாடகம்	க-க்கு	,,	4

வி. பி. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

பதில்வேண்டுவோர் ரிப்ளேகார்டு அனுப்ப...ண்டும்,

இப்படிக்கு,

☞ இ - ரா - ம - குருசாமிக்கோ...

புஸ்தகஷாப்பு புதுமண்டபம் ம...

விநாயகர்பிரவேசம்.

உ

பரமபதிதுணை.

அரிச்சந்திரநாடகம்.

விநாயகர் விருத்தம்.

ஆதவன் மரபிற்றோன்றி யயோத்தியா ளரிச்சந்திரன்றன்
காதையைப் புவியினாடகத்தமி ழாகப்பாட
மாதவ முனிவோரெல்லாம் வாழ்த்துதற் கருளும்ஞான
வேதநா யகனுயோங்கும் விநாயகன் காப்புத்தானே.

விருத்தம் - இராகம்-நாட்டை.

இந்திரன் சபையில்முன்னு விருமுனி வாதுகூற
வந்திடுஞ் சோதனைக்கு வாய்மொழி தவறாமன்னன்
அந்தணர்சூ ழயோத்தி யரிச்சந்திரன் கதையைப்பாட
கந்தவேள் தனக்குமூத்த கணபதி தான்வந்தா[illegible]

இராகம் - [illegible] - தாளம் - ஆதி.

பல்லவி,

மூஷிகவாகன [illegible]முகனே கருணை யபங்கர
மோதகசதுர்வேத போதகனே

அநுபல்லவி.

கோசிகமுனிபூஜிதசிவ கோல்மிகும்வடி வேலர்சகோதரா
குணனே பூத கணனே ஒற்றைக்
கொம்பனே உன்பதம் நம்பினேன் சம்பிரம (மூஷிக)

சரணம்.

சுந்தரிமீ னாட்சிபாலகா சித்திவி நாயக
துரந்தராவயிற் றைங்கரகோலாகல
சந்திரசேகரா நீலகண்டவா
சம்பாருளிய வும்பகனேதிவ்ய
சங்கரா வணி பொங்கரா கும்பத்
தடவி குடவி யருளி லாடிய (மூஷிக)

அப்பனேவல் லபைசமேதரா வேணுகோபால
னருமைமருக ஞானவசிகரா
மெய்யனேவரை தன்னிலெழுதும்
மேதினிபுகழ் நாதனேதிவ்விய
மிஞ்சுபூ ரண குஞ்சரா கன
விற்பனா வுற்பவ வற்புத கற்பக (மூஷிக)

குருக்கள்வருகிற - விருத்தம்.

திருமறைக்கியானமெல்லாஞ் சீரடிதொழுதோர்க்கீயும்
அரும்பொருளானஜோதி ஆண்டவன்விநாயகர்க்குப்
பரிவொடுநித்யபூஜை பண்ணவே வேதந்தேர்ந்த
குருமொழிமகவாநேசக் குருக்களுந்தோன்றினாரே.

இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

கண்ணிகள்.

கோவிற் பூசை செய்ய நல்ல
குருக்களையரும் தோன்றினரே
குருவா கனங் கொண்ட கணபதிக்
கண்டுவன் பூஜைகள் செய்வதற்கு
பாவனை யாகவே தான் வேதப்
பட்டரையரும் தோன்றினரே
பத்திய தாகவே தான் நெற்றியிற்
பரிவுடன் விபூதிகள் தானணிந்து
சுத்திய தாகவே தான் கழுத்தினிற்
றுலங்கிய ருத்ராக்ஷம் பூண்டுகொண்டு (கோவி)

பூஜைவிதி.

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
பிரஸந்ந வதநந்தியாயேத் ஸர்வவிக்நோபசாந்தயே.

கோமாளிவருகிற விருத்தம்.

சுந்தரராமஞ்சாத்தித் துலங்குதாழ்வடங்கள் பூண்டு
வந்திடும்பருத்தநொந்தி வயிற்றையுங்காட்டிக்கொண்டு
சிந்தையிலுயர்ந்தநார சிம்மம்போற்றுள்ளியாடிச்
சந்தமாய்விகடம்பேசச் சபையிற்கோ மாளிவந்தான்.

இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்.

பல்லவி.

நாராயணா ஹரி நாராயணா ஹரி
நாமந் தரித்தவரே நாராயணா

அநுபல்லவி.

கோவிந்தமே ஹரி கோவிந்தமே ஹரி
கோபாலகிருஷ்ணா ஹரி கோவிந்தமே

சரணம்.

கோவிந்தமென்றுசொல்லிக் கொச்சிக்குப்போகையிலே
கோடாவிபட்டபுண்ணும் ஆராதையா

மகுடம்.

...ட்டுத்துளசியை வெட்டுவா ராம்பெருமாள்
கழுத்திலேதாழ்வடங்கள்போடுவா ராம்பெருமாள்
மலையிற்றுளசியைவெட்டுவா ராம்பெருமாள்
பாரப்புத்தாழ்வடங்கள்போடுவா ராம்பெருமாள்
அந்தமலை கோவிந்தமலை
சோணகிரிப்பத்த ருடுமலை

வேறுமெட்டு.

தஞ்சாவூருச் சந்தைக்குப்போனேன் சந்தமாமா நா
சாகிறகிழவியைக் குத்திப்போட்டேன் சந்தமாமா

சிவசாமி அவர்கள்

கும்பகோணஞ் சந்தைக்குப்போனேன் சந்தமாமா அங்கே
குமரியைக்கண்டு ஓடிப்போனேன் சந்தமாமா

இருட்டுவீட்டிலே யிட்டியிருந்தது சந்தமாமா நா
னெடுக்கப்போனேன்கடிக்கவந்தது சந்தமாமா

எட்டுநாள்முன்செத்தபாம்பைச் சந்தமாமா அந்த
யெட்டிநின்றுகுத்திப்போட்டேன் சந்தமாமா

ரெண்டாட்டுக்கு எட்டுகாலு சந்தமாமா என்
பெண்டாட்டியைக் கேட்டுப்பாரு சந்தமாமா

என்னைப்போலே சேவகனில்லே சந்தமாமா யிதோ
உன்னைப்போலே கோளையுமில்லே சந்தமாமா

நாடகசாலைப்பெண் விருத்தம்,

ஆடகப்பணிகள்பூண்டு அற்புதமலர்கள்சூடி
சூடகங்காரைசுட்டித் தொங்கலுமிகவணிந்து
பாடகங்காலிற்றண்டை பற்பலபணிகள்பூண்டு
நாடகசாலைப்பெண்கள் நலமுடன்வருகின்றாரே.

இராகம்-உசேனி, ஆதிதாளம்.

பல்லவி.

வந்தார் மதனப்பெண்கள் வந்தார் அந்தமதாகவே
வந்தார் மதனப்பெண்கள் வந்தார்

அனுபல்லவி,

பந்தாடு முலைதனிற் பவளமணி துலங்க
விந்தையுட னடந்து வேடிக்கையாகவே (வ)

சரணம்,

சந்தா மரைமலர்போற் றிங்கள்முகந்துலங்க
ந்தரத் தோகையர்கள் வந்து நடனஞ்செய்ய (வந்)

நெற்றியிற் றிலதப்பொட்டு நீள்விழிக்குமையுமிட்டுத்
ந்தைமொழி வீணையுண்டு தம்புருகையினிற்கொண்டு (வந்)

முத்துநவரத்னமணி வர்ணமுணி மார்பிலஞ்சக்
கொத்துச் சரப்பளியின்னக் கொந்தளப்பொன்மேலேதுன்ன (

கட்டியக்காரன் விருத்தம்.

உச்சியிற் சிகையுங்கட்டி யொருகையில் கோலுங்கொண்டு
வச்சிர முண்டாசுகட்டி மார்பினிற் பதக்கமின்ன
அச்சமில்லாத மன்ன னரிச்சந்திரன் வாசல்காக்கும்
மெச்சிய கட்டியக்காரன் விருதுடன் கொலுவில்வந்தான்.

இராகம்-காம்போதி, ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரனும் வந்தானே மகாராஜன்வாசற்
காரியக்காரனும் வந்தானே

அநுபல்லவி.

கட்டியக்காரனும் வந்தான் கைதனில் பிரம்புகொண்டு
மட்டிலாப் புகழ்படைத்த மன்ன னரிச்சந்திரன்வாசற் (க

சரணம்.

...மாய்த் திருநாமமிட்டுச் சரிகை முண்டாசுகட்டி
...டுக்கம்பிச் சோமன்ரெண்டு பதக்கமார்பினிற்கொண்டு (க

அட்டதிக் குலாவும்புக ழருளுஞ் சமுகம்நாடித்
திட்டமாய் விருதுகூறிச் செயஞ்செயமென்றுபாடிக் (க

கண்டத்திற் சரங்கள்தொட்டுக் கைக்குமோதிரங்களிட்டு
அண்டர்களுந் தானதிர அதட்டி மிரட்டிக்கொண்டு (க

கட்டியக்காரன் வசனம்.

இவடத்தில் ஆர்வோய் இருக்கப்பட்டவர்கள் இங்குநாட்டி...ன்ன கூட்டமென்னவோய் நம்முடைய இராஜாதிராஜன் இராஜகெ...பீரன் இராஜ கோலாகல னாகிய அயோத்தியா புரியை யாளப்பட்...திரிசங்கு மகாராஜாவின் குமாரன் சத்தியவாக் கரிச்சந்திரன் கொ...வுக்கு வருகிறபடியால், ஆட்டுமுட்டை கோழித்தயிர் ஆட்டுக்கு புல்லுகட்டு குதிரைக்கு விறகுக்கட்டு எச்சரிக்கையாக யிருக்க...ணும் வோய் நாய்க்கு கோணவால் நரிக்குச் சூத்திலேவால் ஓய்.

தேவேந்திரன்சபை.

உ

பரமபதிதுணை

இந்திரன் சபை.

தேவேந்திரன் விருத்தம்.

சந்திரன் குடைநிழற்றத் தையலர் கவரிவீச
மந்திரப் பிராமணர்கள் மாதவம் புரிந்துநிற்கச்
சுந்தர மாகத்தானே சொர்ண பீடத்திருக்க
இந்திர ராஜன்றானு மியல்புடன் கொலுவில்வந்தான்.

இராகம்-எதுகுலகாம்போதி, தாளம்-ஆதி.

பல்லவி.

ராஜ ராஜ ராஜ ராஜன் தேவேந்திரன்
ராஜன் கொலுவில் வந்தானிதோ (ரா

அநுபல்லவி.

தேச தேச நேச தேசனேதேவேந்திரன்
திரன் கொலுவில் வந்தானிதோ (ராஜ

சரணம்.

மத்தள தாளங்கள் முழங்கவே நல்ல
மங்கள வாத்தியம் விளங்கவே
சித்திரக் கவுரிகள் வீசவே நல்ல
தெய்வ ரம்பையர்க ளாடவே (ராஜ

மேனகை திலோர்த்தமை யூர்வசி யிந்திராணியும்
விசித்திக ளொருபுரம் வீசவே
வானவர்க் கரசனுந் தேவேந்திர ராஜன்
வந்து கொலுவதனி லிலங்கவே (ராஜ)

விருத்தம்

கட்டுமெட் டேனேராஜன் கனகசபை கொலுவில் வந்து
துஷ்டரை யடக்குந்தெய்வ துந்துமி முழங்கும்போது

சிவசாமி அவர்கள்.

வட்டமாய் வசிஷ்டர்விஸ்வா மித்திரர் மகிழ்ந்துகேட்டு
சட்டமாய்த் தெய்வலோகஞ் சடுதியில் வருகின்றானே.

வசிஷ்டர் விருத்தம்.

நீதியாய்ச் சடையுங்கட்டி நிறையவே நாமஞ்சாத்தி
நீதிலா முந்நாலோடுநிருத்துழாய் மார்பிற்பூண்டு
போதவே தெண்டுங்கொண்டு புகழ்கமண் டலமுமேந்தி
மாதவம்புரியும்வேத வசிஷ்டருந் தோன்றினாரே.

இராகம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

பல்லவி.

வசிஷ்டர் வந்தாரே சபைதனில் வசிஷ்டர் வந்தாரே

அநுபல்லவி.

வசிஷ்டர் வந்தாரே வானோர் சபைதனில்
மார்பு நிறையத்துழா ஹாரமணி யணிந்து (வசி)

சரணம்.

கையிற் செபமாலையுங் காவிவஸ்திரம் பூண்டு
மெய்யான மாமுனி விந்தையதாகவே (வசி)

பூமி புகழுந்தே வேந்திரன்சமுகத்திற்
புகழுமா முனியுடன் அகமகிழ்வாகவே (வசி)

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

பிரியமாய்ப் புலித்தோல்சாத்திப் பிரபலம் யாவர்காண
அரியவெண் ணீறுபூசி யானதோர் மகுடஞ்சூட்டி
ஒருகையில் தெண்டுங்கொண்டு வுயர்கமண் டலமுந்தாக்கி
விரிசடை யிலங்கவிஸ்வா மித்திரர் வருகின்றாரே.

விஷ்வாமித்திரர்-வருகிற-தரு

கண்ணிகள்.

பாதமுப்புரி நூலுஞ்சடையும் பஞ்சாட்சரமும் பரிவுடனே
வேதமான ஓதமோதி விஸ்வாமித்திரர் தோன்றினார்
முருக்கிப்படர்ந்த சடைகளாட முப்புரிநூலுந் துலங்கவே
வெரிக்கப்பார்த்த பார்வையுடனே விஸ்வா மித்திரர் தோன்றினார்

அரிச்சந்திரவிலாசம்.

தேவேந்திரன் வசனம்.

அகோவாரும் முனீந்தர்களே நமக்கு வெகுகாலாய்க் கேட்கவேணுமென்ற வியாபகமொன்றுண்டு பூலோகத்தில் மானிடராய்ப் பிறந்தவர்களுக்கு தயை சத்தியத்தோடும் பொய் சொல்லாதவர்களுண்டோவென்ற சந்தேகம் அதாவது.

தேவேந்திரன்-விருத்தம்.

முனிவரே சொல்லக்கேளீர் மூன்றுலோ கத்தின்மீது
தனிவனைங் காதபேர்கள் தரணியிற் கண்டதுண்டோ
நினைவிலுங் கனவிலும்பொய் நாவிலு முரைத்திடாத
மனிதரு முண்டோபார்த்து மகிழவே யுரைசெய்வீரே.

வசனம்

வாருங்கள் முனிநாதர்களே இந்த அண்டத்தில் பொய் சொல்லாத மனிதனைக் கண்டிருப்பீர்களா முனிநாதர்களே.

வசிஷ்டர்-விருத்தம்

மாதவந் தனில்மிகுந்த மாமுனி வசிஷ்டர்சொல்வார்
ஏதமில் லெனதுசிஷ னியல்புட னயோத்திவாழும்
ஆதவன் குலத்துதித்தோ னரிச்சந்திர ராஜனென்போன்
பூதலந் தனிற்பொய்வார்த்தை புகன்றிடா னொருவன்றானே.

வசனம்.

கேளுந் தேவேந்திர மகாராஜனே பூலோகத்திலே அழகு மிகுந்த அயோத்தியாபுரியை யாண்ட திரிச்சங்குராஜாவின் குமாரனென்னுடைய சீடன் அரிச்சந்திரன் சத்தியந்தவறான் பொய்சொல்லான். சிவபூஜை, விஷ்ணுபூஜை, குருபூஜை, மறவான் குடிகளில் ஆறிலொருகடமை வாங்கி ராச்சிய பரிபாலனஞ் செய்கிறான் மகாராஜனே.

கௌசிகமுனிவர்-விருத்தம்

வஞ்சனை கபடமார்க்கம் வகுத்திடும் விஸ்வாமித்திரன்
நெஞ்சினிற் புகைப்பதைத்து நிருபர்முன் னேதுசொல்வான்
மிஞ்சியே வசிஷ்டர்சொல்லே மெய்யெனநினைக்கவேண்டாம்
அஞ்சிடா துரைக்கும்பொய்க்கு வரிச்சந்திர னொருவன்றானே.

முனிவர்கள் சபை.

வசிஷ்டர்.

விஸ்வாமித்திரர்.

கௌசிகமுனி-வசனம்.

அகோகேளும் தேவேந்திர மஹாராஜனே இப்போதிந்த
டையிலுள்ள தேவர்களெல்லவரு மெய்க்க வசிஷ்டன் அந்த அ
சந்திரனைப் புகழ்ந்துசொன்னான் நீரும் ஆனந்தத்தோடு மெச்சி
அவ் வரிச்சந்திரனோ நாளொன்றுக்கு எண்ணியொருகோடி
னும லொருகோடி பொய் சொல்லப்பட்டவன் அவனைப்போ
பொய் சொல்லப்பட்டவன் இந்த பூலோகத்தி லில்லை தேவே
ரமகாராஜனே.

வசிஷ்டர் விருத்தம்

கவுசிக முனியேகேளாய் கனவிலும் பொய்கள் சொல்லான்
தவநெறி பெரியோருக்குந் தரணியி லுள்ளபேர்க்கும்
அவமது நாவிற்கூறா னரிச்சந்திர னொருவனல்லாற்
புவியிந்திர னொற்கூறுன்றிற் பின்னைவேறில்லைகண்டாய்.

வசனம்.

சேளும்பிள்ளாய் விஸ்வாமித்திரா என்னுடையசீஷன் அ
சந்திரனென்பவன் எள்ளளவாகிலும் பொய் சொல்லான் ஏன்
விற்பேசுகிறாய் அப்பாலே போம்பிள்ளாய் விஸ்வாமித்திரா.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் வசிஷ்டர் விஸ்வாமித்திர ரிருவரும், ஒரு
கொருவர் முன்னுள்ள விரோதத்தினால் விதர்ப்பமாகப் பேசிக்
டிருக்கிற சமையத்தில் தெண்டு, கமண்டலம், வீணை, புஸ்தக
ரியாய்ப் புலித்தோல் சாத்திக்கொண்டு சடாமகுடம் பிரகாசி
தேவேந்திரமஹாராஜன் சபையைநாடிவந்தார் நாரதமகாமுனிவர்.

நாரதர் விருத்தம்.

கரந்தனில் வீணைதம்பூர் கமண்டல மிலங்கவென்று
சிரமதில் மகுடம்பூண்டு சிறுபுலித் தோலுஞ்சாத்திப்
பரிந்துமெய் நிறைந்தபூச்சும் பார்த்தவர் திகைத்துநிற்கப்
புரந்தரன் சபையைநாடிப் புண்ணிய நாரதர்வந்தாரே.

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ஆதி.

பல்லவி.

திரிலோகசஞ்சாரி மா தேவர்கள்யாவர்களுக் குபகாரி-

அரிநாராயண — னடிகளைக்கோதி
யனுதினம் பஜனைசெய் — தானந்தமீறிப்
பெரியவனென நா — ரதமுனிகூறிப்
பிரணவசொரூபத்தை — மனந்தனிற்றேறி (இரி)

சரணம்.

மெய்யினி லணிதிரு — நாமமுந் துலங்க
வீணை வாத்தியமுங் — கரமதி லிலங்க
ஐயமில்லாமல் தெண்டுங் — கமண்டல மிலங்க
அணிந்து வந்தனரென் — றனைவருங் கலங்க (இரி)

செஞ்சடைமுடி கனுநு — செபருத்திரமுங்
திருத்துளபத் தாமரை — மணிகளின்சரசமும்
மிஞ்சு மரவுரியா — சனங்களின் மரமும்
விளங்க வந்தாரேயார்க்குந் — தருபவர் வரமும் (இரி)

நாரதர் விருத்தம்.

வீரக்தாம் புனிதமான நீடிய தவத்தாய்போற்றி
புரந்தரன் சபையின்முன்னே சிஷனைப் புகழ்ந்துகொண்டாய்
அருந்தவ முனிவசிஷ்டா வாசனே பொய்மொழிந்தால்
பொருந்தநீ செய்வதென்ன பொற்புடன் புகலுவீரே.

நாரதர் வசனம்.

நெடிய தவத்தையுடைய வசிஷ்டமகா முனிவரே தேவேந் திரன் யாவரும் ஒப்புக்கொள்ளும்படி சிஷனைத் தோத்திரம பண் ணித்தலைப்பட்டீர், அந்த அரிச்சந்திரனெனவன் பொய்சொன்னால் நீ ரென்னசெய்வீர், அந்தச்சபதத்தை யெனக்குந் தெரியும்படி சொ ல்லும் வசிஷ்ட மகாமுனியே.

வசிஷ்டர் வசனம்.

அகோ நாரத மகாமுனிவரே யென்னுடைய சிஷன் அரிச்ச ந்திரன் பொய்யுரைக்க மாட்டான், அது திண்ணந்தான், ஆகை யால் உறுதியாகச் சொல்கிறேன், நாரதமகா முனிவரே.

நாரதர் வசனம்.

ஓ! வசிஷ்ட மகா முனிவரே, அரிச்சந்திரன் ஒருக்காலும் பொய் சொல்லமாட்டான் நீர் யோசிக்கவேண்டியதில்லை வசிஷ்டரே

அரிச்சந்திர நாடகம்.

வசிஷ்டர் வசனம்.

ஓ! நாரதமகாமுனிவரே இந்தஅரிச்சந்திரன் ஒருக்காலும்
சொல்லவே மாட்டான் அதுமேக்கு நன்றாய்த்தெரியும்.

இராகம்-பந்துவராளி-சாப்புதாளம்.

கௌசிகமுனி சொல்லல்

கண்ணிகள்.

நீயென்னடா வசிஷ்டா உந்தன்சிஷன்
நிசவா னென்று சொன்னாய் இ
காயகம் பேசாதே தேவர்சாட்சியாகக்
கபடுசெய்விப்பேன் கண்டாய்

வசிஷ்டர்சொல்லல்.

செய்விப்பே னென்றுசொன்னாய் விஸ்வாமித்திரா
திரிமூர்த்தி யாகிலுந்தான் அவ
அபத்தமொன்று பேசவைத்கா லுனக்கு
அடப்பமுங் கட்டுவேண்டா ந

கௌசிகர் சொல்லல்.

திரிச்சங்கு வுன்சிஷன் வீர சொற்கஞ்
சேரவே வேணுமென்றான் அவ
பிரிதிசொற்கஞ் சேர்த்துப் பெருமுண்டாகிய
பெருமையை யறிவேன் கண்டாய்

வசிஷ்டர் சொல்லல்

அறிவே னறிவேன்கண்டாய் விஸ்வாமித்திரா
ஆண்மையும் சௌரியமும் எங்
திரிச்சங்குமைக்கனே நாவுதவறச்செய்தால்
ஜெயமுனக் காகுங் கண்டாய்

கௌசிகர் சொல்லல்.

ஆகுங்கண்டாய் வசிஷ்டா வேண்டிய
அவஸ்தைகள் செய்துவைப்பேன் இகே
சேவகமாயோடிநானுன் சிஷன்றன்னையே
விகற்பமுஞ் செய்யவேண்டா

வசிஷ்டர் சொல்லல்.

ண்ணிப்பண்ணிப் பாரடா விஸ்வாமித்திரா
பாரடா சௌரியத்தை இங்கு
ர்ணயமாய்ச் சொன்னேன் தேவர்சாட்சியாக
நீதலே சாயப்போராய்

கௌசிகர் சொல்லல்.

ாடா போடாவென்கிறாய் வசிஷ்டா
மங்கை யருந்ததியாள் உடன்
ிழிகாலமா யவ ளொச்சிதின்றவன்
நீதலே சாய்க்கப் போராய்

கௌசிகர் விருத்தம்.

ரகுவே ளிப்போடாலு மிந்திர கோவெசாட்சி
வேகமா யோடிகாலும் வேண்டிய வுபாயத்தாலே
ரகமாய்ப் பறக்கச்செய்து கடுகுபொய் யுரைக்கா விட்டாற்
ாகமாய்த் தவசிற்பாதி பகர்ந்துயா னளிப்பேன்கண்டாய்.

வசனம்.

அகோவாருந்தேவேந்திர மகாராஜனே இப்போது இந்தவசி
-டனவன் இந்த மகாசபையின்முன்பாகச் சபதங்கூறினானல்ல
ஆனாலிருக்கட்டும் யிந்தக்ஷணமே பூலோகத்திற்சென்று அந்த
ரிச்சந்திரனுடைய வாக்கினால் அணுவளவு பொய்யாவது கிரகி
மற்போவேனாகில் நான் செய்த தவத்தில் பாதி அந்த அரிச்சந்
னுக் கீய்ந்துவிடுவேன் தேவேந்திர மகாராஜனே.

வசிஷ்டர் விருத்தம்.

அன்றுதான் விஸ்வாமித்திர னரிச்சந்திர னிடத்திலேதான்
சென்றவன் கபடினாலே பொய்ச்சொலச் செய்வானாகில்
ஒன்றும்பேசாமலிந்த வுலகினில் வராமலேதான்
இன்றுமே யிவடம்விட்டு யேகுவே னேகுவேனே.

வசிஷ்டர் வசனம்.

கேளாத் தேவேந்திர மகாராஜனே இந்த விஸ்வாமித்திரனா
ன் என்னுடைய சிஷனரிச்சந்திரனை யணுவளவாவது பொய்சொ
லும்படி செய்வித்தால் என்னுடைய தவவேடத்தைவிட்டு வடத்

தைப் பூணல் நூலாகத்தரித்து நாயோட்டிற் சுராபர்ன மேந்திக்கொ
ண்டு இவடம்விட்டு இப்போதே தெட்சணம் போகிறேன் தேவே
ந்திரமகாராஜனே.

வசிஷ்டர்-விருத்தம்.

இந்திரா யிதற்குச்சாட்சி இமையவர் முனிவர்மூவர்
கந்தரு வாளேசாட்சி கருத்து மாதவரேசாட்சி
தந்திர விஸ்வாமித்திரர் சபதமும் நான்முன்சொன்ன
முந்திய சபதவார்த்தை முறையறி வீர்கள்சாட்சி.

தேவேந்திரன்சொல்-விருத்தம்

இருவரில் யார்தான்பொய்யர் யெவர்களுங் களுக்குமேலோர்
நரபதி யரிச்சந்திரன்றன் நன்னிலை யறியவேதான்
விரவினிற் றெரியவேண்டும் விளக்குமா தயங்களபேசிச்
சரிசொன்னோர் கெலிக்கவேணுந் தவறினோர் தோற்கவேணும்.

வசனம்.

உங்களிருவர்களிலே யார்தான் கெலிக்கிறீர்களோ தோற்கிறீர்க
ளோ பார்ப்போம், முன்பேசிய சபதப்படிக்கு நடந்துக் கொள்ளுங்க
முனிவர்களே.

பொது - வசனம்,

இப்படியாக கௌசிகரும், வசிஷ்டருஞ், சபதம்பேசி முடிவுசெய்
துக்கொண்டு வசிஷ்டரை தேவலோகத்தி லிருக்கும்படி செய்துவிட்டு
கௌசிகர் பூலோகத்துக்குப் புறப்பட்டுவந்தார்.

தரு.

ராஜரு முனிவரும் நடந்து தொடர்ந்தனரே
முனிவரு மிராஜரு முடுகி நடந்தனரே
மாதவர் யாவரும் மகிழ்ந்து நடந்தனரே
தேவர்கள் யாவருஞ் சேர்ந்து நடந்தனரே

இந்திரசபை - முற்றிற்று.

விருத்தம்.

மன்னவர்கள்கோடிலட்சந் தளங்கள்சூழ
வர்த்தனையாய்த்தர்மநெறி தழைத்துவாழ

சிவசாமி அவர்கள்

அன்னநடை யரம்பையர்கள் கவரிவீச
  அணியணியாய் மந்திரிமா ரருகில்நிற்க
மன்னர்மன்னர் பதம்பணியும் ராஜபோஜன்
  மண்டலமேல் லாமரசு செலுத்தும் வேந்தன்
தென்னவனு மரிச்சந்திர ராஜராஜன்
  சிறப்புடன் சிம்மாசனத்திற் கொலுவிருந்தான்.

இராகம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

ராஜ ராஜமக ராஜனு மரிச்சந்திரன்
  ராஜன்கொலுவில் வந்தானிதோ
தேசதேசம்புகழ் தீரனு மரிச்சந்திரன்
  திக்கிலுள்ளோர் புடைசூழவே
அங்கதேசமுத லரசர்களெல்லோரும்
  அணியணியாய்வந்து சூழவே
மச்சதேசத்தாரும் கொச்சிதேசத்தாரும்
  வந்துபகுதியுடன் வணங்கவே
நித்திமத்தளமொடு கைத்தாளமுகவீணை
  யொத்துப்புள்ளாங்குழ லூதவே
வேகமுடனருகில் விருதுகட்டியங்கூற
  வேதியர்காப்புடை சூழவே
அணைடையில்மந்திரி யருமையாம்மைந்தனும்
  அழகுசந்திரமதி கூடவே

சந்திரமதி-விருத்தம்.

அன்னம்போல் நடைதான்கொஞ்ச வருஞ்சிலம் போசையாட
னெரி மேள்தாளங் கீர்த்தனை ராகம்பாட
பொன்னக ரயோத்தியாளும் புகழரிச் சந்திரராஜன்
தன் இஷ்ட மனைவியான சந்திரமதி வந்தாளே,

இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி,

சந்திரமதியும் வந்தாளே சபைதனிலே
சந்திரமதியும் வந்தாளே

இராஜசபை.

கட்டியக்காரன்.   லோகிதாஸன்.   அரிச்சந்திரன்.   சந்திரமதி.   சத்தியகீர்த்தி.

அநுபல்லவி.

சந்திரமதியும்வந்தாள் தன்மகனைக்கூட்டிக்கொண்டு
இந்திராணிபோலவேசுந்த ரேந்திரைமாதுதானும் (சந்)

சரணம்.

செந்தாமரைமலர்போற் திங்கள்முகந்துலங்க
சுந்தரத்தோகையர்கள் வந்துகவரிவீச (சந்)

விருத்தம்.

சீருலவுகோசலநா டுடையமைந்தன்
திரிசங்குதவத்தினுல் வந்தபாலன்
பாருலகையொருகுடையி லாண்டதீரன்
பார்த்திபனுமரிச்சந்திர ராஜபோஜன்
வாருலவு அழகுசந்திர மதியும்பிள்ளை
வந்தருகில்வணங்கியவர் தொழுதுநிற்கப்
பேர்பெருகும் கொலுமாடந் தன்னிலேதான்
பெருமையுடன்வீற்றிருந்தான் கொலுவிற்றனே.

இராகம் - ஆரபி, ஆதிதாளம்.

பல்லவி.

வந்தார்பாரீர் அரிச்சந்திரன் வாரார்பாரீர்

அநுபல்லவி.

வந்தானரிச்சந்திரன் மண்டலாதிபதி
அந்தமானசந்திர மதியும்லோகிதன்கூட (வந்)

சரணம்.

அயோத்தியாரு மரிச்சந்திரமகாராஜன்
மைக்குழலாள்சந்திர மதியும்லோகிதன்கூட (வந்)

காமன்ரதிபோலே கலந்து இருபேரும்
கண்மணிலோகிதன் பின்தொடர்ந்துவர (வந்)

மாதமுன்றுமழை மாரிபொழியவும்
மனுநீதிகவறாமற் காருபாருசெய்ய (வந்)

இராஜா-வசனம்.

ஆகோவாரும் பிள்ளாய் மந்திரி நம்முடைய நாடகசாலை மோகினிப் பெண்களைத் தருவித்து நடனமாடச்சொல்லும்பிள்ளாய் மந்திரி.

நாட்டியப்பெண்கள் நடனமாடல்.

லோகிதாஸன். சந்திரமதி. அரிச்சந்திரமகாராஜா. நாட்டியப்பெண்கள்.

சிவசாமி அவர்கள்.

மந்திரி-வசனம்

அப்படியே தருவிக்கிறேனையா சுவாமி.

மந்திரி-விருத்தம்

கட்டியக் காரா கேளாய் கடுகியே நீயுஞ்சென்று
பட்டவர்த் தனர்களோடே பரிவுடன் யாவருந்தான்
இஷ்டமாய்க் கொலுக்கூடத்தி லிருக்கிற சென்றுசொல்லி
சட்டென நடனமாதர் தனையுமழைத்துவாராய்.

வசனம்.

அசோ வாரும்பிள்ளாய்க் கட்டியக்காரா நம்முடைய நடனம
ர இப்பொழுதுசென்று அழைத்துவாரும் பிள்ளாய்க் கட்டிய
ரா.

கட்டியக்காரன்-வசனம்

அப்படியேசென்று அழைத்துவருகிறேனையா சுவாமி,

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி,

பல்லவி,

மோகினிப் பெண்களும் வந்தாரே நடனமாட மோகினி

அநுபல்லவி.

மோகினிப்பெண்களும்வந்தார் மூக்குத்தி பளபளெனக்
கோகிலம்போற்கீதம்பாடி கோணமலர்ச்சூடி (மோகி)

சரணம்.

செங்கையில் வளையல்பூண்டு சீவிமுடித்துக் கொண்டு
பங்கயமுகமிலங்க பாதசரங் காலிலங்க(மோகி)

முத்துமாலை மார்பிலங்க மோகன மாலைதுலங்க
நெற்றிதனிற் பொட்டிலங்க நீள்விழிக்கு மையிலங்க(மோகி)

இராஜா-வசனம்.

ஆனால் வாரும் பிள்ளாய் மந்திரி நம்முடைய நாடகசாலைப்பெ
ண்களுக்கு வேண்டிய திரவியங் கொடுத்து அனுப்பிவையும் பிள்
ளாய் மந்திரி,

மந்திரி-வசனம்,

அப்படியே அனுப்பிவிக்கிறேனையா சுவாமி.

மல்லசெட்டிகள் வருகிற-விருத்தம்.

கல்லுட னிரும்பையெல்லாங் கரைத்துநீர்த் தூளியாக்கும்
வல்லவ ருருமந்த மதங்கொண்ட கெஜங்கள்போலே

வெல்லவே விருதுகட்டி விசையரிச் சந்திரன்முன்னே
மல்லக செட்டிமார்கள் வாகுடன் றோன்றினரே.

இராகம் பந்துவராளி, தாளம்-சாப்பு.

பல்லவி.

செட்டிகள் வந்தாரே மல்லக செட்டிகள் வந்தாரே,

அநுபல்லவி;

செட்டிகள் வந்து அதட்டியே பின்றொடை
தட்டிப் புஜங்களைத் தாவித் தாவிக்கொண்டு(செ

சரணம்.

ஏறவிறங்கப் பார்த்து யெதிர்த்தோர் சென்னியைப்பேர்த்து
கூறுங்கை வாங்கிக்கோர்த்துக் கொட்டமிட் டாடிவேர்த்து (செ
சட்டி வயிறுங்கொண்டு சமரெதிர்ப்பாரோவென்று
முட்டிக் காலுங்கையுமாக ... மூன்றொடைதட்டிக்கொண்டு (செ
நீரவே நாமமிட்டுச் சிறப்பாய்ச் சல்லடங்கொட்டுத்
தாருமாறாய்ப் பேசிக்கொண்டு தாவியுலாவிக்கொண்டு (செ

இராஜா-வசனம்.

ஆனால் வாரும் பிள்ளாய் மந்திரி மல்லகசெட்டிகளை நம்முடை யசமுகத்தில் மல்யுத்தஞ் செய்யச்சொல்லும் பிள்ளாய் மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே செய்யச்சொல்கிறேன் சுவாமி.

அகோவாரும் பிள்ளாய் மல்லகசெட்டிகளே உங்களுக்கு என னென்ன விளையாட்டுகள் தெரியும் யுத்தஞ்செய்யத் தெரியுமா,

செட்டிகள்-வசனம்.

நாங்கள் கூடுவிட்டுக் கூடுபாய்வோம் எவனாவது யிளைத்தவ வந்தால் மல்யுத்தஞ் செய்வோம் கம்படிக்குக் காதவழிக்கப்பால் று சண்டைசெய்வோம் இன்னம் பிரபலமான வேலைகளெல்லாஞ் செய்வோம்.

மந்திரி-வசனம்.

ஆனால் வாருஞ் செட்டிகளே இந்தஇராஜசமுகத்தில் ஒவ்வொ றாகச் செய்யும்பிள்ளாய் அப்படியே செய்தாய்விட்டது நாங்கள் ன்பார்க்கவில்லை மகாராஜர்பார்த்தார் கலிதீர்ந்துவிட்டது,

இராஜா - வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மந்திரி மல்லகசெட்டிகளுக்கு வெகும
ாடுத்து அனுப்பிவையும் பிள்ளாய் மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே அனுப்பிவைக்கிறேனையா சுவாமி.

தேசவிசாரணை.

இராசா விருத்தம்,

சத்திய கீர்த்திகேளாய் தாரணியிந்தேதியெல்லாம்
நித்திய மாகவந்து நீயெனக் குரைத்திடாமல்
வெத்திசே ருந்தன்வீட்டில் விருப்பமா யிருப்பதென்ன
சித்தமு மகிழநீயுஞ் சிறப்புடன் சொல்லிவாராய்.

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ரூபகம்.

கண்ணிகள்,

தேவாலயம் பிரம்மாலயஞ் சுகமோ சொல் மந்திரி
சீமையாண்ட மன்னரெல்லாஞ் சுகமோ சொல் மந்திரி
அந்தணர்கள் பெரியோரெல்லாஞ் சுகமோ சொல் மந்திரி
அங்கேயுள்ள பேர்களெல்லாஞ் சுகமோ சொல் மந்திரி
குடிபடைக ளனைவோர்களுஞ் சுகமோ சொல் மந்திரி
குவலயத்தில் யாவர்களுஞ் சுகமோ சொல் மந்திரி
அயோத்தியி லனைவோர்களுஞ் சுகமோ சொல் மந்திரி
அவனியாண்ட மன்னரெல்லாஞ் சுகமோ சொல் மந்திரி

இராஜா வசனம்.

அகோவாரும் பிள்ளாய் மந்திரி ஐம்பத்தாறுதேசங்களிலும்தே
ாலயம், பிரம்மாலயம், விஷ்ணு வாலயங்களில் பூசைசரியாய் நடந்
வருகிறதா! அவ்வைம்பத்தாறு தேசத்தையாளப்பட்ட இராஜாக்
ள் யாவருஞ் சுகமா யிருக்கிறார்களா அந்தணர் பெரியோர்கள்சுக
மாயிருக்கிறார்களா! இந்த அவனியி லுண்டானகுடி படையாவும்
சுகமாயிருக்கிறார்களா, மாதமும்மாரிமழை பெய்துவருகிறதா பயி
ள் முழுமையும் செழிப்பாக விருக்கிறதா ஆறிலொருகடமை குடி

ளை யாதொரு வருத்தமென்னியில் பகுதிகொடுத்து வருகிறார்களா சொல்லும் பிள்ளாய் மந்திரி.

மந்திரி - வசனம்;

இராஜபூஜித இராஜகோலாகல இராஜகெம்பீர எனதாண்டவ [illegible] யாவற்றும் க்ஷேமமாக விருக்கிறது வேறொன்றுங் குறைவில்லை [illegible] நம்முடைய அயோத்தியாபுரி பட்டணம் அவனிகடை ஐம்பத்தா[illegible] தேசத்தில் ஏதோ கொஞ்சம் மழையில்லாமல் குடிகளவஸ்தைப் [illegible] படுகிறார்களையா சுவாமி அதற்காக தேவரீர் அன்னதானம், சொர்னதானம், வஸ்திரதானம், முதலான தானங்கள் செய்வித்தால் மழை மாரிகள் பெய்து தேசங்கள் செழிப்பா யிருக்குமையா சுவாமி,

இராஜா - வசனம்;

அப்படிச்செய்வதற்கு யாதொருசந்தேகங் கொள்ளவேண்டாம் இப்பொழுதே செய்துபோடுகிறோம் பிள்ளாய் மந்திரி.

இராஜா - விருத்தம்.

மந்திரிசத்தியகீர்த்தி வசனமொன்றுரைப்பேன்கேளாய்
அந்தமாய்த்தானதர்ம மண்டபங்கள்செய்யவேணும்
சொந்தமாய்வாழும்லோகந் தொல்புவியறியத்தானே
சிந்தையில்மகிழ்ச்சியாகச் சேகண்டியடிக்கச்சொல்வாய்.

மந்திரி - வசனம்.

அப்படியே செய்கிறேனையா சுவாமி.

ஷை வசனம்.

ஆனால் வாரும்பிள்ளாய் கட்டியம் இன்றையத்தினம் மகாராஜா தானதர்மஞ் செய்யவேணுமென்று இந்தப் பதினான்கு லோகமும் அறியும்படியாய் அகுதி, பரதேசி, சோகி, சங்கமர், யாத்திரைக்காரர் தெரியும்படியாய் சேகண்டி போடும்பிள்ளாய் கட்டியம்,

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியே நல்ல பாக்கியமையா சுவாமி.

சிவசாமி அவர்கள்.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

கண்ணி.

பிச்சைக்கார ரெல்லாம் வாருங்கள் நீங்க
ளிச்சைப்பட்டதெல்லாங் கேளுங்கள்
சோகிசங்கமரெல்லாம் வாருங்கள் நீங்கள்
வாருடன்சோறுகறி கேளுங்கள்
அருதிபரதேசி வாருங்கள் சுமா[illegible]
அன்னதானம்வாங்கிப் போருங்கள்

பரதேசிகள் - விருத்தம்.

கண்டிசேகண்டிச்சந்தங் காதிலேயேகேட்டுக்கொண்டு
எண்டிசையறியத்தானே யெல்லோருமொன்றுசேர்ந்து
வண்டினஞ்சூழ்ந்திருக்கு மசிலாவயோத்திதன்னில்
பெண்டிடும்பிள்ளையுந்தான் பிச்சையைக்கேட்டுவாரார்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

பிச்சைக்காரனையா பெரிய பிச்சைக்காரனையா

அநுபல்லவி.

பஞ்சதேசமையா யிங்கே
வாங்கிக்குடிக்க வந்தோமையா (பிச்)

சரணம்.

இருந்தயிருப்பும்போச்சே இப்போ
இரந்துகுடிக்கலாச்சே (பிச்)

வாழ்ந்தவாழ்வும்போச்சே நாங்கள்
வாங்கிக் குடிக்கலாச்சே (பிச்)

கருத்தவெருதும்போச்சே யெங்கள்
காரியத்தனங்களுந் தான்போச்சே (பிச்)

சிவந்தவெருதும்போச்சே யெங்கள்
சேவகத்தனங்களுந் தான்போச்சே (பிச்)

வெள்ளைவெருதும்போச்சே யெங்களுட
வேடிக்கைத்தனங்களுந் தான்போச்சே (பிச்)

பண்டாரம் - வசனம்.

அடி சிவகாமி என்பண்டாரம் நம்மள் கூடவந்த சோகிசங்கமர்க ளெங்கேயடி அவாளிதோ வருகிறார்களையா பண்டாரமே.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சொன்னசொற் றவறாத வரசன் சமுகந்தனிற்
　சோகிசங்கமர் வந்து தோன்றினார்
மன்னர்புக ழயோத்தி வாழரிச் சந்திராசன்
　மகிமை யனுதினங் கொண்டாடியே
அன்ன மெனக்குவேணும் ஆயிக்குச் சீலைவேணும்
　அடியேன் குழந்தைக்கு அருந்தப் பாலும்வேணும்
பன்னுந் தமிழைப்பாடி யுன்னி நடந்துசடைப்
　பண்டாரங்களுந் தோன்றினார்.

ஷெடி வசனம்.

அடியே சிவகாமி மகாராஜா முன்பாக ஒருபாட்டுச்சொல்லடி.
அப்படியே சொல்லுகிறேன் பண்டாரம்.

இராகம்-நாதநாமக்கிரியை-அடதாளசாபு.

ஆனந்தக் களிப்பு.

பண்டாரமே நீர்தான் பாரும்-நல்ல
　பாட்டுகள் சொல்லுகிறேன் நன்றாகக்கேளும்
உண்டானபோது கொண்டாட்டம்-கையிலொன்று
　மில்லாவிட்டா லெடுப்பார்க ளோட்டம்
மகாராஜா விருக்கும்போதிப்போ-நமக்கு
　மயக்கமேது காணு மொருக்காலுமில்லே
சுகமாகமக ராஜாவிடத்திற்-றானஞ்
　சுருக்காக வாங்கிடப்போம்வா சுவாமி.

இராஜா-வசனம்.

ஆனல் வாரும்பிள்ளாய் மந்திரி அகுதியரதேசிக ளியாவரும் வந்தார்களா.

சிவசாமி அவர்கள்

மந்திரி-வசனம்.

அகோவாரும் ஊதாண்டவனே யாவத்துப்பேர்களும் வந்திருக்கிறார்கள் மகாராசனே.

இராஜா விருத்தம்

என்னருந்தவம்போல்வந்த யின்பமாமயிலேகேளாய்
இன்னகரதனிலுள்ளோ ரியாவரும்வருந்திடாது
உன்னத ஆண்டிகட்கும் உயர்பரதேசிகட்கும்
அன்னமே தானஞ்செய்ய அடையுடன்வருகுவாயே.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தானஞ்செய்ய வாரும்பெண்ணே சந்திரமதியே கண்ணே
தானஞ்செய்ய வாரும்பெண்ணே.

அநுபல்லவி.

வானமீதிலுரு மதியை வெல்லுமுகம்
மங்கையே கனக கொங்கையே
மானே மைந்தனொடு சத்யகீர்த்தியெனும்
மந்திரியுடனிந்த வேளையில் (தான)

சரணம்.

அன்னமே யெனது சொர்ணமே யெனும்
மன்னர் மன்னன் அருள் கன்னியே
கன்னலான மொழி மின்னேயானுமினி
முன்னமே செய்வினை யின்னபோ தகலத் (தான)

வேத நீதிமுறை யோது மந்தணர்கள்
கோதிலாத் துறவோர் மாதவர்
ஏதுமின்றி வெகு வேதனைப்படுவோர்
பீதி யெய்திடாமே யீய்து காத்திடவே (தான)

வாசி யோகநிலை மாசிலா துணைரும்
தேசியோகபர தேசிகள்
கூசிடாமலவர் பேசு மன்னதிதி
ஆசை பூவுதவி நேசமாகவுயர் (தான)

தானஞ்செய்கிறபாகம்.

பிச்சைக்காரி, சத்யகீர்த்தி, லோகிதன், சந்திரமதி, அரிச்சந்திரன். கட்டியன்,

சிவசாமி அவர்கள்

இராஜா வசனம்.

ஆனால் வாரும் பிள்ளாய் மந்திரி அருகி பரதேசிகளுக்கு இந்
தானதர்மத்தைக் கொடுத்தனுப்பும் பிள்ளாய்

மந்திரி-வசனம்

அப்படியே கொடுத்தனுப்பினேனையா சுவாமி.

விஸ்வாமித்திரர் வருகிற - விருத்தம்,

பிரியமாய்ப் புலித்தோல் சாத்திப் புகழவேயாவர்காண
அரியவெண் ணீறுபூசி யானதோர் மகுடமிட்டு
ஒருகையில் விசிறியேந்தி யுயர் கமண் டலமுங்கொண்டு
விரிசடை யிலங்கவிஸ்வா மித்திரர் தான்வந்தாரே,

இராகம்-தோடி- தாளம்-ரூபகம்

முடுகு.

ாசமுப்புரிநூலுஞ்சடையும் பஞ்சாட்சரமும்பரிவுடனே
வதமான கீதமோதி விஸ்வாமித்திரர்தோன்றினார்
ருக்கிப்படர்ந்த சடைகளாட முப்புரிநூல்களாடவே
விரிக்கப்பார்த்த பார்வையுடனே விஸ்வாமித்திரர் தோன்றினார்

வசனம்,

இங்கே யாருவோய் காவலா,

கட்டியக்காரன்வசனம்,

நானரண்மனை பாசாரவாசற் காவற்காரனையா சுவாமி.

விஸ்வாமித்திரர் வசனம்

ஆனால்வாரும் கட்டியக்காரா.

கௌசிகர்-விருத்தம்,

கௌசிகமுனியான் வந்தேன் கருத்தரிச் சந்திரனோடே
அவசியமொரு நொடிக்கு ளடவுடன் சொல்லாவிட்டால்
கவடிலான் வாசற்காக்குங் காவலா வுங்கள்பூமி
தனை நீறாகப்போகச் சாபமே யிடுகுவேனே.

வசனம்.

கேளுங் கட்டியக்காரா உங்களுடைய ராஜாவுக்குத் தெரிவி விட்டால் வுங்களுடைய சீமையைச்சாம்பலாக யெரித்துப்போடுவே யென்னாய் கட்டியம்.

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியே தெரியப்படுத்துகிறேனையா சுவாமி.

ஷை வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி ஆசார வாசலில் காதிராஜா குமாரர் விஸ்வாமித்திர ஸ்வாமியார் நம்முடைய ஆசாரவாசலில் ஆ மரத்தடியின் கீழாக ஆசனம் போட்டுக்கொண்டு இருக்கிறா சுவாமி.

இராஜா-வசனம்.

ஆனல் வாருமந்திரி விஸ்வாமித்திர சுவாமிகள் நமதரண்மனை ள் வராமல் ஆசாரவாசலி லிருக்கவேண்டிய காரணந் தெரியவில்லை ஆனபடியால் நான் போய் சுவாமிகளைக் கண்டு தெரிசித்து வருகிறே மந்திரி.

மந்திரி-வசனம்.

எனதாண்டவனே முனிவர்கள் வீடுதேடி வந்தவர்களை யெதிர் ன்று கண்டுகொள்ளவேண்டியதுதானையா சுவாமி.

இராஜா - விருத்தம்.

மான்விழிமயிலேசந்திர மதியெனுங்குயிலேகேளாய்
நான்செய்ததவமோவிந்த நகர்செய்ததவமோமுன்னோர்
தான்செயும்புண்யந்தானே தவமுனிவந்தாரிங்கு
தேன்மொழிமாதேகண்டு தெரிசனஞ்செய்வோமவாராய்.

இராஜா-வசனம்.

வாராய் பெண்ணேசந்திரமதியே நாமென்ன தவஞ்செய்தோமோ விஸ்வாமித்திர சுவாமியார் ஆசாரவாசலில் வந்திருக்கிறாராம் நா போய் தெரிசனஞ் செய்துவருவோம் பெண்ணே.

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ஆதி.

பல்லவி,

பெண்ணே நாமேகுவோம் அந்தப்
பிரணவமுனிதனைச் சரணஞ்செய்வதற்கு (பெ)

அநுபல்லவி.

பண்ணின பாவமுந் தீருமே-மேலாம்
பரகதி மோட்சமுஞ் சேருமே
கண்ணினிற் காணுவோம் வாருமே-நம்மள்
கலிகளகன்றுவிடுங் கண்ணேநீ பாருமே (பெ)

சரணம்.

சந்திரதயவருள் மங்கையே-மேரு
தடவரை நிகரிரு கொங்கையே
முந்தவனச மலர்ச் செங்கையே-மா
முனிவரைக்கண்டு சேவிப்ப திங்கையே (பெ)

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ரூபகம்

பல்லவி.

தவமா முனி விஸ்வாமித்திரர்
தன்னைப் பணிவோம் வாராய்பெண்ணே

அநுபல்லவி,

அவமிருத்தனைத் தடுப்பா-ரவர்
அருளால் முத்தி கொடுப்பார் (தவ)

சரணம்,

ஜென்ம சாபல்ய மாகும் முன்பு
செய்த தீவினை போகும்
நிர்மலமான சின்மயரூப
நிமலனே ரட்சித் தருள்வாரின்று (தவ)

அரிச்சந்திரன் - விருத்தம்.

ஐயனேபோற்றிபோற்றி யாதியேபோற்றிபோற்றி
மெய்யனேபோற்றிபோற்றி விமலனேபோற்றிபோற்றி
செய்யநின்பாதக்கோலச் சிவந்திடத்தனாவிறைஞ்சி
வையகந்தன்னைத்தேடி வந்தகாரியஞ்சொல்வீரே.

விஸ்வாமித்திரரை தெரிசிக்கிறபாகம்.

லோகிதாசன்.

சந்திரமதி.

அரிச்சந்திரமகாராஜா.

விஸ்வாமித்திரர்.

சிவசாமி அவர்கள்.

வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி தேவரீர் ஆசாரவாசலிலிருக்கவே
டயதென்ன அடியேனுடைய இரத்தினசிம்மாசனத்துக் கெழுந்த
ி வரவேணுமையா சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

அகோவாரும் பிள்ளாய் அரிச்சந்திரா நான் இரத்தினசிம்மாசன
க்கு வந்தால் அதிலழுத்தியிருக்கப்பட்ட இரத்தினங்களைப்பிச்சிக்க
ண்டியதாகயிருக்கும் பிள்ளாய் அரிச்சந்திரா.

இராஜா-வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி தாங்களுக்கு அபேட்சையானதெ
வோ அதுகளெல்லாந் தருகிறேனையா சுவாமி.

இராகம்-கலியாணி, தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயாமுனியே வாரும் அரண்மனைக்கேகுதற்கு (ஐயா)

அநுபல்லவி.

உய்யாரமாகப்பர்தம் கையாமலேநடந்து (ஐயா)

சரணம்.

லாமறைமுதலே மைமலாவுஞ்சடையாள
லாருகள்கொடுத்துக் கடைத்தேறக்கண்பாரையா (ஐயா)
மதுகடந்து மாடம்நகர்தொடர்ந்து
டையன்னமடர்ந்து வாழுமனைநடந்து (ஐயா)
யேஅடவிவாழும் யதியேமுழுமதியே
ிருபமெய்யாபர சதியருளும்நிதியே (ஐயா)

இராஜா-விருத்தம்.

வந்தமேதோர் கௌசிகற்கு மலரடி பூசைசெய்து
சுந்தர வாசனத்திற் சுகமுட னழைத்துவைத்து
வந்தகாரியங்க டன்னை வாய்மலர்ந் தின்னதென்று
எந்தனுக் குரைத்தீரானா லியல்புடன் றருகுவேனே.

அரிச்சந்திர நாடகம்.

ஷை-வசனம்.

அகோ வாருங்களையா சுவாமி அடியேனிடம் வந்தகாரிய மெ[illegible]தென்று திருவுள்ளம் பற்றவேணுமையா சுவாமி.

கௌசிகர்-வசனம்.

ஆனாற் சொல்லுகிறேன்கேளு மரிச்சந்திர மகாராஜனே.

கௌசிகர்-விருத்தம்.

வந்தது கேளாய்மன்ன வண்மையாய்ச் சொர்னதானஞ்
சிந்தையி லெண்ணிச்செய்யுஞ் சேகண்டிச் சத்தங்கேட்டு
அந்தமா யானைமீதி லருங்கவ ணெறிந்ததூரம்
பந்தமாய் வேள்விசெய்யப் பசும்பொன்னுக் காகவந்தேன்.

இதுவுமது.

ஆனைமேற் கவணெறிந்து அத்தனை தூரஞ்செம்பொன்
தானுமே தருவாயானாற் றழைத்திடு மெனதுயாகம்
நானிலம் புகழ்வாருன்னை நல்லரிச் சந்திரனென்பார்
மானவ ருஞ்சு[illegible]ாத்தி மகிழவே மெச்சுவேனே.

கௌசிகர்-வசனம்.

அகோவாரும் பிள்ளாய் அரிச்சந்திரா நாமுன்னைக் காணவே[illegible]மென்றுவந்தோம் அஃதேதென்றால் ஒருயாகஞ் செய்கிறோம் அத[illegible] யானையின்பேரில் ஆங்காரமுள்ள புருடனேறி யவன்கையில் வெள்[illegible]க்கவண்கொடுத்து அதில் மாணிக்கக்கல்லைவைத்து விட்டெறிந்தால் [illegible]ஃதெவ்வளவு வுயரம்போகுமோ அவ்வளவு வுயரம்பொன் கொடு[illegible]ரேயானால் அந்தயாகம் நடக்கும் அதற்காக வுன்னிடத்தில் வந்தே[illegible] பிள்ளாய் மகாராஜனே.

இராஜா-வசனம்.

அப்படியே தருகிறேனையா சுவாமி.

ஷை-விருத்தம்.

வானவர் விஸ்வாமித்திர வள்ளலே யடியேன்பக்கல்
தானம்நீர் கேட்டபொன்னைத் தருகிறே னனாமொழிக்குன்
யானையின் மீதினின்று அருங்கவ ணெறிந்ததூரம்
நாளுமே யளித்தேனிப்போ நல்முடன்கைக் கொள்வீரே.

சிவசாமி அவர்கள்.

வசனம்.

அகோவாருங்களையா சுவாமி இப்பொழுது தாங்கள் கேட்டதிர ங் இராமா லெட்சுமணனென்கிற களஞ்சியத்திலிருக்கிறது மேற் களஞ்சியம் ஆசாரவாசல் மணிமுகப்பிலிருப்பதால் அப்படியே பெத்துக் கொள்ளுங்களையா சுவாமி.

கௌசிகர்-விருத்தம்.

ண்டியபோது பொன்னை வேந்தனே யெடுத்துக்கொள்வேன்
ட்டான் போகாதிப்போ தேவலோகத்திற்சென்று
ண்டவன் வேள்விசெய்ய அங்ஙன முகூர்த்தமிட்டு
ண்டுநான் வருவேன்பொன்னை விரைவினிற் கொண்டுசெல்வேன்.

ஷை. வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அரிச்சந்திரா தேவலோகத்துக[illegible] ள்விக்கு முகூர்த்தம் வைத்துவிட்டுத் திரும்பிவருகிறேன் அது ரயில் இந்தத்திரவியமுழுமையு முன்வசத்திற்றானே இருக்கட்டும் னாய் அரிச்சந்திரா.

ராஜா-விருத்தம்.

வேதமா முனியேஐயா வீண்பழிபோடவேண்டாம்
மாதவா வுந்தன்மாய்கை யானவா றிவரையா
ஆதியென் குலத்துதித்தும் அடியன்மேற் பாரம்வைத்தால்
ஏதனை சுமக்கமாட்டேன் நன்னிதி கொண்டுபோவீர்.

ஷை-வசனம்

அகோவாருங்களையா சுவாமி இந்தத்திரவியமெல்லாம் அடியே லே தாங்கமுடியாது இராஜாவாகயிருந்து இராச்சியபரிபாலனஞ் சய்யப்பட்டவனுக்கு தெண்டம் பெரும்படிவரும் அப்போது தேவ டைய பொருளென்றும் பாராமல் எடுத்து செலவுசெய்யவேண்டி தாகவரும் ஆகையால் தேவரீரே கொண்டுபோக வேண்டுமையா சு மி.

விஸ்வாமித்திரர் - விருத்தம்.

சத்தியத் தருமத்தாலே தனமெலாந் தந்தாய்மன்னா
பத்தரு ளுன்னைப்போலே பார்தனிற் கண்டதில்லை
முத்தினை தன்னைப்போட்டு மூவுல கறியத்தானே
பத்திரம் பண்ணிவைத்துப் பணமதைக் கொடுத்திடாயே.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அரிச்சந்திரா இவ்வீரேழு பதினு
லோகத்திலேயும் உன்னைப்போலே சத்தியமும், தர்மமும், ஈவி
முள்ள இராஜாக்களைக் கண்டதில்லை ஆனவிந்தத் திரவியத்தை
ஸர முன்னுடைய ராமாலெட்சுமணனென்கிற களஞ்சியத்திற்கு
போட்டு என்னுடைய உருத்திராட்ச முத்திரையுஞ்சாத்தி உன்னு
ய சீல்முத்திரையும்போட்டு கெட்டியாய்ப் பதனம்பண்ணிவையும்
ள்ளாய் அரிச்சந்திரமகாராஜனே.

இராஜன்-வசனம்.

அப்படியே செய்கிறேனையா சுவாமி.

ஷை-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் மந்திரி சத்தியகீர்த்தி விஸ்வாமித்தி
சாமியாருக்கு திரவியங்கொடுத்தோமல்லவா அவர் தேவலோக
லேபோய் வேள்விமுகூர்த்தம் வைத்துக்கொண்டு அதன்பேரில்
திரவியத்தை வாங்கிக்கொண்டு போகிறேனென்று சொல்லுகிறபடி
ல் அதுபரியந்தம் ராமாலெட்சுமணனென்கிற களஞ்சியத்திற்போ
சுவாமிகளுடைய முத்திரையும் என்னுடைய முத்திரையும் உ
டைய அரக்குமுத்திரையும் வைத்துப் பத்திரம்பண்ணும் பிள்ள
மந்திரி.

மந்திரி - வசனம்.

அப்படியே செய்துவிட்டேன் மகாராஜாவே.

இராகம்-தன்னியாசி, அடதாளசாப்பு.

பல்லவி.

சிக்கிக்கொண்டா னல்லவா அரிச்சந்திரன்
சிக்கிக் கொண்டாணல்லவா

அநுபல்லவி.

சிக்கிக்கொண்டானெந்தன் பக்குவத்திலேலே
முக்கியமாகவே சத்தியவரிச்சந்திரன் (சிக்)

இராஜா-வசனம்.

அகோவாருங்களையா சுவாமி சிக்கிக்கொண்டானென்று சொ
ன்னாலே எனக்கு ரொம்பவும் பயமாயிருக்கிறது ஆனதினாலே அ
தெரியப்படச் சொல்லவேணுமையா சுவாமி.

சிவசாமி அவர்கள்.

கௌசிகர்-வசனம்.

அசோவாரும் பிள்ளாய் அரிச்சந்திரா நம்முடைய கையிலிருந்த சங்கிலி தவறிப்போனது இப்பொழுது அது அகப்பட்டதுந்தவி யெனக்குக்கொடுத்த திரவியத்தினுடைய சந்தோஷத்திலே ஆ ந்தக்கூத்தாடினேன் பிள்ளாய் அரிச்சந்திரா அப்பொழு தென்கை யிருந்த லாடசங்கிலியானது சடையிற்பட்டு இழுத்துக்கொண்ட து ற்காகச் சொன்னே னரிச்சந்திரா-

இராஜா-வசனம்.

அப்படியானால் நல்லபாக்கியமையா சுவாமி,

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஆனால் வாருமரிச்சந்திரா நான்வந்து வெகுநேரமாயிற்று என்னு டைய ஆச்சிரமத்துக்குச் செல்லுகிறேன் பிள்ளா யரிச்சந்திரா.

இராஜா-வசனம்.

அப்படியே போய்விட்டு வாருங்களையா சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்

அழகுசேர் பதியிற்சென்று அரிச்சந்திரன்றன்முன்னேகிக்
களவதாய்க் கேட்டசெம்பொன் கடடமா யவன்பால்வைத்து
கிளைபெருவிலங்குதன்னைற் கெடுத்திடவயோத்திநாட்டை
விளைபயி ரழிக்கத்துஷ்ட மிருகங்கள் சிருஷ்டித்தாரே.

இராகம்-நாதநாமக்கிரியை, அடதாளசாப்பு.

பல்லவி.

சிருஷ்டித்தார் பாரீர் மிருகங்களைச்
சிருஷ்டித்தார் பாரீர்

அநுபல்லவி.

சிருஷ்டித்தார் மிருகமெல்லாந் தேசந்தனையழிக்கப்
பட்டணத்திலுள்ளோர் பதைபதைத்தேங்கிட (சில)

இராகம்-தோடி, ஏகதாளம்.

கண்ணிகள்.

ல்மான் வேங்கைப்புலிகள்பன்றி காட்டுநரியுங்கூட்டமாய்
ளைவதின்றுட்பயிரழிக்க மிருகங்கள்வந்துதோன்றிற்றே

அத்திகரடிகாட்டெருமைக ...... ளவனியெல்லாம்பயிரழி
குத்துகுத்தெனம் ப..வைமுதலாய் குரங்குகூட்டமுந்தோன்றி

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

பறவைகா.. மிருகங்காள்நீர் பாவியதயோத்திநாட்டைத்
தறை...னச் செய்துஅங்கு தழைத்திடும் பயிரையெல்லாம்
முறிமுறித் ததங்கள்செய்து முடிக்கவே வேண்டுமென்றன்
அறைதரு மாணைக்கொண்டே யண்புட னடிந்திடீரே.

ஷ-வசனம்.

கேளுங்க..ள் மிருகக்கூட்டங்களே நீங்களிந்தட்சணமே அயோ..
திமாநகரஞ்சென்று அங்குள்ள பயிர்களையும் சோலைகளையும் சாலை..
களையும், குளங்களையும், ஏரிகளையும், வாவிகள்முதலான தடங்களை..
சின்னபின்னமாக அதஞ்செய்துவிட்டு வாருங்கள் மிருகங்களே.

பொது..வசனம்.

இப்படியாக மிருகஜாதிகளை யுண்டாக்கி விஸ்வாமித்திரரேவ..
ல் அயோத்தியாபுரிக்குவந்து பயிர்கள் முழுமையும் அழித்து சா..
சோலைகளைக்கெடுத்து குடிகள் முதலானபலவற்றும் நஷ்டப்படுத்தி..
ட்டது.

குடிகள்-விருத்தம்.

தம்புரெட்டி லிங்கரெட்டி சதாசிவப் பொம்மரெட்டி
வம்புரெட்டி தும்புரெட்டி வடுகர்வேளாளர் செட்டி
அம்புவி யயோத்திநாட்டி லதஞ்செயு மிருகத்தாலே
கும்பலாய்க் கூடிக்கொண்டு குடிகள் யாவரும்வந்தாரே.

இராகம்-தோடி, தாளம்-ரூபம்.

கண்ணிகள்.

பாசிபடர்ந்த ...... பல்லைக்காட்டிப்
பகட்டிமிரட்டி ...... முகத்தைக்காட்டி
கூசிநடந்து ...... கூனிக்கொண்டு
குடியானவரும் ...... தோன்றினார்
கையிற்றடியும் ...... பிடித்துக்கொண்டு
கறுத்தக்கம்பளி ...... போத்திக்கொண்டு

குடிகள் வருகிறபாகம்.

அரிச்சந்திரன். குடிகள். குடிகள். குடிகள். குடிகள்.

நெய்க்கலசமுந் தூக்கிக்கொண்டு
நேர்மையுடனே தோன்றினர்
சேலைப்பேனும் பிடிங்கித்திங்கத்
தேகமெல்லாங் கறுத்துமங்கப்
பால்க்கலசமுந் தூக்கிக்கொண்டு
பண்புடன்வந்து தோன்றினர்

குடிகள்-விருத்தம்.

அய்யனே அயோத்திநாட்டை யாளரிச் சந்திரகோவே
வெய்யனே பரம்பரமாய் வெகுகோடி காலம்நாங்கள்
துய்யனே பயமில்லாமற் சுகமுடன் வாழ்ந்திருந்தோம்
மெய்யனே விடைதந்தாக்கால் வேறொருதேசஞ் செல்வோம்.

டிை-யார் வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி இந்த அவனிகடை ஐம்பத்
தேசங்களிலும் ஆவென்கிறசொல் இதுவரையிலு மில்லாதபடிக்கு
ழ்ந்துவந்தோம் இப்பொழுது உத்திரவுகொடுத்தால் ஊரைவிட்டு
தேசம் போகிறோமையா சுவாமி.

இராஜா-வசனம்.

நீங்களேன் அப்படிப்போகவேணும் அதுவிபரந் தெரியும்
யாய்ச் சொல்லுங் குடியானவர்களே.

குடிகள்-விருத்தம்.

பார்தனிற் பயிரையெல்லாம் பற்றியே கரையான்விட்டில்
காரிருள் தனிலேபன்றி கழனியிற் பயிரையெல்லாம்
சாரியா யழித்ததிப்போ தற்பரா வென்னசெய்வோம்
மாரியுமில்லை நாங்கள் மறுதேசம் போறோமையா-

டிை-வசனம்

சரணஞ் சரணமையா சுவாமி நாட்டில்விளையும் பயிரை காட்
ல்யிருக்கும் மிருகம் நாசஞ்செய்து விட்டது விட்டிலுங் கரையானு
கட்டபயிர்களை விட்டேனென்று வெட்டிவிடுகிறது இனிநாங்கள்
ன்னமாய்ப் பிழைப்போம் எவ்விடஞ்சொல்வோமென்று சொல்லல
தோம் மகாராஜனே.

வேட்டையாடுகிறபாகம்.

வேடர்கள்.

அரிச்சந்திரன்

மந்திரி.

இராஜா-வசனம்.

ஆனல் வாருங்கள் குடிகளே நீங்கள் பயப்படவேண்டாம் நா
யே அந்த மிருகஜாதிகளை வேட்டையாடி உங்களுக்குவந்த துன்ப
யாவற்றும் விலக்கிவிடுகிறேன் குடிகளே.

குடிகள்-வசனம்.

அப்படியே நல்லபாக்கியமையா சுவாமி.

இ ரா ஜ ன்

வேட்டையாடுகிறபாகம்.

இராஜா-விருத்தம்.

மந்திரி சத்தியகீர்த்தி வார்த்தையொன் றுரைக்கக்கேளாய்
விந்தையாய் மிருகம்வந்து விளைபயி ரழிக்குதிப்போ
அந்தமா வனத்திற்சென்று அன்புடன்வேட்டையாடக்
கந்தரம் வாழும்வேட்டைக் காரரைத் தருவிப்பாயே.

ஷெ-வசனம்-

அகோவாரும் பிள்ளாய் மந்திரி வனத்திலிருக்கப்பட்ட மிருகஜா
திகள்வந்து நம்குடியானவர்கள் செய்கிற பயிர்களையெல்லாம் அழித்து
நாசப்படுத்துகிறதாம். அப்பேர்ப்பட்ட மிருகங்களை இப்போதுகொல்
ல வேட்டைக்காரர்களை யீட்டிமுதல் எல்லாஆயுதங்களும் எடுத்துக்
கொண்டு சீக்கிரம்வரச்சொல்லும் பிள்ளாய் மந்திரி.

மந்திரி-வசனம்,

அப்படியே நல்லபாக்கியமையா சுவாமி.

வேட்டைக்காரர்-விருத்தம்.

கூரிய வாளும்வில்லுங் கொடுஞ்சுட ரம்புமேந்தி
பாரிய கரிகையீட்டி பாக்குடன் கையிற்கொண்டு
சேரியிற் றிரியும்நாயை சேரவே கூட்டிநின்று
காரிய மாகவேட்டைக் காரர்கள் தோன்றினரே.

இராகம்-பந்துவாராளி, தாளம்சாப்பு.

பல்லவி.

வேட்டைக்காரர் நாங்களே அயோத்தியாபுரி
வேட்டைக்காரர் நாங்களே

சிவசாமி அவர்கள்.

அநுபல்லவி.

வேட்டைக்காரர் நாங்கள் வீராதிவீரன்வாழும்
நாட்டை யழிக்குதென்று நாம்கேட்டுப்புறப்பட்டோம் (வேட்)

வேட்டைக்காரர்-வசனம்.

அகோசாணஞ் சரணமையா அடியேன்களை யழைப்பித்தகாரண
ன்னதென்று திருவுளம் பற்றவேணுமையா சுவாமி.

இராஜா-விருத்தம்.

வேட்டைக் காவலரேகேளீர் விசனமாய்க் குடிகள்வந்து
நாட்டினில்மிருகத்தாலே நலிகியே நொந்துபோனர்
வேட்டைக்குப் போகவேணும் வேகமா யோடிநீங்கள்
காட்டினில் வலையைக்கட்டிக் கதிகியே சூழ்ந்துகொள்வீர்.

இராஜா-வசனம்.

ஆனல்வாரும் வேட்டைக்காரர்களே நாம் வேட்டையாடுவதற்கு
ருகிறபடியால் நீங்கள் முந்தியேபோய்க் காட்டில் வலையைக்கட்டிக்
காண்டிரும் பின்னாய் காவலர்களே.

வேட்டைக்காரர்-வசனம்.

அப்படியே நல்ல பாக்கியமையா சுவாமி.

இராஜா-விருத்தம்.

சந்திர மதியேபெண்ணே சண்டாள மிருகந்தன்னை
அந்தரமான காட்டில் யான்வேட்டை யாடப்போறேன்
மைந்தனும் லோகிதாசன் மகன்றனை வைத்துக்கொண்டு
இந்தநல் லரண்மனைக்கு ளிருந்திட ரிருந்திடரே.

இராஜா-வசனம்.

அகோவாரும்பெண்ணே சந்திரமதி நான் வேட்டைக்குப்போய்
வருகிறேன் அதுவரை நம்முடைய அரண்மனையில் நீயும் குழந்தையு
மாக விற்றிரும் பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி-விருத்தம்

துஷ்டர்கள் தனையடக்குந் தூர்தரா யெந்தன்மன்னா
இஷ்டம்போல் வீரர்தன்னே டேகியே வனந்திலேதான்

மட்டிலா மிருகந்தன்னை வதைத்திடப் போறேனென்றீர்
அட்டிநீர் சொல்லவேண்டா மடியாளுங் கூட வாரேன்.

இராகம்-மோகனம், தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சந்திரமதி சொல்லுதல்.

மன்னநீரென்னைவைத்து வனவேட்டையாடப்போ
மனதுசகித்திருக்க மாட்டேனென்

அரிச்சந்திரன் சொல்லுதல்.

ராஜன்வேட்டைக்குப்போக நாயகிநின்று
ஞாயமல்லடிபெண்ணே நான்சொல்லக்கே

சந்திரமதி சொல்லுதல்.

பதிதயன்வீட்டிலென்னை மாலையிட்டநாள்முத
வஞ்சகஞ்செய்தறியேன் மன்னவரே

அரிச்சந்திரன் சொல்லுதல்.

பெண்ணேயென்பின்னல்வர வொன்றுமாதா
புலிகள்காடிசிங்கம் போராட்டஞ்செய்யுங்காட்

சந்திரமதி சொல்லுதல்.

வரவேண்டாமென்றுசொன்னால் வனத்திற்கேபுரி
மான்போலேநின்றடியாள் மயங்குவேனே

அரிச்சந்திரன் சொல்லுதல்.

வருவோமென்றுசொன்ன லேந்திழையேமயி
எந்தன்மனதுக்கேற்ற சுந்தரமேபெண்ணே

இராஜா-வசனம்.

வாரும் பெண்ணே சந்திரமதி நானெவ்வளவோ சொல்லியுங்
கேளிக்கவில்லை கட்டாயமாக வரத்தான் வேணுமோ அப்படியங்கே
ருகிற விஷயத்தில் ஓர் பாரிசமாக நீயும் லோகிதனும் பல்லக்குடனே
யிருந்து வேடிக்கைபார்த்துக் கொண்டுதானிருக்கவேணும் பெண்ணே
சந்திரமதி.

சிவசாமி அவர்கள்.

சந்திரமதி-வசனம்.

அப்படியே தாங்கள் வேட்டையாடுகிற வேடிக்கை விநோதத் பார்த்துக்கொண் டிருக்கிறேனையா சுவாமி.

இராஜா-விருத்தம்.

தந்திர வுபாயங்கற்ற சத்திய கீர்த்திகேளாய்
விந்தையாய்க் காட்டில்நாமும் வேட்டைக ளாடவேணும்
சந்திர மதியும்பாலன் சதுரங்க சேனைசூழ
அந்தமா யயோத்திவிட்டு அடவுட னேகுவோமே.

இராஜா-வசனம்.

ஆனால் வாரும் பிள்ளாய் மந்திரி நமதயோத்தியாபுரி பட்டணத் இருக்கப்பட்ட ரதகஜதுரக பதாதிகளுடனே சேனைகளைப்புறப்பட சொல்லி ஆசாரவாசல் மணிமுகப்பிலிருக்கப்பட்ட பஞ்சவர்ணக் ளைப் அலங்காரஞ் செய்யச்சொல்லி நம்முடைய தேவியாகியசந் மதிக்கும் குமாரன் லோகிதனுக்கும் பல்லக்கு சோடித்துக்கொண் வரச்சொல்லும் பிள்ளாய் மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே நல்லபாக்கியம் இதோபல்லக்குகொண்டு வந்திருக்கி களையா சுவாமி.

பொது-விருத்தம்.

குடிகள்வந் திக்குறைத்த குறைதனைத் தீர்க்கவென்றே
பிடியெனு மிடையாள்சந்திர மதியுடன்பிள்ளையோடுங்
அடிபெறு மமைச்சரோடுஞ் சூழ்ந்திடுஞ் சேனையோடுங்
கடிவன வேட்டையாடக் காவலன் புறப்பட்டானே.

இராகம்-சங்கராபரணம், அடதாள்சாப்பு.

பல்லவி.

இராஜன் வேட்டைக் தொழிலாகவே நாடினன்.

அநுபல்லவி.

சந்திரன் வேட்டைக்குப்போர சுந்தரம்பாராய்
சல்லாப வல்லாச வில்லேந்திய யரிச் (சந்)

சரணம்.

மதிமன்னன் லோகித — குமாரன் முன்னும்
மந்திரி சத்திய — கீர்த்திபின்னும்
சதுரங்க சேனைகள் — முன்னணி யாகவும்
சத்திய கீர்த்தியும் — பின்னணி யாகவும்
சுத்திரதகஜ — யானைசூழ்ந்திட
குத்துமீட்டிக — ளெங்குமின்னிட
அத்திமேல்முர — செங்குமுழக்கிட
அரசனைக்கண் — டெவருங்கும்பிட (இ

சந்திரமதி-விருத்தம்.

மாமணைர் ன்றியானை மாக்குயில் கூவுங்காட்டிற்
பூமகட் கிணையாளசந்திர மதியொரு மானைக்கண்டு
சாமியென் பிராணநாதா தயவுள்ளமன்று மித்தை
மமா யுயிர்போகாமல் நீர்பிடித் தருளுவீரே.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

மானைப்பிடித்துத் தாருமே — ஓமன்னனே யென்பிராணநா
மானைப் பிடித்துத்தாருமே.

அநுபல்லவி.

னைப்பிடித்துத்தாரும் மைந்தன்முன் — விளையாடத்
கன்மொழியாள் நான்பெற்ற — செல்வக்குமாரனுக்கு (மானை

சரணம்.

னகந் தன்னிலே — கருணையுடனே தாங்கள்
னைப் பிடித்துத்தந்தால் — மைந்தன் விளையாடுவான் (மானை
வள்ளி மயிலையீன்ற — புள்ளிமானிதுதானோ
வெள்ளிமலையீசனிடந் — துள்ளிவிளையாடிவந்த (மானை)
சித்திர மானின்மீது — அஸ்திரம்பட்டிடாமற்
பத்திரமாகவேதான் — குத்திக்கொலைசெய்யாமல் (மானை)

சந்திரமதி-வசனம்.

அகோவாருங்களையா சுவாமி இந்த மானைப்பார்த்தால் மகா அதிச
யம் ரூபலாவண்ணியமுமுள்ளதா யிருக்கிறபடியால் உயிர்வதைசெ

சிவசாமி அவர்கள்.

மல் மானைப்பிடித்துத் தந்தால் மைந்தன் லோகிதன்விளையாடுவா
பா சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்.

ஆனல் வாரும்பெண்ணே சந்திரமதி.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்தமானே யானறிகிலேன்டி யடி
பெண்ணே கண்ணே எந்த

அநுபல்லவி.

எந்தமானே யானறிகிலேன் ஈஸ்வரனருளாலே யிப்போ
விந்தையாகப் பாயுதுபார் வில்லுக் கிளையா குதுபார (எந்)

சரணம்.

நரத்தினம் போலவே தேகமெடுத்தாய் பெண்மா
விலங்குதனில் யானறிகிலேன் நவினமான மானைப்போலே (எந்)

இராஜா-வசனம்.

அசோவாரும் பெண்ணே சந்திரமதி இந்த மானுகப்பட்டது சற்
நேரந்தெரிகிறதும் சற்றுநேர மறைகிறதுமாக மேகத்தில்மறையும் மி
ன்னலைப்போல் காட்டிமறைக்குது ஆகிலும் அதைப்பிடித்துத்தான்
ரவேணுமா பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி-வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி பிராணநாதா அப்போர்க்கொத்தமா
ா யெவ்விதமாகிலும் பிடித்துத்தரவேணுமையா சுவாமி.

இராகம்-கமாஸ், சாப்புதாளம்.

பல்லவி.

போகுதுபார் ஒருமா னதிவேகமதாய் - இனைப்
புனத்தைச்சங் கரித்துத்தின்
செடிக்குட் சஞ்சரிக்கப் (போகு)

அநுபல்லவி.

ஆகுதிகொண்டே அவ்வனங்கண்டே - அடி
அன்னமே வானில் மின்னல்போல் மறை
முன்னமே வெகு உன்னிதத்துடன் (போகு)

சரணம்.

நின்றதுமானே சென்றதுதானே - மெய்
 நெளித்துத் தத்தளித்துப்பின்
 சுளித்துக் கண் களிக்கப் (போ

மனவேடுவரும் வலைவீசிடவும் - மான்
 மலைத்துக்கான் றலைத்துச் சஞ்
 சலிப்பிப் பின் னிளைத்துப் (போ

சந்திரமதியே சாருங்கால் கதியே - அது
 தனித்துச் சென்றினத்தைக் கன்
 டொளித்துக் கொண்டிருக்கப் (போ

அந்தாததம.

மானே முனிவன் மாய்கையென்றறியேன்
வானோர் செயலோ வந்தது குறியேன்
தேனே ரிதயேயென் றேவியே கேளாய்
நானோ திரிச்சங்கு ராஜ குமாரன்

ஆனால் பாரடி மானே யந்த
மானோடிப் போனால் விடுவேனோ நானே
பூனைப்பேர் லொருமுயல் போகுதுமார் பெண்ணே
மானது கண்டு மயங்கித் தவிக்குது. (ஆன

விருத்தம்.

காலையுந் தூக்கிக்கொண்டு மன்னனும்வின் னதாவலமாக
கோலமாய வனங்களெல்லாங் குதித்திடத் தாண்டித்தாண்டி
நாலு மேகங்கள்போலே கடுகியே வோடக்கண்டு
சீலமாய்ப் பாணத்தாலே சிதறிடத் துணிப்பேன்கண்டாய்.

இராகம்-எமுனுகல்யாணி; தாளம்-ரூபகம்

பல்லவி.

நல்லது மானே கிட்ட நாடிடாமலோடுறாய்கி
நல்லது மானே

அநுபல்லவி.

நல்லது மானேநான் சொல்லச் சொல்லநீயும்
வல்லபமாய்வழி செல்லுகிறாயே.(நல்

சரணம்.

கையில்கப்பட — மாட்டே னென்றாயே
காடுமலைவனந் — தேடிச் சென்றாயே
மெய்யுங்கலக்கிட — வேர்த்து நின்றாயே
வீணிலேயேன்அம்மா — வோடுகின்றாயே (நல்)

கானகந்தன்னிலே — ஓடிக்களைத்தாய்நீ
காடுமலைகள் போய்த்தானும் — இளைத்தாய்நீ
ஆனமட்டும் மானே — ஓடினாலும் விடேன்
அப்புறம்போகாமல் — நின்றால் கையாற்றொடேன்(நல்)

அயோத்தியாளும் — அரிச்சந்திரன் என்பேரே
அஷ்டதிசையிலென் — ஆணை நடக்காரே
வையகத் தோர்புகழ் — மானின் குலத்தாரே
வார்த்தைநடந்து — வழிவில்லை நேரே (நல்)

இராஜா-விருத்தம்.

மந்திரி பாராயிந்த மான்செல்லும் வேகந்தன்னை
வந்திடும் வாயுவேக மனவேக மிதுக்கொவ்வாது
விந்தையா யிந்தமானை விடாமலே பின்றொடர்ந்து
எந்தன்கை வாளினாலே யெய்துநான் வருவேன்பாராய்.

இராகம்-கமாஸ், தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேட்டை யாடினேனே ராஜன் தாஷ்டிகத்துடனே வனந்தனில

அநுபல்லவி.

வேட்டைகளாடினேன் மகா — தாஷ்டிகமாகவேதான்
காட்டிலதந்செய்யுங் — கூட்டமிருகத்தை
வேட்டிதுப்பாக்கியால் — மாட்டிடுவேனென்று(வேட்)

சரணம்.

வந்திடுஞ் சேவகரே புலி — அந்தா வருகுதுபார்
தந்திரகாடி புலிகள் — யானையும்
தான்வதை — செய்திடச்
தந்திரமாகவே — வனந்தனில்(வேட்)

ஆனைவருதுபார் மிகத் — தானே மதம்பொழிந்து
கானகந்தன்னிலே — செந்நாய் நரிகளும்

கத்திறல் வெட்டிச்
சித்தமகிழ்ந்திட வே வனந்தனில்(வே

பன்றிவருகுதுபார் நம்மை வென்றிட வேகமதாய்ச்
சென்றந்தபன்றியைக் கொன்றிடுவேனென்று
செங்கைகவேல் நெற்றியிற்
பங்கயமாய்ப்பட்டிட வே வனந்தனில்(வே

இராஜா-வசனம்.

ஆனால் வாரும் மந்திரி நமது அஸ்திர சஸ்திர பாணங்களினு அநேக மிருகங்களைக் கொன்றோம் அதில் ஒரு பன்றியின்மேல் பாண ந்தொட்டேன் அந்தபாணம் பட்டவுடனே பன்றி விஸ்வாமித்திரு கபயமென்று கீழேவிழுந்தது இது என்ன விபரீதமோ தெரியவில்லை மந்திரி.

மந்திரி-வசனம்.

எனதரசனே அந்தப்பன்றியானது வனத்தில் வசிக்கும் வராகமா யிருந்தால் வாய்விட்டலறிவிழும் இது விஸ்வாமித்திராவென்று எப் போ அபயமிட்டதோ அப்போதசு ...பன்றிபோ லிருக்கிறது அப் பன்றியானது நாமப்பார்க்க தங்களஸ்திரத்தினா லடிபட்டுக் கீழேவி ழுந்தும் மீண்டுமெழுந்தும் ஓடுகின்றது பார்த்தீர்களா மகாராஜாவே.

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் பன்றியானது அடிபட்டு விஸ்வாமித்திரமுனிவ ரிடம் முறையிடப்போன பின்பு அரிச்சந்திரன் தன்தேவியாகிய சந்தி ரமதியிடம் சொல்லுகிறவிதங்காண்க.

இராஜா-விருத்தம்.

கன்னியே கேளாய் கானகந் தனிலேசென்று
உன்னித வேட்டையாடி ஓடியே வருகும்போது
முன்னமே வந்தபன்றி முடுகியே விடாமலேதான்
நன்னயத் துடனேநல்ல பாணத்தாற் றுணித்திட்டேனே.

வசனம்.

ஆனால் வாரும்பெண்ணே சந்திரமதி நான் வேட்டையாடும்போ து அநேகமிருகங்களைக் கொன்று வரும்போது எனக்கெதிரே ஒரு

தியானது வந்தது அதைபாணத்தினுலெய்தேன் அது அடிபட்டுவி
...த்திராருக் கடயமென்று கீழேவிழுந்ததும் எழுந்தோடிற்று அ
என்னவி...ரீதமோ தெரியவில்லை சந்திரமதி.

இராகம்-கமாஸ், தாளம்-சாப்பு.

பல்லவி.

இது மா வனமே...விய மா ஹினமே

அநுபல்லவி.

பொதுவா கியசூரியனே நிரதம்
போகொனுமலை னுளெழுந்திட
வேகமாயதி கோபமாய் வரும் (இது)

சரணம்.

பதுங்கி மணதொதுங்கி வெயில் வெதும்பி மனந் ததும்பி
பாயுதேயுடல் தேயுதே கைவி
லாயுதம்பிடி நாயிதோவரும் (இது)
அடுக்க வில்லையெடுக்கப் பாணந்தொடுக்கப் பயங்கொடுக்க
ஆவலோடுமெ தாபமாகவே
வேகமாயதி கோபமாய்வரும (இது)

இராகம்-காம்போதி, அடதாளம்.

கண்ணிகள்.

வந்தமாலும்போச்சு மாயப்பொழுதுமாச்சு மந்திரி(இவ்)
வனத்தைக்கடந்துபோக வழிகாணப்போமோ மந்திரி

மயிலுகள் குயிலுகள் சங்கீதராகங்கள் பாடுதே(இதோ)
மாடப்புறாவன்னந் சிறகைவிரித்து நின்றுடுதே

மல்லிகைமுல்லை யிருவாட்சி சண்பகம் வீசுதே(எந்தன்)
மெல்லியரே சந்திர மதிநித்திரை மையலாகுதே

தெய்வகங்கைப்போலே திருக்குளமிருக்குதே மந்திரி(இந்தத்)
தீர்த்தத்திலாரும் இருந்தினிப்பாருவோம் மந்திரி

இராஜா-வசனம்.

பெண்ணே சந்திரமதி காட்டிலிருக்கும் மிருகங்களை வேட்டை யாடிவிட்டோம் இப்போ தெனக்குத் தாகவிடா யதிகமாயிருப்பதால் இதோயிருக்கும் தெய்வகங்கையில் தாகவிடாய் தீர்ப்போம் பெண் ணே சந்திரமதி.

சந்திரமதி-வசனம்.

என் பிராணநாதா, எனக்குந் தாகவிடாயா யிருப்பதால் அ
யே போவோமையா சுவாமி.

இராஜன்-சொல்லல்

இராகம் காம்போதி, அடதாளம்.

கண்ணிகள்.

தெய்வகங்கையைப்போலே திருக்குளம்பார்சந்திர மதியே (இ
தீர்த்தமாம்பொ... பச் சீக்கிரங்காண்போம்வாரதியே

மாடப்புருவும் மயிலேயும் பார்சந்திர மதியே (இ
மாகிலந்தன்னிலே நான்கண்டதில்லைபெண் ரதியே

அன்னமும் மயில்களுஞ் சிறகைவிரித்துக்கொண் டாடுதே(இ
ஆரண்யந்தன்னிலே தாகவிடாயெனக் காகுதே

மந்திரி-வசனம்.

அகோகேளுங்களையா சுவாமி இந்த ஆரண்யமான வனத்தில்
ய்வகங்கைத் தீர்த்தந்தவிர வேறேயெங்குந் தண்ணீரகப்படாது ம
ஜனே.

இராஜா-வசனம்.

அப்படியா இதில் தாகந்தீர்த்துக்கொள்வோம் மந்திரி.

இராஜா-விருத்தம்.

சந்திர மதியேகேளாய் சார்வன மிருகமெல்லாம்
சந்தன்மைக் கிலேயாற்றிகொண்டுற வின்பமா யாசைதீர
இந்தப்பூங் காவிற்றனில் இருந்துமே யுறங்கிநாமும்
விந்தையா யயோத்திநாடு விரைவுடன் போவோம்பெண்ணே

ரேடி-வசனம்

அகோவாரும் பெண்ணே சந்திரமதி நாம்காட்டிலேவந்து
டையாடினதால ரொம்பவும் ஆயாசமாயிருக்கிறது ஆகையால் இ
ங்காவில் சற்றுநேரம் உன்மடியில் தலைவைத்து நித்திரைசெய்து
பெழுந்து நாம் நம்முடைய அயோத்திநாட்டுக்குப் போவோம் பெ
ணே சந்திரமதி.

சந்திரமதி-வசனம்.

அப்படியே நல்லபாக்கியமையா சுவாமி.

சிவசாமி அவர்கள்.

இராகம்-நீலாம்புரி-அடதாளம்.

பல்லவி.

நித்திரை செய்தாரே அரிச்சந்திரன்
நித்திரை செய்தாரே

அநுபல்லவி.

நித்திரை செய்தாரே நேசன்திரிச்சங்கு
புத்திரனுகிய பூபாலனிப்போது (நித்)

சரணம்.

மெத்தமயக்கமாய் வேடிக்கையா யந்த
மெல்லிநல்லாள்மடி மீதிலுல்லாசமாய் (நித்)
தெப்பக்குளத்தோரஞ் சிங்காரத்தோப்பிலே
சேயிழைமடிமீதி லாயாசமாகவே (நித்)
இந்திரன்போலவே யேகாந்தமாகவே
சந்திரமதியெனுங் தையலாள்மடி-மீதில் (நித்)

சந்திரமதி-விருத்தம்

வெய்யிலுந் தணிந்ததையோ வேந்தனே யரசர்கோவே
துய்யமான் காட்டுக்குள்ளே தூங்கவும் நீதியுண்டோ
பையவே யெழுந்திருந்து பட்டணம் போவோம்யாமும்
ஐயனே வாருமிப்போ அயோத்திமா நகரம்போவோம்.

இராகம்-சௌராஷ்டிரம்-அடதாளம்.

கண்ணிகள்.

தனேநேரமாய் நித்திரைபோரீரோ ராஜசேகரா இப்போ
ல்லாம்வெறுத்துநீ ருல்லாசமானீரோ ராஜசேகரா
னசேனைபரிவார மிருக்கையில் ராஜசேகரா இந்த
ண்யூந்தனிலே நித்திரைபோரீரோ ராஜசேகரா
டில்வேட்டையாடி கலைமானெய்தீரோ ராஜசேகரா இப்போ
துரிவாடையில் நித்திரைபோரீரோ ராஜசேகரா
னகந்தன்னிலே நின்றுமயங்குறேன் ராஜசேகரா இப்போ
மயக்கங்கொண்டு கன துக்கமானீரோ ராஜசேகரா
ணதளங்கள் மயங்கித்தவிக்குதே ராஜசேகரா இப்போ
ரமாகவே தேசம்போகவேணும் ராஜசேகரா

அரிச்சந்திரன் நித்திரையெழுப்புகிற பாகம்.

மர்திரி அரிச்சந்திரன். சர்திரமதி. லோகிதாஸன்.

பொது-விருத்தம்.

வெ[...]வனைப் படைத்ததிண்டோள் மெல்லியாள் மடியிற்றானே
பொற்புட[...]ரசனித்திரை போகுமந்நேரந்தன்னிற்
பற்பல வாறதாக[...] பதறிவாய் குளறித்தானே
சொற்பனங் கண்டு[...]ன்னன் துயிலதுநீங்கினானே.

ச[...]திரமதி-வசனம்.

அகோவாருங்களையா [...]ி ருரி[...]ஸ்தமான மாகிறவேளையா
ற்றே இதுவரையிலும் நித்திரை[...]ம் மனம்பதறி யெழுந்திருந்
விபரந்தெரியச் சொல்லவேணுமையா சுவாமி.

இராஜான்விருத்தம்.

சந்திரமதியே யெந்தன் சயனசொற்பனமே கேளாய்
சுந்தர முடிதாணின்றித் தொல்புவி புகழுங்காசி
அந்தமா நகரிலெந்தன் அருமைகள் சிந்தக் கண்டேன்.
மூந்திப்போல் மகுடந்தன்னை முடிதனிற் றரிக்கக்கண்டேன்.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னமாயமோ கனவுநேர்மை
யானறிகிலேன்டி பெண்ணே கண்ணே (என்)

அநுபல்லவி.

நன்னயமாகவே யென்னவிதியோடி
நானறியேன் பெண்ணே
வாறோர்செயல் கண்டேன்டி பெண்ணே (என்)

சரணம்.

ஓசைக்கடலமுதே யெந்த னுசனெக்கட்டிமுத்தே
நேசமாயென் [...]னுசக்கிசைந்த
நித்திரைதன்னிலோர் விச்சித்திரங்கண்டேன்டி பெண்ணே (என்)
நீசனெனைக்கொள்ளவும் ரிஷிமகுடந்தள்ளவும்
காசிதேசந்தனிற் றாகனென்னையும்
கையினிற்இட்டியைக் கட்டவுங் கண்டேன்டி பெண்ணே (என்)
பாலகர்தன்னுடனேமகன் பார்வனம்போகையிலே
பாலகன்கைதனில் பாம்புகடித்திட
பாலகனுமங்கே மாளவுங் கண்டேன்டி (என்)

மைந்தன்காவிலிறக் மயானமும்யான்காக்க
அந்தனர்வீட்டினி லுந்தனை வித்திட

அன்புடன்சொற்பனங் தென்புடன் கண்டேனடி பெண்ணே (எ
வாளாலுனைவெட்டவும் அதைவாரேனோர்வந்துதட்டவும்
ஆழிசூழப்யோத்தி நகரில்வந்தெனக்
கட வாய் மகுடஞ்சூட்டிடக் கண்டேனடி பெண்ணே (எ

இராஜா-விருத்தம்.

என்னருந் தவம்போல்வந்த யின்பமா மயிலேகேளாய்
என்னென்று சொல்வேனிப்போ நியல்புடன் துயிலும்போது
துன்னுமோர் சொற்பனத்தின் துயர்களை நினைத்தார்சிந்தை
சின்னபின் னங்களாகச் சிதறுதென் செய்வேன்பெண்ணே.

சந்திரமதி-விருத்தம்.

காதல்சே ரெனதுபிராண கர்த்தனே நீர்தான்கண்ட
வேதனைச் சொற்பனத்தின் விதமெலாந் தெரியச்சொல்வீர்
யாவதுந் தானுந்தெய்வத் தெண்ணத்தின் படியேயாகும்
தீதொருக் காலும்வந்து சேருமோ தேவரீர்க்கே.

ஷை-வசனம்.

வாருமெனது பிராணநாயகா தாங்கள்கண்ட சொற்பனத்தை என்னமொருதபா விவரமாய் அடியாளுக்குத் தெரியும்படி சொல்லவேணுமையா சுவாமி.

இராஜா-வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் பெண்ணே சந்திரமதி

இராஜா-அகவல்.

அற்புதம் அற்புதம் அரகராசிவனே
சொற்பனங் கண்டதைச் சொல்லவும் போமோ
குருவுட கடாக்ஷமோ கோசிகன் மாயையோ
மருவல ரான மன்னவ ரேவலோ
காசி விஸ்வேசா கண்டேதோர் கனவை
நேசமாய்ச் சொல்ல நினைவுதான் வருமோ
சந்திர மதியே சாற்றுவேன் கேளாய்

சிவசாமி அவர்கள்.

இந்தமா வனத்தில் வீணைப் பாதியின்
சுந்தர மாகநற் றோசையி ருவர்
வந்துமே நடன மாதர்க ளாடி
இசையுட னிராகத் தியல்பெலாம் பாடி
வசையது பேசி மங்கையர் தானும்
மனமொத் தென்னை [illegible]ருமெனக் கூறச்
சினத்திரு லவர்களைச் சவுக்கினு லடிக்க
வனத்தினிற் றவஞ்செயு மாமுனி யொருவர்
சினத்துவந் தெந்தன் திருமுடி யுதைக்க
செங்கோ லரசு தேசமு மிழந்து
பங்கநான் பட்டுப் பரிவுடன் போக
காட்டிலே பூதங் கண்டுநான் மதிக்க
மூட்டிய தனலும் முன்வந்து நிற்க
விந்தையாய்க் காசி விஸ்வேசரைத் தொழுது
அந்தணர் தமக்கு அடிமையாய் நீயும்
ஜாதியிற் பெரியோன் சாம்புவன் றனக்கு
ஆதியின் விதியால் அடிமை நானாகி
மைந்தனுஞ் சாக மனைவியை வெட்ட
வந்திடுந் தேவர் மகிமையுங் காண
தேவர்கள் கூடிச் சிறப்புட னோடி
மூவருங் கூடி முகனை பொருந்தி
அன்புட னென்னை யழைத்திது சொன்னார்
உன்னுடை கவலை யொழிந்தது இனிமேல்
கஷ்ட மடைந்ததைக் கருத்தி லெண்ணாதே
இஷ்டமா யயோத்தி யிருந்தர சாள்வாய்
என்று சொற்பனத்தி லென்கணிற் கண்டேன்
தொன்று செய்பயனோ சொல் சந்திரமதியே
மந்திரஞ் சொல்குரு வசிஷ்டரே சரணம்
எந்தனைக் காத்து ரட்சியு மையா.

இராஜா-வசனம்.

அகோவாரும் பெண்ணே சந்திரமதியே இப்பேர்ப்பட்ட சொற்
னங்களெல்லாங் கண்டேன் ஆனால் கடவுளுடையகிருபை யெப்படி
யிருக்குமோ தெரியவராது பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி-விருத்தம்.

கதிரவன் றன்னைக்கண்டு கடும்பனி விலகிறாற்போல்
பதிதருங் குருவசிஷ்டர் பாதமே நினைந்துகொண்டு
விதியினால் வருவதெல்லாம் வேந்தனே யனுபவிப்போம்
சதியொன்றும் வாராதையா சடுதியிற் போவோம்மன்னா.

ஷை-வசனம்

அகோவாருங்களையா சுவாமி நம்முடைய குலகுருவாகிய வசிஷ்ட மகாமுனிவருடைய பாதாரவிந்தத்தை மனதிற்றியானித்து விபூதி பஞ்சாட்சரத்தைத் தரித்துக்கொண்டு நம்முடைய அயோத்தியாபுரி பட்டணம் போவோம் வாருங்களையா சுவாமி.

இராகம்-முகாரி, ஆதிதாளம்.

பல்லவி.

நன்னகரஞ்சேர மன்னவரே வாரும்

அநுபல்லவி.

சொன்னமொழி தவறாத துரையே யென்சாமி (நன்

சரணம்.

காட்டினில் வேட்டையாடிக் கலை விலங்கினைச்சாடி
களையாய்வனத்திருந்தாற் கதிரவனடையுமுன் (நன்
என்னமனவருத்தம் என் பிராணநாயகா
செந்நெல்விளையும்வளஞ் சேருமயோத்தி (நன்

மூடுகு.

காவிற் குயில்கள் கூவுதே கதிர் சாயுதே
கால்கள் மிகவும் நோகுதே
வானமுகில்களெழு மழைமிகப் பெய்யுதே
நாமினிச் சேருவோம் ராஜனே அய்யோத்தி (நன்
... குலத்துராஜனே பிராணநேசனே
பார்மன்னர்பணி போஜனே
சேனைபரிதளமுஞ் சேயும்நாமெல்லோம்
கானகத்தைக்கடந்து நடுகிநகரஞ்சேர (நன்

இராகம்-ஆரபி-அடதாளம்

பல்லவி.

நடப்போம் வாராய் நகரைநோக்கி
நடம்போம் வாராய்

பாணப்பெண்கள் நடனமாடல்.

அரிச்சந்திரன். மந்திரி பாணப்பெண்கள். பாணப்பெண்கள்.

அநுபல்லவி.

நடப்போம் வாராயிந்த் தடத்தின்வழியெல்லோரும்
நாடியே ஜனமெல்லாங் கூடியே நகரீசேர(ந

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் அரிச்சந்திர மகாராஜன் தனது ரதகஜதுரகப
திகளுடனே அயோத்தியா நகரத்துக்குப் பிரயாண முஸ்தீப்பாகுப
டி யாவருக்குந்தெரிவித்து தானும் சந்திரமதியும் புறப்படவேணுமெ
ன்று ஆலோசித்திருக்கும் சமயத்தில் அரசனால் பூன்னம் அடிப
ட்டோடின பன்றியானது விஸ்வாமித்திரரிடம் முறையிட்டவிதங்
ண்க.

பன்றி-விருத்தம்.

அப்பனே அபயமென்னை அனுக்கிரகஞ் செய்ததேவா
மெய்யனே அபயமெந்தன் மெய்யெலாம் நொந்துதையா
செய்யும்வா றேதுங்காணேன் திறலரிச் சந்திரன்விட்ட
கையம்பி னாலேபட்டுக் கலங்கினேன் முனிகளாமி

பொது-வசனம்.

அபயம் அபயம் விஸ்வாமித்திரமகாரிஷியே தேவரீர் உத்தரவு
படியேபோன வென்னை அந்த அரிச்சந்திரமகாராஜன் விட்டபாண
த்தினாலே சரீரம்நொந்து மகத்தாகிய வாதனைப்படுகிறேன் என்னசெ
வேன் விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஆனதிருக்கட்டும் அந்த அரிச்சந்திரனை என்னுலியன்ற மாத்தி
ம் பார்த்துக்கொள்ளத் தெரியும் நீ உன்னிருப்பிடம் போகலாம்.

பாணப்பெண்கள்

வருகிறபாகம்.

ஷை-விருத்தம்.

வனத்திலே விஸ்வாமித்திரன் வஞ்சனை மனதிலெண்ணி
சினத்துடன் மூச்செறிந்து சீறினன் காசியாலே

கனத்தபொற் பதங்கள்பூண்டு காகினி மாதர்போலவ்
வனத்தினிற் பாணப்பெண்கள் வந்துமே தோன்றினரே.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாயமோகினியும் வந்தாளே மாமுனியெதிராய் (மா)

அநுபல்லவி.

மாயமோகியும் வந்தாள் மாதவர்கள் தான்மயங்க
நேயமுடன் மாயப்பெண்கள் நின்று நடனஞ்செய்ய (மா)

பாணப்பெண்கள்-வசனம்.

சரணம் சரணமையா சுவாமி அடியாளை நாசித்துவாரத்தின் வழி கப் அழைப்பித்த காரியமின்னதென்று திருவுளம்பற்றவேணுமை சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

நின்றமேதார் கன்னிமாரே நிலையரிச் சந்திரன்பக்கஞ்
சென்றுநீ யவனைத்தேற்றிச் சேர்ந்திடு மார்க்கந்தேடு
இன்றவன் மாட்டேனென்று வியல்புடன் குடையைக்கேளு
அன்றவன் தாராவிட்டா லயோத்திவிட் டிவ்விடம்வாராய்.

கெடி-வசனம்.

அடோவாரும் பெண்களே நாம் நினைத்தமாத்திரத்தில் வந்தீர்கள வா அதனால் நமக்கு மெத்த சந்தோஷம் உங்களை யுண்டுபண்ணி காரியம் வேறொன்றுமல்ல யிந்தவனத்தில் தெய்வகங்கையென்னுா ருக்குளத்துக்கரையில் வந்திருக்கிற அயோத்தியாபுரி யாளப்பட்ட ரிச்சந்திரனிடம் போய் நீங்கள்கற்ற சங்கீத பரதநாட்டியங்களைக் ச டி உங்கள் வல்லபங்களை நீட்டி இரண்டொரு காரியமாகியதை நி நபடி முடிக்கவேண்டும் அதாவது முதல் பூச்சக்கிரக்குடையை ங்கள் தராவிடில் பொய்சொல்லும்படி யேற்பாடு செய்யுங்கள் ந மறுக்கில் எங்களை விவாகம்பண்ணிக் கொள்ளுங்களென்று இர ுன்று விதத்தில் எதையாவது ஒன்றை நிறைவேற்றிக்கொண்டு வா ங்கள் பெண்களா.

பாணப்பெண்கள் வசனம்.

அப்படியே போய் வருகிறோமையா சுவாமி.

அரிச்சந்திர நாடகம்.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தாரே பாணப்பெண்களும் வானுலோ கன்னம்போலே
வந்தாரே பாணப்பெண்களும்

அநுபல்லவி.

கொந்தளப்பொன்னோலைசூடிக் கோகிலம்போற்கீதம்பாடி
அந்தமாய்ச்சபையைநாடி யரம்பைபோல் நடனமாடி(வ

சரணம்.

செங்கையில்வளையல்பூட்டித் திகழ்விழிக்குமையுந்தீட்டிக்
கொங்கையில் ரவுக்கைமாட்டிக் கோகிலம்போலேசிமாட்டி(வ
சூதமலர்தொடுக்கத் தொந்தோமென நடிக்க
வாதிமனந்துடிக்க வந்துகீதம் படிக்க(வ

இராஜா-விருத்தம்.

மோகமங்கையர் போலென்றன் முன்வந்து நின்றநீங்கள்
நாகமங்கையரோ தெய்வ நகரின்மங்கையரோ நல்வீர்
போகமங்கையரோ யிந்தப் புவியின்மங்கையரோ நல்ல
வேகமங்கையரோ வந்தவிதங்குலம் இடமுஞ்சொல்வீரே.

இராஜா-வசனம்.

ஆனால் வாரும்பெண்களா உங்கள் வித்தைக்கிணையாய் எத்தை
சொல்லாம் ஆகிலும் நீங்கள் இவ்விடம் வந்தகாரியம் இனனதென்
சொல்லவேணும் பெண்களா.

பாணப்பெண்கள்-வசனம்.

கேளும் ராஜபரமேஸ்பரா உமது சமுகத்தைக்காணவும்
ற்றவித்தையைக் காண்பிக்கவும் தாங்கள்சுகத்தை அனுபவிக்கவும் ந
ங்கள் தீங்கினைச்சேரவும் வந்தோமையா சுவாமி.

இராகம்-காபி அடதாளம்.

கண்ணிகள்.

ராஜன் மகாராஜனென்று நாங்கள் தானுமே
நாடியுமைத் தேடியிங்கு வோடிவந்தோமே
ஆசையாகி வந்தேனிங்கு அரசேபாரும்

பாயெனை மணம்புரிந்து அணைய வாருமே
ாகமீறு தையைபோவென முகத்தைப் பாருமே
த்தமிட்டெங்களைச்சேர முறைதான்வாருமே
மத்தாலே மோகமீறிக் களைத்தேன் பாருமே
மசாங் தைக்குதென்னைக் காக்க வாருமே
வறுத்துயென்னைப் பார்ப்பதென்ன விதமோ நீருமே
வண்டிக்கொண்டேன்கோபம்போக்கி விரைவாய்ச்சேருமே

இராஜா-வசனம்.

ஆனால் வாரும்பெண்களா நீங்கள் இப்படியெல்லாம் அகடவிக மாத்தியங்கள் பேசவேண்டாம் உங்களுக்கு வேண்டிய வஸ்திராப ணங்கள் திரவியங்கள் தருகிறோம் வாங்கிக்கொண்டு போங்களடி பெண்களா.

பாணப்பெண்கள்-விருத்தம்.

வஸ்திரம் வேண்டியிங்கு வந்தோமென் றெண்ண வேண்டாம்
விஸ்தார மிருக்குதெங்கள் வீட்டினி லேயமாரன்
அஸ்தா ரம்பத்தால்மெத்த அஞ்சினோம் நீங்களுந்தான்
கஸ்திகள்செய்யா தெம்மைக் கலியாணஞ் செய்குவீரே.

ஷை-வசனம்.

கேளும் ராஜபரமேஸ்வரா ஆடையாபரணம் திரவியமுதலானது ள் எங்களுக்கு எதேஷ்டமாகயிருக்கிறது தங்கள் கிருபையால்கு வில்லை ஆகையால் தாங்கள் எம்மை விவாகஞ் செய்துக்கொள்ள வே ணும் மகாராஜனே.

இராஜன்-கந்தார்த்தம்.

அம்மிமிதித்து அருந்ததிபார்த்து
அனைவோருங்கூடி யாசீர்வதித்து
கம்மியன் செய்ததாலி
கட்டினவனென்னிடத்திற் காத்திருக்க

கும்மியடித்துக் குலாவிவரும் நேசப்பெண்கள்
கோனொன்று சொல்வதேதடி அடியேபெண்காள்
கோத்தையே நீயென்ன சொன்னடி

பாணப்பெண்கள்-கந்தார்த்தம்.

மன்னனை யெல்லாம் ஒரு குடைக்கீழாண்டதீரா
மன்னவரே யென்னகுறை செய்தோமையா
தண்ணீர்மேற் றாகமாய் வந்தபேர்க்கு
தாகவிடாய்தீர ஜலங்கொடுக்க வேணும்
பெண்ணைநீ ரகல்விட்டுப் பேசவேண்டாம்
பிரியமா யொருமுத்தந் தாராய் சாமி
பேதையா மெங்களைச் சேராய் சாமி.

இராஜா-வசனம்.

ஆனால்கேளும் பெண்களா நீங்கள் என்னமாய்ச் சொன்னபே
திலும் நான் கேட்கவேமாட்டேன் மரியாதையுடனே கொடுத்த தி
வியத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் பெண்களா.

பாணப்பெண்கள்-வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி எங்களைச்சேராவிட்டாலும்பூச்ச
கிரகுடையையாவது தரும்படி உத்தாரவாகவேணுமையா சுவாமி.

இராஜா-விருத்தம்.

குடைதனைக் கேட்கலாமோ கோதையே நீசப்பெண்காள்
உடைபொருள் பணிதியாவு முங்களுக் களிக்கச்சொன்னேன்
விடைதனை வாங்கிப்போ வேகமாய்ப் போறலாச்ச
தடைசொலி நிற்பீரானிற் சவுக்கினலடிக்கச் சொல்லேன்.

ஷை கந்தார்த்தம்.

அட்டாங்கயோகந் தனையேநிறுத்தி யருள்கின்ற அன்பர்தன்னை
தொட்டாடுஞ்சோதி யெங்கெங்குநின்று துதித்தாடு மீசர்பாதம்
ஒட்டாதபாவஞ் செய்தோர்கள்நீங்க ளொருநாளு மோக்ஷகதியில்
எட்டாப்புலைச்சி யென்முன்னே வந்து

என்டி குடையைக்கேட்கிறாய் பாவிசண்டாளி
என்டி குடையைக்கேட்கிறாய்
என்டி குடையைக்கேட்டாய் மீனசாதி நீசக்கள்ளி
தான்டி ஆபரணங்கள் தருவேன்கொண்டுபோகாமல் (எ)

இராஜா-வசனம்.

ஆனால்வாரும் புலைமாதர்களே நீங்கள்தானா குடையைக்கேட்கிற ர்கள் யென்முன்னே நில்லாதீர்கள் போங்கள் பெண்களா.

பாணப்பெண்கள்-விருத்தம்.

மன்னர் மன்னவரேகேளீர் வசிஷ்டரும் புலையனாயா
உன்னுட தந்தைதாயு முயர்ந்ததோர் புலையர்கண்மர்
என்னையு மிழிவாய்ச்சொன்னீ ரிசைந்துநீர் சேராவிட்டால்
முன்னமே சொன்னதியாக மில்லையென்றொரு பொய்சொல்வாய்.

ஷடி-வசனம்.

அகோவாருங்களையா சுவாமி பூச்சக்கிரக்குடையைத் தருகிறதற் , மனதில்லாவிட்டாலும் முன்னமே தியாகந்தருகிறேனென்று சொ ன்னீரே அதையாவது யிப்போது யில்லையென்றுசொன்னால் நாங்கள் இப்போதே போகிறோமையா சுவாமி.

இராஜன்-கந்தார்த்தம்.

முன்சாதி நாங்கள் கடைச்சாதி நீங்களென்
முன்பாக வந்து இப்போ
அஞ்சாமல் நீங்கள் நெஞ்சந் துணிந்து
யென்சாமி முனிவனருளால்
பஞ்சாயகோடி பூமண்டலாதிபதி
மன்னன் பொய்சொல்வதேதடி யடியே பெண்காள்
மங்கையநீ நில்லாதே போடி
சொன்னசொல் லின்னோ மென்னமாய்த் தோணுது
குறுபோற் காணுதடி யடியேபெண்காள்
சொல்ல மனங்கூசுதடி

இராஜா-வசனம்.

ஆனால் வாருமந்திரி இந்த ஸ்திரீகள் சொன்ன சங்கதிகளைக்க வனித்தீரா மந்திரி.

மந்திரி-வசனம்.

இராஜபரமேஸ்பரா நான் கவனிக்கவில்லையே இந்தமாதர்களென் னசொன்னார் அதுவிபரந் தெரியும்படி சொன்னால் இப்போதே இந்த மாதர்களை ஆக்கினை செய்கிறேன் மகாராஜனே.

இராஜா-விருத்தம்.

மந்திரி சத்தியகீர்த்தி வசனமோன் முனைக்கக்கேளாய்
தந்திர உபாயஞ்செய்யத் தான்வந்த மாதர்தானும்
முந்தியே குடைதாவென்றார் முடுகியே பொய்சொல்லென்றார்
யிந்தையா யிருக்குதிந்த வேசையைத் துறத்துவாயே.

ஷை-வசனம்.

வாரும் மந்திரி யிந்தபெண்களுடைய செய்கையைப் பார்த்
விபரீதமாகத் தோனுகிறது உடனே யிவர்களை வெளியிலத்துரத்த
க்கொண்டு போகும்படி செய்யும் பிள்ளாய் மந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியே பிடித்துத்தள்ளும்படி செய்கிறேன் மகாராஜனே.

ஷை-விருத்தம்.

ஆரடா சேவகாநீ யடவுடன் சபையிலேதான்
சேரவே செத்தப்பெகஞ் சிரிக்கின் தீமைமயிப்பே
மாரடா கைப்பிரம்பால் மாதர்க ளோடிப்போக
நேரடா யென்தன்முன்னே கிருபன்கண் களிக்கத்தானே.

ஷை-வசனம்

கேளுஞ் சேவகா நீ இந்த நீசப்பெண்களை தாக்ஷண்யம் பாராத
கழுத்தைப் பிடித்துத்தள்ளி தொலைதூரக்கொண்டு போய்வி
வாருங்கள் சேவகா.

சேவகன்-வசனம்.

அப்படியே பிடித்துத்தள்ளிக் கொண்டுபோய் விட்டு வந்தே
யா சுவாமி.

பொது-வசனம்.

அகோகேளுங்கள் சபையோர்களே இவ்விதமாக அரிச்சந்திர ம
ஜாவினுடைய உத்திரவின்படியே சேவகர்கள் பாணப்பெண்களை
த்துத் துறத்த அப்பால் மாயமோகினிகளாகிய நீசஸ்திரீகள் தங்க
யுண்டாக்கிய விஸ்வாமித்திர முனிவரிடம்போய்ச் சொல்லுகிறவித
ாண்க.

இராகம்-காம்போதி, தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

ய்யனே அபயமையா — அருள்முனியே அபயமையா
மெய்யனே அபயமையா — விஸ்வாமித்திரரே அபயமையா
டித்தானையா வெங்களையும் — அங்கமெல்லாம் நோகுதையா
டிமைப்பற்றி யிழுத்தானையா — மானபங்கஞ் செய்தானையா
ங்கமெல்லாம் நோகவேதா — னடித்தானையா பிரம்புகொண்டு
ங்கப்பிரம்புகொண்டு — தள்ளிவிட்டடித்தானையா

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஆனால் வாரும்பெண்களா உங்களையேன் அ த்தான் அதுவியா
ந்சொல்லுங்கள் மாதர்களே.

மாதர்கள்-விருத்தம்.

பாடியே நடனஞ்செய்தோம் பணிபொருள் பரிசியென்ன
நாடியே குடைதாவென்றோம் நரபதி கோபமாகி
ஓடவே அடித்தானையா வுடம்பெலாங் காயமாக
வாடியே வந்தோமையா மாமுனி யதிவீர்சுவாமி.

மோகினிப்பெண்கள்-புலப்பல்.

இராகம்-எதுகுலகாம்போதி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயையோ யாங்கள்போய் பவதிப்பட்டோமையா — முனிநாதா-இது
தெய்வச்சதியோ நாங்கள்செய்த பாவந்தானோ — முனிநாதா
அருமையா யெங்களை யனுக்கிரகஞ் செய்தாயே — முனிநாதா-அந்த
கருதிக்கும் பாவிகையிற் காட்டிக் கொடுத்தாயே — முனிநாதா
உத்தாங் கொண்டாந்த அத்தனைப் போய்க்கண்டோம் — முனிநாதா-நா
னெத்தனை யோவிதம் இங்கிதங் காட்டினோம் — முனிநாதா
என்னவெகுமதி வேணுமென்று கேட்டான் — முனிநாதா-ராஜ
மன்னவ ரென்றெண்ணி வண்ணக் குடைகேட்டோம் — முனிநாதா
கொடுக்கப் படாதென்றான் கூடவே மோகித்தோம் — முனிநாதா-அவ
நடுத்துத் தூதனைவிட்டுத் தள்ளிவிடச் சொன்னான் — முனிநாதா
அடுக்குமோ தூதர்க ளடித்துத் தள்ளினார்கள் — முனிநாதா - மிக
நடுக்குதே தேகமும் நாங்களென்ன செய்குவோம் — முனிநாதா

செடி-வசனம்

அகோ வாருங்களையா சுவாமி தேவரீர் சொன்னபிரகாரம் அரி
ச்சந்திரனிடம்போய் எங்களை ஆட்டத்தினாலும் சங்கீதத்தினாலும் அ
வனை மயக்கி பூச்சக்கிரக்குடையைக்கேட்டோம் பெர்ய்சொல்லச்
சொன்னோம் பொற்றாலிகட்டி எங்களை புணரச்சொன்னோம் அவன் ஒ
ன்றுக்கும் இணங்காமல் ஒட்டியடித்து விட்டானையா சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

அச்சமில் லாதப்பாவி யடித்தானோ சவுக்கினாலே
நச்சவேல் விழிபினாளே நாடியே யோடிவிப்போ
மெச்சவே ... வுன்னைக்கண்டாய் விண்ணுமன்ன னதிரத்தானே
உச்சித முடியும்வீழ வுதைக்கிறேன் பாராய்ப் பெண்ணே.

இராகம்-பர்துவராளி-அட தாளம்.

கன்னிகள்-முடுகு.

அடித்தவனைக் காட்டிலோட்டி யவனிபட்டமெல்லாம்வாங்கி
பெண்டாட்டியை விற்கச்செய்வேன் பிள்ளையையு மடவுவைப்பே
அவனையும்புலையன்கைவி லடிமையாகச் செய்துவைப்பே
தேசங்களை யான்பறித்துத் தேசாந்திர மாக்கிவைப்பே
சொத்தினில் மகுடந்தன்னைச் சிதறிட வுதைப்போனிப்போ

விஸ்வாமித்திரன்-வசனம்.

அகோ வாரும் பெண்களே இதோ அவனுடைய கிரீடத்தைப்
பூமியில்விழ வுதைத்துப்போகிறேன் நீங்கள் உங்களுடைய ஆச்சிர
மத்துக்குப் போங்கள் பெண்களே.

பெண்கள்-வசனம்.

அப்படியே நல்ல பாக்கியமையா சுவாமி

விஸ்வாமித்திரர்-விருத்தம்

தடவரை குலுங்கச்சத்த சாகரங் கலங்கச்சீறி
இடிமின்னி யிடித்தாற்போல இருகண்ணிற் றீப்பறக்கத்
திடமுடன் நாயேன்வந்து சென்றவன் கிரீடந்தன்னை
பொடிபட வுதைப்பேனென்று பொங்கியே யெழுந்திட்டானே

திருமுடி உதைக்கிறபாகம்.

கட்டியக்காரன் சந்திரமதி. லோகிதாசன் அரிச்சந்திரன். விஸ்வாமித்திரன்.

இராகம்-பந்துவராளி, அடதாளம்.

கிடு கிடெனவே பூமி யதிரக்
கிரிக ளெல்லாம் நடுநடுங்க
முடி குலுங்கவே அரிச் சந்திரனை
முடுகி யுதைத்தான் விஸ்வா மித்திரன்.

இராகம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

கௌசிகன் கோபத்தைக் கண்டாயோ சந்திர — மதியே-கா
காட்டிற்கண்ட[illegible] கைவிற்பலித்தது — பெண்ணே
பொன்னின்கிரீடம் புவிதனில்வீழ்ந்ததே — பெண்ணே-இ
பூதுயிற்பாதகம் போதவேசெய்தேனே — கண்ணே
தங்கக்கிரீடந் தரையில் விழுந்ததே — பெண்ணே-எ
எங்குமும் புண்ணுறுகி யாவிபதறுதே — கண்ணே
மாணிக்ககிரீடமும் மண்ணில்விழுந்ததே — மந்திரி-இ
மாமுனிகௌசிகன் மாயையறிந்தாயோ — மந்திரி

இராஜா-வசனம்.

ஆனால் வாரும் பெண்ணே சந்திரமதி விஸ்வாமித்திர ஸ்வாமி னுடைய கோபத்தைக் கண்டாயா நான் முன்னமே கண்டகனவுக்கு சரியாக நடந்திருக்கிறது இன்னும் என்னென்ன விபரீதம் நடக் மோ தெரியவில்லை மேலும் அந்த விஸ்வாமித்திரஸ்வாமிகள் என் டைய கிரீடத்தை காலாலுதைத்தாரல்லவா அந்தக் கிரீடத்திலழுத்தி ஒன்பதுவகை நவரத்தினங்கள் [illegible] அவருடைய பாத இந்தமெப்படி நேருமோ ஆகையால் மந்திரியுடன் அவரைப்போய்ப் பார்த்து அவருடைய கோபத்தைத் தணித்துவருவோம் பெண்ணே ச ந்திரமதி.

சந்திரமதி-வசனம்.

அப்படியே போய்ப்பார்த்து வருவோம் பிராணநாயகா.

இராஜா-விருத்தம்.

யாதொருகுற்றந்தன்னை யடியேயான் செய்ததில்லை
தீதுறு கோபமிஞ்சிச் சினத்தெனை யுதைத்ததாலே

பாதம்நொந் திடுமேயிர்தப் பழிக்குநானென்ன செய்வேன்
பேதமென் றென்னைவேண்டாம் பிடித்துபசரிப்பேன் சுவாமி.

இராகம்-சங்கராபரணம்-தாளம் ரூபகம்.

பல்லவி.

நொந்துதோ நொந்துதோ பாதம்
நோகுதோ நோகுதோ சாமி

அநுபல்லவி.

செந்தாமரை மலர்ப்பாதஞ்
சிவந்துதோ யெந்தல்கோவே (நொ)

சரணம்.

தாகுற்றம் நான்செய்தே னென்மீதிற் கோபமையா
சாதிமையமாய் மின்னுந் தலங்கும் கிரீடம்பட்டு (நொ)
டலனை விஸ்வாமித்திரா வெதனை செய்யவேண்டாக்
றைபொற் பாதம்பட்டிக் கடைத்தேதிப் போனேனையா (நொ)
ணிக்க மகுடம்பட்டு மாதமே நோகுதோதான்
ணிப்போன் ருனமூந்தி ஐயாதேகம் நொந்துதோதான் (நொ)

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

நவைற்செய்வோர் குதவியாகத் தழைத்தப்பூத் திருந்தவிந்த
நவமுள்ள சோலையெல்லாம் நாசஞ்செய் தழித்தாயெந்தன்
நவரிதழ் மாதர்வந்து சதிக்காணம் விதங்கள்செய்ய
வைலகொண் டழுதுபேச்சுக் கதறவே அடித்திட்டாயே.

கடி-வசனம்

அகோவாரும் பிள்ளாய் அரிச்சந்திரா நான் தவஞ்செய்தாக்கோ
டிருந்த வனத்தையுமழித்து அதில் வாழும்படியான மிருகங்களையு
வதைசெய்து நானனுப்பிய பாணப்பெண்களையு மடித்துத் துரத்தி
ய் இதோ சபித்துப்போடுவேன் பிடிசாபத்தை அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

ணிதைபர் தம்மைநானே வம்பதா யடித்தேனென்றீர்
ணிசெடுங் குடையைக்கேட்டார் தாபத்தைத் தீர்க்கச்சொன்னார்
யெமென் றென்னிவேறே னெகுமதி கொடுக்கச்சொன்னேன்
மிருக் தேனிருர்கள் சிறிய துரத்திவிட்டேன்.

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ஆதி

பல்லவி.

என்மீதினிற் கோபம் நீ ரேனையா

அநுபல்லவி.

பத்தியும்ம தென் றடியேன்
பாதம் பணிந்தேன் போதா துணிந்தேன் (என்)

சரணம்.

வீராய் மின்னு சேரச்சொன்னார்
வெண்டேனொத் திண்டாமத் மன்னிசேனன் (என்)

விஸ்வாமித்திரர்-விருத்தம்.

எத்தனைவிதத்திலே நீ யெனக்கிதம் பேசினாலும்
சித்தத்திற் பிறந்தகோபந் தீருமோ சபித்திடாமல்
முத்தவி மூலமினுரை மோகத்திர்த் தாராவிடாமல்
பெத்தவுன் னைப்பி...றை பெரும்புலையாகச்செய்வேன்.

இராஜா விருத்தம்.

..ன்னிய மாதர்தம்மை யருங்கன விலுங்காணேன்
..ன்னைவா ராம்பினத்து இடண்டுகூதிட ருமர்த்தன்
..ன்னியர் தம்மைக்கூடேன் கருதிரோவிக்குஞ்சாபம்
..ன்னவக் தாலுங்கொள்வே ளினியுந்தன் கடாக்ஷம்சாமி.

ஷை விருத்தம்.

இன்னமோர்வார்த்தைகேளு மென்னாருத்தலைத்தோய் பொன்னுக்
தன்னமை யாகவாழும் தரணிநன் னகரம்காகும்
பன்னுமென் பாக்கியமெல்லாம் பற்றறத் தாச்சொன்னாலும்
சொன்னசொற் பிசகாதிவேன் தோஷத்திறக் குள்ளாகேனே.

ஷை வசனம்.

சரணஞ்சரணமையா முனியீஸ்பரரே யென்னிடமிருக்கக்கூடிய நாயிகைகரம் பொருள்களிலேதைக்கேட்டாலும் தருகிறேன் இந்த நீச ..ன்னாடெண்களை யொருக்காலுங் கூடேனையாசுவாமி.

சிவசாமி அவர்கள்

விஸ்வாமித்திரர்-விருத்தம்

ஆயிது சரிதான்சொன்ன வருமொழி தனைக்காப்பாற்று
பூமியின் னகரங்கூடு பொருந்துமிப்பான் நிதிகளெல்லாம்
தாமிக பிலாதுமிவேன தையலம் தம்மைக்கூடேன்
நேமமும் பிசகேனென்று நீபொய்மை சொல்மாறுதே.

ஷெ. வசனம்

ஓ அரிச்சந்திர ராச்சியத்தையாவது கொடுப்பேன் அன்னிய மாதர்களைமாத்திரம் கூடமாட்டேனென்று சொன்னாயல்லவா அந்தச் சொல்லைக் காப்பாற்றும்பிள்ளை யரிச்சந்திரா.

இராஜா வசனம்.

அப்படிச்சொன்ன விஸ்வாமித்திரரைப் பார்த்து அரிச்சந்திர மகாராஜன் என்னுடைய ராச்சியமுழுமையும் உமக்கே தருகிறேனையா சுவாமி.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

பாரையா ளரசர்க்கெல்லாம் பதியெனு மரிச்சந்திராவுன்
பேரையும் நினைக்கில்வார்த்தை பெருமையுஞ் சத்தியமும்
நீரையுன் கைபாலன்னி நின்னரும் பொருளையெல்லாம்
தாரைவார்த் திட்டாலுத்தம மனமகிழ்ச்சியாமே.

இராஜா விருத்தம்.

தாரையை வாருமென்று தவமுனி யேந்திநிக்க
யாரையே நோகப்போறே னையனுடை விதியென்றெண்ணி
நீரையே தேனிகொண்டு நிருபன்முன் காவேதாறும்
தாரையே வார்ப்போம்சுவாமி தயவுடன் கைகொள்வீரே.

விஸ்வாமித்திரருக்குப்

பட்டாபிஷேகஞ் செய்தல்.

இராகம் தோடி - ஆதிதாளம்

பல்லவி.

தாரைவார்ப்போம் வாராய் சந்திரமதியே பெண்ணே

விஸ்வாமித்திரர் பட்டாபிஷேகம்.

அநுபல்லவி

நீடைக்கையர வள்ளி — நேசமுடனே நாளும் (நா)

சரணங்கள்.

ஞான முனிவோருக்கு — நாயனிருபேரும்
மோன மயமாகவே — மூனிவருக்கிப்போது (நா)

அய்யோத்திநாட்டையெல்லாம் — தாய்யமுனிக்குநாமும்
அய்யர் வசிஷ்டருடன் — அன்பை மனதிலெண்ணித் (நா)

புத்தியுடனே நாமும் — பூலோகந்தனையாண்டோம்
சத்தியந்தவறிடாமற் — சித்தமகிழ்ந்துநாமும் (நா)

ஆனை சேனையுடன் — ஐம்பத்தாறு தேசமுஞ் *
சேனை காவலருடன் — தேசங்கள் முழுமையும் (நா)

இராஜா-வசனம்.

ஆஹோ வாருங்களையா சுவாமீ தேவரீர் ஒரேபிடிவாதமாகத் தாரைவார்க்கச் சொல்லுகிறபடியால் அயோத்தியாபுரி அவனிகடையை ஐம்பத்தாறு தேசமும் தேவாலயம், பிரம்மாலயம், இரண்டும் நீக்கலா மற்றவெல்லாந் தாரைவார்த்தேன் ஒப்புக்கொள்ளும் சுவாமீ.

விஸ்வாமித்திரர் வசனம்.

அப்படியே யல்லது அரிச்சந்திரமகாராஜனே நான் என்னுடைய ஆசிரமத்துக்குப் போய்வருகிறேனையின்னாய் மகாராஜனே.

இராஜா வசனம்.

அப்படியே போய்வாருங்களையா சுவாமி

விஸ்வாமித்திரர் வசனம்,

ஓஹோ ஒருகாரியம் மறந்துவிட்டேனே அரிச்சந்திரா

இராஜா வசனம்.

அது இன்னதென் றருள்புரியவேணுமையா சுவாமி

• விஸ்வாமித்திரர்-விருத்தம்,

மூன்றோ ஊன்வசத்தில் முத்திரை போட்டுவைத்த
சொர்ணமாம் பொருளைத்தக்ஷ தொல்புவி யறியத்தானே

சிந்தையுள் மகிழ்ச்சியாகத் தேவியுன் பாலனோடும்
மந்திரி யுடனேநீயு மறுதேச மேகுவாயே.

ஷை வசனம்.

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரமகாராஜனே நான் மூர்த்தியாகத்திற்காக வைத்ததிரவியத்துக்கு வழிசொல்லிப்போட்டு அப்புறம்போம்பிள்ளா யரிச்சந்திரா.

இராஜா-விருத்தம்,

அன்றுநீர் தாரைவாங்கி யடியேன்றன் னகரில்வைத்த
பொன்னுமே களஞ்சியத்திற் போட்டு முத்திரையுமிட்டு
முன்னமே வைத்துவிட்டேன் முனிவரே யெடுத்துக்கொள்ளும்
இன்னமும் வழக்குமுண்டோ வேதுகா ரணரப்பேனையா.

ஷை வசனம்.

அகோவாருங்களையா சுவாமி சாமவேடசுமனுவென்று சொல்லப்பட்ட களஞ்சியத்திலே காசேபோட்டு என்னுடைய செல்முத்திரையும் உங்களுடைய ருத்திராக்ஷமுத்திரையும் மந்திரியினுடைய அரக்குமுத்திரையும் போட்டுவைத்திருக்கிறது அந்த முத்திரைப்படிக்கு எடுத்துக்கொள்ளுங்களையா சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்,

தாரைவார்த்திட்டாயுந்தன் தரணிதன்னைகரம்நாடு
சாருமுன் பாக்கியமெல்லாந் தந்துநசரிகான்மன்னு
ஆரைநீர் மோசஞ்செய்ய அஞ்சாமற் பேசவந்தாய்
பாரறி யாதோயிந்தப் பணமில்லை யென்றாற்போதும்

வசனம்.

அகோ வாரும்பிள்ளாய் யரிச்சந்திரா நாடு நகரம் ராச்சியத்திலுண்டான பாக்கியமெல்லாம் தாரைவார்த்ததின்பிறகு ராச்சியமெல்லாம் என்னுடையதாய்ப் போச்சுதா இல்லையா அப்படியிருக்க அந்தத்திரவியத்துக்கு வழிசொல்லும்பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-விருத்தம்,

நீரிட்ட சபதம்நெஞ்சில் நினைத்துமே முடித்திரையா
வாரிட்டு முடிப்புப்பண்ணி வைத்திடுந் தனத்தையெல்லாஞ்

சிரிட்டு வாழ்க்தேனுனர் தேசம்விட் டெக்கேயேனும்
ஆறெட்டு நாளைக்குள்ளே யனுப்புவேன் பொன்னையெல்லாம்

அரிச்சந்திரன்-வசனம்.

ஆகோ வாருங்களையா சுவாமி தேவரீரெவ்வளப்படி முடித்துவி ட்டீர் தாங்கள்முன்னாடி யென்னிடத்தில் வைத்திருந்த திரவியமு தாரைவார்த்ததிற் சேர்ந்துபோச்சுதென்று சொல்லுகிறபடியால்அடி யேனுக்கு ராஜகெடு நாற்பத்தெட்டுநாள் வாயிதாக்கொடுத்தால்செலு த்திவிடுகிறேனையா சுவாமி,

விஸ்வாமித்திரர்-வசனம்.

வாரும்பிள்ளா யரிச்சந்திர முன்னமே உன்னிடத்தில் வைத்த பொருளைத் தாரைவார்த்தபொருளோடு சேரவில்லையென்று தர்க்கஞ் சொன்னாய் அதற்கு நான்கூடுதத்துச்சொன்னபின் சரிதானென்றாய் ஆனதால் நீயாலது நாற்பத்தெட்டுநாள் கெடுவில் தருகிறதாலது இப் போதே பணத்தைக்கொடுத்துவிட்டு மறுவேலை பாரும்பிள்ளாய அரி ச்சந்திரா,

அரிச்சந்திரன் விருத்தம்,

ஆரணம் பொய்த்திட்டாலும் அருமறை பொய்த்திட்டாலும்
வேகமா முனிநீயே யெந்தன் மெய்யுரை தவறுதையா
ஆகையால் காலகெடு வருபொருள் கொடேனையாகிற்
சோகமாம் பாதகத்தின் துரோகியா குவேன்சுவாமி,

இராஜா-வசனம்,

ஆனால் வாருங்களையாசுவாமி விஸ்வாமித்திரசுவாமிகளே இந்தப் பொருள்தருகிறதற்கு நாற்பத்தெட்டுநாட் கெடுவில் கொடாமல்போ னால் பாதகத்தைச் சிந்தித்தவனடையும் பதவியிலடைவேன் ஆனா ல் ஒரு ஆளை யென்கூட அனுப்புவீரையா சுவாமி,

விஸ்வாமித்திரர்-வசனம்,

வாரும்பிள்ளாயரிச்சந்திர உன்னுடைய ராச்சியமெல்லாம் என க்குத் தெரியும்படிகாண்பித்து எனக்கு மகுடாபிஷேகம் சூட்டினவ து நீர் அன்னியதேசத்துக்குப் போம்பிள்ளாய அரிச்சந்திரா,

இராஜாவசனம்

அப்படியே மகுடாபிஷேகஞ் செய்துவிக்கிறேனையாசுவாமீ

இராகம்-காபி-தாளம் ரூபகம்.

பல்லவி

முனியீஸ்பரரே இனியான் றனையே

அநுபல்லவி

கனகாசனமா மணிமேடையிதோ
கற்சுவர்க்குயர் வச்சிரக்கொடி
பச்சை ரத்தினம் வைச்சிழைத்திய கன (முனி)

சரணம்

இணைபூஷண சாலைகள்பாருமிதோ
எங்குமெச்சிய விந்தைகற்பணி
உந்தனுக்கிது சொந்தமுற்றன இணை (முனி)

இறைபாயிரமாம் விலைகாணரிதாம்
இக்கிதம்பெறு தக்கவம்பர
அங்கியின்சுட ரெங்கணுக்கிகழ் இறை (முனி)

இகல்மிகுமியவா சியமேகமதாம
எண்டிசைத்துகள் மண்டிடக்கதி
கொ——த்தழு சண்டவுக்ரம இகல் (முனி)

மதயானைகள்கும்பிதசாலையிதோ
வஞ்சர்தன்றலை பஞ்சுறும்படி
வெஞ்சினக்கொடு சஞ்சுமங்கிரி மத (முனி)

கடகடகசாலைகள் பாருமிதோ
சஞ்சிதத்துடன் மிஞ்சுபற்பல
விஞ்சைகற்றிடு செஞ்சொலற்புத கட (முனி)

கொடிநீடியவான் முடிமேலெயிலும்
கூடகோபுர மேடைமாறுயர்
மாடமாளிகை யாடல்மேவிய கொடி (முனி)

படியாள்சமையா லடியேனையர்வாள்
பக்தமோடிவை கொண்டுபோதுமுன்
வக்கணீயருள் தக்கமாதவ படி (முனி)

இராசா விருத்தம்

இத்தனைகரம்நாடு மிடைவிடாதாள்வீர்யானைப்
பந்திமிக்குழப் பக்தித் படையிறுதான்ளியசாலை
யத்தமாஞ்சொர்ணசாலை யணிபெறுஞ்செங்கோல்கொள்ளுந்
தத்தனம்யான்போய்மற்றத் தனையிரக்களிப்பேன்சுவாமி

இராசா-வசனம்.

சரணஞ் சரணமையாசுவாமி இக்தாரும்செங்கோல்வாங்கிக்கொண்டு ராச்சியபரிபாலன பட்டாபிஷேகஞ் செய்துக்கொள்ளுங்கள்இதோயானைச்சாலை குதிரைச்சாலை இதோ தானியச்சாலை இந்தச் சேனைசைன்யங்களும் ஒப்பிவித்துவிட்டேன்நான் அன்னியதேசம்போய்தேவரீருடைய திரவியத்தைக் கொடுத்துவிடுகிறேன் தங்களிடமிருந்து ஒரு ஆளனுப்பவேணுமையாசுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஆனால் வாரும்பிள்ளாய் யரிச்சந்திரா எனக்குத்தெரியாத ஆனைக்கூட அனுப்பினுக் ஏமாத்திவிடுவாய் ஆனதால் நம்முடைய வசமாக இருக்கிறநட்சத்திரத்தாகனை யுன்பின்னு லனுப்புகிறேன் அவன்வசமாக [illegible] திரவியத்தைக்கொடுத்தனுப்பும் பிள்ளாயரிச்சந்திரா

இராஜா வசனம்.

அப்படியே ஒருநாள்கூட மூந்தாமற் கொடுத்துவிடுகிறேனையா சுவாமி.

இராஜா விருத்தம்

கூறியதன்மஞ்செய்யக் கூபமேவெட்டும்போது
சீறியெழுதம்வந்து செயலறுபோலேயாச்சு
ஆரியவிஸ்வாமித்திரர் சருளியவாக்கினாலே
சோரவேதெருவில்விட்டார் சிவசிவபென்னசெய்வேன்

ராகம் காம்போதி தாளம்-சாப்பு.

கண்ணிகள்

என்னசெய்வோமென்று செய்வோம் என்னகாலமோ
என்மனைவிதினையெல்லா மெவராலாகுமோ

கணையிருக்கநாடிமுக்கக் காலமாச்சுதே
கௌசிகமுனிவனுட கடனின்றுச்சுதே
சுகமுந்துக்கமு மிரண்டும்பூவிற் நெருக்கமாச்சுதே
சுருக்கில்லைதைப் போபோவென்றும் சும்மாபோகுமோ
எந்தவிதங் கடனைத்தீர்ப்போ மென்றுதானுமே
என்னசெய்வோ மென்றுராஜ னேங்கிவாடியே.

காசிக்குப்போகிறபாகம்

நகர்ஜனங்கள் விருத்தம்.

வேந்தனும்பய [illegible] யிருக்கும்போது
மாந்தர்கள்சேதிகேட்டு மயங்கியே தவித்துவாடி
காய்ந்தகொப்பரைநெய்போலக் கலங்கியேமனதுபொங்கி
வேந்தன்றன்முன்னதாக வேகமாய்த்தான்வந்தாரே.

இராகம்-சுருட்டி-அட தாளம்.

பல்லவி.

நகரின்ஜனங்கள் வந்தாரே அரசன்முன்னே (நக)

அநுபல்லவி.

நகரின்ஜனங்கள்வந்து ராஜன்பாதத்தில்வீழ்ந்து
புகலொன்றுமில்லையென்று புலம்பித்தவித்துக்கொண்டு (நக)

குடிகள்-வசனம்.

அதோசரணஞ்சரணமையா மகாராஜாவே தாங்களிதுவரையிலும் ராச்சியபரிபாலனஞ்செய்து வந்ததினாலோ நாங்கள் யாதொருகுறை வன்னியிற் பிழைத்திருந்தோம் இப்பொழுது தாங்கள் ராச்சியத்தை விட்டுவிட்டுப் போகிறபடியால் நாங்கள்கேள்வியுற்று இங்குவந்தோம் தாங்களுக்கு வந்தவிபத்து இன்னதென்று தெரியவில்லையே மகாராஜாவே.

காசிக்குப்போகிற பாகம்.

இராஜா வசனம்

ஆனுங்கேளுங்கள் குடிகளே ஏதோ தெய்வச்செயல் இப்படிநடக்கவேண்டியதாகவிருக்கிறபடியால் விஸ்வாமித்திர சுவாமிகளுடைய சூதிலும் ராச்சியமுழுதுந்தோற்று மேற்கொண்டு பொருளுக்காவேண்டியதாச்சே அந்தப்பொருளை நாற்பத்தெட்டுநாளைக்குள் தருகிறதாகவும் ஒப்புக்கொண்டபடியால் காசிக்குப்போய் பொருள் சம்பாதித்துக்கொடுக்கிறதற்குப் போகிறேன் நீங்கள் விஸ்வாமித்திர்சொற்படி கேட்டுக்கொண்டு என்னிடத்தி லெவ்விதமாய் நடந்துவந்தீர்களோ அப்படிப்போலவே ஆ[illegible]ருகடமை கொடுத்துக்கொண்டு யாதொரு குறைவுமின்றி யிருக்கவேணுமுங்கள் குடிகளே.

குடிகள்-வசனம்.

தங்களுத்திரவுப்படியே நடக்கிறோமையா சுவாமி அடியேன்கள்பேரில் கிருபைசெய்து விடைகொடுக்க வேணுமையா மகாராஜாவே.

இராஜா-வசனம்

அப்படியேபோய்விட்டுவாருங்கள் குடிகளே

இராஜா விருத்தம்.

இட்டமாயயோத்திதன்னி லிருந்தரசாண்டோநாளுங்
கட்டியதேசமெல்லாங் கடனுக்காய்முனிக்கு யீந்தோம்
மட்டிலாவிதியைநோக்கு மாமுனிகடனுக்காக
அட்டியில்லாமற்காசிக் கடவுடன்போவோம்வாராய்.

இராகம்- இந்துஸ்தானிகாபி- ஆதிதாளம்

பல்லவி

காசிநகர்க் கேகுவோம் (காசி)

அநுபல்லவி.

மாசிலாத சந்திர மாமதியேபெண்ணே (காசி)

சரணம்

மண்ணையாண்டவர்கள் மண்ணிலுங்கோடியகை
எண்ணி காமனிங்கே யிருந்து பயனென்ன (காசி)

ராஜ்கெடுத்தவனை	காம்பத்தெட்டுபோகைக்குள
கோச மானமுனி	யோகியாமலே (காசி)
சந்திரமதியே பெண்ணே	தையலேமாமுனியால்
வந்ததெல்லாம்பொட்டுதே	சிந்தைமயங்காமலே (காசி)

இராஜாவசனம்

ஆருக்வாரும்பெண்ணே சந்திரமதிகாசிப்பட்டணம்போய்விஸ் வாமித்திர ஸ்சுவாமியார் கடனைக்கொடுக்கவேண்டியதிருப்பதால் நா ம்புறப்படவேண்டியதுதானே பெண்ணே சந்திரமதி

சந்திரமதி வசனம்

தாங்களெங்கிரு [illegible] சுவாமி

இராஜா வசனம்

மந்திரி சத்தியகீர்த்தி நீர் இந்தராச்சியத்திலே யிருந்து என்னிட மிருந்துவந்ததுபோல் விஸ்வாமித்திரமுனிவரிடத்திலேயிருந்துகொண்டு க ன்மயக்காதபடிக்கு பாதுகாத்துக்கொண்டிருஞ் சத்தியகீர்த்தி

மந்திரி வசனம்

அகோ சரணஞ்சரணமையாசுவாமி அசைவிபிஷமாவதுதங்களை விட்டுப்பிரிந்து இந்தராச்சியத்திலிருந்து சீர்வகிக்கமாட்டேன் தாங்க ளெங்கே செல்கிறீர்களோ அங்கேகூட வருகிறேனையாசுவாமி

இராஜா வசனம்

அதுசரியல்ல மந்திரிசத்தியகீர்த்தி

மந்திரிவசனம்

என்னுடைய சிவனிருக்குமளவிலும் தங்களைப்பிரிந்து க்ஷண நேரங்கூட இருக்கமாட்டேன் கூடவேவருகிறேனையாசுவாமி.

இராசா விருத்தம்.

மாசிலாமணியேசந்திர மதிபெணுமயிலேயெக்கண்
ஆசைமந்திரியேதிவ்ய வழகுள்ளபுதல்வாகேளாய்
கோசிகமுனிக்குநாமும் கடம்பட்டனங்கள் நாக்
காசியின்தலத்தைநோக்கிக் கடுகியேபோவோம்வாராய்.

இராகம்-ஆனந்தபைரவி- ஆதிதாளம்

பல்லவி.

காசிதேசம் போவோம் வாராய் பெண்ணே வாராய்

அநுபல்லவி.

மாசில்லா தாசன் மலரடி போற்றிடக் (காசி

சரணங்கள்

ஐயோத்திமா நக ராண்டோம் பெண்ணே ஆண்டோம்
அடங்கலு மாமுனிக்குத் தாரையா யீந்தோம் (காசி
மங்களமாகவே வாழ்ந்தோம் பெண்ணே வாழ்ந்தோம்
மைந்தன் லோ[illegible]தனும் மந்திரியுங்கூட (காசி
முனிவன்செய்திடு மாயையாலே மாயையாலே
மூவரு மையோத்தி விட்டு அப்பாலே (காசி

பொது விருத்தம்,

தலமுழுதுந் தவமுனிவன் றனக்களித்தோ மினியுறைதற்
றகுதி யன்றென்
இலருமணி மண்டபமு மெழின்மணிச் சிங்காதனமு
மிழந்து போந்து
பலவரசு ரூடனமைச்ச ருமுதலம் போய்ப் பாதவித்துப்
பதாதி மொய்க்கக்
குலமகளு மடமயிலு முன்னடக்கப் பின்னடந்தான்
கொற்ற வேந்தன்

பொது - வசனம்.

அயோத்தியாபுரி பட்டணம் ராச்சியமுழுவதும் தோற்று விசு
வாமித்திர முனிவருக்குக் கொடுத்துவிட்டு அரிச்சந்திரனும் சந்தி
மதியும் லோகிதாஸனும் பிரயாணமாகி முன்னும் பின்னுமாக நட
தார்கள்,

இராகம்-பந்துவராளி-அடதாளம்

பல்லவி.

என்னுயிர்க் குயிரான சொர்ணமே
அன்னமேநடை முன்னேமே பெண்ணே (என்

அநுபல்லவி.

பொன்னுலகிலே   யீசனருளால்
புவியுமாக பிறந்தோமே   பெண்ணே
போச்சுதே மோசம்   போச்சுதே ஐய
ராச்சுதே செல்வம்   போச்சுதே பெண்ணே   (என்)

சரணங்கள்.

கறுத்தமேகமும்   வெருத்தபின்னலும்
கனல்போலிடி   முழக்குதே பெண்ணே
கண்ணுதே மனக்   குன்னுதே யென்னு
தென்னுதேவாதை   பண்ணுதே நம்மை   (என்)

ஆற்றுமணலே   வாரிமுகத்தில்
தூற்றிடக்கண்க   ளுறுத்துதே பெண்ணே
அல்லேயோதெய்வ   மில்லேயோ பெண்ணே
தொல்லேயோ மன   மில்லேயோ பெண்ணே   (என்)

பாதைவழியில்   நடந்ததுமில்லேப்
பாவையேசந்திர   மதியேபெண்ணே
பாரமோயிது   பாரமோவரத்
தூரமோ யென்ன   காலமோ பெண்ணே   (என்)

இராஜா-வசனம்,

ஆஹா வாருஞ் சந்திரமதி விஸ்வாமித்திர முனிவரவர்கள் கடனை வாங்கிக்கொண்டு போவதற்கு நக்ஷத்திரகனைக்கு நட்சேத்திரறுவர்கள் வருகிறதாகச்சொன்னார் நாமள் பிந்திட்டுக்கொண்டு இருந்தோமானால் முந்திப்போய் நன்முகத்தைப் பார்த்துப்போட்டு நமமக்கார் நேருமென்று போய்விடுவார் ஆகையால் நாமள் சுடியசீக்கிரத்திற் போகவேணும்பெண்ணே சந்திரமதி,

சந்திரமதி-வசனம்,

ஆகா யென்பிராணநாதா வெய்யிலடிக்கிறதைப் பார்த்தால் அகோரமாயிருக்கிறது தேவகாசனும் அகோரமானகாடாகச்சே பயப்படுகிறான் சத்தேமெதுவாய்ப் போவோமையா சுவாமி,

இராகம் கருட்டி-தாளம்-ரூபகம்

பல்லவி

நடந்துவாமயிலே சந்திரமதி கன்னிகையெனுங்குயிலே

அநுபல்லவி.

கடந்திடாத வென் காதலியேயிரு
கண்ணேயே பெண்ணே மின்னே யென்னுடன் (கட

சரணம்.

வெயிலடிக்குதடி வெயிற் கானலும் வீசுதடி
அயன்செயவினை லாண்டநாடுந் தோற்றோம்
வையகந்தன்னில் வழிதனைப்பார்த்து (கட)

பஞ்சனை மெத்தையிலே நாம் கொஞ்சியிருந்ததும்போய்க்
கஞ்சமலர் முக[illegible] சோர்ந்து வாடுது
கண்மணியே யிந்தன் பாதங்கள் நோகுது (கட)

ஆசைமகன்றனையே நாமன்புடனே யழைத்து
காசியில் வாழ்பதி லாசநாதரைக்
கண்டு தெரிசித்தாற் கர்மவினை தீரும் (கட)

சந்திரமதி-விருத்தம்.

கனகராஜிந்தக்காட்சி காணவோ பெண்பிறந்தேன்
மண்மிசைநடக்கவென்றால் மன்னவா முடியுதில்லை
இன்னிலந்தனிலேபால னேங்கியே யழுகுறானே
சொன்னசொற்றவறாமன்னா சூடுதான்பொறுக்குதில்லை

இராகம் செஞ்சுருட்டி - தாளம்-ஆதி
பல்லவி.
சூடுபொறுக்குதில்லையே ராஜமன்னா
அநுபல்லவி
சூடுபொறுக்குதில்லைச் சுடுமணற் கானகத்து
பாடகந்தண்டையிட்டபாதம் கொப்புளிக்குதே மெத்தச் (சூ)
சரணம்.
மைந்தன்மிகத்துடித்து மயங்கியழுகிறானே
சுந்தரமிகுமெந்தன் துரையே யென்ன செய்வேன் (சூ)
வெயிலுப்படாதிருக்க மேனியெல்லாம்நொந்து
வெயிலும்பொறுக்குதில்லை மேனியுருகிப்பச் (சூ)

பாதமிரண்டுந் தானும் பத்திப்பிடிக்குதையோ
மாதனே யென்னசெய்வேன் மடக்கொடியுதில்லைச் (கு)

சந்திரமதி வசனம்

ஆகோ யென்பிராணநாதா அடியாள்பாதம் இந்தச் சுடுமணலில் மிகவும்வெந்து கொப்புளிக்கிறது அதுவன்றியில்அருமைக்குழந்தை யாகிய தேவதாசன் மிகவும் சூடு பொறுக்கமாட்டாமல் வருத்தப்படுகிறான் என்னசெய்வேனையாசுவாமி.

இராஜா விருத்தம்

அருமையாம்பெண்ணேகேளா யறிவிப்பாலொ[illegible]னில்
ஒருகாலேமுழுமுன்ன முகந்துகாம்கடந்ததுண்டோ
பொருபொருளென்செய்வோம் பொடியனற்பொறுப்பார்யாரோ
வருந்துவிதியந்தத் திருக்கு மன்னையெனவருகுவாயே

இராகம்-சாமர்-அடதாளம்

பல்லவி

பெண்ணே பெண்ணரசே யென்னான்னமேமுன்னடவாய்ப்
பெண்ணே பெண்ணரசே

அநுபல்லவி.

கண்ணேநீயிப்போ கலக்கிடவேண்டாம்
என்றுமிகண்ணை யெண்ணி யேங்கித்தவிக்காதே (பெ)

சரணம்

தங்கக்கொடியிடைபோ யுள்ள வையமேலசந்திரமதி
அங்கமெல்லாம்வெந்து பங்கப்படுகிறதே
ஐயோ நானென்னசெய்வேன் (பெ)

கொதிக்குதே மணலுபாதங் கொப்புளங் காணுதையோ
விதிக்கு யென்செய்வேன் மெல்லியேயிப்போ
வேதியர் தன்கடன் திரும்புதற்கு (பெ)

பாலகன் வேகிதலும் வெயிலாலேமயக்குகிறான்
சீலமுடன்காசி தேசம்போய்ச்சேர்ந்து
சீக்கிரமாமுனி குணந்தீர்ப்பதற்கு (பெ)

இராசாவசனம்.

ஆகோவாரும்பெண்ணே சந்திரமதி உன்மனதாகலங்கவேண்டா
ம் வந்ததெல்லாம் வருகட்டும் நீயும்நானுமேயிப்படி மயங்கினல் கு
ந்தை தேவதாசன்எப்படிமயங்கமாட்டான்பெண்ணே

இராஜா-விருத்தம்.

மதிகயன்கண்ணேபெண்ணே மாசிலாவிஸ்வாமித்திரர்
சதிசெய்ததாலேசிங்கா சனமும்ராச்சியமுந்தோற்று
பதியெனுமயோத்திவிட்டுப் பஞ்சைகள்போலேயிந்த
நதியில்வீற்றிருந்தாலிப்போ நட்சத்திரர்வருகுவாரே.

இராகம்-நாதநாமக்கிரியை தாளம்-ரூபகம்

பல்லவி.

தாருங்கோ நட்சேத்திரன்னவருகிற
தருணமாச்சுதே பெண்ணே

அநுபல்லவி

சிறகில்லாப்பறவைபோலே சிறைவிட்டோம் பெண்ணே (தா)

சரணம்.

அட்டிசொன்னர் துஷ்டத்தாரகர்
அடிக்கவருவா ரதற்கென்செய்குவேன் (தா)
ஆகட்டும்பின்னாலே யென்றால்
அதட்டிவைவாரே பெண்ணே (தா)
போடாவாடா வென்றுசொன்னால்
பொறுக்குமோதேகம் பெண்ணே (தா)

இராஜா-வசனம்.

ஆகோ வாரும்பெண்ணே சந்திரமதி கௌசிகருடைய கடனு
க்காக நட்சத்திரதாரகன் வருகிற தருணமாய்விட்டதே பொருளுக்கு
நாமென்னசெய்வோம் பெண்ணே சந்திரமதி.

நட்சேத்திரகாரகர் வருகிறவிருத்தம்

கொடும்புலிபோலேசீறிக் கோபித்துகண்சிவந்து
இடிமின்னிமுழங்கினற்போ லேகியேமாங்கையாலே

சிவசாமி அவர்கள்

கெடிபெறுமன்றுந் தாருங் கிட்டியுங்கோலுங்கொண்டு
கடிதியேநட்சத்திரையர் காலன்போல்வருகின்றாரே

இராகம்-தோடி-தாளம் ரூபகம்

ரூடுருகண்ணிகள்.

காயித்திருகண்பொறிபறக்க — கொண்டுகிட்டியுமன்றுந்தாரும்
வித்வடிணவசனம்பிறக்க — நட்சேத்ராதத்ராகருந்தோன்றினார்
ருகையிலேகிட்டியுங்கோலு — மொருகையிலேஅன்றுந்தாருங்
த்தமானவரப்பிரசாத — நட்சேத்திரத்தாகருந்தோன்றினார்

நட்சேத்திரத்தாகன-விருத்தம்.

சீராமேனுவரிச்சந்திரன்றான் நில்லடாவெந்தன் முன்னே
மாதவன்கோசிகற்கு மகமுவச்சத்தந்தசெம்பொன்
சீதாவாஅவராற்செய்த தியமத்தாலிக்கூட்டிதன்
ஏதாலதில்லையென்று விப்போகேயேகுவேனே

நட்சேத்திரத்தாகன்-வசனம்

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரமகாராஜனே விஸ்வாமித்திரமுனிவர் உன்னிடத்தில் திரவியம் வாங்கிறாரப்லவர அதைக்கொள்ளவேந்தேன்பிள்ளாய்மகாராஜனே

இராசஜா வசனம்

அகோ சரணஞ்சரணமையா வொரு மதயானையைக்கொண்டுவந்து நிறுத்தி அதன்மேரில் ஆனாருமொருவனை ஏற்றி அவன்கையில் வெள்ளிக்கலன்கொடுத்து மாணிக்கக்கல்லைவைத்து சுழற்றியெறிந்தால் எவ்வளவு உயரம்போகுமோ அவ்வளவு உயரம்செம்பொன்தான் கொடுக்கவேணுமையா சுவாமி.

இராஜா-விருத்தம்.

வாயிகுவில்லவமித்திர மாமுனிவடனேயானே
தாவொருதடைபுயில்லை கஞ்சனதனைத்திரக்கும்
வரையுனதேவலனாய் வருகுவேனட்சேத்திரையா
சரணங்கள்சரணஞ்செய்தேன் தருணம்நீயாட்கொள்வாயே

இராகம்-கமாஸ்தாளம் ஆதி.

பல்லவி

சரணஞ்சரணம் நட்சேத்திரையா தேவரீர்பாதம் (ச

அநுபல்லவி.

சரணமையா அடியேன்மீதில்
தயவுசெய்யும் நட்சேத்திரையா (ச

சரணம்.

வேதியர்குலத்துமறையோரே ஓநட்சேத்திரையா
வேணடியபொன்னைத் தாரேனையா
இங்காக்கோபம்வேண்டாமையா ஓநட்சேத்திரையா
அடியேனும்பொன்னைத் தாரேனையா (ச

அரிச்சந்திரன்விருத்தம்,

தெண்டிக்கப்பொன்னைக்கேட்கச் செப்புமுன்கெடுவுக்குள்ளே
கண்டிக்கத்தேவரீர்க்குக் கனவதிகாரமுண்டு
பெண்டுடன்பிள்ளையாலும் பெருக்கதோர்பிழைசெய்தாலுங்
கொண்டுடன்பொறுப்பீரெங்கள் குலதெய்வம்நீரேசாமி

அரிச்சந்திரன்-வசனம்,

அகோவாருங்களையா சுவாமி தங்களுக்குப்பொன் கொடுக்கிறவரையிலும் தங்களுடைய தெண்டனைக்குள்ளாகவே யிருப்போம் தேவரீர் கிருபைசெய்து கூடவேவந்து தங்களுக்குச் செல்லவேண்டியதிரவியத்தை வாங்கிக்கொண்டு போங்களையாசுவாமி,

நட்சேத்திரத்தாரகர்-வசனம்,

அகோ வாரும்பிள்ளாய் யரிச்சந்திரா நானொருக்காலும்கூடவேவரமாட்டேன் விஸ்வாமித்திர முனிவருக்குக் கொடுக்க வேண்டிய பொருளை யிப்பொழுதே கொடுத்துவிட்டு மறுவேலைபாரும் பிள்ளாய் யரிச்சந்திரா,

இராசா-வசனம்,

அப்படிக்குச் சொல்லக்கூடாதையா சுவாமி காசிக்குப் போனவுடனேபொருளைக்கொடுத்துவிடுகிறேனையாசுவாமி,

சிவசாமி அவர்கள்

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்ஆதி,

பல்லவி.

என்னசெய்குவேன் இந்தகனகரிலேசுவாமி (என்)

அநுபல்லவி

ன்னைப்பின்னைத்தாசோசமென்று மோசஞ்செய்தேனோஐயா (என்)

சரணம்

ாருங்கபோக்தன்பின்னே மாமுனிகடனைத்தாரேன் (என்)

ிசகரிலேவிக்கடன்பொன்னைத் தாரோமையுனைசுவாமி (என)

ைடைச்செய்யவேண்டாம் போதுமையாகடை [illegible]ஐயா (என)

இராஜா வசனம்

ஆனால் வாருங்கனையாசுவாமி என்னைத் தொந்திரவுசெய்யவேண்டாம்காசிக்குப் போனவுடனே திரவியத்தைத்தருகிறேனையாசுவாமி,

நட்சேத்திரகர்-வசனம்

அகோ வாரும்பிள்ளாய் யரிச்சந்திரா இந்தக்கோட்டிலே நுகத்தை யிலேத்தூக்கிக்கொண்டு நில்லும்பிள்ளாய் யரிச்சந்திரா

கிட்டிபோடுகிறபாகம்

கண்ணிகள்.

இராகம்-நீலாம்புரி-தாளம்சாப்பு

முந்தைக்கழிவொன்னோ யோமதிக்குதிகையிலே நீ

ஒடிமதித்தாலும்பொன் வருமோ கட்டேறுத்தினையனே

சத்தியாக்கமுங்கில்லையோ கட்டிசக்திரையனே-கொஞ்சம்

தயவுசெய்தென்னை ரட்சிக்கவேணும ஐயனே

நட்சேத்திரகர்-வசனம்,

அகோவாரும்பிள்ளாய் யரிச்சந்திரா இதோ கோடுபோட்டிருக்கிறேன் இந்தக் கோட்டுக்கப்பாலே போகக்கூடாது கொடுக்குறதை சொல்லும்பிள்ளாய் யரிச்சந்திரா,

கிட்டிபோடுகிற படம்.



லோகிதாசனைகிட்டிபோடுகிறது இராஜனைகிட்டிபோடுகிறது.

நட்சேத்திரக்தாகர்-வசனம்

அதோவாரும்பிள்ளா யரிச்சந்திரா ஆகாசத்தில் நட்சத்திரமிருக்குதாவென்று பாரும்பிள்ளாய் யரிச்சந்திரா

அரிச்சந்திரன்-வசனம்

இதோ பார்த்தேனையா சுவாமி

நட்சேத்திரக்தாகர்-வசனம்

இதோ இப்பொழுது நெற்றியில் கல்வைத்திருக்கிறேன் திரவியத்தைக்கொடுத்துவிட்டு மறுவேலைபாரும்பிள்ளா யரிச்சந்திரா

இராகம்-காம்போதி-சாப்புதாளம்

கண்ணிகள்

புத்தியுடனே நாம் பூலோக மாண்டதும் போக இப்போ
நெற்றியிற்கல்லை நிறுத்தியடிக்கிறார் தெய்வமே
ஆனைமேலேறியே ஊர்போந்தியாண்டதும்போக - இப்போ
பூனைபோல்நின்றுபுடைபித தவிக்கிறேனேப்பாரா
பூமானைகையிற்பிடித்துக்கொடுத்தாயோதெய்வமே கொஞ்சம்
பொன்னுக்காகக்கல்லைப் போதச்சுமைப்பேனோ தெய்வமே

அரிச்சந்திரன்-வசனம்

அதோவாருங்களையா சுவாமி அடியேனை அத்துவானவனத்திலே மறித்துக்கொண்டு இப்படியெல்லா மிக்கஞ்செய்தால் நானென்ன செய்வேன் காசிப்பட்டணம்போய்த் தருகிறேனையா சுவாமி.

நட்சேத்திரக்தாகர்-வசனம்

அதோவாரும்பிள்ளா யரிச்சந்திர இப்படியெல்லாம் அநூதால் விட்டுவேனென்று நினைக்கிறாயோ ஒருக்காலும் விடமாட்டேன் பொன்னைக் கொடுத்துவிட்டு மறுவேலை பாரும்பிள்ளா யரிச்சந்திர மகாராஜனே.

இராஜா-விருத்தம்

எத்தனை கிட்டிகட்டி யிப்படி மயக்கஞ்செய்து
தொந்தர வதிகஞ்செய்தால் சுவாமியே னென்னசெய்வேன்
அந்தமாய்க் காசிசென்று அரும்பொருள் தன்னைத்தாரேன்
இந்தமட்டுந் தான்போதும் என்கையிற் கிட்டிவாங்கும்

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ரூபகம்,

பல்லவி.

இக்கட்டுக்குப்போதும் என்னைத்
தொந்திரவுசெய்தால் வந்திடுமோபணம் (இக்)

அநுபல்லவி.

செந்தாமரைக் கையிற் கிட்டியைக்கட்டுவீர்
செக்கச் சிவக்க இருக்கியடிக்குவீர் (இக்)

சரணங்கள்.

காடோபெரிது இந்தக்
காட்டுவரை நான் கண்டு வாங்குவேன் (இக்)

நாடோர் புகழும் மன்னன்மகன்
நல்லகையனை விற்றுத் தந்திடுவேன் பணம் (இக்)

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்,

பல்லவி.

ஐயா நானென்ன செய்வேனையா ஓ நட்சேத்திரையர் (ஐயா)

அநுபல்லவி

வையம்புகழுமன்னா மாநகர்சென்றபின்பு
ஐயர்முனிக்குச்செம்பொன் கையிற்றருவேன்நட்சேத்திரையா()

சரணங்கள்.

அட்டியுண்டோ முனிவர் பொன்னை யில்லையென்றேனோ
ஆயாசமெங்கள் மேலேனோ
எட்டர்தொழும் விஸ்வேசர் சேவடிதனைக்கண்டு
சிறந்தகாசியிற்சென்று இறந்தாலும்பொன்தாரேன் (ஐயா)

காலமோயென்னையிந்தப் பாடுபடுத்தவேண்டாம்
கர்த்தனே யென்னை நீ காப்பாடு
ஞாலத்துசெய்திறமென்று சற்றும்நினைக்கவேண்டாம்
மேலெல்லாம்புண்ணாய்நொந்து வேகுதேநானென்னசெய்வேன் (ஐ

ஐயோத்திராபிக்கே ராண்டேன் அந்தமுனிக்கு
அடங்கலுந் தாரையாக வீய்ந்தேன்
அக்கம்பத்த நூவெள்ளிப் பணத்துக்கென்தனை நீரும்
சுத்திச்சவுக்கால் சுழட்டியடிக்கிறீரே (ஐயா)

சந்திரமதி விருத்தம்

ஐயோத்தி மன்னவரைத் தெருவில்விட்டு
அடிக்கிறீரே யென்சாமி யக்கப்போக
மெய்க்கலங்கக் கட்டிகட்டி யடிக்கவேண்டாம்
வேதியரே நட்சேத்திர பூபா சாமி
பொய்யான மொழியுரையோன் காசிநாட்டிற்
போனவுடன் பொன்னுமக்குத் தாரோமையா
மெய்யான வேந்தனைநீ யடிக்கவேண்டாம்
வேதியரே பாதமிரண்டிலும் சரணஞ்செய்தேன்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி,

பல்லவி.

ஐயோ கோ நட்சேத்திரையனே ராஜனை வெயிலில்
அடிக்கலாகுமோ மெய்யனே

அநுபல்லவி

மெய்யோன்றுரைத்து வேந்தனைக் கட்டியடிக்க
வேண்டாம் ஐ நட்சேத்திரையனே (ஐய)

சரணம்.

தனத்தர இல்லையென்றோ வருத்திப்படி
தப்பிடந்து கொண்டோமோ
மனதனி லென்னமர்மமோ கிட்டிவைக்கக்கட்டி
வருந்தச்செய்வது தர்மமோ
காசிபதிற்சென்றவுடனே கொணர்பொன்னைக்
கையில்த்தாரோமோ ஐயனே (ஐய)

சந்திரமதி விருத்தம்

தனத்தையீதா யில்லையென்று தர்க்கமுற்று சொன்னதுண்டோ
மனத்திலே யென்னசெய்வோம் மங்கைமேற் தயவுசெய்யும்

கனத்திரங் கொண்டவெந்தன் கணவன்னைக் கிட்டிவாங்கும்
மனத்தினிக் கவலைவேண்டாம் மறையவா பொன்னைத்தாரோம்.

இராகம்-உசேனி-ஆதிதாளம்,

பல்லவி.

கைகள் சோருமே மன்னன் கைகள் சோருமே

அநுபல்லவி.

வைபவ்ராஜனைக்கிட்டி. வாங்குமையனே (கை)

சரணங்கள்.

ஏதுபிழை செய்தோம் நாங்களோ இந்த
வாதைசெய்கிறீர் நீங்களோ மன்னன் (கை)

முனிக்குச்செம்பொன் னில்லையென்றோமோ சாமி
தனித்து வனந்தன்னிலென் செய்வோம் சாமி (கை)

நீதிநெறிதவறி நின்றமோ இந்த
வேதனை செய்யாதி வையனே சாமி (கை)

சத்தியந்தவறி நின்றோமோ இப்போ
தங்கள்பொருளை யில்லையென்றோமோ மன்னன் (கை)

சந்திரமதி விருத்தம்.

பெண்ணுடனு ஹூடனேநீரும் பிறந்தது மிலையோஐயா
மன்முறை தாண்டமன்னன் வருந்தினு மிரக்கா துண்டோ
கண்ணீரும் கண்டாய்நாங்கள் கஷ்டப்பட் டிடுவதெல்லாம்
புண்ணியா பொறுத்துக்கிட்டி போட்டதை வாங்குஞ்சுவாமி

இராகம்-கமாஸ்-அடதாளம்,

பல்லவி.

மறையோ ராசே முறையோ முறையோ

அநுபல்லவி.

இறையோனிலையோ இதுவோதருமம்
இந்தவேதனை வந்திடச்செய்தான்
எந்தன்மன்னவர் சிந்தைகொதித்திடும் (மறை)

சரணங்கள்.

துரையேயொருகை விரல்நோகுமே யென
சுந்தரா னனந்தரா வுமக்
கிந்தவேதனை வந்திடச்செய்தால் (மறை)

மதிபோல்வதனங் கதிர்காயுதல்போல்
மங்குதேதுயர் பொங்குதேயெழில்
அங்கம்சோருதே யென்குசெல்லுவேன் (மறை)

குளிர்தாமரைநீர் சுனைபீதினிமேல்
கொட்டுதேள்நிகர் கிட்டிகட்டியே
மட்டிலாத்துயர் பட்டிடச்செய்தால் (மறை)

லோகிதாசன்-விருத்தம்.

மைந்தனு னிங்கிருக்க மாமணி கடனுக்காகத்
தந்தனை சோமக்கிட்டி கட்டவும் வேண்டாமையா
முந்தியே முனிக்குரைத்த முடிப்பது தனைத்தையெல்லாம்
தந்திடவந்தோமையா தகப்பன்கைக் கிட்டிவாங்கும்.

லோகிதாசன் வசனம்.

அகோ வாருங்களையா சுவாமி என்னுடைய தகப்பன்கையிலே கட்டியிருக்கிற கிட்டியை அவிழ்த்து விடுங்கள் காசிப்பட்டணம்போனவுடனே திரவியத்துக்கு வகைபண்ணுகிறோமையா சுவாமி.

நட்சேத்திரத்தரகர்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் பிச்சான் நீ ராஜன்குழந்தையாயிருக்கிறாய் உனக்கு அவல்தருகிறேன் கடலைதருகிறேன், அப்பம், அதிரசம், இட்டலி, தோசைமுதலான பட்சணாதியெல்லாங்கொடுக்கிறேன். உன் தகப்பன்கொடுக்கிற திரவியத்தை இல்லையென்று ஒருபொய்சொல்லும்பிள்ளாய் பிச்சான்.

லோகிதாசன்-வசனம்.

அகோ வாருங்களையா சுவாமி சந்திரசூரியாள் தெற்குவடக்காக வுதித்தாலும் சப்தசாகரங்கள் பிரண்டாலும் என் தாய்தகப்பன்வாயிற் பொய்பிறந்தாலும் அடியேனுடைய வாயினால் என்னளவு பொய் சொல்லவும் வாராதையா சுவாமி.

நட்சேத்திரதாகன் வசனம்.

அகோ வரும்பிள்ளாய் லிச்சான் நீ ராஜகுமாரனுடைய பிறகே
உன்கையில் தனரேகையிருக்கிறதா பார்ப்போம் கையை நீட்டும்பிள்
ளாய் லிச்சான்.

லோகிதாசன்-வசனம்.

இதோ கையைநீட்டினேனையா சுவாமி.

நட்சேத்திரதாகன் வசனம்.

ஓ லிச்சான் உன்கையிற் கெட்டிகட்டியிருக்கிறது நீயாவதுபணத்
தைக்கொடும்பிள்ளாய் லிச்சான்.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

ஐயஹோ அம்மா அம்மா என்னசெய்குவேன்
அந்தணரே மயர்தண்ணனைக்க அச்சாப்போகுதே
கைகளோசிவந்துரத்தம் கட்டிப்போகுதே
கட்டவிழ்த்து விருதாண்டாய் வெட்டிப்போடையா
மெத்தைதனில்விளையாடும் பாலன் நானேயோ
வேதனைகள் செய்யவேண்டாம் விரல்கள்நோகுதே
பத்துவயதாகவில்லை பிரம்மநேசனே கடன்
பத்துகத்து பெண்ணைக்கொன்றால் பொன்வருகுமோ
மிகக்கொடுமைசெய்துஎன்னைக் கொல்லவேவேண்டாம்
வேதனை பொறுக்கமாட்டேன் பேதைநானையா

லோகிதாசன்-விருத்தம்.

பொன்னது வாங்கவந்த புண்ணிய நட்சேத்திரையா
என்னைநீ வதைத்திட்டாலும் இருடியின் றுணந்தீராதே
அன்னையுந் தந்தைதானும் அடவுடன் காசிசென்றால்
பொன்னையுந் தருவாரையா பொறுத்தென்னை ரட்சிப்பாயே.

இராகம்-பந்துவராளி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

ஐயாநட்சேத்திரையா என்னை அலதிசெய்யவேண்டாம்
மெய்யாயெந்த ஜலியையிப்போ விடுவேன்கூணைபொருளில்

ரும்பாடெல்லாமறிந்தீர் வேதப்பிராமணருய்ப்பிறந்தீர்
வொலிலையைசெய்தால் பாவமென்னைக் கொன்றுமென்னைவிடம்
நகைகள் பற்றியெரிய வெத்தன்கனையிலிர்கீர் செரிய
றுமேயவென்றாளென்றாயாரு மனதில்ரூ த்தரூக

சோதிடர்கள் வசனம்.

அதிகாசாணத்துச்சாணையைய சுவாமி அறவேன்கைவிந்தட்டியிரு
நிற கிட்டியையபவிந்த்து விதிங்கள் காசிப்பட்டணம் போனவுடனே
ரேயிபர்த்தருகிறோமையைய சுவாமி,

நட்சத்திரத்தாரகர் வசனம்

அதெல்லாம் கேட்குந்தெரியாது சீக்கிரக்கொடும் பிள்ளைப்பிசா
ரான்.

சந்திரமதி சொல்வது

இராகம்-மோகனம்-ரூபகம்தாளம்

பல்லவி

ஐயாசிறுகுழந்தைதனைவிந் கிட்டிகட்டலாமோசாமி

அநுபல்லவி

வையம்புகழ்பெற்ற மெய்யரிச்சந்திரச
மகிழ்ச்சியுடனே புகழ்ச்சியோய்ப்பெற்ற(ஐயா)

சரணம்

கன்னமாகவே சொன்னபொருள்தாரோம்
என்னுடபாலனைப் பண்படச்செய்குதீர்(ஐயா)
காலத்திருவிக்கக் கோலங்கனாகிறும்
பாலனைவிட்டிபிக் கால்தனில்விழுகிறேன்(ஐயா)

சந்திரமதிவிருத்தம்.

ஐயையோ யமர்கன்றன்போ வடிங்கள் செய்யவேண்டாம்
அய்யனே யமதா பொன்னைத் தரிகாய்த்தருவோமையா
மெய்யனேயென தவேகா வெய்யிலேவருகுதிப்போ
மையமதியத்தானே மாமுனிக் கடனைத்தாரோம்

இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி

ஐயரேசிறியனடியனைத் துயர்செய்யவேண்டாம்நீரையா

அநுபல்லவி

செய்யும்வேதகுல நீதாவெந்தன்
சிறுவன்பீதிவிக்க வாதா ஓ
ஐயரேமுனிவர் நாதா பிள்ளை
அழுகிறானேவிஸ்வ. நாதா ஓ (ஐய)

சரணங்கள்.

பஞ்சணைதனிலே தூங்கும் ஐய
தஞ்சதாரணேபிள்ளை ஏங்கும் உன்
தஞ்சமேசுரங்கள் நீங்கும் நான்
கெஞ்சினேனிட்டி வாங்கும் ஓ (ஐய)
காசிநேசமதில் வாரோம் மனக்
கூசிடாமற்பணந் தாரோம் நீ
ஏசினாலுஞ்சொல்லு பீரோம் நாங்கள்
பேசினலுபதன் கூறோம் ஓ (ஐய)
சிலையாண்டோன் வாழ்த்தேன் எல்லா
மாமுனிவருக் கீர்ந்தேன் இந்த
பூமியோர்கைக்கத் தாழ்ந்தேன். எந்தன்
சாமியேயுந்தன்பாதத்தில் வீழ்ந்தேன் ஓ (ஐய)

சந்திரமதிவிருத்தம்.

அஞ்சிரண்டறியாப்பாலனறியாதமதனைப்பிள்ளை
பஞ்சிலுமெதுமையான பாலனும்பொறுக்கானையா
நெஞ்சினிலிரக்கங்கொஞ்சம் நீர்நினையாச்சேத்திரையா
வஞ்சியான்மிகவேநொந்து வாடியேபுலம்பலாமோ

இராகம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

சிறுபாலகன்தயவுநீர் செய்யுஞ்சிறுபாலகன்
செங்கைமிசநோவுஞ் சிறுபாலகன்தயவுநீர்செய்யும்

அநுபல்லவி.

மறைபயிரோகிருபைகூர் செய்யும்
வருமைச்செய்கால் வருமோ அருமைச் (சிறு)

சரணம்.

பூமியிலுயர்தவஞ்செய்து பெற்ற
புதல்வனையா விதவித்தழுகுன் (சிறு)

சந்திரமதிவிருத்தம்

ஆலமுண்டகண்டசிவ னருளினாலே
அருமையுடன்பெற்றெடுத்த மைந்தனையாவெக்கன்
பாலனுஞ்சிறுகுழந்தை மிகவேவெர்க்கி
பஞ்சிவிட்டதியதுபோற் பதறியேங்கி
ஓலமிட்டுஅழுதுதையா உற்றுப்பாரும்
உமதிரணைகோல்களையும் பிடித்துக்கொண்டேன்
காலடியிற்பாலனையா நட்சேத்திரையா
கட்டவிழ்த்துஎன்மகனை விட்டிடாயே

சந்திரமதி-வசனம்

அகோசரணஞ்சரணமையா சுவாமிகட்டினை யவிழ்த்துவிடவே ணுமையாசுவாமி

நட்சேத்திரக்தாரகர் வசனம்.

அப்படியே அவிழ்த்துவிடுகிறேன்பெண்ணே சந்திரமதியேக்கு ச்செல்லவேணடிய பொன்னைக்கொடுங்கள் இல்லைவிட்டால் ஒருபொய்யாவதுசொல்லுங்கள் போய்விடுகிறேன்சந்திரமதி

சந்திரமதி விருத்தம்.

கடலெல்லாம்வற்றினாலுங் கல்மாரிபொழிந்திட்டாலும்
மடமேலோகிரிசாய்ந்தாலும் மலையெல்லாந்தகர்ந்திட்டாலும்
படமெடுத்தரவுதீண்டிப் பார்தனில்வீழ்ந்திட்டாலும்
திடமுடனெங்கள்வாயிற்பொய்களும்பிறவாதையா

இராசாவசனம்.

அகோ வாருங்களையா சுவாமி சந்தசாகரம் வற்றினாலும் சந்திர ஆரியாள் தெற்குவடக்கானாலும் பொய் சொல்லமாட்டேனையா சுவாமி

இராஜா-விருத்தம்.

க்தன்மேற் குற்றஞ்சொல்ல வுலகினிலுண்டோ அய்யா
யெந்தலை விதிப்படிக்கு யெழுத்தைநா னினைப்பதல்லால்
அந்தமோ நட்சேத்திரையா அவஸ்தைகள்செய்யவேண்டாம்
முந்தியே காசிக்குப்போய் முனிருணந் தீர்ப்பேன்சுவாமி

நட்சேத்திரத்தாகர் வசனம்

அகோ வாரும்பிள்ளா யரிச்சந்திரா கிட்டியை யவிழ்த்துவிட்டேன் எப்படியாவது திரவியத்தைக் கொடும்பிள்ளாயரிச்சந்திரா.

இராஜா வசனம்.

அகோ சரணஞ் சரணமையாசுவாமி காசிக்குப்போனவுடனே என்மனையாளைக்கிரயஞ்செய்தாவது விஸ்வாமித்திரர்க்குச்செல்லவேண்டியதிரவியத்தைக் கொடுக்கிறேனையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர்-விருத்தம்.

மன்னனே யரிச்சந்திராநான் வரும்பொழு துண்ட வன்னம்
பின்னுமன்றே டுந்தக்காடும் பெருமலையிடங்களெல்லாம்
உன்னியா னலையச்செய்தாய் ஓஇனி வரவொமாட்டேன்
அன்னமே கொடுக்கவேண்டு மரும்பசிக் கெனக்குத்தானே.

ஷெ வசனம்.

அகோவாரும் பிள்ளா யரிச்சந்திரா நான் ஊரிலிருந்துவரும் போது கொஞ்சம்போலே பெரும்பூசனிக்காயளவு சாதஞ்சாப்பிட்டுவந்தேன் யிப்போது கேக்குபசி அருணுக்கயறு அறுந்துபோகிற பாவனையாகத்தெரிகிறது ஆகையால் கொஞ்சஞ் சாதந்தருவித்துக்கொடுக்கவேணும் பிள்ளா யரிச்சந்திரா.

இராஜா விருத்தம்.

கண்டக மலைகளெல்லாங் கடந்துமே வந்துவிட்டோம்
கண்டதோர் சோலைகண்டோம் நிமிஷத்தில் காசிகாண்போம்
வேண்டிய பதார்த்தத்தோடு விருப்பமா யமுதளிப்பேன்
ஆண்டவா கிருபைசெய்து [illegible]

ஷை வசனம்.

அகோ சரணஞ் சரணமையா சுவாமி இந்த அத்துவானக்காட்டிலே சாதங்கேட்டால் யென்னசெய்குவேன் காசிப்பட்டணம் போனவுடனே சகலமான காய்கறிகளுடன் சாதந் தருகிறேனையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

இப்பவே சாதமுங்கறியுங் கொடுத்தாலாச்சுது இல்லாவிட்டால் இதோநான்போகிறேன் பிள்ளா யரிச்சந்திரா,

இராஜா விருத்தம்.

காட்டிலே சாதங்கேட்டுக் கடன்பொன்னைத்தாடாவென்றால்
நாட்டிலே சாதங்கொண்டு நாங்களும் வந்ததுண்டோ
ஏட்டினி லெழுத்துத்தானோ யெந்தனை விதிபோலையா
மேட்டிமை சொல்லவில்லை விஸ்வேசா யென்னசெய்வேன்.

இராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

காட்டிலே சாதங் கறியெங்கேதேடுவே னீஸ்பரா
கடவுள்செயலோ யிது நானறியேன் ஜெகதீஸ்பரா
இல்லையென்ற வார்த்தைஇதுவரை யறியேனேயீஸ்பரா
இருளான வனந்தனி லொருவனாயுங் காணேனீஸ்பரா
என்னையிந்தக் காட்டில் சாதங்கறிவகை கேட்டால்
எந்தவிடமறிந்து வாங்கிவருகுவே னீஸ்பரா

இராஜா-வசனம்.

கடவுளே! வனுக்கிரமான காட்டில் நட்சேத்திரத்தாகர் சாதங்கேட்கிறாரே நானென்னசெய்வேன் விஸ்வநாதா! ஆகிலும்உன்னுடைய கிருபையால் நட்சேத்திரத் தாவருடைய பசி தீரவேணுங்கடவுளே.

விருத்தம்.

அந்தர மானகாட்டி லரிச்சந்திரன் தேவியோடு
மைந்தனும் விஸ்வாமித்திரன் வரவிட்ட தூதன் றன்னுடன்
சிந்தைநொந் திருகியென்ன செய்குவோமென்றாப்போ
சந்தோஷ மாகவேமா தவர்களும் வருகின்றாரே.

இராகம்-தன்னியாசி-அடதாளம்.

பல்லவி.

மாதவர்வந்தாரே மணிபத்திர மாதவர்வந்தாரே

அநுபல்லவி.

மாதவர் வந்தாரே சோதனையாகவே
சாதங்கறிகொண்டு சந்தோஷமாகவே (மாத)

மாதவர்-வசனம்.

இங்கே யாரும்வோய் இந்த அத்வானத் காட்டிலேசாதம்வேணு மென்று கேட்டதாரு வோய்.

இராசா-வசனம்.

அடியேன்தானையாசுவாமி இந்தநட்சேத்திரத்தாகருக்குத்தா ன் சாதம்வேணுமென்று புலம்பினான் அவருக்கு இந்தச்சாதத் தைபுசிக்கச்சொல்லி கொடுங்களையா சுவாமி.

மாதவர்-வசனம்.

...தாரும் வோய் நட்சத்திரத்தாகரே சாதம் வாங்கிச்சாப்பி ...ம்.

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

அடோ வாரும்பிள்ளாய் அரிச்சந்திரா இந்தச்சாதத்தைதான் சாப்பிடும்வரையிலும் இங்கே யாராவது வராதபடிக்கு பாதுகாத் துக்கொண்டிரும்பிள்ளா யரிச்சந்திரா.

இராஜா-வசனம்.

அப்படியே நல்லபாக்கியமையா சுவாமி.

ஆண்டிகள்வருகிற-ஆனந்தக் களிப்பு.

இராகம்-நாதநாமக்கிரியை, அடதாளசாப்பு.

தாணு தனதந்த நானு - தந்த - தாணு

கடுஞ்செட்டுக் கொடுமைபண்ணாதே-நீயுங்
களவுசெய்வாருட னுறவுசெய்யாதே
இடும்பிச்சைதனை மறவாதே-யிப்போ
இருமாப்புகொண்டெப்போதும் பேசாதிராதே (தாணு)

தண்டிகை பல்லக்கிருக்க-மிகச்
சதுரங்கசேனைகள் தனைச்சூழ்ந்திருக்கப்
பெண்டாட்டி பிள்ளைகளிருக்க-இப்போ
பேசாமற்போகுதே பேய்கொண்டவாறன் (காறு)
கஞ்சிக்கிச்சாணக் கொண்டாட்டம்-மிகக்
கடைகெட்டமூளிக்கிக் கோபங்கொண்டாட்டம்
இஞ்சிக்கி மேலங்கொண்டாட்டம்-நல்ல
எலுமிச்சம்பழத்துக்குப்புளிப்புக்கொண்டாட்டம் (கா)

பிச்சைக்காரர்-வசனம்.

அக்கோ சாணைஞ் சாணைமையா சுவாமி எங்களுக்குமிகுந்த பசியாயிருக்கிறது கொஞ்சஞ்சாதந் தரவேண்டுமையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர் வசனம்.

இங்கேயாரடா வந்தவன் நேக்கேசாதம் பத்தாமல் விழித்துக் கொண்டிருக்கிறேன் சாதம்போடமாட்டேன் போடா போ.

பிச்சைக்காரர்-வசனம்.

அப்படியானால் நாங்கள் போகிறோமையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

அதோ வாரும்பிள்ளா யரிச்சந்திரா நான் உன்பின்னாலேநடந்துவந்ததும் யிப்போது சாப்பிட்டதும் நேக்கு ஆயாசமாயிருக்கிறபடியால் சற்றுநேரம் உன்மடியிற் படுத்து நித்திரை செய்கிறேன் உன்மகன் தேவதாசன் நேக்கு கால்பிடிக்கவும் உன்னுடையதேவி சந்திரமதி தாலாட்டவும் மந்திரி சத்தியகீர்த்தியை யிங்குயாரும்வராதபடிக்குக் காத்துக்கொண்டிருக்கவும் சொல்லும் பிள்ளாய் அரிச்சந்திரா.

இராசா-வசனம்.

அப்படியே நல்லபாக்கியமையா சுவாமி.

பொது வசனம்.

நட்சேத்திரத்தகர் அரிச்சந்திரன் மடியில் நித்திரைசெய்தார் தேவதாசன் கால்பிடித்துக்கொண்டிருந்தான் மந்திரி யாரும்வாராத

படிக்கு காவல்கார்த்துக்கொண் டிருந்தான் சந்திரமதி தாலாட்டுகிறவிதங்காண்க.

இராகம்-நீலாம்புரி, ஆதிதாளம்.

தாலாட்டு.

ராரிரரோ ராரிரரோ ராரிரரோ ராரிரரோ
சீரான அயோத்திச்சீமைவிட்டுக் காடுவந்தோம்
ஆராகிலும் பார்ப்பார்க் காசைசொல்ல லாகாதே
மாமுனிவன் தாதா மகாராஜா பட்டகடன்
தாமுமிந்த வாழ்வந்த சண்டாளா நித்திரைபோ
அச்சமில்லையென்று அரசாண்டு வீற்றிருந்தோம்
கச்சாவு போலேவந்த நட்சேத்திரா கண்ணுறங்காய்
காடுமலைகளிலே காடிபுலி யாளிசிங்கம்
கூடியே வாழுமிந்தக் கொடுவனத்தில் நித்திரைபோ
மனையாள ழுதாலும் மைந்த னழுதாலும்
வினையமேபேசி வெறுப்பவனே நித்திரைபோ

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

அகோ வாரும்பிள்ளாய் அரிச்சந்திரா னேக்கு நித்திரை வந்து தீர்ந்துவிட்டது நான்போகுறேன் பணத்தைக்கொடும்பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-வசனம்.

இதோகாசிக்குப்போனவுடனே தாங்களுக்குச் செல்லவேண்டியபொன்னைக் கொடுக்கிறேன் சற்றுக்கூட வேவாக்கு வாங்கிக்கொண்டுபோங்களேன் சுவாமி.

நட்சேத்திரத்தாகர் வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அரிச்சந்திரா இந்தஆற்றில் உன்னோடேநடந்துவர என்னால்முடியாது னேக்குக்காலெல்லாம் நோகிறது ஒருவாகனம் வேணும் பிள்ளாயரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-வசனம்.

ஆனால் வாருங்களையாசுவாமி இந்தஆரண்ய மானவனத்திலே நானெங்கேபோய் வாகனஞ் சம்பாதிப்பேன் அடியேனுடைய தோளின்பேரில் ஏறிக்கொள்ளுங்களையா சுவாமி.

நட்சேத்திரத்தரகர் வசனம்.

அப்படிச்செய்தால் ரொம்பவும் நல்லதுதானரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

இதோகுளித்துவிட்டேன் ஏறிக்கொள்ளுங்களையா சுவாமி

நட்சேத்திரத்தரகர் வசனம்.

நானேறிக்கொண்டது சரிதான் அசையாதபடிக்குக் கொண்டுபோகவேணும்பிள்ளா யரிச்சந்திரா.

இராகம்-காம்போதி-அடதாளசப்பு.

கண்ணிகள்.

பரிமேலேறிநான் பூலோகம்ஆண்டதும்போக இப்போ
தரகுக்குவந்தவர்க்கு வாகனமானேனே தெய்வமே
யானைமேலேறிநா னய்யோத்தியாண்டதும்போக இப்போ
பூனைபோல்நின்றிந்தப் பூசுரர்வாகனமானேன்
தேரின்மேலேறிநான் தேசங்களாண்டதும்போக இப்போ
வீரமிழந்துநான் வேதியர்வாகனமானேன்.

சந்திரமதி-சொல்லல்.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

பாரஞ்சுமக்கவசமோ பா[illegible] னையே (பார)

அநுபல்லவி.

தாரணியோர்கள் பணியும்வீரா இந்த
வேதனைநீர்பட நான்செய்தபாவமோ (பார)

சரணங்கள்.

நீதிநெறிமுறைதான் தவறுமன்னவா
நீணிலந்தன்னிலே நிற்பந்தமாகவே (பார)

ஆர்செய்தவஞ்சனையோ ஆசைமன்னவாசாமி
அடியாள்மயங்கவுமே அந்தணனைத் தூக்கினீர் (பார)

ஆண்டிபோல்வந்தவர்க்கு அவனியப்பத்தாரையும்
வேண்டியே தாரைவார்த்து விதியெண்ணி வருகையில் (பாரா)

பொது-வசனம்.

இப்படியாக ஆற்றைக்கடந்து சூரியவொளிவு தெரியாத வனம் போய்ச்சேர்ந்து இருக்கிறபோது சத்தியகீர்த்தியானவர், ராஜா சந்திரமதி லோகிதன் இவர்கள் பசியாயிருக்கிறதை யறிந்து அந்த வனத்தில் நல்ல காய்கனிகளைப்பறித்து நட்சேத்திரத்தாருக்குவேண்டிய கனிமுதலானதுகளைக் கொடுத்துவிட்டு மீதக்கனியை யாவருஞ்சாப்பிட்டு சற்றிளைப்பாறி நித்திரை செய்திருக்கிற சமயத்தில் விஸ்வாமித்திரரால் அமோகமான இடிமின்னலுடன், காற்றுமழை முதலானவை வருஷிக்க வியப்புற்று விஸ்வேசா! இப்பேர்ப்பட்ட அவஸ்தைபடக் காலமோவென்று ஸ்தோத்திரஞ்செய்து அவ்வனத்தைவிட்டு மிகுந்த வெள்ளத்தில் நீஞ்சி திவ்யமுள்ள ஓர் சோலையில் வந்திருக்கிறார்கள் அவ்வனத்தின் வேடிக்கை விநோதங்களையும், ஆடுகிறமயிலையும், கூவுகிறகுயிலையும், கொஞ்சுகிறகிள்ளைகளையும், அசையும் அன்னங்களையுங் கூடப்பாராத படிக்கு அரிச்சந்திர ராஜனானவர் விஸ்வாமித்திரர் நமக்கு என்ன செய்கிறதென்று மனவருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் வேதாளம் வருகிறவிதங் காண்க.

பூதம்வருகிறபாகம்.

வேதாளம் விருத்தம்.

மாதவன் விஸ்வாமித்திரன் மாய்கையாற் பூதமொன்று
கோதிலா வரிச்சந்திரன்றன் கோதையுங் குழந்தைமந்திரி
காதகன் றாகமேறுங் கருகிடும் புசிப்பேனென்று
வாதுசெய் பெரும்பூதந்தான் வந்தது வனத்திற்றானே.

இராகம் - தன்யாசி - அடதாளச்சாப்பு.

பல்லவி.

பூங்காவனத்திலே லாங்கா திருக்கின்ற பூதமடா வேதாளமடா

வேதாளம்வழிமறிக்கிறபாகம்.

தேவதாசன். சந்திரமதி. அரிச்சந்திரன். நாகன்.

அநுபல்லவி.

ஹுங்காரமற்பூதங்கள் வாங்கா திருக்கின்ற
சோலையடா மலைச்சாலையடா (பூங்).

சரணங்கள்.

ஆண்காற்றடிக்குது பெண்காற்றுவீசுது ஆரடா மானிடவா
பாங்காகயிந்தவனந்தனில்வந்த பராக்கிரமசாலிகளா
உங்களைவருமிந்தவனத்தி லொருநிமிஷந்தனிலே
இங்காமலுங்களை காறுமின்றி யென்றுசித்தியமாகுதுவே

வேதாளம் வசனம்.

அடா மானிடவா இந்த ஆரண்யமான வனத்திலே சற்றும்பய மில்லாமல் வந்தாயல்லவா உங்களைவரையும் இதோ பக்ஷணம் செய்துபோடுகிறேன் பாரும்பிள்ளாய்.

அரிச்சந்திரன் விருத்தம்.

காசையம் தன்னில்வாழுங் கடியபேய் தானாகேளாய்
வானவர் விஸ்வாமித்திர மாமுனி கடனுக்காக
மாநகர் சீமைவிட்டு மறுநகர்க் கேகும்போது
யானைபோல் வழிமறித்தாய் அடவுடன் விலகிப்போடா

ஷை. வசனம்.

ஆனால்வாரும்பிள்ளாய் வேதாளா அயோத்தியாபுரியையாள ப்பட்ட அரிச்சந்திரராஜனென்று கொஞ்சமேனும் அச்சமின்றிவந் தாய் நாங்கள் காசிக்குப்போகவேணும் வழிவிலகும் பிள்ளாய் வே தாளா.

வேதாளம் விருத்தம்.

திரமுடனயோத்தி செங்கோல் செலுத்திய மன்னுமேகேளாய்
வருமுனி கடனுக்குத்தான் வனத்திலே யன்பின்றாலே
தருக்கு வந்தபார்ப்பான் றன்னையே பிடித்துத்தின்பேன்
விரசுட னவனையும் விட்டுநீர்போவாய் வேந்தே.

ஷை வசனம்.

அகோ வாரும்பிள்ளாய் ராஜாவே நீர் இதோ நிற்கிற பார்ப்பானை என்வசம் பிடித்துக் கொடுத்தாலாச்சுது இல்லாவிடில் உங்களனைவோரையும் புசித்துப்போடுவேன்பிள்ளாய் ராஜாவே."

நட்சேத்திரத்தரகர்-விருத்தம்.

ஏடா அரிச்சந்திராகேள் என்னையே தின்றுதானால்
பேதைகா ளெந்தன்பெண்டு பிள்ளையு மலையுங்கண்டாய்
நீதியாய் வேதாளத்தை நீவிழச் செய்தாயானால்
மாதுடன் பிள்ளையும் மகிழ்ச்சியா யிருந்திடாயே.

ஷை வசனம்.

"அகோவாரும்பிள்ளாய் அரிச்சந்திரா இந்தவேதாளமானது உம்மையெல்லோரையும் விட்டுவிட்டு என்னைமட்டும் இந்தவேதாளம்புசிப்பேனென்று சொல்கிறது ஆகையால் நீரென்னைக்காப்பாற்றவேணும்பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

தனத்துடன் நகர்போனாலும் செளரிய வீரம்போச்சோ
புனத்தில் வஞ்சனைசெய்வேனோ புகன்றிடும்நட்சேத்திரையா
வனத்தினில் வேதாளத்தை வாளினால் வெட்டிவீழ்ப்பேன்
மனத்தினிற் கவலைவேண்டாம் மகிழ்ச்சியா யிருந்திடீரே.

ஷை வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமிநான் நாடுநகரம்பூராவும் அடியேனுடைய சத்தவீரபராக்கிரமத்தைமட்டும் இழக்கவில்லை ஆனதால் இந்தவேதாளத்தை இருதுண்டாகவெட்டிப்போடுகிறேன் பாருங்களையா சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

ஆதரி யாகவிந்த அடவியில் மறித்துக்கொண்டு
ஆதனைத் தின்பேனென்று சொல்லிய சபதமெல்லாம்
பாதாளம் போக்குவிப்போ பிளக்கவேவாளால்வெட்டி
வேதாளா உன்னையானும் விண்ணுல கேத்திடுவேனே

ஷி.வசனம்.

அகோவாரும் வேதாளா நீதானா என்னைப்பொய்சொல்லும்படியாக நட்சேத்திரத்தரகனைப் பிடித்துத்தரச் சொல்கிறவன்பேசாமலோடிப்போனாலாச்சுது இல்லாவிட்டால் இந்தவாளாலுன்னைவெட்டிச் சங்கரித்துப்போடுவேன் வேதாளா.

வேதாளம் வசனம்.

அகோவாரும் ராஜாவே நீதானா யென்னைச் சங்கரித்துப்போடுகிறவன் மரியாதையுடனே அந்தப்பிராமணனைப் பிடித்துக்கொடுத்தாலாச்சுது இல்லாவிடில் உங்களனைவரையும் புசித்துப்போடுவேன்பின்னாய் ராஜாவே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

கேளடா வேதாளாநீ கேட்டறி யாயோபூமி
ஆளரிச் சந்திரனென்று அறியாயோ இந்நாட்டில்
வாழுமென் பூமியெல்லா மாமுனிக் களித்துவந்தேன்
தாழுவே யென்னைவேண்டாம் சடுதியி லோடிப்போடா.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆரென்றுமதித்தாய் எனையாரென்று மதித்தாய் இந்த
அவனியாள் னரையென் றெண்ணாமல் (ஆரெ)

அநுபல்லவி.

பாரெங்கும்போற்றிடும் திருச்சங்குபெற்ற
பாலகனாகிய ராஜனென்றெண்ணாமல் (ஆரெ)

சரணங்கள்.

பந்தவினைபோக வந்தோங் காசிநகர்
தொந்தமதாகவே இந்தவழியில்நின் (ஆரெ)

மாசறுமென் றுமறை மாறிபொய்யையொத்தி
தேசமுழுதாண்ட ராஜனென்றெண்ணாம(லாரெ)

வையகம்விட்டு வழிப்பாதைபோகையில்
ஐயோத்திமன்னவ னென்றறியாமலே (ஆரெ)

பொது வசனம்.

இப்படியாக அரிச்சந்திரன் வேதாளத்துடனெதிர்த்து கையி லிருந்தவாளால் வெட்டச்சே வேதாளம் மறைந்துபோய்விட்டது.

ஷை-விருத்தம்.

கொல்வினென் றெதிர்த்தபூதம் குரித்தரிச் சந்திரன் றன்னை
வெல்வது அரிதென்றெண்ணி விலகியே மறைந்தபின்பு
கல்வர் சூருவாமென்று காதனைத் தோத்தரித்துச்
செல்வழி தனையேநோக்கிச் சிறப்புட னடக்கலுற்றார்.

அரிச்சந்திரன்-வசனம்.

அதோ வாருங்களையாசுவாமி பூதத்தைத் தொலைத்துவிட்டேன் இனிமேல் அதிசிக்கிரம்காசிக்குப்போவோம்வாருங்களையாசுவாமி

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

அதோ வாரும்பிள்ளாயரிச்சந்திரா நானினிமேல் உன்பிறகே வரப்பயித்தியங்கொண்டா போயிருக்கிறேன், இவ்வளவுபெரிய வேதாளத்தைக் கொன்றவன் என்னையுங்கொல்கிறது பெரிய பாரமா விஸ்வாமித்திர சுவாமியாருக்கு கொடுக்கவேண்டிய திரவியத்தைக்கொடுத்தாலுஞ்சரி இல்லையென்று சொன்னாலுஞ்சரி நான்போகிறேன் பிள்ளாயரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

ஆனால் வாருங்களையாசுவாமி தாங்கள் பயப்படுகிறீர்களென்றுவெட்டினேனென்பது வேறல்ல அப்படியெல்லாம் நினைக்கவேண்டாம் காசிக்குப்போனவுடனே பொன்தருகிறேன் வாங்கிக்கொண்டுபோங்களையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர் வசனம்

அப்படியே வருகிறேன் பிள்ளாய் அரிச்சந்திரா.

பொது-விருத்தம்.

வன்மமாய் விஸ்வாமித்திர மாமுனி யேவலாலே
வன்னியாம் நெருப்பாறந்த வனத்தினில் விளைத்துக்கொன்ன
மன்மகன் மனைவிமந்திரி யுள்ளமுங் கலங்கியேங்கிக்
கன்மமாந் தாகமோடு கதறியே யழுகின்றாரே.

ஷை வசனம்.

இந்தப்பிரகாரமாக விஸ்வாமித்திர ரேவலால் அக்கினியாறுவந்துமறித்துக்கொண்டதைப்பார்த்து இராஜாவுஞ்சந்திரமதியும்ஒருவர்க்கொருவர் வருத்தப்படுகிற விதங்காண்க.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அருமையா யிருந்தபெண்ணே அக்கினியாறுதானும்
வருகுது நமதுமுன்னே வானள வாகவேதான்
சிறுமைதான் படவோம்மைச் சிருஷ்டித்தான்பிர்மதேவன்.
உருமையா யாற்றில்வீழ்ந்து உயிர்தனைமாய்ப்போம்வாராய்.

இராகம்-கேதாரகௌளம்-தாளம்-ஆதி.

பல்லவி.

பெண்ணே நாமென்ன செய்குவோம் அடி-
பெண்ணே நாமென்ன செய்குவோம்-

அநுபல்லவி.

இந்த ஆறு வந்துபாரு கனதிறளாய் வருகுதடி (பெண்)

சரணங்கள்.

வந்த ஆறு வந்துபாரு கனதிறளாய் வருகுதடி. (பெண்)
நம்மன்னாடு நகரம்விட்டுக் காடுகளிலேவந்தோம் (பெண்)
காசிநகர் தேடியிந்தக்கௌசிக ருனைத்தீர்க்கப் (பெண்)

முடுகு.

கண்ணே யெனதுமொழி பெண்ணேநீ கேளடியே
காட்டுத் தடந்தனிலே கூட்ட நெருப்பதாக
காரிளேச்சந்திர மாமதியேபாராய்
காரணமாமுனி சோதனைதானடி (பெண்)

அரிச்சந்திரன்-வசனம்.

அகோவாரும்பெண்ணே சந்திரமதி இந்தஅக்கினியாறுவழிமறித்துக்கொண்டு ஆகாசமும் பூமியும் ஒன்றாக வருகிறதுபோலத்தெரிகிறது ஆகையால் நாம்வெகுவிதமாய் இந்த ஆற்றைத்கடந்து

போவோம் இப்படியெல்லாங் கஷ்டப்படுகிறதைப் பார்க்கிலும்இற க்துபோகிறது உத்தமமாய்த் தோணுதுபெண்ணே சந்திரமதி.

சந்திரமதி-விருத்தம்.

மன்னர் மன்னவரேநீர்தான் மாய்குவோமென்றுரைத்தீர்
முன்னமே யிறந்தோமானல் முனிகடன் தீர்ப்பதெப்போ
பின்னேவோர் கெதிதானுண்டோ பெருந்தணல்நானேவிழுந்து
நன்னிய பகவான்றன்னே நான்றொழு தாற்றுவேனே.

ஷெ வசனம்.

அகோசரணஞ் சரணமையா சுவாமி இந்தஅக்கினியாற்றிலே நாம் இறந்துபோனேமானல் விஸ்வாமித்திரசுவாமியாருடைய திர வியத்தை யார்கொடுப்பார் ஆனதால் அடியாள்போய் அக்கினியை குளிரவைத்து வருகிறேனையா சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

அந்தமானகாட்டில் அக்கினி வளைந்துகொண்டு
முந்தியே வழிமறித்தால் முடுகியே நடப்பதெங்கே
சந்திர மதியேநீயுந் தணலதாய் வந்தஆற்றைச்
சிந்தையில் தியானஞ்செய்து தீயைநீ யாற்றுவாயே.

இராகம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

அக்கினியாய்வரும் ஆற்றுக்குயென்செய்வே னீஸ்பரா - இந்த
அண்டபகிரண்டம் வெந்துநீறுகுதே யீஸ்பரா
இக்கினிவேறில்லை சென்று கரையேற யீஸ்பரா - வருந்
தீயைநீயாற்றுவாய் தேகம் பதருதே யீஸ்பரா
பொங்கும் நுரைறயாகப் பொங்கிவருகுதே யீஸ்பரா-இப்போ
எங்கும் தணலாக வெந்து நீறுகுதே யீஸ்பரா
எத்திசையும்ஆண்ட சத்தியவாக்கரிச்சந்திரர் அவர்
பத்தினிநானுந்தான் கற்புள்ளபெண்டுமே யானல்
பத்திவருகின்ற அக்கினியே குளிராயோ வென்று
சத்தியவாக்குள்ள பத்தினியும் நடந்தாளே.

சந்திரமதி-விருத்தம்.

மறைநெறி பிசகினாலும் வரும்விருந் திழந்திட்டாலும்
முறைதயிழ் வெதுசெய்தாலும் மூப்பினை யிகழ்ந்திட்டாலும்
பிறர்மனை யிச்சித்தாலும் பிறர்மனம் நொந்திட்டாலும்
குறைகளொன்றிருந்தாலென்னைக்கொல்வாய்காட்டெரிநெருப்பே.

ஷை வசனம்.

ஓ அக்கினிபகவானே சத்தியமாகஓர்வசனஞ்சொல்லுகிறேன் கேளும் என்னுடைய பத்தாவிடத்திலேயாவதுஎன்னிடத்திலாவது பரதாரதுரோகம், பிறர்பொருளிச்சை, பிறர்மனம்நோகச்செய்தல், சொன்னசத்தியம் மறக்கிறது, பெரியோர்களை நிந்திக்கிறது, விருந்திழக்கிறது, அதர்மம், வஞ்சனை, சூதுசெய்கிறதாவது, தேவதாபக்திமறக்கிறதாவது இதுகளில் எதாவதுபிசகுநடக்குமேயானால்என்னை யெரித்துப்போடுவாய் இல்லாவிடில் சுத்தஜலமாய்க் குளிர்ந்துபோகக்கடவாய் அக்கினிதேவனே.

பொது வசனம்.

இப்படியாகச் சொன்னமாத்திரத்தில் அக்கினியாறு விலகிக் குளிர்ந்த ஜலமாய்ப் போய்விட்டது.

சந்திரமதி-வசனம்.

அகோவாரும் என்பிராணநாதா அக்கினியாறு குளிர்ந்துவிட்டது யினிமேல் யாவரும் ஆறதில் நடந்துபோகலாமையா சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்.

அகோ சரணஞ்சரணமையாநட்சேத்திரபகவானே அக்கினியாறு குளிர்ந்துவிட்டதாம் யினிமேல் யாவரும் போகலாமையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

ஓய்ஓய் அரிச்சந்திரமகாராஜனே நீங்கள் வீணிலேன் ஆற்றில் விழுந்து சாகப்போகிறீர்கள் நான் மனப்பூர்த்தியாகச்சொல்லுகிறேன் என்னை யிந்த ஆற்றிலே தள்ளிவிட்டால் நீங்களெல்லோரும் பிழைத்து ஓடிப்போய்விடலாம் அரிச்சந்திரமகாராஜனே.

அரிச்சந்திரன்-வசனம்.

அக்கோ சரணஞ்சரணமையா சுவாமி எங்கள் பிராணனெல்லாம்போனாலும் போகிறதேதவிர அப்படியொருபோதுஞ் செய்யமாட்டோமையா சுவாமி,

நட்சேத்திரத்தரகர்-வசனம்,

அப்படியானாற் பிரவாகமாய்வரும் யிந்த அக்கினியாற்றில் என்னால் நடந்துவர முடியாது தூக்கிக்கொண்டு போனால்தான் நான் வருவேன் அரிச்சந்திரா,

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே தூக்கிக்கொண்டு போகிறேனையா சுவாமி.

பொது-வசனம்.

இப்படியாகஅக்கினியாற்றைக் கடந்து கரையேறிச்சிலதூரம்நடந்துயமுனையாற்றங்கரைவந்துசேர்ந்துதாகவிடாய்தீர்த்துகந்தமூலங்களை யாவருமருந்தி அப்பால்காசிப்பட்டணம்போகிறவிதங்காண்க

இராகம்-உசேனி, தாளம்-ரூபகம்,

பல்லவி.

நடந்துவாடி பெண்மானே காசி நகரஞ்சேர்வோந்தானே

அநுபல்லவி.

மடந்தையரேமுன் மறைமவர்போகிறார்
வல்லையென்றேயவர் தொல்லைப்படுத்துவார்
மாதரசேகில்லாதே வேதனைகள்கொள்ளாதே
மைந்தனுடனேஓடி யெந்தனுடனே கூடி. (நட)

சரணங்கள்.

தையலரே வினைகள் தீர்ந்தோமிந்தச்
சர்வாநதிவந்து சேர்ந்தோம்
வையகம்புகழுஞ் சத்தியஉறுதியை
வைத்துநின்சித்தத்திலே மனமெத்தச்சுகம்பெற
மாதரசேகில்லாதே மதிமயக்கங்கொள்ளாதே
மானேஉன்னிடையசையத் தானேயிவ்வழிதொலைய (நட)

வெய்யலில் வேர்வைகளாகுதேபூமி
  வெந்துதணற்பொதி யாகுதே
கையினிற்குழந்தை விடுறான்
  காரணமொன்றுமே நானறியேன்
கல்லுமுள்ளுந் தான்கடந்து
  சொல்லும்வழிபின்றொடர்ந்து (௩௨)

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரமதி யிதோதெரிகிற சாலைசோலைகளெல்லா ம்காசிப்பட்டணத்தைச்சேர்ந்ததுதான் பெண்ணே சந்திரமதி.

இராகம் துஜாவந்திதாளம்-சாப்பு.

பல்லவி.

வஞ்சியரேயிந்தக் காசிநகரைச்சூழ்ந்த
வளங்கள்தனை நீபாரடி.

அநுபல்லவி.

கொஞ்சுங்கிளியே அப ரஞ்சியேயமுதினங்
கொண்டவுலவிய தண்டலையிலுறையுமதுரிறையும் (வஞ்)

சரணங்கள்.

கோகிலங்கள் சுதிகூட்டுங் கிளிகள்பாடும்
  கோலமயிலாடுமெய்
நாகரீகடனமாடும் மடவார்முகம்
  நளினமென்றனம் நாடும்
பூகமிடறொடித்து வாழைமடலிற்பாயும்
பொங்கமேவு மலங்கிர்தம்பாராய் கண்ணாலேகோரய் (வஞ்)

மாதவர்கள் துதிக்கும் வேதங்கள்தனைக்கற்று
  மருதக்கிளிகள் கூவும்
போதவிரைகுழலார் பாதமலரைக்கண்டுப்
  புஷ்பமென் றனம்நாடும்
சீதமதுபெருகி மோதும்வயலிற்பாயும்
செங்கெலையுமுயர்கன்னலோடும்பாராய் கண்ணாலேகோராய் (வஞ்)

காசிகாண்டம்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

சூரியனுதித்தாற்போலே துலங்குகோ புரமுங்கண்டேன்
ஆரிய மகுடங்கண்டேன் ஆஸ்தமண் டபமுங்கண்டேன்
தேரோடும் வீதிகண்டேன் திருக்கொடி கம்பங்கண்டேன்
தாரவே யெந்தன்பாவந் தொலைந்துமே போகக்கண்டேன்.

ஷ விருத்தம்.

வாசியை வலத்திற்கண்டேன் வலியதோ யிடத்திற்கண்டேன்
தேசிகர் மொழியைக்கண்டேன் தெட்சணைகெவுளிகண்டேன்
நேசமாய்ச் சங்கைகண்டேன் நேரிழை யாளேகேளாய்
காசியைக் கண்டபோதே கருமமுந் தொலையக்கண்டேன்

ஷ வசனம்.

பெண்ணேசந்திரமதி இனிமேல் மயங்கவேண்டாம் யிதுதான்காசிப்பட்டணம் யிதோ கோபுரந்தெரிகிறது பார்த்துதெரிசித்துக்கொள்ளும்பெண்ணே சந்திரமதி.

ஷ வசனம்.

அகோ வாருங்களையா நட்சேத்திர சுவாமிகளே யிதோ காசி க்ஷேத்திரம்வந்துவிட்டோம் யினிமேல் விஸ்வாமித்திர சுவாமிகளுக்குச்செல்லவேண்டியதிரவியம் கொடுத்துவிடுகிறேன் சுவாமி.

சந்திரமதி-வசனம்.

அகோ என்பிராணநாதா இந்தக் காசிமாநகரத்தை அடியாளுக்குத் தெரியும்படி காண்பிக்கவேணும் பிராணநாதா.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி-

கண்ணிகள்.

காசிவிஸ்வநாதர்வளர் லிங்கக்கோவில்பாராய்
கண்ணே யெந்தன் பெண்ணே

மாசில்லாதகோபுரங்கள் மதியையுரவாடுதுபார்
மானே செழுந் தேனே
மாடமதிலேநுழைந்து மதியுடலந்தேய்ந்ததுபார்
மதியே சந்திர மதியே
ஆடவர்கள்மாளிகையில் அரிவைமுகம்பார்ப்பதுபார்
அன்னமே பசுஞ் சொர்ணமே
அற்புதமாய்த்தானிருக்கும் அரசர்கள்தம்வீடுபாராய்
அரிவையே எந்தன்தெரிவையே
செப்புமொழிதவறாத தீரசர்வீதிபாராய்
தேவியே எந்தன் ஆவியே
பொன்கொண்டுவாங்கிவிற்கும் பொன்படைத்தோர்வீதிபாராய்
பூவையே எந்தன் கோவையே
நன்னயமாய்வாழுஞ் சூத்திரர் நல்லவீதிகண்ணுல்பாராய்
நாயகி பிராணநாயகி.

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாரும்பெண்ணே சந்திரமதிமாடமாளிகை கூடகோபுரம் ராஜவீதிகளெல்லாம்பார்த்தாயா இன்னம் மற்றவீதிகளெல்லாம் காண்பிக்கிறேன் பெண்ணே சந்திரமதி.

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

கண்டதொரு பூங்காவுங் கண்ணிற்
கண்டிடுமாமணிமேடைகளும்
மண்டிய காவடியுங் கொண்டு
வாரவர் போரவர் சந்தடியும்
பண்டே அயன்படைத்த காசிப்
பட்டணமு மதிற்கட்டடமும்
கண்டாயோ பெண்ணேயென்று அந்த
காசித்தெருவெல்லாந் தான்காட்டி.

அரிச்சந்திரன் வசனம்.

அகோ வாரும்பெண்ணே சந்திரமதி காசித்தெருவெல்லாம்பார்த்துக்கொண்டாயா இனிமேல் காசிக்கங்கையில் ஸ்நானஞ்செய்துவிஸ்வநாதரையும் விசாலாட்சி அம்மனையுந் தெரிசிப்போம் பெண்ணே சந்திரமதி.

இராகம்-முகாரி, தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மண்டிய பாவமெல்லாந் தீர
மார்க்கத்தைத் தாங்கள்மனதிலெண்ணி
அண்டர்புகழ் மந்திரியும் நல்ல
அருமைச்சந்திரமதி லோகிதனும்
கங்காநதி தனிலே அவர்கள்
கர்மவினைபோக ஸ்நானஞ்செய்து
சிங்காரமாகவேதான் அங்கு
திருநீறுசந்தனந்தான்பூசி
வந்தானரிச்சந்திரன் பெற்ற
மைந்தன் மனைவியும்மந்திரியும்
சந்தோஷமாகவேதான் சிவ
சங்கரனைநோக்கிப் போகலுற்றார்

அரிச்சந்திரன்-விருத்தம்.

சந்திர மதியேபெண்ணே தன்வினை யகலவேதான்
சுந்தர மூர்த்தியான சுவாமியைப்பூசைசெய்ய
விந்தையாய் நாமெல்லோரும் விரைவினிற் கோவிற்சென்று
சிந்தையில் மகிழ்ச்சியாகத் தெரிசனஞ் செய்வோம் வாராய்

ஷ வசனம்.

ஆனால் வாரும் பெண்ணே சந்திரமதி கங்காநதிதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தோம் இனிமேல் சுவாமிதெரிசனஞ்செய்வோம்வாராய் பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி வசனம்.

அப்படியே எல்லோரும்போய் சுவாமிதெரிசனஞ் செய்வோமையாசுவாமி.

பொது-வசனம்.

யாவருங் காசிவிஸ்வநாதர் விசாலாட்சிஅம்மன் சன்னிதிமுன்பாகவந்துநின்று தெரிசனஞ்செய்கிற விதங்காண்க.

அரிச்சந்திரன்-விருத்தம்.

வேடன்வாய் எச்சியுண்டாய் விருந்துக்கோர்பிள்ளையுண்டாய்
ஆடர வதனைப்பூண்டாய் அணிவிடை யேறிக்கொண்டாய்

நீடரும் புகழ்சேர்காசி சித்தனே விஸ்வநாதா
வாடவு மடியேனுள்ளம் வருத்தந்தீர்த் தாள்வாய்சுவாமி.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சங்கரஹர சந்திரசேகரா ஓ மகாதேவா சிவ
சாம்பசங்கரா கிருபாநோகரா
பொங்கரவணி மங்கைபாகனே ஓ மகாதேவா லோகப்
புதுமையாகிய நடனமோகனே
நாடுநகரஞ் சிமையு மிழந்தேன் ஓ மகாதேவா எந்தன்
நங்கையைக்கூட்டிவந்தே னிங்கேயே
ஈசனேயென்னை ரட்சியுமையா ஓ மகாதேவா உந்தன்
இணையடிபதந்தந்து காரையா
சிவசிவாயுந்தன் பாதம்நம்பினே ஓ மகாதேவா உந்தன்
திருவருள்தந்து காருமையனே

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாரும்பெண்ணே சந்திரமதி சுவாமி அம்மன்தெரிசனஞ்செய்துவிட்டோம் இனிமேல் நட்சேத்திரத்தாகருக்குப் பொருள்சம்பாதித்துக் கொடுத்த னுப்பவேணும் பெண்ணே சந்திரமதி.

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அரிச்சந்திரா நதிகண்டவிடத்திலஸ்னானஞ்செய்கிறதும் கோவில்கண்டவிடத்தில் கும்பிடுகிறதாயிருந்தால் எனக்குக் காலதாமசமாகிறது இனிமேலாவது எனக்குக்கொடுக்கவேண்டிய பொன்னைக் கொடுத்துவிட்டு மறுகாரியம் பாரும்பிள்ளா யரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-வசனம்.

சரணஞ் சரணமையாசுவாமி இந்தப்பட்டணத்திலுண்டாகிய பாக்கியவான்களை இன்னாரினியாரென்று விசாரித்து அவர்களைக்கண்டுயாசகம்பண்ணிக்கொடுக்கிறேனையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர்-விருத்தம்.

காசிப் பட்டணமேசென்று கடனெலாந் தாரோமென்றாய்க்
காசியில்வீசமெந்தன் கையினில வரவுங்காணேன்

காசிலிங்கம்.

கந்திருவர்.

காசிநாதர்.

விசாலாட்சியம்மன்.

கந்திருவர்.

பேசடா ஒருபொய்யுந்தான் பெண்டியை வித்துத்தாடா
கோசிக முனிக்குரொக்கங் கொண்டுபோய்ச் சேர்க்கவேணும்.

இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

பல்லவி.

பொன்கொடுத்தால்கொடடா அரிச்சந்திரா
பொய்யாகிலுஞ் சொல்லடா (பொன்)

அநுபல்லவி.

கல்லைத்தலையில் வைப்பேன் கையிற்கிட்டி நெரிப்பேன்
இல்லையென்றுசொன்னால் இப்போபயணம்வைப்பேன் (பொன்)

சரணங்கள்.

காசிப்பட்டணம்வந்து கடனைத்தாரோமென்று
ஆசைவார்த்தைசொன்னாய் அரைக்ஷணம்நிற்கமாட்டேன் (பொன்)

நட்சேத்திரத்தரகர் வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அரிச்சந்திரா காசிப்பட்டணம் போய்ச்சேர்ந்தவுடனே திரவியந்தருகிறேனென்று சொன்னபடிக்குச்செலுத்தவேணும் இல்லாவிட்டால் இல்லையென்றாவது சொல்லவேணும் அல்லவென்றால் உன் கையில் கிட்டிமாட்டுவேன்பிள்ளாய்.

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாருங்களையா சுவாமி என்னைக் கிட்டிகட்டவேண்டாம் இனிமேல் எப்படியாவது பொன்கொடுத்துவிடுகிறேனையாசுவாமி.

நட்சேத்திரத்தாகர்-வசனம்,

மயிலே மயிலே இறகுகொடென்றால் கொடாது கையைநீட்டும்பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே கிட்டினேனையா சுவாமி.

நட்சேத்திரத்தரகர்-வசனம்.

உன்கையில் கிட்டிமாட்டியிருக்கிறபடியால் உங்கள் பாட்டனுக்குப் பொன்னைக் கொடுத்துவிட்டு மறுகாரியம் பாரும்பிள்ளாய் அரிச்சந்திரா.

இராகம்-பந்துவராளி, ரூபகம்.

கண்ணிகள்.

சாமியெந்தன் சாமியென்னைத் தயங்கச்செய்யவேண்டாம்
பூமிபுகழுமயாவேனான் பொறுக்கமாட்டேன்மெய்யா

கையிற்கிட்டி கட்டியெந்தன் கழுத்திற்கயிர்போட்டு
வெய்யில்தனில்நிறுத்தியொரு பொய்யைச்சொல்லுமென்று

பெண்பிள்ளைகள்நின்றுநாங்கள் புலம்பிப்பரதவிக்கக்
கண்டிருந்துமெங்களையுங் கஷ்டஞ்செய்யலாமோ

ஐயாகயிலாசாசியென்னை பவதிசெய்யவேண்டாம்
பொய்யைச்சொல்லுமென்றுஎன்னைப் பிடித்தடியாதே

இராகம்-உசேனி-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தக்கொடுமை செய்விதேனையா
என்னவர்மமோ எங்கள்மீதினில் (இந்)

அநுபல்லவி.

மூர்க்கமிருல்வத்தவினை எந்தவிதமோ அறியோம் (இந்)

சரணங்கள்.

நீதிநெறிகள் தவறினோமோ நினைத்தொருமொழிபேசினோமோ
வேதியனோர் சொத்தையேனும் வேதாவொன்றுமறியோம் (இந்)

மண்டலத்தோர்செய்தபாவம் மன்னனைச்சேர்ந்திடுவதல்லால்
அண்டினோர்க்குரெண்டகங்கள் ஒன்றுநாங்கள்செய்ததில்லை ()

தேசதேச ராஜாபோற்றும்கோசல அரிச்சந்திரமக
ராஜனை நீர்பேசினதால் மோசமில்லையாசகனே (இந்)

இராகம்-ஆனந்தபைரவி அடதாளசாப்பு.

பல்லவி.

எந்தன்பக்கியமதியமானேன் வீதுதேனு செய்தீர் தேனே

அநுபல்லவி.

வந்தகாலமோகாச லோகபர்தன்னிலே
மாமுனிவன்தீர பலிவெல்லச்செய்வோம் (எந்)

சரணங்கள்.

சொன்னகெடுவர லாச்சே சொல்
தவறினால் சத்தியம் போச்சே.
அன்னமேமாமுனி பொன்னுக்குயென்செய்வோம்
அட்டியாய்நட்சேத்திரையன் கிட்டிபோட்டாரென்னை (என்)
நம்பிக்கைமோசங்களெண்டா ரென்னை
நாலுதெருவிலுமே நம்பார்
பம்பரம்போலிந்தப் பாவிநட்சத்திரையன்
படுத்துயரங்கண்டால் வெடிக்கலங்குதேபெண்ணே (என்)

அரிச்சந்திரன்-விருத்தம்.

அன்னமே யென்னிருகண் மணியேகேளாய்
யவனிபதி தனையிழந்து யேழையானோம்
இன்னகரில் வந்தவுடன் முனிக்குச்செம்பொன்
னீய்வமெனத் தாகனையும் அழைத்துவந்தோம்
பொன்னவர்க்கு அளிக்கவகை யொன்றுங்காணோம்
புகழுமறையவர்க் குரைத்த தவணையாச்சே
என்னசெய்வேன் மின்னாசே ருணத்தைத்தீர்க்க
இன்னதென்று வகையெனக்குயியம்புவாயே.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பெண்ணே அன்னமே நாமன்
பேசினதொரு தவணையாச்சுதே (பெ)

அநுபல்லவி.

கண்ணேமுன்னமே கௌசிகமுனி
கடனுக்கிடமுந் திடமுமில்லையே (பெ)

சரணங்கள்.

என்னசெய்குவோம் நாம
ளெவரிடஞ்சென்று கடன்படுகுவோம் (என்ன)
இன்னகர் தன்னில்விலை கூறிவித்தகா
லெவருமெந்தனை நகைசெய்வார்களே (பெ)

சந்திரமதி-சொல்லல்.

ஆசைமன்னவா நீர்
 அஞ்சவேண்டாமிதற்கென்செய்யப்போறேமென் (ஆசை)
நேசமுடனெந்தன் பிள்ளையுமென்னையுங்
 கோசிகர்க்கீந்திவ கூசாமல்வித்திடும் (ஆசை)

அரிச்சந்திரன்-சொல்லல்.

மேனுள்வினையோ மறைந
 வேதன்விதித்த விதியோஐயையோ மேனு
தானே யரசு புரிந்தநாடு
 தனையுமிழந்தா சுகமுமிழந்தா (மே)

நட்சேத்திரத்தாகர்-விருத்தம்.

என்னடா அரிச்சந்திரா நீ யிப்படிக் கெடுவுமாச்சு
சொன்ன சொல்ப்போலே நீயுஞ்சுருக்கெனப்பொருள்கொடாமல்
மன்னவா மனைவிகூட மாரீசஞ் செய்தாற்போமோ
உன்னுட நெத்திதன்னி லுகந்தகல் வைப்பேன்பாராய்.

ஷை வசனம்.

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரா நீசொன்னசொற்படி பண
ந்தரமாட்டாய்போலிருக்கிறது ஆனதால் உன்னுடையநெற்றியில்
கல்வைக்கப்போகிறேன் அண்ணாந்துகொள்ளடா அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே அண்ணாந்துகொண்டேன் சுவாமி.

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

நெத்தியில் கல்வைத்திருக்கிறது பணங்கொடுக்கிலாவிட்டா
ல் ஒருவாய் சொல்லும்பிள்ளா யரிச்சந்திரா.

இராகம்-காம்போதி-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

சத்தியந்தவறுமன்றந்தரணியையாண்டிருந்தேனையோ இப்போ
 புத்திமயக்கமென்னைப்புரட்டியெடுக்குதேனையோ

நித்திரைதன்னில் நினைவுமறப்பேனோ அய்யரே நீங்கள்
சற்றுமிரங்காமற் சடுதியிற்கல்லைவைத்தீரையரே
நெத்தியிற்கல்லை நிறுத்திப்படிக்குதீரையரே நான்
சத்தியவாக்குத் தவறிடக்கேனோ அய்யரே
புத்தியுடனேநான் பூலோகமாண்டதும்போக இப்போ
இத்தலத்தனில்வந்து யிவ்வேஷமானேனோதெய்வமே

சந்திரமதி-விருத்தம்,

சுந்தர மன்னனையா சுவாமியென் பிராணநாதா
பந்தனஞ் செய்யவேண்டாம் பார்புகழ் கடனுக்காக
இந்தவே தனைகளெல்லாம் யெங்களால் பொறுக்கமாட்டோம்
வந்தனஞ் செய்தேன்சுவாமி மறையவா விட்டிவாருகும்.

ஷை. வசனம்.

அஹோ வாருங்களையா நட்சேத்திரபகவானேபொருள்சம்பாதித்துத்தருவதற்குள்ளாக என்மன்னனை இந்தப்பாடெல்லாம்படுத்தவேண்டாம் கையிற்போட்டிருக்கிற கிட்டியையும்நெத்தியில்வைத்தகல்லையும் எடுங்களையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர்-வசனம்,

அடி சந்திரி நீயிவ்வளவுதாம்பேசுகிறது சரிதானா இதோகிட்டியையும் நெத்தியில்வைத்த கல்லையும் எடுத்தப்போட்டேன் இனிமேலாவது பொன்னைக்கொடடி சந்திரி

சந்திரமதி-வசனம்.

அஹோயென் பிராணநாதா தங்களைச்செய்கிறதுன்பங்களைப்பார்க்கிறபோது மனமானது வருத்தத்தை யடையுதையா சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்.

இருக்கட்டும்பெண்ணே நாமென்னசெய்வோம்.

சந்திரமதி விருத்தம்.

கன்னிகா விருக்கையிற்பொ கவலைகள் படவும்வேண்டாம்
தென்னிதமுடனேநீங்கள் கீர்த்தியா மொழிந்ததாலும்
உன்னித மாகயிந்த வனந்தனில் விலையாய்விற்று
அன்னித மறையோர்க்கிந்த அனுப்புவீரனுப்புவீரே.

இராகம்-உசேனி தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

என்னைவிற்றிரக்கடனைத் தீருமே — என் பிராணநாதா
எனமக்கிந்தக் கவலைதானுமே
மண்ணும்விண்ணுமியச் சொல்லுமீறன் — என் பிராணநாதா
மனதில்வஞ்சகம் வேறுமில்லையே
கண்ணும்பசுவுங் கைதனிலிருக்க — என் பிராணநாதா
கவலைகொள்ளநான் பார்த்திருப்பேனோ
காசிதனிலே யென்னைவிலைசெய்து — என் பிராணநாதா
கௌசிகமுனி கடனைத்தீருமே
மோசஞ்செய்ய நமதுவர்சனில் — என் பிராணநாதா
முன்னைவந்திடுங் கோசிகர்தனக்கு

நட்சேத்திரத்தாகர் வசனம்.

அகோ வாரும்பிள்ளாய் அரிச்சந்திரா நீயும் உன்மனைவியும் மாரீசஞ்செய்துக்கொண்டிருந்தால் உங்கள் பாட்டனுக்குப் பொருளாகிவிடுமோ எப்படியாவது கொடும்பிள்ளா யரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அரும்பொருள் கேட்கவந்த ஐயமீர் சொல்லக்கேளீர்
தரும்பொருளில்லையென்று தவறினேன் சொன்னதுண்டோ
வருமுனி தனக்குச்செம்பொன் வாய்தாத் தவறிடாமல்
பெருமையாய்க் காசிதன்னில் பெண்டுவை விற்றுத்தாறேன்.

ஷை வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமி இந்தக்காசிமாநகரில் என்பெண்டாட்டியைவிற்றுத் தாங்களுக்குச்சொல்லவேண்டியபொன்னைக் கொடுத்துவிடுகிறேனையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

ஓ அரிச்சந்திரா தருகிறேன் தருகிறேனென்று இங்கே வந்து ஏமாத்திப் போடப்பார்க்கிறாய் ஒருக்காலும் விடமாட்டேன் நின்ற இடத்திலேயே பொருளைக்கொடுத்துவிட்டு மறுவேலைபாரும் பிள்ளாய் அரிச்சந்திரா.

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பொருளுக்குலகை யென்செய்வேனினி
பொறுப்பாரோ நட்சேத்திரத்தாகனும்பெண்ணே (பொரு)

அநுபல்லவி.

திருவுக்கு நிகரான என்னுட
தேவியே முனிகோசிகருட (பொரு)

சரணங்கள்.

எங்கேபோய்பணந் தேடுவேன்
எவரைப்போய் நயம்பாடுவேன்
மங்கையாள்சந்திர மதிதனைவித்து
மாமுனி கடன்தருவேனே (பொரு)

புவனிகாவலர் போற்றவும்
புவியிலுள்ளோர்கள் வாழ்த்தவும்
அவனியாண்டதை முனிவர்க்கீய்ந்ததும்
ஆசுகாடுவிட்டகன்று நிற்பதும் (பொரு)

அந்திநேரமு மாச்சுதே
அதிகவளங்களும் போச்சுதே
நந்திவாகனை மீதிலேறிய
நாதனைக்கயிலாச வாசனே (பொரு)

சந்திரமதி-விருத்தம்.

மன்னவா ராஜகோவே மனவிசா ரிங்கிருக்க
தன்னுட நெஞ்சந்தன்னிற் சஞ்சலப்படவும் வேண்டாம்
கன்னியா ளென்னைவித்துக் காதவமறையோருக்குப்
பொன்னையுங் கொடுத்தனுப்பும் பூபாலா யெந்தன்சாமி.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

எவிந்தத்துயரமையா என்மன்னவா சாமிதுரை
ஏனிந்தத் துயரமையா

அநுபல்லவி.

பானுகுலத்துதித்த பாரமுழுவதும்உன்னை
பார்த்திபர்வணங்கும் அயோத்திக்கரசேசாமி (எனி)

சரணங்கள்.

சொந்தமனைவி யில்லையோ உமக்குலம
    மைந்தனுமில்லையோ
இந்நகரிலெங்க ளிருபேர்களையும்விற்று
    அந்த முனிகடனை யிந்தக்கணமேதீரும் (எனி)
வையகம் நமக்கில்லையே கொடுத்துதவி
    செய்ய மனிதரில்லையே
கையில்வெண்ணெயிருக்க நெய்தனக்கலைவாரோ
    காலைச்சுற்றியபாம்பு கடித்திடாமல்விடுமோ (எனி)
காசியிற் சென்றவுடனே நாகருக்குக்
    காசுகொடுப்போமென்றோமே
பேசினசொற்படிக்குக் கோசிகமுனிதனத்தை
    நேசமாய்க்கொடுத்திட்டால் வாசவனை இப்போ (எனி)

சந்திரமதி-விருத்தம்.

வாழ்வது மெய்யேயாகும் வையகந் தனிற்பிறந்தோர்
ஊழ்வினை தொலைக்கவேணும் உறுதியாய்மகனுடன்னைத்
தாழ்வா விலையாய்விற்றுத் தாகர்க்குப் பொன்னையீய்ந்து
கேழ்வியில் மிகுந்தசத்திய கீர்த்தியோ டிருந்தாளுவீர்.

ஷை வசனம்.

அதோ வாருங்களையா சுவாமி வாழ்வுந்தாழ்வுமொருபெரிதல்ல வே ஆகிலும் அடியாளையும்மகனையும் வித்துக்கடனைத்தீருங்களையா சுவாமி.

இராகம்-சுராஷ்டிர தாளசாப்பு.

பல்லவி.

அய்யோபெண்ணே சந்திரமதியே யுனைநான்விற்க
அயனும்விதித்தவிதியோ ஐயையோபெண்ணே
அயனும் விதித்தவிதியோ

அநுபல்லவி.

மையலாகியபெண்ணே தையலேயுனைவிரும்
நொய்யவயிறுபத்துதே என்பெண்ணேகண்ணே
நொய்யவயிறுபத்துதே

சரணங்கள்.

சாலுங்காகம்வைத்து சிலமணமிசைந்து
வாலவயதிலுன்னையே யென்பெண்ணேகண்ணே
தாலிகட்டினே னுன்னையே
தாலிகட்டிமணக் கோலமிட்டேனேயோ
சாலுபேரும் நகைக்கவே யென்பெண்ணேகண்ணே
தாலிகட்டினே னுன்னையே

சந்திரமதி விருத்தம்.

ஆணைப்போ லுயர்ந்ததோளா லாண்டுநீர் வருந்துந்துக்கங்
காணப்போ மிவர்போல்நெஞ்சங் கருங்கல்லாயிருப்பவர்க்கே
கருணிப்பெண்ணிருக்கப்பொருந் கணவராயிருப்பாருண்டோ
நாணிச் சஞ்சலப்படாமல் காப்பேனை விற்பாய்சாமி.

இராகம்-சங்கராபரணம்-திரிபுடை-தாளம்.

பல்லவி.

மன்னுநீர்மனம்நொந்து வாடகாண்சகிப்பேனோ (மன்)

அநுபல்லவி.

பொன்னாநகரையோத்தியாளும் பூபாலசத்தியகீர்த்தி (மன்)

சரணங்கள்.

கதிர்குலத்தரசனே கவலைப்பட்டிடவேண்டாம்
விதியால்வந்ததுன்பமி விதனைப்பட்டாலொழிதல்லை (மன்)
கண்ணேநீகாட்டதனிற் சொன்னமொழிதவறுத
மன்னுநீயென்னைவித்து மாமுனிகடனைத்தீரும் (மன்)
பெண்பிள்ளையிருக்க நின்முகமயக்கலாமோ
மண்டலம்புகழ்விசுவா மித்திரர்கடனுக்காக (மன்)
காசிநகர்தனிலே நீயென்னைவிலைசெய்து
கோசிகமுனிக்குச்செய்நேரான் தொகைக்கடனைத்தீரும் ()

அரிச்சந்திரன்-விருத்தம்.

கணணின் மணியேயின்பக் கரும்பெனு மதுரமானே
பெண்களில் மிகுந்தகற்பின் பெருந்தவப் பயனேகேளாய்
எண்ணுமென் கருத்துக்கேற்ற வெண்ணம்நீ கொண்டாய்மெய்யே
வண்ணமாய் உன்னைவித்து வாழ்வேனோ மனந்துணிந்தே.

இராகம்-எதுகுலகாம்போதி-சாப்புத்தாளம்,

பல்லவி.

அன்னமேயுனை விலையேசெய்ய
ஐயையோ மனதில்லையேபெண்ணே (அன்)

அநுபல்லவி.

கன்னலானமொழி மின்னேயுனைவித்தால்
காசியில்வாழு மனிதர்நகைப்பாரே (அன்)

சரணங்கள்.

மாதரசே யிளமயிலே யடி
மங்கையே கருங்குயிலே பெண்ணே
வேதன்விதித்திட்ட செயலோ இந்த
வேதனைக்கிச்செம்பொன்னில்லையென்கையினில் (அன்)

வாலவயதாமிரண்டு இரு
மாதனமோ மலர்ச்செண்டு
கோலவிழி நுதல்த்துண்டு உன்னை
கூசாமல்விலை கூறிக்கொண்டு (அன்)

காசிநகர் விஸ்வேசா எந்தன்
கன்னியைவிற்கவோ யீசா
மாசில்லாதசந்திர மதிதனைவித்து
மாமுனிகடன் தீர்க்கவே (அன்)

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாரும்பெண்ணே சந்திரமதி இந்தக்காசிப்பட்டணத்தில் நானென்னமாய் உன்னைவிற்பேன் பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி-வசனம்.

அகோவாரும் என்பிராணநாதா இவ்வளவுவருத்தப்படவேண்டியதுதானென்ன முன்பின்யோசியாதபடிக்கு என்னைவித்து இந்தக் கடனைத்தீரும் என்பிராணநாதா.

சந்திரமதியைவிற்கிற

பாகம்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

எத்தனை விற்பீரென்று இயம்பியமாதேகேளாய்
வந்திடுங் கடனுக்காக மனைவியைவிற்றுனுந்தான்
தந்தைதா யேபிடாரோ தாரணிநகைத்திடாதோ
இந்தமா வினைக்கென்செய்வேன் ஈசனே ரக்ஷிப்பாயே.

இராகம்-முகாரி-அடதாளம்.

பல்லவி.

உன்னைவிற்கமனது எனக்கென்னமாய்க்கூடும்பெண்ணே

அநுபல்லவி.

அன்னநடையாளே கன்னல்ரசமானே
உன்னிதமானதோர் வர்ணக்குயில்மானே (உன்)

சரணங்கள்.

காசிநகரம்வந்தோம் விஸ்வேசர்பாதம்பணிந்தோம்
கஞ்சமலர்மேனி நொந்துமிகவாட
என்சொல்மறவாக வஞ்சிக்கொடிமானே (உன்)
வேதன்விதிப்படியோ விஸ்வநாதர்தன்சொற்படியோ
வேதன்விதியாலே நேசமறவாதே
ஆசைக்குயில்மானே நேசத்துடனிப்போ (உன்)

அரிச்சந்திரன்-விருத்தம்.

எப்படி விற்பேனென்று ஏங்கியே ராஜன்றானும்
கற்புள மாதுதன்னைக் கைதனிற் பிடித்துக்கொண்டு
செப்பிய வீதிதோறுந் திரிந்துமே விலைகள்கூறி
ஒப்பியே கொள்வாரிங்கே ஒருவரு மிலையோ அய்யா.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மனைவியைவிற்கமனது தானணிந்தேன்
வாங்கவாருமே முனிவருமைமதீருமே (மனை)

சந்திரமதிவிலையாகிறபாகம்,

காலகண்டி. காலகண்டையா. நட்க்ஷத்திரன். இராஜன்விலைகூறல். சத்தியகீர்த்தி.

அநுபல்லவி.

கனவிலுமெந்த னிணைவிலும்பிரியாக்
கார்குழலாள்சந்திர மதியாளென்பவள் (மனை)

சரணங்கள்.

அன்னம்போலே யெந்தன்தேவி
அருகேநிற்கவுமனைத் துணிந்தேன்விற்கவும் (மனை)

செந்நெல்விளையுங் காசியில்விலே
செய்திடானவந்தேன் ஐயமில்லாமலே (மனை)

குயில்கள்போலேயெந்தன் தேவிகூடநிற்கவும்
எந்தன்மயிலே விற்கவும் (மனை)

அரிச்சந்திரன்-வசனம்.

அகோவாரும் பெண்ணே சந்திரமதி இந்தக் காசிப்பட்டணம் வட்டாரிசந்தெரு முழுவதும் விலைகூறியும் ஒருவராவதுவந்து விலை கேட்கக்காணோம் இனியென்னசெய்கிறது பெண்ணேசந்திரமதி.

சந்திரமதி-வசனம்.

என்னாசைமன்னா இந்தத்தெருவில் விலைகேளாவிட்டால் இன்னொருதெருவிலாவது விலைகூறுங்களையா சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்.

விதிவசந் தன்னாலிப்போ வேதியர் கடனுக்காக
கெதியில்லாப் பாவியாகிக் கிளிமொழி யாளைநாமும்
நிதிதனைக் கொடுத்தபேர்க்கு கிரய மாகச்சந்திர
மதிதனை விற்கவந்தேன் வாங்குவா ராருமுண்டோ

இராகம்-இந்துஸ்தான்காபி. ஆதிதாளம்.

கண்ணிகள்.

விற்கவந்தேன்தேவிதன்னை விலைகூறினேன்கொள்வாருண்டோ
அக்கம்பக்கமுள்ளவர்க ளார்கேட்டாலும் விற்றிடுவேன் (வி)

அஞ்சியோடுஞ்சிதமானகொஞ்சுங் கிளியாளையிப்போ
நெஞ்சிரக்கமுள்ளபேர்கள்சேரிமையக்கொள்வாருண்டோ (வே)

காஞ்சிபராஜன்குமாரன் கௌசிகர்கடனுக்காக
வாஞ்சையுள்ளசந்திரமதிமானையீங்குவிற்கவந்தேன் (மானை)

பருவவயதினிற்கொண்ட பைங்கிளியைதானுமிப்போ
தாகனுர்ழ்வதனையால் தையலரைவிற்கவந்தேன் (தை)

அந்தமுனிவர்சூதா லரசும்பதியிழந்து
இந்தநகர்தன்னிலேதான் யேந்திழையைவிற்கவந்தேன். (யே)

அரிச்சந்திரன்-வசனம்.

அஹோவாரும் பெண்ணே சந்திரமதி இந்தக்கீழ் பாரிசமுள்ள தெருமுற்றிலும் விலைகூறியும் ஒருவராவதுவந்து விலைகேட்கக்காணோம் இதுகடவுள்செயல்தானோ பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி-வசனம்.

தாங்களிந்தக்காசிப்பட்டணம் நாலுபாரிசத்தெருவிலும்சுத்தி விலைகூறினால் யாராவது ஒருவர் வாங்குவாரையா சுவாமி

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியேபோய் விலைகூறுகிறேன் பெண்ணேசந்திரமதி,

ஷை-விருத்தம்.

இந்தநற் காசிதன்னி லிருக்கின்ற பாக்கியவான்கள்
சந்தோஷ மாகத்தானென் றையலை வாங்கிக்கொண்டு
எந்தநற் புனிதராலு மிவர்கடன் கொடுத்தாலிப்போ
சுந்தா மர்தோடொத்த சுதனையுந்திறையுஞ்செய்வேன்.

இராகம்-ஆனந்தபைரவி, தாளம்-ஆதி.

பல்லவி.

என்றேவியாளை விற்கிறேன் இந்தவேளையில்
வந்தாகிலுங் கொள்வீரே (என்)

அநுபல்லவி.

ந்தாமருமலர்க் குகந்தாகமல
ந்தா அலர்ந்திருந்த செந்தாமரைகள்போலே (என்)

சரணங்கள்.

விண்டு குழல்கள்மதித் தண்டு நுதலில்விழி ரெண்டு புருவவிழி
வண்டு மொழிசினிகற்கண்டு இதள்பவளத் துண்டுமுலை மல்லிகைச்
செண்டு அடைகள் வாழைத் தண்டு உடையபெண்டு (என்)

வாலைப் பருவமக சீலை யிவள்செய்திடும் வேலையிணங்குமனு
கூலை புகழுமறை நூலைமதிக்குமிடைச் சேலை உடையினுளே (என்)

சாஸ்திரம் அறிந்திடுநற்பாத்திரம் எனக்கிசைந்தகோத்திரம்
செண்பகவாசற் காத்திரம் தனு அனுசப்பாத்திரம்
வின்னிருகண்ணேத்திரம் மானபாத்திரம் (என்)

அரிச்சந்திரன்-வசனம்.

அகோவாரும்பெண்ணே சந்திரமதி தென்திசையிலும்விலை கூறியாயிற்று இனிமேல் மேல்திசைதான்பாக்கியாயிருக்கிறது ஆனால் அங்கேயானதும்போய் விலைகூறுவோமா பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி-வசனம்.

அப்படியே போய்விலைகூறுங்களையா சுவாமி.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

வீதிவீதிகள்தோறும் விலைகூறினேனையனே (வீதி)

அநுபல்லவி.

வினையிருலெந்தன் மனைவியிவள்தனை
விலைகளிடுபவ ரில்லையோ அய்யோ (வீதி)

சரணங்கள்.

ஆனைபரி ரதங்களும் புஷியரகும்
அடங்கலும் மனந்துணிந்து
மாநகரோரறிய மாமுனிக்கீய்ந்து
மங்கையாள்சந்திர மதிதனைவித்திட (வீதி)

வையகத்தோர்கள் நகைக்கராச்சியம்விட்டு
வந்தேன் மனதுதிகைக்க
மாடமாளிகை கூடகோபுரம்போய்
பேடைமயிலாளும் கூடவேஅய்யோ (வீதி)

...ணிகர்குலதிலகமோ ஊரிலுள்ளோரே
மதிதனைவிலை கொள்வீரோ
மாதுதனையுமே பேதமில்லாமல்
வனிதைதனையிப்போ வாங்குவாருண்டோ (வீதி)

அரிச்சந்திரன் வசனம்.

இந்த வூரிலுள்ளோர்கள் யாராவது என்னுடையதேவியைவிலைக்குவாங்குவாரில்லையோ காசிவிஸ்வநாதா.

இராகம்-இந்துஸ்தானி.காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

செந்திருவை நிகரான தேன்மொழியைவிற்கவந்தேன்
பங்கயனை யாலேயெந்தன் பைங்கிளியைவிற்கவந்தேன்
வாங்கமன துள்ளவர்கள் வந்துகேட்க வேணுமிப்போ
தாங்களில்லை யென்மனது வாங்கமன துள்ளவர்க்கு
சொல்லும்விலை யானையின்மேல் வல்லவர்க ளேறிரத்தினக்
கல்லெறியக் கூடுந்துகை நல்லசெம்பொன் னீய்பவர்க்கு
பாவையை விலைசெய்வேன் காவல னரிச்சந்திரன்
நாவுதடு மாறேனேயான் தேவையான பேரேகேளும்.

அரிச்சந்திரன்-வசனம்.

அகோவாரும் பெண்ணே சந்திரமதி இந்தக் காசிப்பட்டணம் நாலுதெருவிலும்சுத்தி விலைகூறிவந்ததில் யாதாமொருவராவது வந்து விலையென்னவென்று கேட்கவில்லை ஆகிலும் இதுகடவுளுடையசெயல்தான் பெண்ணே சந்திரமதி.

நட்சேத்திரத்ரகர்-வசனம்,

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரா இதோபெண்டை வித்துத்தருகிறேனென்று சொல்லிக்காலதாமசஞ் செய்துக்கொண்டுவந்தால் எனக்குக்கெடுவுதவறுகிறது பிள்ளாயரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-வசனம்.

அகோவாருங்களையா சுவாமி இன்னேரம்வரையிலும் விலைகூறிக்கொண்டுவந்தேன், ஒருவராவதுவந்து விலையென்னவென்றுகூ—

க்கேட்கவில்லை இன்னமும்யாராவது வந்துவிலைகேட்டால் விற்றுப் போட்டுத்தருகிறேனையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர் வசனம்

யாராவதுவிலைகேட்டாலும் விற்றுப்போடுவீரா அதிலுந் தாரதம்மியமாக இன்றைருக்குத்தான் விற்கவேணும் இன்றைருக்கு விற்கக்கூடாதென்பது உண்டா அதுவிபரஞ்சொல்லும்பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படிக்கெல்லாம் பார்க்கிறதில்லை விலைகேட்கக்கூடியவர்களுக்குக் கிறையஞ்செய்து போடுகிறேனையா சுவாமி.

பொது-வசனம்.

இப்படியாக அரிச்சந்திரன் தேவிகையைப்பிடித்துக்கொண்டு நாலுதெருவிலும் விலைகூறினதில்ஒருவராவதுவில்லைகொளாதபடிக்கு விஸ்வாமித்திரரேவலால் அக்கினிபகவான் காலகண்டையர்வேடம் பூண்டுகொண்டுவந்து கிறையத்துக்கு வாங்குகிறவிதங்காண்க.

காலகண்ட அய்யர் விருத்தம்.

பெண்டிதை விற்பேனென்று பேசிய வேளைதன்னில்
எண்டிசைவிஸ்வாமித்திர னேவலால்வேஷமாறி
அண்டர்கள் முனிவர்போற்றும் அக்கினிபகவான் கால
கண்டன்போல்வேடங்கொண்டு களறியிற் றோன்றினனே.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தானே காலகண்டனுஞ் சபைதனிலே
வந்தானே காலகண்டனும் (வந்)

அநுபல்லவி.

வந்தானே காலகண்டன் சந்தோஷமாகவேதான்
சுந்தரப்பெண்ணணங்கை. விக்ரையாய்க்கொள்வேனென்று (வந்)

சரணங்கள்.

நாரைகொக்கினம்போலே நரைதத்தமுகமுங்காட்டி
பூரியான் தன்னுடனே வீரியம்பேசிக்கொண்டு (வந்)

காலகண்டியைக்கூட்டி கறுத்தவிழியுருட்டி
கோலாகலமாகவே குலாவியுலாவிக்கொண்டு(வர்)

இராகம்-அபுரூபம்-தாளம்-ஆதி.

பல்லவி.

ராமஜெயம் ஸ்ரீராமஜெயம் ராமா ராகவா ராமஜெயம்

அநுபல்லவி.

ராமாராகவா ராமஜெயம் நாதாகோவிந்தா ராமஜெயம்

சரணங்கள்.

கோலாகலமாய் ஸ்தானஞ்செய்துநல்ல
குளிர்ந்தசந்தனம் பூசிக்கொண்டு
காலையூணி நடந்துகொண்டொரு
காலகண்டருந் தோன்றினர் (ராம)

...யும் பீளைக்கண்ணும்ரெம்ப
நரைத்ததாடியும் வெளுத்தமுகமும்
சிறிச்சிறிக் காலகண்டரும்
சிங்காரமாகவே தோன்றினர் (ராம)

குஞ்சம்போலவே நரைத்ததாடியும்
குருட்டுக்கண்ணும் கோழுமாகப்
பஞ்சாங்கமுங் கையிற்கொண்டு
பாப்பினிஅய்யருந் தோன்றினர் (ராம)

காலகண்டன் விருத்தம்.

பாரியை விற்பேனென்று பகர்ந்தவ னாடாவுன்
பேரென்ன வூர்தானென்ன பெண்டீரை விற்பேனென்ற
காரிய மேதடாநீ கடன்படுவானே யிப்போ
சாரியாய் விபரமெல்லாந் தான்சொலும் ராஜமன்னா.

வசனம்.

நீயாருவோய் ராஜனாகக் காணப்படுகிறது நீரெந்தவூர்நீரெதற்
காக உன்மனைவிமக்களை விற்பானேன் அது விபரஞ்சொல்லும்பிள்
ளாய் ராஜாவே.

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாருங்களையா சுவாமி நான் அயோத்தியாபுரியையாண்ட அரிச்சந்திரனென்பேர் இவள்யென்மனைவி, இவன் யென்னுடையபாலகன் இதோநிற்கிறவன் சத்தியகீர்த்தி என்னுடையமந்திரி இதோநிற்கிறவர் நட்சேத்திரத்தாரகர் என்னுடையமனைவியை யேன்விற்கிறேனென்றால் விஸ்வாமித்திர சுவாமிகளுக்குக்கொஞ்சத்திரவியந் தரவேண்டியதிருக்கிறது அதற்காகவிற்கிறேனையா சுவாமி.

காலகண்டன் வசனம்.

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரா யாராவது கடன்பட்டவர்கள் பெண்சாதியைப் பிள்ளையை விற்பாருண்டாபெயிருனில்லையென்று சொன்னால் யென்னகுறை வந்திடும் பிள்ளா யரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

பத்தினி தன்னைக்கொள்ளப் பணமுனக் கில்லாவிட்டால
எத்திசை யோரறிய இப்படிச் சொல்லலாமோ
சத்தியந் தவறுவேனோ சதுர்மறைப் பொருளேஐயா
புத்திகேட் பவருக்கிந்தப் போதனை போதித்தீரே.

இராகம்-லாவணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயரேயிந்தயோசனைகளேது உமக்கேது நீர்
அகத்தியமாகவிந்தச் சேதிசொல்லப்போகாது
சொல்லக்கூடாதென்றுயென்னைக் கோபித்தாய்மன்னுபண
மில்லைபோவென்றால் யென்னசெய்குவாரின்னாள்
செய்குவதொன்றுமில்லை செப்புமொழிகள்தப்பலாமோசாமி
சிவசிவாயிந்தச்சேதி காதில்விழலாமோ
ஆமென்றுனதுமனைவிதனை விலைசொல்மன்னாராஜமன்னா
அதற்குப்பொன்கொடுத்து அனுப்பிவிக்கிறேனின்னாள்.

காலகண்டன்-வசனம்.

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரா நீரேன் வருத்தப்படுதீர் கிறையம் இவ்வளவென்று சொன்னால் கொடுத்து வாங்கிக்கொள்ளுகிறேன் விலைசொல்லும் பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

வட்டமாம் பாறைமீதில் மதயானை தனைநிறுத்தி
திட்டமாய் ஆள்தானேறித் திறமுடன் கவணெறிந்தால்
எட்டியெவ் வளவுதூரம் யெகுமோ அந்தப்பொன்னைக்
கொட்டியாய்க் கொடுத்தீரானால்கிறையம்நான்செய்வேன்சாமி

ரிஷி வசனம்.

கேளுங்களையாசுவாமி வட்டப்பாறையின்மேல் மதயானையை நிறுத்தி அதின்பேரில் ஆங்காரமுள்ள புருடனேறி அவன் கையில் வெள்ளிக்கவண்கொடுத்து அதில் மாணிக்கக்கல் வைத்து சுழட்டி எறிந்தால் அது எவ்வவள்வு உயரம்போகுமோ அவ்வளவு உயரம் பொன்கொடுத்தால் கிறையஞ்செய்கிறேனையா சுவாமி.

காலகண்டன்-விருத்தம்.

ஆதிலட்சுமியைப்போலே அரிவையை யான்கொண்டாலும்
தீதுபூ சனிக்காய்முத்து சிறந்தமூக் குத்திக்காமோ
மாதையான் விலைகொண்டாலும் மனம்போலேவேலைதன்னை
ஏதுவாய்ச் செய்யமாட்டாள் எனக்கிவள் தொழிற்காகாதே.

ரிஷி வசனம்.

இவளைப்பார்த்தால் ஆதிலட்சுமியைப்போ லிருக்கிறாள் இவளாவது என்வீட்டுவேலை செய்கிறதாவது பிள்ளாயரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

வேண்டிய வேலைசெய்வாள் விதம்விதம் பூத்தொடுப்பாள்
ஆண்டிடும் பிராமணிக்கு அடப்பமுங் கட்டிவைப்பாள்
தாண்டியெவ் விடமும்போகாள் சத்தியந்தவறி ஒன்றைத்
தீண்டவு மாட்டாளெந்தன் தேவியு மையாசுவாமி.

காலகண்டன்-விருத்தம்.

இப்படி வேலைசெய்யு மிவளைநீ விற்கவந்தாய்
மைப்படுங் கண்ணாள்சந்திர மதியுமென் மனம்போலேதான்
செப்பிய வேலையெல்லாம் செய்யும்வல் லாளேயாகில்
ஒப்பியேகொள்வேனென்று உரைத்திட்டான்மறையோன்றானே.

ஷி வசனம்.

என்மனம்போலே வேலைசெய்கிறவளானால்நான் வாங்கிக்கொள்வேன் பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாருங்களையா சுவாமி தாங்கள்சொல்லுகிறதைப் பார்த்தால் ரெம்பவும் பயமாயிருக்கிறது தாங்களுக்கு என்னென்ன வேலைகள் செய்யவேணும் அதுவிபரந் தெரியச்சொல்ல வேணுமையாசுவாமி.

காலகண்டன்-வசனம்.

அகோகேளும்பிள்ளாய் அரிச்சந்திரா உதயத்திலெழுந்திருந்து எழுபதுகூடை சாணந்தட்டவேணும் நூறுகுடந் தண்ணீரெடுக்கவேணும், பதிங்கலநெல் குத்தவேணும், வீட்டிலுண்டான வேலையெல்லாஞ் செய்யவேணும் பிள்ளா யரிச்சந்திரா.

பொது-விருத்தம்.

மணமிசை யாதவார்த்லை மறையவன் கூறக்கேட்டு
முனையழிந்தாசனிற்க முன்வந்துமாதுசொல்வாள்
வினவியவேலைசெய்வேன் வேதியரிடத்திற்பொன்னை
தனதுடன் வாங்கியிந்தத் தரகனையனுப்புஞ்சாமி.

சந்திரமதி-வசனம்.

அகோ யென்பிராணநாதாதேவரீர்யோசிக்கவேண்டாம் மறையவர் என்னவேலைசொன்னாலுஞ் செய்கிறேனையா சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்.

அகோ கேளுங்களையா சுவாமி தங்கள் மனம்போலே வேலையெல்லாஞ் செய்துவாளையா சுவாமி.

காலகண்டன்-வசனம்.

அடி ஆத்துக்காரி சந்திரமதி சொல்கிறதும் அரிச்சந்திரன் சொல்கிறதுங் கேட்டாயோடி வீட்டிலுள்ள வேலையெல்லாஞ் சரிவரச் செய்கிறதாகச் சொல்லுகிறார்களே செய்குவாளா சொல்லடி ஆத்துக்காரி.

காலகண்டிவசனம்.

என்காணும் ஆத்துக்காரரே இவளாவது வேலைசெய்கிறதாவது என்காணும் பணத்தை விணிற்கொண்டுபோய்க் கொடுக்கப் போகிறீர் ஆத்துக்காரரே.

காலகண்டன் வசனம்.

அடிபோடி நேக்குத்தெரியாது அவள்வேலையெல்லாஞ் செய்கிறேனென்று சொல்லுகிறாள். இப்போதுஎன்னாடி மோசம்போனது பார்ப்போமடி ஆத்துக்காரி.

ஷை வசனம்.

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரா வேலையெல்லாஞ் செய்குவாளானால் விலைமுறி யெழுதிக்கொடும் பிள்ளாய் அரிச்சந்திரா.

விலைமுறியெழுதுகிற அகவல்.

செந்திருவிளங்குஞ் சந்திரகுலத்தில்
திர்க்கமாயுதித்த திருச்சங்குமைந்தன்
அயோத்திதன்னை யாண்டிடுமிந்திரன்
சத்தியவாக்கரிச் சந்திரன்முனியால்
பட்டகடனுக்கு யென் பாரியாள்தனை யும்
காசியில்வாழுங் காலகண்டனுக்கு
நேசித்தெழுதிய நேரிலைமுறிதான்
ஆனைமேலேறும் அங்குசபுருடன்
எறிந்தவயிரம் எவ்வளவுதனமோ
அவ்வளவுதனமும் அடவுடனாளும்
வாங்கினான்கொண்டேன் வந்திடுந்தனத்தை
இந்தநல்முறியை யெழுதினேஞ்சாட்சி
ஆகாயவாணி அம்மாள்சாட்சி
ஐங்கரன்தொந்தி அப்பனேசாட்சி
கோலமயிலேறுங் குமரனேசாட்சி
இந்தப்படிக்கு யெழுதினேன்நானும்
சுகஸ்தலிகிதம் சுந்தரஅரிச்சந்திரன்
தந்திவேல்முருகன் தாள்துணையாமே.

அரிச்சந்திரன் வசனம்.

இந்தாருமையா முறிச்சீட்டு பந்தோபஸ்தாகவைத்துக்கொள் ளுங்களையா சுவாமி, திரவியத்தை நட்சேத்திரத் தரகர்வசங் கொடுத்திடுங்களையா சுவாமி.

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாருங்கள் நட்சத்திரப்தவானேகாலகண்டய்யரிடத்தில் திரவியத்தைவாங்கிக் கொள்ளுங்களையா சுவாமி.

நட்சேத்திரத்தரகர் வசனம்.

அப்படியே வாங்கிக்கொண்டேன் பிள்ளா யரிச்சந்திரா.

காலகண்டன் வசனம்.

உன் பெண்சாதியையும் பிள்ளையையும் அனுப்பும்பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே அனுப்புகிறேனையா சுவாமி.

காலகண்டன் வசனம்.

அடிசந்தி ஆத்துக்குப்போகவேணும் சிக்கிரம்வாடி சந்தி

சந்திரமதி-விருத்தம்.

கூடிவாழ் கணவனையோ கூடிடாதென்னைநாவால்
போடிநீ வாடியென்று புகலவுங் காணேனையோ
நாடிநீ யோடிவாடி நட்வடி வழிகள்கூடி
வாடிநீ அடியேயென்று மறையவன் கூறலாச்சே.

இராகம்-எதுகுலகாம்போதி, திரிபுடை தாளம்.

பல்லவி.

கொண்டகணவன்றனும் பெண்டுடன்பிள்ளையைவிற்கக்
கொடுமையோ காலந்தானோ மன்னவரேதுரையே

அநுபல்லவி.

பண்டுநாம்செய்ததொரு பாவமோமமக்கிந்தப்
பாடுவிளைந்ததையோ மன்னவரோதுரையே

சரணங்கள்.

இன்றுகண்ட திருமுகத்தை என்றுநான் காணப்போறேன்
இந்தவிதிக் கென்னசெய்வேன் மன்னவரே துரையே

என்றும் பிரியேனென்று இருந்தேன் விதிவசத்தால்
இன்று பிரியலாச்சே மன்னவரே துரையே

ஆரும்படாதகடன் அருங்கடன் பட்டமோதான்
ஐயோநானென்னசெய்வேன் மன்னவரே துரையே

வாடியென் றழைக்கிறான் மகனும்யானுமயங்க
வந்ததோ காலந்தானும் மன்னவரே துரையே

தேடிவந்துமாலையிட்டு சேர்ந்துவாழ்ந்திருந்ததெல்லாந்
தீர்ந்ததோ சொற்பனம்போலே மன்னவரே துரையே

காலகண்டன்-வசனம்.

அடிவாடி வெள்ளாட்டி ரொம்பவுஞ்சிணுங்காதே உங்கள் பாட்டனுக்குப் பொன்வாங்கிக் கொடுக்கமட்டுந் தெரிந்ததோடி சக்தி.

சந்திரமதி-விருத்தம்.

வெள்ளாட்டி யென்றுசொல்லி வேதியரிழுக்கும்போது
மெள்ளவே சந்திரமாது மேனியும் புண்ணாய்நொந்து
உள்ளமு முருகிவாடி உத்தமி மகனுந்தானும்
வள்ளலே சிவனேயென்று வாய்திறந் தழுகலுற்றாள்.

இராகம்-பந்துவராளி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

எள்ளளவாகிலும் உதாசினங்கேட்டறியேனே இப்போ
வெள்ளாட்டியென்றென்னை வேதியர்பேசவுமாச்சே

கொண்டகணவன்றானுந் தெண்டனைசெய்தறியாரோ கால
கண்டரும்வாவென்று கைப்பிடித்திழுக்கவுமாச்சே

கையைப்பிடித்தகணவர் சினந்தறியாரோ எந்தன்
மெய்யானமேனியும் புண்ணாகநொந்திடலாச்சே

என்னசெய்வேனோ எதுசெய்வேனோநான் தெய்வமே எனக்
கிந்தவிதிவருமென்று அறியேனே தெய்வமே

இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

என்னசெய்வேன் என்னசெய்வேன்
இந்தநாளிலே என்சாமி என்னசெய்குவேன்
எந்தன்மன்னவா உங்களைப்பிரிந்திந்தநாளிலே
என்சாமி என்னசெய்குவேன்
கோசிகன்செய்த மோசந்தன்னை
பேசியாவதென்னசாமி என்னசெய்குவேன்
மெய்யினுலென்னை ஐயரிடத்தில்
கையவிடுத்தீரோஎன்சாமி என்னசெய்குவேன்

சந்திரமதி-விருத்தம்.

கன்னிமார் கவரிவீசக் காசினிராஜராஜர்
மன்னவர் கப்பங்கட்ட வாழ்ந்தர சாண்டோமெத்த
முன்னமே செய்தபாவ முறைமையோ விஸ்வாமித்திரன்
பண்ணினமாய்கையாலென் பத்தாவைப்பிரியலானேன்.

இராகம் கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

இராஜனே வுமைப் பிரிந்திடவசமோ என்
சரசவுல்லாசமக ராஜனேவுமைப்பிரிந்திடவசமோ (ராஜ)

அநுபல்லவி.

ராஜாதி ராஜனே ரவிகுலதீரனே
தேசாதி தேசனே திருச்சங்குமைந்தனே (ராஜ)

சரணங்கள்.

கண்ணேசிகாடதனிற் பொன்னமொழிதவருத மன்னுராஜமன்னு
கன்னிமனதெப்படியோ மன்னன்மனதெப்படியோ (ராஜ)

முனிவர்செய் வஞ்சனைக்கி சொற்றவராமற்காக்க
முக்கியமுடனேநானும் ஐக்கியமானதாரை (ராஜ)

பருவவயதில்நாமள் பரமசுகத்திருந்தோம்
பொறுமைபொறுக்காமலே பரமன்விதித்திட்டானே (ராஜ)

அரிச்சந்திரன்-விருத்தம்.

மாந்துளி ரனையமேனி மனைவியே யுந்தனுசை
தீர்ந்துதோ யினிமேலெந்த ஜென்மத்தி லுனைக்காண்பேனே
கார்ந்துதே தேகமெல்லாங் கர்த்தனென் றுள்ளம்வாடி
வேந்தனுந் துயரமாகி மேல்விழுந் தழுகலுற்றான்.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதரசேயுன்னை மருவியணைந்தசுகம்
மனதில்நினைந்துருகி வாடுறேனடிபெண்ணே

அநுபல்லவி.

காதலியேயுன்னைக் கலந்துஅணைந்தசுகங்
கருத்தில் நினைந்துருகிக் கலங்குறேனடிகண்ணே (மா)

சரணங்கள்.

ஆதியிலேயிவளை யழித்தேனேயானால்
அருமையான்பெண்ணே திருமணஞ்செய்வேனே (மா)

பெண்ணரசேமதியே யுன்னைவிட்டுநான்பிரிய
பிழையதுசெய்தானோ பிர்மாவும்பெண்ணே (மா)

மருவுமலருஞ்சூடி மகிழ்ந்திருந்தோமேபெண்ணே
மனதிலதைநினைத்து வருத்தமடைகுறேனே (மா)

சந்திரமதி-விருத்தம்.

பஞ்சணை மீதிற்பாதம் பட்டிட நோகுமென்றே
அஞ்சலி கரத்தாலேந்தி யருமையாய் மடிமேல்வைத்த
தஞ்சமு மறந்துபிள்ளை தன்னையு மறந்தீரும்
பஞ்சையா னீரோநாங்கள் பாவத்தால் விலைபட்டோமோ.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆசைமன்னவா நானென்னசெய்குவேன் கண்ணாளா (ஆ)

அநுபல்லவி.

ஆசைக்கிசைந்த என்பிராணநாயகா
ஈசனருளாலே இவ்வேஷமாகினோம் (ஆ)

சரணங்கள்.

பக்கம்வருவீரோ நெஞ்சம்
பார்த்துத்தேர்வனோ கண்ணுளா (பக்கம்)
திக்கினில் யாவருஞ் சின்னங்கள்பேசிடத்
தக்குமோபெண்டீர் பிள்ளைவைவித்திட (ஆ)

நெஞ்சந்தேறுமோ உந்த
னினைவுமாறுமோ கண்ணுளா (நெ)
கொஞ்சிமருவி யிருந்தோமோமும்
பஞ்சமாபாதகன் வஞ்சகஞ்செய்தானே (ஆ)

பாவியானேனே கொடும்
பதர்போலானேனே கண்ணுளா (பா)
மேவிய ஆசையை மெல்லியாள்தான்விட்டுக்
கூவியே போகிறேன் கொற்றவா நானுமே (ஆ)

காலகண்டன்-வசனம்.

அடிச்சந்தி என்னோம்வரையிலும் புருஷனிடத்தில் சொல்லிக்கொள்ளுகிறது சிக்கிரம்வாடி சந்தி.

காலகண்டி-வசனம்.

ஏங்காணும் ஆத்துக்காரரே சந்திரமதி வருகிறாளோ இல்லையோ நீகட்டையிலேபோக வாங்கவாணுமென்றால் கேட்கிறீரா.

காலகண்டன் வசனம்.

நாமென்னசெய்கிறதடி ஆத்துக்காரி சந்திவருகிறேன் வருகிறேனென்று சொல்லுகிறாளடி ஆத்துக்காரி.

சந்திரமதி-வசனம்.

காலகண்டபகவானே என்னிடகணவனிடத்தில்சொல்லிக்கொண்டு வருகிறேனையா சுவாமி.

சந்திரமதி-விருத்தம்.

செப்பாருங் குவிமுலையாரெல்லோருங் கணவனுடன் சேர்ந்துவாழ
ஒப்பாருமில்லாதா னென்கணவ னென்னுடனே உறவாடாமல்
மெய்ப்பாருங் கடல்காமக் கனையாலே நாள்தோறு மெலிந்துவாடி
இப்பாடுபடுவதற்கோ இறையோனென் தலையோட்டிலெழுதினானே

இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

மன்னாநானென்னசெய்குவேன் உமைப்பிரிந்து
என்னவிதத்தி லுய்குவேன் ராஜ(மன்)

அநுபல்லவி.

நன்னயமிகும்பஞ்ச வர்ணக்கிளிமொழியாள்
தன்னைநாட்சித்துவந்த என்னுடையபிராணநாதா
உலகமிசைவாதா எப்பவும்பிரியாதா
இருவர்க்குமிப்போதா விட்டுப்பிரியப்
பேதகஞ்செய்தானே வேதன் (ம)

அரிச்சந்திரன் சொல்லல்.

மாதே சந்திரமதியே மனதுவருந்
தாதே என்செய்வோம்விதியே (மாதே)

ஷ சொல்லல்.

ஆதியிலேநாம்செய்த தீதாகியகருமம்
மேதினிதனில் நாமிப்போதுவருத்தம்வராது
வெள்ளந்தலைக்குமீறு வந்ததின்பேரில்
பாதுகாப்பது யேது (மாதே)

சந்திரமதி சொல்லல்.

கந்தமணிகர்சுந்தரா உலகமிசைவந்துகந்தபுரந்தரா
இந்துவினிலும்அரவிந்த மலரினிற்சிறந்தகமலமுகந்
தன்னைநானெப்போகாண்பேனே அதிலுந்தனைநானே
பிரியத்துணிவேனே இங்கிவ்வளவுதானோநான்செய்தபாக்கியம். ()

அரிச்சந்திரன் சொல்லல்.

சர்ப்பாபரணன் சோதனைவந்தது நமக்
கிப்போது இந்தவேதனை
செப்பார்குவிமுலைமார் மைப்பார்விழியழகி
ஒப்பாகவந்தசித்திரப் பாவையைப்போல்
செழுந்தேனே மதியன்றன்மானே அதில்வருந்துவானேன்
நீர்மேற்குமிழிக்கொப்பான வாழ்விதுவே. (மாதே)

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேன் மன்னவரே மன்னவரே
எப்படி யுமைப்பிரிவேன்
முன்னம்நாமன் செய்தவினை செய்தவினை
முடிந்ததையோ வென்தலையில் (என்)

நாடிழந்தேன் நகரிழந்தேன் நகரிழந்தேன்
நாயகரே உமையிழந்தேன்
பேடிழந்த அன்றிலைப்போல் அன்றிலைப்போல்
பேதையொண்டி யாகினேனே. (என்)

கூடுவிட்டுப் போனவுயிர் போனவுயிர்
கூடுமோதான் நானறியேன்
சோடுரெண்டு புருவதுபோல் புருவதுபோல்
சுந்தரமாய் வாழ்ந்திருந்தோம். (என்)

சந்திரமதி-விருத்தம்.

வந்திடும் விதியினாலே மறையவர்க் கடுமையானேன்
தந்திடும் பொன்னை வாங்கித் தரகனுக் கீய்ந்தோம்நாமும்
செந்தழல் மெழுகுபோலே தியங்கவே மகனும்யானும்
அந்தணர் வேலைசெய்ய அனுப்புவீர் மன்னாசுவாமி.

இராகம்-கமாஸ்-ஆதி-தாளம்.

பல்லவி.

நானுமைப்பிரியவும்வருமோ நாடாண்ட துரையே (நானு)

அநுபல்லவி.

மாநகரோடு சேனையையிழந்தோம்
மன்னவாயின்னகர் காசிதனில்வந்து.

சரணங்கள்.

வஞ்சகமாமுனிசெய்திடும் சதிக்கென்செய்வேன்மன்னவா
அஞ்சாதே வயர் அஞ்சாதே என்னுடைசக்கிலைசந்த என்னரசராஜனே
கன்றும்பசுவுங் கலைப்பிரிந்த காரணமானதுபோல்
இன்னதர்தன்னிலே மன்னவா உன்னைவிட்
டெப்படிநானுமே செப்பமதாகவே (நானு)

இராகம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

மன்னவா இன்னோம் உம்மைவிட்டுயான்பிரிய (ம)

அநுபல்லவி.

என்னுடையபிராணநாதா ஈசனருளாலேவந்த (ம)

சரணங்கள்.

இந்தவிதிவருமென்று எண்ணியேமனமிடைந்து
மைந்தனும்யானுமாக மறையவர்பின்னேபோறோம் (ம)

ஆனைபரியிழந்தோம் அய்யோத்திநாடிழந்தோம்
சேனைதளமிழந்தோம் செல்வமுமே சீர்குலைந்தோம் (ம)

கோசிகமுனிசெய்த கொடுமையினாலேயிப்போ
காசியிலேநாம்வந்து காலகண்டர் வீட்டிற்போக (ம)

காலகண்டன் வசனம்.

அடிவாடி சந்தி என்னேமடி சொல்லிக்கொள்ளுகிறது பேரிவி ட்டுவருகிறேனென்று சொல்லிவரவேண்டியதுதானடி சந்தி அடே சிச்சான் நீவாடா சந்திசொல்லிக்கொண்டு வருதட்டும் சிச்சான்.

சந்திரமதி-வசனம்.

இதோ வருகிறேனைய்யா சுவாமி.

அரிச்சந்திரன் வசனம்.

பெண்ணே சந்திரமதி என்னை இனி எந்தக்காலத்தில் காணப்போகிறாய் கடவுள் இப்படிச்செய்வாரென்று ஒருக்காலும் அறியேனே பெண்ணே சந்திரமதி.

இராகம்-இந்துஸ்தானிகாபி-ஆதிதாளம்.

பல்லவி

உமைப்பிரிய உருகுதே நெஞ்சம் (உமை)

அநுபல்லவி.

அமைப்பிதுவோ அருள்மாமுனி
வினைப்போகமோ விளைந்ததேகாலம் (உமை)

சரணங்கள்.

ராஜராஜனே ரவிகுலனே
ஆசைமன்னனே அதிபாவியானேன் (உ)

என்னசெய்குவேன் மன்னர்மன்னவா
சின்னவயதில் திகைக்குதே நெஞ்சம் (உ)

பாலனும்யானும் பாதவிக்கக்
காலம்வந்ததோ கடவுள்செயலோ (உ)

சந்திரமதி விருத்தம்.

மன்னனே பிராணநாதா மனதினிற் கவலைவேண்டாம்
தன்னுட நெஞ்சந்தன்னிற் தயிரியங் கொள்ளவேணும்
என்னுடன் மகனைக்கூட இழந்திட நாள்வந்தாலும்
நின்னுட சத்தியத்தை நிறுத்துவீ ரெனப்பணிந்தாள்.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

போய்வாரே னென்கணவா என்மன்னவா
புத்தியென்ன சொல்கிறீர்
சீர்பாதகமலத்தைக் கண்டுதெரிசித்துச்
சேர்வது மெக்காலம் (போய்)

அநுபல்லவி.

அய்யகோ அரிச்சந்திரரே என்மன்னவா
அன்புள்ள பத்தாவே
கையிற்கடையமுங் கனத்தமகுடமுங்
காண்பது மெக்காலம். (போய்)

சரணங்கள்.

சதிசெய்யும் மாமுனிவன் ஏ மன்னவா
சற்பனைக் காளானேனும்
விதிவசந் தன்னினைந்து ஏ மன்னவா
வேதியர் பின்போறேன் (போய்)

இன்றுநான் கண்டகுறி ஏ மன்னவா
என்றுநான் காணப்போறேன்

பண்டுசெய் பர்வத்தாலே ஏ மன்னவா
பாலனும் யானும்போறோம் (போய்)
சையோக மாகவேதான் ஏ மன்னவா
அய்யோத்தி யாண்டிருந்தோம்.
தையலுமைப்பிரிந்தே ஏ மன்னவா
சதுர்மறையோ னிடமே (போய்)

காலகண்டன் வசனம்.

அடே கிச்சான் என்னடா நீயுங் கூடவேதிரிகிறாய் இங்கேவாடா கிச்சான்.

லோகிதன்-விருத்தம்.

அன்னையை வித்ததல்லா லையனே யென்னைவித்தீரோ
என்னையுங் கூடவேதா னிழுக்குறான் வேதியன்றான்
பின்னைநா னுன்னைத்தானும் பிரியவுமாச்சோ யெந்தன்
சென்னியிற் குடுமிபத்தி சிணந்தவ னிழுக்குறானே.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

என்னையும்வித்த துண்டோ ஐயாவே என்
தாயாரை வித்ததுண்டோ ஐயாவே
வன்னிய பார்ப்பான்பின்னே ஐயாவே நான்
வழிநடந்து போகமாட்டே னையாவே
சொன்னவேலை செய்யாவிட்டா லையாவே என்னைத்
தோப்புக்கண்டம்போடச்சொல்வா னையாவே
வைத்தவேலை செய்யாவிட்டா லையாவே அவன்
வம்பிலேகட்டி யடிப்பா னையாவே
இட்டவேலை செய்யாவிட்டா லையாவே எனக்
கிணைவிலங்கு போட்டிடுவா னையாவே
பெருந்தவமிருந்து பெற்றீ ரையாவே என்னைப்
பிராமணர்க் கடிமைசெய்தீ ரையாவே

அரிச்சந்திரன் வெண்பா.

கொஞ்சியே கண்மணியே குணரசமே எம்மனதில்
மிஞ்சியே கொஞ்சிநவ ரஞ்சிதமே-கிஞ்சுகமே

உந்தனையான் விற்கவில்லை உன்றாயாளைவித்ததுண்டு
மைந்தனே யென்றுமயங்குவார்.

அரிச்சந்திரன் வசனம்.

தேவதாசா உன்னைவிற்கவில்லை உன்தாயாளைமட்டும் வித்தே னப்பா தேவதாசா.

தேவதாசன் வசனம்.

என்னையுஞ்சேர்த்து யிருக்குறானையா சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்.

அகோ வாருங்களையா சுவாமி என்னுடைய மனைவியை வி தேனையல்லது அடியேனுடைய குழந்தையை விற்கவில்லையே ஐ யா சுவாமி.

காலகண்டன்-விருத்தம்.

விற்கலை பிள்ளையென்றால் விடுவனோ திருடா ஆவின்
வற்க்கமாப்பசுவைக்கொண்டால் வளர்கன்றைவிடுவாருண்டோ
பொய்க்குள வாகச்சொன்ன புரட்டனே யென்றுசொல்லி
மெய்க்கவே ராஜனுக்கு வேதியருரை செய்வாரே.

ஷை. வசனம்.

அகோவாரும் பிள்ளா யரிச்சந்திரா பசுவைக் கிறையத்துக்கு வாங்கினபேர்கள் கன்றுக்குட்டியை விலைபேசுவார்களா நீதாயைம ட்டும் வித்தேனென்று சொல்லுறது சரியா அந்தக்கிறையத்துடன் உன்குழந்தையுஞ் சேர்த்து அனுப்பினாலனுப்பு இல்லாவிடில் உன் சாதனத்தை வாங்கிக்கொள்ளும் பிள்ளா யரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியெல்லாம் வருத்தப்படவேண்டாம் தாங்களுக்கேசம் மதியாயிருக்கிறபடியால் குழந்தையையும் விலையிலே சேர்த்துக் கொள்ளுங்களையா சுவாமி.

காலகண்டன் வசனம்.

அடி சந்தி அடே விச்சாண் ஏன்தாமிசம் நம்ம ஆத்துக்குப்போ கவேணும் புறப்படுங்கோ சீக்கிரம்.

சந்திரமதி-வசனம்.

தாங்களுக்கு லைப்பட்டதின் பேரில் நான்வர மாட்டேனென்று சொல்லுவேனே இதோவருகிறேனையா சுவாமி.

காலகண்டி-வசனம்.

எங்காணும் ஆத்தாக்காரரோ இதற்குத்தானே நான் வேண்டாமென்று சொன்னேன் கேட்டீரா.

லோகிதன் விருத்தம்.

பிள்ளையென் றென்னைப்பெற்றுப் பிரியமாய் வளர்த்தெடுத்து
கள்ளமாம் விஸ்வாமித்திரர் கடனுக்கே ஒப்புவித்தீர்
உள்ளாரு முள்ளமட்டும் ஒழியாம லிருந்தபாரம்
மெள்ளவே துலைத்திட்டாயோ விட்டதோ துன்பமெல்லாம்.

ரிஷி வசனம்.

சரணஞ் சரணமையா தேவரீர் என்னைத்தாயாருடன் வித்த தாகத் தெரியவருகிறது ஆகையால் நானுங்கூடவே போகிறேனையா சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்பாலோகிதா நானென்னசெய்வேன் உன்னைநான் எப்போது காணுவேனடா தேவதாசா.

சந்திரமதி-விருத்தம்.

தங்குசீ ரயோத்திவேந்தன் றனக்குமென் றனக்கும்வந்த
துங்கமா யருமையான சொர்ணமே மகனேகேளாய்
பங்கமில் லாதகாசிப் பவுஷயுர் தோற்றேனையா
பொங்குமாமறையோர்க்காளாய்ப்போகின்றோம் வருகுவாயே

இராகம்-இங்குஸ்தானிகாபி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலகனை லோகிதனை நாம் பரதேசி யானோமடா
நாம்பரதேசி யானோமடா (பால)

அநுபல்லவி.

சீலமுள்ள காடிமூந்து சிறுமைப்பட்டப்போனோமடா (பால)

சரணங்கள்.

நாடிழந்து நகரிழந்து என்னாயகரைத் தானிழந்து
சோடிழந்த அன்றிலைப்போல் துன்பப்படப்போனோமடா (பா)
கோலமுள்ள கௌசிகர்க்கு கொள்விலைநயம் வாங்கவந்த
காலகண்டர் தன்மனைக்கி கஷ்டப்படப்போனோமடா (பால)

சந்திரமதி வசனம்.

அடா வாடா! அருமைமகனே தேவதாசா நாமென்ன கஷ்டப் படப்போனோமோ கடவுள் எப்படி யெழுதினானோ இதுவெல்லாம் முன்னாள் செய்வினைமுடிந்ததோ பாலா.

ஷை விருத்தம்.

இரத்தின சிம்மாசனத்தில் ரதியுமன் மதனும்போலே
இத்தனை காலமட்டும் இருந்தர சாண்டோம்நாமும்
புத்திரன் நானுமாகப் போற்றியே சரணஞ் செய்தோம்
வெத்தியா யெங்களைநீர் விதமுட னனுப்புவீரே.

இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி

மன்னனே உத்தாரந்தாரும் என்னை
வந்தாலும்மட்டும் சத்தியந்தனைக் காரும் (முன்)

அநுபல்லவி.

நின்னையுத்துடன்புவி தன்னையாண்டருளிய
நாயெனது பிராண நாதாயென் றுரையே (மன்)

சரணங்கள்.

ஆதிகற்பனையாலே வேதியர்க்கடிமையாய்
அடியாள்போய்வருகிறேன் படியுள்ளோர்நகைக்காமல் (ம)
வேதனையுற்றுநீரும் வாதனைப்படவேண்டாம்
மெல்லியாளும்மகனும் விரைவுடன்போக (மன்)
காசிநகரில்வந்து கணவரை யான்பிரிந்து
கோசிகமுனிடனல் குழந்தையும் யானும்போக (மன்)

சந்திரமதி-விருத்தம்.

தேசியாம் புவியதில் செங்கோல்நீர் செலுத்துமன்று
பூசித அயோத்திதன்னில் பிரபலமாக வாழ்ந்தோம்

கோசிக முனிவருக்குக் கூறிய குணத்துக்காகக்
காசியில் வந்துயெந்தன் கணவரைப் பிரியலானேன்.

இராகம்-தோடி-,தாளம்-ஆதி.

கண்ணிகள்.

போய்வாரேனடியாள் புண்ணியனே சரணமையா
மண்டலத்தையாண்ட மன்னு மகாராஜ போய்வாரேன்
கன்றிழந்தபசுவைப்போலே கலங்கவேண்டாம் பிராணநாதா
உம்மைவிட்டு யான்பிரிய உமையாள்பாகனெழுதினனே
மைந்தனையுங் கூட்டிக்கொண்டு மாபாவிநான் போரேனையா
சேர்ந்தணைந்த சிமானே செங்கோல் செலுத்துங்கோனே
ஒண்டியாய்த் தனித்திரே உள்ளமுமெலிகுவீரே
சத்தியமும் பெரிதைய்யா மற்றவைகெல்லாம் அனித்தியமையா
குழந்தைதனைக்கூட்டிக்கொண்டு கோலமாய்ப் போரேனையா

அரிச்சந்திரன் விருத்தம்.

கொண்டனுளிதுவரையிற் கூடியே வாழ்ந்திருந்தோம்
பண்டுசெய் புண்ணியத்தாலும் பரமனா ருளினாலும்
யெண்டிசை யறியத்தாமும் இன்பமாயிருந்தோகாமும்
பெண்மயிரே யென்னைநீயும் பிரிந்துமே போருயோடி.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

போருயடி மயிலே யெனைப்பிரிந்து
போருயடி மயிலே மனந்துணிந்து (போ)

அநுபல்லவி.

வேருயிருக்கவென்று விதித்தானோபிரமனன்று
ஆருதியென் மனமே யாடியன்னமே (போ)

சரணங்கள்.

மாசில்லாதஜோதியே வளர்சந்திரமதியே
தேசிகமானபெண்ணே சிறந்தகண்ணே (போ)

பூவும்வாசமும்போல பொருந்தியிருந்தோஞ்சலாப்
பாவியாளென்னைவிட்டுச் சம்மதிபட்டு (போ)

மைந்தனையு மழைத்து மாமதியோகளைத்து
எந்தன்தனைத் தனித்துப் புலம்பவைத்துப் (போ)

அரிச்சந்திரன் வசனம்.

பெண்ணே சந்திரமதி இனியெந்தச்சென்மத்தில் காணப்போகிறேனோ உன்னைப்போகச்சொல்ல மனதாகப்பட்டது இன்னேரம் வரையிலும் வொருமைப்படவில்லை நீயுங்குழந்தையும்போய்க்கால கண்டய்யர்வீட்டில் சத்தியத்துக்குப் பழுதுவராதபடிக்கு இருந்து குழந்தையைமட்டும் பத்தோபஸ்தாய்ப்பார்த்துக்கொள் சந்திரமதி

சந்திரமதி வசனம்.

அகோவாரும் என்பிராணநாதா நாங்களினியெப்போது தாங்களுடைய முகத்தைக்காணப்போறோமோ எங்களுக்காவது மறையோருடைய வீடிருக்கிறது தாங்களுக்கு யொரு உதவியுமில்லையேயெங்கேபோயிருப்பீரோ நாங்கள் போய்வருகிறோமையாசுவாமி

சந்திரமதி விருத்தம்.

மணமுடித் திதுவரையில் மகிழ்ச்சிய தாகநாமும்
கணப்பொழு தாகிலுந்தான் கண்ணாளா பிரிந்ததில்லை
பணமது கெமக்களித்த பிராமணர் வீட்டிலேகக்
குணமதா யனுப்புமென்று குனிந்தவள் தெண்டனிட்டாள்

சந்திரமதி வசனம்.

உத்தரவுகொடுங்கள் போய் வாரேன் மன்னா.

அரிச்சந்திரன வசனம்.

பெண்ணே சந்திரமதி அப்படியே போய்வா.

தேவதாசன் வசனம்.

போய் வருகிறேனையாவே.

அரிச்சந்திரன் வசனம்.

அருமைமகனே தேவதாசா போய்வா.

இராகம்-தன்யாசி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வட்டமாது முகமிலங்க மாதுசந்திர மதிகலங்க
இட்டெழுத்தை யெண்ணியெண்ணி யென்சரீரங்குன்னிக்குன்னி

மடிசேர்த்துப் பாலகனைக் கக்கத்தே தாங்கி கண்ணீர்சோர
அடியேனொன்று மில்லாமலே அரிவையாரும் போகும்போதே
இந்தக்கன்னி தெய்வலோகம் இந்திராணிபோ லிவ்வுலகம்
வந்தாளே நீயாரென்பாரும் மங்கையே நீ யாரென்பாரும்
இந்நகர்க் காசிதன்னி லெந்தன் தலை விதியினாலே
வந்து நாணம் வாங்கினதால் மறையவர்பின் போகிறனையோ
வாருமையா பிராமணரே மடப்பள்ளிக்குப் போவோம்வாரும்
தாருமையா நீர்சுமையைத் தான்சுமந்து போவதற்கு
என்தலைவிதியினாலே இந்நகர் தன்னிலேதான் [டிபடும்
பொன்கொடுத்தபாப்பன்வீட்டிற் போய்ப்புகுந்தாள்பொற்கொ

அரிச்சந்திரன்-விருத்தம்.

தேவியைப் பிரிந்தராஜன் சிந்தைநோ வாகிநொந்து
பாவிநான் தேடி நெஞ்சம் புரகவித் துருகிவாடி
மேவிய ஆசையாலே மெல்லியாள் தனைநினைந்து
கூவியே வாய்விட் டேங்கிக் கொற்றவன் புலம்புவானே.

இராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

ஒருநாளும்பிரியாத மனைவியைப்பிரிந்தேனே   தெய்வமே இப்போ
உலகாளும்மைந்தனை விலையாகவிற்றேனே   தெய்வமே
மறுநாட்டனில்வந்து பரதேசியானேனே   தெய்வமே எந்தன்
மங்கையுடனே மகனைப்பிரிந்தேனே   தெய்வமே
உறவின்முறையோர்களை அறியாமல்விற்றேனே   தெய்வமே என்
னுள்ளங்கலங்குதே வெள்ளையிலேறுங்காசி   யீஸ்பரா
தருகிறபொருள்கடனுக்குச் சந்திரமதியைவிற்றேனே   னீஸ்பரா கல்ல
தவமுனி தூதரோ அவசியமுடனேக் குறைசெய்வீர்

அரிச்சந்திரன்-வசனம்.

அதோ வாருங்களையா கட்சேத்திரபகவானே விசுவாமித்திர ருக்குச்செல்லவேண்டிய திரவியம் வந்துசேர்ந்ததா கொண்டுபோ ய்க்கொடுத்துவிடுங்களையா சுவாமி.

பொது-விருத்தம்.

இந்நிலைப்புகழும்ராஜன் தேவியைநினைந்துநெஞ்சம்
பின்கலங்கி துயரமெல்லாம் மிகவுமே அடக்கிக்கொண்டு

தக்கவேதியனார்வீட்டில் சந்திரமதியும்போனாள்
மெய்க்கவேகட்சேத்திரையன் மீளவேவந்துசொல்வான்.

கட்சேத்திரத்தரகன் விருத்தம்.

வந்துமுன்னரிச்சந்திராவுன் மனைவியும்மகனைவித்து
தந்ததோர்பொன்னுமிப்போ தரகுசம்பளமேயாச்சு
முந்திநீவிஸ்வாமித்திர முனிவருக்குரைத்தசெம்பொன்
அந்தியின்முன்னேதந்து அனுப்புவாயனுப்புவாயே.

ஷை வசனம்.

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரா உன்பெண்சாதி பிள்ளையை வித்துக்கொடுத்த திரவியமெல்லாம் உன்பின்னால் நாம்பத்தெட்டு நாள் திரிந்தேனல்லவா அதற்குச்சம்பளத்துக்காச்சுது விஸ்வாமித்திரசுவாமிகள்திரவியத்துக்குவகைசொல்லும்பிள்ளாயரிச்சந்திரா

அரிச்சந்திரன்-வசனம்.

அகோவாருங்கணையா சுவாமி விஸ்வாமித்திர சுவாமியாருக்குக்கொடுத்த திரவியத்தை தேவரீருக்கு வைத்துக்கொள்ளவேண்டாம் அந்தத்திரவியத்தை விஸ்வாமித்திரசுவாமிகளுக்குக் கொடுத்துவிடுங்கள் தரகுசம்பளத்தைமன்னிப்புச் செய்யவேணுங் காலிலே விழுந்தேனையா சுவாமி.

கட்சேத்திரத்தரகர்-விருத்தம்.

காலிலேவிழுந்துநீயுங் கதறியேயழுதாயிப்போ
ஜாலம்பண்ணாதேபோடா தவமுனிதனக்குச்செம்பொன்
காலதாமதஞ்செய்யாமல் கடுகெனக்கொடுத்தாலாச்சு
கோலமாவொருபொய்சொல்லுங் கொற்றவாநீயுந்தானே.

ஷை வசனம்.

அகோவாரும்பிள்ளா யரிச்சந்திரா காலிலே விழுந்தழுதாலும் என்னுடைய திரவியத்தைவிடுவேனோ உன்சாலவித்தை யெல்லாமறிவேன் திரவியத்தைக்கொடு இல்லாவிட்டால் இல்லையென்று ஒருபொய்சொல்லும் பிள்ளா யரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

சொல்லுவதேதுயென்னைத் தொந்தரவுகள்செய்தாலும்
இல்லையென்றுரைப்பதில்லை என்னுடைநாவினாலே

வல்லவாகடனைத்தீர்க்க வகையில்லை என்னைவித்து
எல்லையிற்கொடுப்பேனென்று யிவன்விலை கூறுவானே.

இராகம்-புன்னுகவராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

முன்னாள்வினைப்பயனாலே முனிகடனுக்காக இப்போ
என்னைவிலை கொள்வாருண்டோ என்னுடையதந்தைமாரே
மண்ணைவித்தேன் மனைவிவித்தேன் மைந்தனையுங்கூடவித்தேன்
இன்னம்என்னைவிற்கவந்தேன் இசைந்துகொள்வாராருமுண்டோ
ஏவியதோர் வேலைகேட்பேன் பின்பு முற்றத்தொண்டுசெய்வேன்
கூவுமுன்னே நானெழுவேன் கொள்வாருண்டோ எந்தையேயும்
இந்நகர் தன்னிலேதான் என்னைக்கொள்வாராருமுண்டோ
சொந்தமதா யேவும்வேலை சொல்லுமுன்னே செய்வேனையா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

சீரியர் மறையோர்மன்னர் செட்டிகள்முதலாயுள்ளோர்
பாரினில் மிகுந்தசெல்வம் படைத்தபாக்கியரேகேளீர்
காரியம்விஸ்வாமித்திரர் கடன்பொன்னைத்தீர்க்கவேண்டி
ஆருமேகொள்வீரென்று அரிச்சந்திரனுரைக்கின்றானே.

இராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

வர்த்தகஞ்செய்யும்வணிகரே விலைகொள்வா ருண்டோ நான்
மாமுனிகடனாலேயென்னைவிலை கூறுறேன்தெய்வமே
பொன்னுள்ளபேரெல்லாம் என்னைவிலை கொள்ளவாரும் ஒரு
பொய்சொல்லமாட்டாமல் மெய்கொண்டிருக்கிறேன்பாரும்
நன்னகர்காசியில் நாயகிபாலனைவித்தேன் நான்
ராஜனரிச்சந்திரன் பூபாலனைக்கொள்வாருண்டோ
கன்னிகாதானம் அனேகவிதஞ் செய்தேனம்மா அயன்
கற்பனையால்வந்த காலந்தானென்னை வாங்குஞ்சும்மா
முன்னும்ஒருவேலை செய்தறியேன் தாய்மாரே உங்கள்
வீட்டுக்குப்பூட்டாகக் காத்திருப்பேன் தாய்மாரே
இன்னகர்தன்னிலே வாங்குவாரில்லையோ தெய்வமே முன்னு
ளென்னபாவஞ்செய்தனோ இப்படிவந்தனெ தெய்வமே

அரிச்சந்திரன்-விருத்தம்.

மாதெனு மதிமையவித்து மாமுனி கடனுக்காகப்
பூதலந்தன்னிற்கொண்டபொன் பூராவாயிற் செல்லவில்லை
ஆதலா லென்னையிங்கே அடிமையாய்க் கிரையம்வாங்கிக்
காதலாய்க் கொள்வாருண்டோ கர்த்தனேவிலையாமென்னை.

இராகம்-ஆனந்தபைரவி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

கொள்வாருண்டோ வென்னைவிலைபே — இந்தக்
கோசிகனார்கடன் தீரவுமிலையே (கொ)
பிள்ளையு மனைவியுமில்லையே — நான்
கள்ளமில்லாமலே கூறுகிறேன் விலையே (கொ)
வேதியர் பணமுண்டியோமோ — வணி
காதிபரோ கடையோரோ (கொ)
ஏதுபணி நீர் சொன்னாலும் — தலை
மீதினிற்கொண்டு செய்வேனாம் (கொ)

வீரவாகு-விருத்தம்.

விலையது கூறிக்கொண்டு வேந்தனும் நிற்கும்போது
இலகிய விஸ்வாமித்திர னேவலால் எமராஜன்
புலையன்போல் வேஷங்கொண்டு பொருந்தவே தழுவமுன்னீ
மலைநிகர்ப்புயத்தான் வீரவாகுவுந்தோன்றினானே.

இராகம்-தன்னியாசி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

விதியிதேழுவிலைகூறினதாரென்று
வீரவாகுவுந் தோன்றினனே (வீர)

அநுபல்லவி.

சாதியிலேதானும் நான்பெரியோனென்று
சாம்புவனும் வந்துதோன்றினனே (வீர)

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மத்தகமாமுகமென் குகனைமாமனைத்தியர் வடிவோராதி
தத்தகுரிகிடத் தொம்மென நந்திச் சாம்புவனும்வந்துதோன்றினனே

இராஜாவிஸ்யாகிறபாகம்.

சத்தியகீர்த்தி. அரிச்சந்திரன். நட்சேத்திரன். வீரவாகு. தோட்டிச்சி.

மந்திரகிரியதனைக் கிருஷ்ணன் தந்திரமாகக் கடை[illegible]யிலே
விந்தையாய் பறைகொட்டுந்தோட்டி வீரவாகுவும் [illegible]னலவோ
திருபுரம்தெருவொடியில் எரித்திடசிவனர் திருநகை[illegible]சய்திடுமொள்
திரிமதகிரிமேறி படைகொட்டும் வீரவாகுவும் நா[illegible]ண்டே.

வீரவாகு விருத்தம்.

தன்னையினித் தானறியார் தலமுங்காணுர்
சாஸ்திரத்தின் தத்துவத்தின் முறையுங்கா[illegible]ணுர்
இன்னதென்று பொருளறியார் ஞானங்காணுர்
இடும்பரெல்லாம் வாய்மதத்தால் தூஷிப்[illegible]ர்கள்
பின்னையொன்று மறியாம லுணர்வுங்காணுர்
பித்துகொண்ட பேயரைப்போ லலைந்துபே[illegible]வார்
எண்ணையினிப் பறையனென்றே சொலவீராண்டே
என்பிறப்பைச் சபைதனிலே யியம்புவேனே.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

ஒன்றும் ஒன்றுண்டே ஏகப்பரப்பிர்ம மொன்றுண்டே
ரெண்டும் ரெண்டாண்டே அண்ட பிண்டமும ரெண்[illegible]ண்டே
மூன்றும் மூன்றுண்டே மும் மூர்த்திகள் மூன்றுண்டே
நாலும் நாலாண்டே நாலு வேதமும் நாலாண்டே
அஞ்சும் அஞ்சாண்டே அஞ்சு பஞ்சபூதமு மொன்றுண்டே
ஆறும் ஆறுண்டே ஆறு சாஸ்திரம் ஆறுண்டே
ஏழும் ஏழாண்டே சத்தா சமுத்திரம் ஏழாண்டே
எட்டும் எட்டாண்டே அஷ்ட திக்குப் பாலக ரெட்டாண்டே
ஒன்பதும் ஒன்பதாண்டே ஒன்பது நவக்கிரக மொன்பதாண்டே
பத்தும் பத்தாண்டே கிருஷ்ணவதாரமும் பத்தாண்டே
காசிச்சுடலையிலே நானுங் காவலனுகவே காணி கொண்டேன்
தேவேந்திரன்மகளைக்கந்தன் திருக்கலியாணமுஞ் செய்கையிலே
குமுதியிடிமுழங்கப்பறைகொட்டுங்கொடும்பறைச்சாம்பானுண்டே

வீரவாகு விருத்தம்.

ஆடா நயிக்கெயிங்கே ஆள்திலைவிட்டேனென்றாய்
ஊரிலே சுடலைகாக்கும் உத்தரத்தோட்டிவந்தேன்
பேரென்ன ஊர்தானென்ன பெற்றிடும் விலைதானென்ன
கூறடா இன்னதென்று கொள்ளவும் வந்தேன்கண்டாய்.

ஷை வசனம்.

அகோவாரும்பிள்ளாய் நயின்தே யிந்தக்காசிப்பட்டணம்ஆயி ரத்தெட்டுவீதியுந் தெருத்தெருவாய்ச்சுத்திப் பெண்சாதி பிள்ளை யைவித்தேனென்றும் இப்போது தன்னைத்தானே விற்கிறதாகவும் சொல்லிக்கொண்டுவந்தாயே நீயார் பிள்ளாய் உன்பேரென்னவாரெ ன்ன சொல்லும்பிள்ளாய் நயின்தே.

அரிச்சந்திரன்-வசனம்.

அகோவாருமப்பா நானிருக்கிறது அயோத்தியாபுரிப்பட்டண ம் என்பேர் அரிச்சந்திரன் விஸ்வாமித்திரமுனிவருடைய ருணத்து க்காக முன்னமேயென்னுடைய பெண்சாதிபிள்ளையை வித்தேன் என்கூடவந்த நட்சேத்திரபகவானுக்குத் தாருக்காக யென்னைவிலை கூறினேன் உம்முடைய குலத்தைச்சொல்லவேணுமப்பா.

வீரவாகு விருத்தம்.

என்குலமதனைநீயு மிசைந்துநீகேட்டாய்மன்ன
உன்குலச்சாதிக்குமேல் ஒருபலம்உயர்த்திகண்டாய்
மங்குலம்விளங்குஞ்சாதி மயானத்தைக்காத்திருப்போம்
[illegible]குலம்[illegible]மில்லை பிண[illegible]பறையன்நாமே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

பறையனே யென்னையிந்தப் பார்தனில் விலைதான்கேட்கக்
குறைவிலாப் பணப்பெருக்கோ கொடுமையோ என்னைமுன்னாள்
இறையவன் விதித்தவாறே இதற்குநா னென்னசெய்வேன்
மறைமுனி விளையோவென்று மருவிடே[illegible]வானே.

இராகம்-ஆனந்தபைரவி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

நீசன்விலை கேட்கலாச்சே கேட்கலாச்சே (நீ)

அநுபல்லவி.

நீசன்விலை கேட்கவுங் காசியோர்நகைக்கவும்
தேசமிழந்துமானும் மோசமாகினேனீசா (நீ)

சரணங்கள்.

அனியாயகர்மம் செய்தேனே அடியேனே (அனி)
அனியாயஞ்செய்தேனே அரகரா விஸ்வநாதா
பனியிற்கடலைக்கும் பாமன் விதித்திட்டானே (தீ)

அய்யோத்திநகரையிழந்தோம் மென்மந்திரி (அய்)
அய்யோத்திநகரையிழந்து தையல் சந்திரமதியை
கையிற்பொருளில்லாமல் [illegible] (அ)

வீரவாகு விருத்தம்.

மன்னனேயாராகிலும் மாதனம்படைத்தவர்க்கு
முன்னமேவிதியுமாவே னென்றுமேமொழிந்தாய்நீதான்
உன்னதமாகச்சாதி யோசிப்பதென்னகாணும்
தன்னகர்தனிலேவேறே சாதிகளேது ஆண்டே.

இராகம்-நாதநாமக் கிரியை-அடதாளம்.

பல்லவி.

சாதியேதுகாணும் ஆண்டே சைவமேதுகாணும் (சாதி)

அநுபல்லவி.

வேதிபோடங்கள் சாதிபேன்மைகளை
ஓதிய நூல்சரி ஒப்பிவைப்பீரோ. (சாதி)

சரணங்கள்.

ஆத்தாமயிலே பிராமணக்குயிலே
ஆரியமாலையைச் சின்றபெடுத்தவன்
காத்தானென்கிற பறையனல்லவோ
காமாட்சியொரு பறைச்சியல்லவோ (சாதி)

மாட்டுவயித்திலே கோரோசனைகள்
மருந்தப்பண்டமென்று தெரிந்துயிருக்கையிலே
கூட்டியசர்க்கரை வெள்ளைச்சர்க்கரை
கோழிமுட்டையுஞ் சேர்ந்ததுதானே (சாதி)

மந்திரஞ்சொல்லி ஆட்டையறுத்து
மறையோர்களும்லக் கியங்களும் வளர்த்து
தந்திரமாகவேஅறுத்துக் கறிசமைத்துக்
சாப்பிட்டதன்றோநீர் கூப்பிடுக்கேளும் (சாதி)

அரிச்சந்திரன் விருத்தம்.

சாதியிலெவரானாலுந் தனம்படைத்தவனேதக்கோன்
நீதியுநெறியுமேன்மை நிலவாமுடையோர்கண்டாய்
ஆதலாலிவன்பொன்தந்தால் அடிமையாநானுமேவன்விற்பாய்
கோதிலாச்சத்தியகீர்த்தி குறையொன்றுமெண்ணவேண்டாம்.

ஷெ வசனம்.

அகோவாரும்பிள்ளாய்மந்திரி சத்தியகீர்த்தி பொன்கொடுக்கிறவன்யென்னசாதியாயிருந்தாலுஞ்சரி வீரவாகுவுக்கேயென்னைவிக்கிறையஞ்செய்துபோடுகிறேன் பிள்ளாய் மந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

அகோசரணஞ்சரணமையாசுவாமி தாங்களிஷ்டம்போல் விக்கிறையஞ்செய்து கொள்ளுங்களையா சுவாமி.

வீரவாகு விருத்தம்.

பலவந்தமாகவுமைப்பற்றிவந்திழுத்தேனோதான்
கலகமென்றிரைச்சல்போட்டுக் கடைத்தெருவெங்குங்கூறி
விலைசொல்லக்கேட்டுவந்தேன் விற்பாயோவென்றுசொல்லி
உலகுடன்சரிதானென்றால் நான்விலைகொள்வேன்மன்னா.

ஷெ வசனம்.

அகோவாரும் ஆண்டே உன்னைப்பலவந்தமாய் எனக்குக்கிறையமாகென்றுவந்துகேட்டேனா கடைத்தெருவெங்கும்விலைகூறினதால்நான்வந்து விலைகேட்டேன் இப்பவுஞ் சம்மதமானால் விலை சொல்லுமப்பா ஆண்டே.

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாருமப்பா வீரவாகுவே யாரானாலுஞ்சரிதான் கிறையமாகிறேன் எனக்குச் சம்மதந்தான், உனக்குச் சம்மதந்தானா வீரவாகுவே.

வீரவாகு-விருத்தம்.

எனக்குச்சம்மதமானாலும் என்தோட்டிச்சிதனக்குமனமோ
மனக்குறைதீரவேலை வரிசையாய்ச்செய்யவேணும்

தனித்தரசாட்சிசெய்த சந்திரவன்னானான்தான்
குனித்தொருயேவல்சொன்னால் குறையறச்செய்குவாயோ யா.

ஷை வசனம்.

அகோ வாருமப்பா நயித்தே யுன்பெண்ஜாதி மனதுக்கேற்க வேலைசெய்வாயானால் விலைசொல்லுமப்பா ஆண்டே.

அரிச்சந்திரன்-வசனம்.

யாதொரு குறை வன்னியில் வேலை செய்கிறேனப்பா வீரவாகுவே.

வீரவாகு வசனம்.

அப்படியானால் விலைசொல்லுமப்பா ஆண்டே,

அரிச்சந்திரன் விருத்தம்.

திட்டமாயானையேறித் திறமுடன்கவண்கல் தன்னைச்
சட்டமாயெறிந்ததூரந் தனமதைக்குவித்தயிப்போ
அட்டியில்லாமலிந்த அருள்முனிதாதர் கையில்
கெட்டியாய்க் கொடுத்தாலென்னைக் கிறையம்நான்செய்குவேனே

மேற்படி வசனம்.

அகோவாருமப்பா வீரவாகுவே ஆனையின்பேரில் ஒரு ஆளே நிகவணெறிந்தால் அதுஎவ்வளவுதூரம் போகுமோ அவ்வளவுதனமும் இந்தநட்சேத்திரத்தாகர் கையில் கொடுத்தால்என்னைக்கிறையஞ்செய்வேனப்பா வீரவாகுவே.

வீரவாகு-வசனம்.

விலைமுறியெழுதிக்கொண்டு வாருமப்பா நயித்தே.

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாருஞ்சத்தியகீர்த்தி இந்தவீரவாகுவுக்கு யென்னைக் கிறையசாதனமெழுதும்பிள்ளாய் சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி வசனம்.

அப்படியே யெழுதிப்போடுகிறேனையா சுவாமி.

சத்தியகீர்த்தி விலைமுறி யெழுதுகிற அகவல்,

காசிவாழ்புலையன் கனநிதியுடைய
மாசிலாவீர வாகுவுக்கின்று

வாசவன்போல வாழ்த்துலகாண்ட
பூசிதஅயோத்திப் புரவலன்றன்னைக்
கோசிலாத்தரகன் கூலிக்காயடிமை
சாதனமெழுதும் சாரம்பாவிதன்னால்
இத்தனுளிவரை இசைத்தளித்திடவே
பத்தியாபென்னோர் பதினுயிரத்தான்
சத்தியகிர்த்தி தான்பார்க்கவலோன்
நித்தமாயிவனை நின்வசமளித்தேன்
சாட்சியட்சேத்திரத் தாரகருமிவரும்
காட்சிநானே கையெழுத்திடவே
அடிமைசாதனத்தை யன்படவெழுதி
இடமுடனீந்த பிட்டிதாலே

சத்தியகிர்த்தி-வசனம்.

அகோசரணஞ்சரணமையாசுவாமி விலெழுதிச்சிட்டு பெழுதி வாச்சுதையா சுவாமி,

அரிச்சந்திரன் வசனம்.

இந்த விலெழுதியை விரவாகுவசங் கொடும்பிள்ளாய் சத்தியகிர்த்தி,

அப்படியே கொடுத்தேனையா சுவாமி.

அரிச்சந்திரன் வசனம்.

அப்பா விரவாகுவே விலெழுதி வாங்கிக்கொண்டாயா இதிக்கண்டியென்னை இந்தநட்சேத்திரத்தருக்கு வசங்கொடுமப்பா விரவாகுவே,

வீரவாகு-வசனம்.

அப்படியேகொடுத்தாவிட்டேனப்பா ஆண்டே,

அரிச்சந்திரன்-வசனம்.

அகோசுவாமிசரணஞ்சரணமையா நட்சேத்திரசுவாமினை தாங்களுக்குச்சொல்லவேண்டிய திரவியமெல்லாம் வாங்கிக்கொண்டீர்களா

நட்சேத்திரத்தாரகர் வசனம்.

அப்படியேவாங்கிக்கொண்டேன் ஏன்னயேதோ கொஞ்சந்தான் பப்படுத்திலேனென்று மனவருத்தப்படவேண்டாம் யானிபோய் வருகிறேனப்பா அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-வசனம்.

சரணஞ்சரணமையாசுவாமி போயிட்டுவாருங்கள் விஸ்வாமித்திரசுவாமிகளுக்குந் தங்களுக்குஞ்செல்லவேண்டிய திரவியம்வாங்கிக்கொண்டீர்கள் ஆனால்விஸ்வாமித்திரசுவாமிகளுக்கு நானசரணஞ்செய்தேனென்று சொல்லிவேணுமையா சுவாமி.

நட்சேத்திரத்தாகர்-வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் போயிட்டுவருகிறேன்பிள்ளாய்,

அரிச்சந்திரன்-வசனம்.

போயிட்டு வாருங்களையா சுவாமி

சத்தியகீர்த்தி-வசனம்.

அகோ சரணஞ் சரணமையா சுவாமி உங்களைக் கிறையத்துக்குவிற்கும்படியாயும் இப்போதுகஷ்டப்படுகிறதையுங்கண்ணாலே பார்க்கும்படியாயும் கடவுள் விட்டிட்டாரே யென்செய்வேன்சுவாமி

அரிச்சந்திரன்-வசனம்.

ஆனால் வாருமந்திரி இனிமேலாவது நீபோய் யெங்கே யாவது இருந்துபிழையும் பிள்ளாய் மந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

எனதாண்டவனே யென்னுடைய உயிர்போனாலும் தாங்களை விட்டுப்பிரியேனையா சுவாமி,

வீரவாகு-வசனம்,

ஓ அரிச்சந்திரா உன்னைப்பார்க்கையில் யெனக்குப் பயந்தோன்றுகின்றது யேனென்றால் நீராஜமோடியா யிருக்கிறபடியினால் அவ்வளவுங் கிழட்டி யென்கையிற்கொடும்பிள்ளாய்,

அரிச்சந்திரன்-வசனம்.

கூடாதென்றால் கழட்டிப்போடுகிறேனப்பா வீரவாகுவே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

கண்ணிகள்.

இன்னம்பிலுக்கென்னடா ராஜப்பையா உனக்
கேகாக்கக் கைவீச்சேண்டா ராஜப்பையா

அன்னநடையாளைவித்தாய் ராஜப்பையா உந்தன்
அருமைமகனைவித்தாய் ராஜப்பையா
தலையிற்றலைப்பாகேண்டா ராஜப்பையா அதை
தானவிழ்த்துக்கையில்தாடா ராஜப்பையா
காதிற்கடுக்கனேண்டா ராஜப்பையா இப்போ
கழற்றியெந்தன் கையில்தாடா ராஜப்பையா
மார்பிற்பதக்கமேண்டா ராஜப்பையா உனக்கு
மந்திரமுண்டாசேண்டா ராஜப்பையா
கம்பிளியைப்போத்திக்கோடா ராஜப்பையா கொள்ளிக்
கட்டையையெடுத்துக்கோடா ராஜப்பையா
தென்புடன்பறைச்சிசொல்லை ராஜப்பையா நல்லாய்த்
தெரிந்துகொண்டுவேலைசெய்யும் ராஜப்பையா

வீரவாகு-விருத்தம்.

அடவுடனடிமையான அரிச்சந்திராசொல்லக்கேளாய்
இடமுள்ளகன்றுசெத்துக்கிடக்குதுதெருவுதன்னில்
சடுதியிற்போய்க்கன்றை சமத்துடன் தூக்கிக்கொண்டு
கடுகியேவீடுசென்று காவலாயிருந்திடாயே.

ஷை வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ராஜப்பையா இந்தத் தெருவில்கன்று செத்துக்கிடக்கிறது அதைக்காவடிபோட்டுத் தூக்கித் தருகிறேன் கொண்டுபோய் விட்டிற்போட்டுவிட்டு திரும்பிள்ளாய்.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே கொண்டுபோகிறேனப்பா வீரவாகுவே

வீரவாகு-வசனம்.

இந்தாருமப்பா இந்தமாமிசக்காவடியை விட்டிற்குக்கொண்டு போங்காணும்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

மன்னவன் மனதுநொந்து வசிஷ்டரை நினைந்துகொண்டு
என்னபாவஞ் செய்தேனோ இந்தக்காவடியைத்தூக்க

இராஜன் மாமிசக்காவடி தூக்குகிறபாகம்.

அரசன் கன்றை அறுக்கிறது.

அரசன் காவடி தூக்கல்.

வீரவாகு.

தோட்டிச்சி.

முன்னம்நான் செய்வினையோ முடிந்ததோ என்தலையில்
இன்னமும் என்செய்வாயோ என்றுதான் தூக்கினானே.

இராகம்-நாதநாமக்கிரியை-அடதாளச்சாப்பு.

பல்லவி.

சிவனே சிவனே யினியேது செய்குவேன்

அநுபல்லவி.

பவனீசனுக்காயேவல் பணிந்துசெய்வதற்காய்
பாவிநானிந்த ஊரிலேவந்து
பறையனுணவும் கடுமையாகவும் (சிவ)

சரணங்கள்.

மறையோரடிக்க என்மனமோ துடிக்க
மைந்தனோடு மனைவிவிடுக்கவும்
எந்தன்சிந்தைகள் நொந்துவாடவும் (சிவ)

கையில்த்தொட்டிடவும் என்மெய்யிற்பட்டிடவும்
கண்டுமாமிசம் இன்றுதோள்மிசை
கொண்டுபோகவும் பண்டுசெய்வினை (சிவ)

காசிதனிலே நீசனுடைய
கட்டுமாளிகை வீட்டவாசலுந்
திட்டமாய்த்தெரியாமல் நிற்கவோ (சிவ)

வீரவாகு-வசனம்.

அடே இராஜப்பையா இந்தக்கன்றுக்குட்டிக்காவடியைத் தூக்கிக்கொண்டுபோய் வீட்டில் வைத்துவிட்டு அங்கேயிருநான்போய்க் கன்றுக்குட்டித் தூக்கவாவென் ராஜப்பையா.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே போகிறேனப்பா வீரவாகுவே

பொது வசனம்:

இராஜன் செத்தமாட்டுக் கன்றுக்குட்டியைக்காவடிபோட்டுத் தூக்கித் தோளில்வைத்துக்கொண்டு பறையன் வீட்டுக்குப்போகிறவிதன்காண்க.

இராகம்-முகாரி-அட-தாளச்சாப்பு.

கண்ணிகள்.

சிவனே விதிவசமோ என்னே
தீவினை செய்தேனோ முப்பிறப்பில்
பவனீ சமானவர்க்கு வினை
பட்டதுமல்லாமற் பாருலகிற்
மாறு முடிதனிலே கோ
மாமிசந்தன்னைச் சுமப்பதற்கு
வீராக யென்தலையில் பிர்மன்
விதித்தவிதியோ இறைபவனே
எனவே புலம்பிக்கொண்டு மாட்
டிறைச்சியின் காவடிதோளில்வைத்து
மனவேதை யாகவேதான் வழி
மாதரைக்கண்டு விலகிநின்று
கூராள பிள்ளைகளா என்னைக்
கொண்டபுலையனூர் வீடுமெங்கே
மாறுமற் சொல்லுமென்று மக
ராஜனுங்கேட்க அப்பாலர்களும்
சாலவே சொல்லுறேன்கே ளை
தையனே அந்தாயிருக்குதென்றார்
மாலோன் றனைநினைந்து அந்த
மார்க்கமதாக வழிநடந்து
அம்மா யென்னாச்சிமாரே நா
னடிமைப்புலையனூர் வீடுமெங்கே
சும்மாநீ சொல்லுமென்று அவர்
சொல்லப் பறச்சியுமோடிவந்து

பொது வசனம்.

இப்படியாக அரிச்சந்திரன் தோட்டிவீட்டுக்குக்காவடிகொண்டுபோகச்சே தோட்டி பெண்சாதிவந்து புலம்புகிறவிதங்காண்க.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

கண்டாள் முகத்தைநந்தாள் என்னே
கர்மவிதிவசமென்று

சண்டாளனுன்னையுந்தான் வாங்கச்
சம்மதப்பட்டானோ யென்பறையன்
இருமென்றாள் திண்ணையிமேலே சும்மா
இருந்தாலுமென்மீதிற் குற்றமம்மா
விரைவாக வேலையொன்று எனக்கு
விபரமதாகவே சொல்லுமம்மா
காராம் பசுவினுட சிறு
கன்றதுசெத்துக் கிடக்குதையா
சாரங்கமாகவேதான் உரிக்கத்
தான்தெரியுமானாற்செய்யுமையா
கண்டான் பசுவின்கன்றை என்ன
கர்மவிதிவசமென்றுசொல்லி
பண்டு அயன் செய்விதியோ நான்
பாவங்கள்செய்தேனோ முப்பிறப்பில்

பொது வசனம்.

இப்படியாக அரிச்சந்திரன் புலம்பிக்கொண்டு கன்றுக்குட்டியை யுரிக்கிறவிதங்காண்க.

இராகம்-முகாரி-அடதாளச் சாப்பு.

கண்ணிகள்.

கைதனில் வாளெடுத்து முன்செய்
கர்மத்தைத் தானேமனதிலெண்ணி
இருப்பா னெழுந்திருப்பான் இதை
எந்தவிதமா யுரிப்போமென்று
ஒருகாலை மண்டியிட்டு மன
தொருமைப்படுத்தி உரிக்கையிலே
கைபதறி மெய்பதறி அவன்
கைதனில்வாளா லறுத்துக்கொண்டான்
அறியேனே யான்பாவி எனக்
காசைமனைவியும் போனபின்பு
எ[illegible]தே என்வயிறு என்று
ஏங்கியே மன்னனிருக்கையிலே

பொது-வசனம்.

இப்படியாக ராஜன் கையில் வாளாலறுத்துக்கொண்டு புலம்பிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் வீரவாகுகட் குடித்துவிட்டுவந்து அரிச்சந்திரனைத் திட்டுகிறவிதங்காண்க.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

கள்குடித்துக் கண்சிவந்து சாம்பான்
காலையும் பின்னிநடைநடந்து
போறான் மனைதனிலே அவன்
புத்தியுமெத்த மயக்கமதாய்
அடியே பறைச்சிரிச்சி நம்ம
அடிமைப்பயலுந் தான்வந்தானோடி
சண்டாளா வென்பறையா வாங்கச்
சம்மதித்தாயோடா மன்னவனை
எந்தவூர் ராஜாவோ அவ
ரெத்தனைதேசங்க ளாண்டவரோ
கண்ணையறுக்கச் சொன்னேன் அவர்
கைதப்பி வாளாலறுத்துக்கொண்டார்
போடி பறைச்சிரிச்சி உன்னைப்
பெண்பிள்ளையென்றவனேச்சுப்போட்டான்
ஓட்டமா யோடிவந்து ராஜனை
ஓங்கியேகாலாலுதைக்கலுற்றான்
காலோவலிக்குமப்பா இந்தக்
கம்பாலே யென்னையடியுமப்பா
என்றேதான் சொல்லிடவே மன
திரங்கியே உத்தமனென்றுஎண்ணி

பொது வசனம்.

இந்தப்படியாக வீரவாகுவெண்ணிக்கொண்டு இனிமேல்மயானங்காக்கிறதற்கு அனுப்புகிறவிதங்காண்க.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

ஒருக்காலும் பொய்யுரையா இவன்
உத்தமனென்று மனதிலெண்ணி

இங்கிருக்கலாகாது உனக்
கேவல்பணிவிடை வேறுமுண்டு
காசிச்சுடலையுண்டு கட்டுக்
காவலுமுண்டுநான் சொல்கிறேன்கேள்
மாண்டார்க்குக் காற்பணமும் கொள்ளி
வாய்க்கரிசி முழத்துண்டுமுண்டு
இட்டதொரு வாய்க்கரிசி நீ
யெடுத்துச்சமைத்துப் பொசித்துக்கொள்ளு
மாண்டார்க்குக் காற்பணமும் முழத்
துண்டுமெனக்குக் கொடுத்தனுப்பு
என்றுரைத்த சொல்லைமன்னன் இது
என்னவிதியிதுவென்றறிந்து
நல்லதென்று சொல்லிக்கொண்டு மன்னன்
நன்மையுடனே நடக்கலுற்றான்

வீரவாகு-வசனம்.

அகோவாரும் பிள்ளாய் நயிந்தே இவ்விடத்தில் வேலைபார்க்க உன்னால்முடியாது இந்தக்காசிச் சுடலையிற்போயிருந்து அதில்வரப்பட்ட காற்பணமும் முழத்துண்டும் நமக்குக்கொடுத்தனுப்பிப் போட்டுவாய்க்கரிசியைமட்டும்எடுத்துப் பொசித்துக் கொண்டிரும் பிள்ளாய் நயிந்தே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே போகிறேனப்பா வீரவாகுவே.

பொது-விருத்தம்.

இப்படி வீரவாகு வியம்பவே அரிச்சந்திரன்றான்
செப்பிய மொழியைக்கேட்டு தியங்கியே மனதுநொந்து
கற்பனை தானேயென்று கலங்கியே மயங்கிமேலும்
விற்பன மானமன்னன் மெய்நொந்து புலம்புவானே.

இராகம்-அபுரூபம்ஆதி-தாளம்.

கண்ணிகள்.

அம்பலத்திலுள்ளோரே அமைத்தவிதி யறிவீர்களோ
இன்பமுடன் சுடலைகாக்க வெழுதினானே பிரமதேவன்
சூரியகுலத் துதித்து சுடலைகாக்கும் பறையனாகி
சேருகிறேன் சுடலைதனில் தேசத்திலுள்ளோரே பாரீர்

சுடலைகாக்கும் புலையனுக்குத் தொண்டுசெய்துயேவல்கேட்டு
அடவிசுடுகாடுகாக்க அரும்பாவிநான் போறேனையோ.

இராகம்-புன்னாகவராளி-அடதாளச்சாப்பு.

பல்லவி

போகிறேன் போகிறேன் தெய்வமே மயானங்காக்க (போ)

அநுபல்லவி

போகிறேன்மயானங்காக்க பூவுலகோர்தானகைக்க
வாருடனேஒண்டியாகி மாதர்களுந்தான்பழிக்க (போ)

சரணங்கள்.

ஆவலுடன்தானிருந்த ஆயிழையைத்தான்பிரிந்து
பாவியாகப்போறேன்தெய்வமே மயானங்காக்க (போ)

தண்டிகையின்மேலிருந்து தாரணியாண்டதும்போய்
ஒண்டியாகப்போறேன்தெய்வமே மயானங்காக்க

நாடிழந்துநகரிழந்து நங்கைசந்திரமதியிழந்து
சோடிழந்துபோறேன்தெய்வமே மயானங்காக்க (போ

பொன்னிழந்துபொருளிழந்துபூச்சக்கிரக்குடையிழந்து
மண்ணிழந்துபோறேன்தெய்வமே மயானங்காக்க (போ

பொது-வசனம்.

இப்படியாக அரிச்சந்திரன் புலம்பிக்கொண்டு மயானம்போய்ச்சேர்ந்து புலம்புகிறவிதங்காண்க.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

தேசாதிதேசமாகப்புரிந்துநான் சீமையையாண்டிருந்தேன் இப்போ
ஆசாபாசந்தன்னையானுமறந்து அடுத்தேன்சுடலைதனில்
அம்புவிதன்னிலேசெங்கோல்செலுத்திஅரசுகள்செய்திருந்தேன்
செண்பகமாமுனி விஸ்வாமித்திராலே சேர்ந்தேன்சுடலைதனில்
ஒட்டகமீதேறிப்பட்டணமெல்லாம் நானொன்றாகஆண்டிருந்தேன்
மட்டில்லாதகடன்பட்டதினாலிப்போ வந்தேன்சுடலைதனில்
தங்கக்கிரீடந்தலையில்தரித்துநான் தாரணியாண்டிருந்தேன்ஊர்
மங்கையர்கண்டுநகைத்திடவேநானும் வந்தேன்சுடலைதனில்
ஆபரணங்களும் அஸ்தகடையமும் அணிந்துஇருந்ததும்போய்
மாபாவியாகியவிஸ்வாமித்திரனாலே வந்தேன்சுடலைதனில்

காசியில்வந் தனென்றனியைவித்துக் கடனைச்செலுத்திவைத்தேன்
கர்த்தன் செயலினால்காசிச்சுடலையைக் காக்கத் துணிந்தேனே.

அரிச்சந்திரன்-விருத்தம்.

சுட்டவன் பிணத்தோடொக்குந் தலைத்துவெந்தெரிந்தகொள்ளிக்
கட்டையும்பாடைசேர்த்துக் கால்களுமெடுத்துக்கட்டி [ட
கோட்டிலென்றெடுத்துமுன்னாள் கொடுஞ்சவங்கொணர்ந்துபோட்
கட்டிலொன்றேறிச்செங்கோல் காவலன்வீற்றிருந்தான்.

மந்திரி வசனம்.

எனதாண்டவனே ராச்சியத்திலிருந்து அரசாட்சிசெய்து வந்ததபோக இப்போது இச்சமயானத்தில் பாடைக்கொம்பு குடிசைட்டி அதிலிருந்துவரும்படி நேரிட்டதேமகாராசனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

படுமெத்தன் றுயரமெல்லாம் பார்த்துநீ மனந்தளர்ந்து
சுடலையைக் காத்திருக்கத் தொல்லைநா ளெழுத்தோவப்பா
விடுவிடு துயரம்வேண்டாம் விதியென்றே டனுபவிப்பாய்
அடுதொழில் செய்தேயிந்த அரிசியா லமுதளிப்பாய்.

மேற்படி வசனம்.

அகோவாரும்மந்திரி என்னுடனேநீயுங் கஷ்டப்படமாட்டாயென்று தடுத்துச்சொல்லியும் கேட்கவில்லை என்விதியென்னையும்விடவில்லை இந்தக்குடிசையிலிருக்கிற ஆசனையெடுத்து பசுவின்வாற்கொடுத்த அந்தச்சாணத்தில் விழுகிற அரிசியையெடுத்துசமைத்துநீயுஞ்சாப்பிட்டு எனக்குங் கொண்டுவந்து கொடுமப்பா மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியேசெய்கிறேனையா சுவாமி.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக மந்திரிசமையல் பண்ணிப்போட்டுச் சாப்பிட்டுக்கொண்டுவந்தார் இராஜனவர்சுடலைக்காத்திருந்தார்

காசிகாண்டம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

அரிச்சந்திரநாடகம்.

மயானகாண்டம்.

மதிவளர்குடையான்செய்சொல் மனுமுறைதவறுவண்ணம்
அதிசயம்படைத்தகோமான் அரிச்சந்திரன்கதைதனைப்பாடத்
துதிசெய்பொருளுங்கல்வித் தொண்டர்தன்வினையைத்தீர்த்துக்
கதிதருமூலாதாரக் கணபதிகாப்புத்தானே.

பொது விருத்தம்.

வல்லியுமகனுமந்த மறையவர்மனையிற்சேர்ந்து
சொல்லியபணிகளெல்லாஞ் சோர்வறச்செய்துபின்னும்
எல்லியோர்சாமமென்ன வெழுந்திருந்தவண்முற்றி
அல்லிருசாமஞ்சென்று ளளித்தகூழுண்ணுவாளே.

காலகண்டன் வசனம்.

அகோ வாடிசந்தி உன்னையும் உன்மகனையும் நான் விலைக்கு வாங்கினது சரிதான் என்னுடைய மனைவி சொற்படிக்கு உதயத்தி லெழுந்திருந்து சாமம் பத்துநாழிகைவரையில் சொன்னவேலைசெய்யவேணும் அதற்குப்பின் உனக்கும் உன்மகனுக்கும் ஆத்தாக்காரி கூழூத்துவாள் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு காலாகாலங்களிலே வேலைசெய்துவந்தால், யென்னகமுடையாள் சந்தோஷப்படுவாள் இல்லாவிட்டால் உன்னையும் பேசுவாள் என்னையும் ஏசுவாளடி சந்தி.

சந்திரமதி-வசனம்.

அப்படியே செய்கிறேனையா சுவாமி,

காலகண்டன் வசனம்.

அடி சந்தி யிந்தசாணத்தை யெடுத்து தட்டிப்போட்டுவிட்டு வா சாணியெல்லாம் பெருக்கடி சந்தி.

சந்திரமதி வசனம்.

அப்படியே செய்கிறனம்மா.

இராகம்-சௌராஷ்டிரம்-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

நாட்டுக்கு நாயக மாக அயோத்தியில் வாழ்ந்தேன் நடு
வீட்டெப்புலிச்சிபோல வேதியன்வீட்டினிற்சேர்ந்தேன்
வீட்டினில்வைத்த விளக்கதுபோலவே யிருந்தேன் இங்கு
மெய்யுங்கலங்கியே கொண்ட கணவனை மறந்தேன்
மெய்யுங்குளிர்ந்திடக் கஸ்தூரிபொட்டிட்ட நெத்தி எந்தன்
மேனியும்[illegible]சந்தியும் பத்தி
கோலத்துயிலாடை கொய்துடுத்திய சிற்றிடை இப்போ
கூட்டவும்வாரிப் [illegible]யுளத்துடை
சம்பங்கியென்னெய் தயிலங்கள்தேய்த்திடுஞ்சென்னி இதிற்
சாம்பலுங்குப்பையுஞ் சடைசடையாகவே பின்னி

காலகண்டி-வசனம்.

என்காணும் ஆத்துக்காரரே! சந்திரையை எதுக்காக கிரயத்துக்கு வாங்கினீர் வெறுமனே உட்கார்ந்துக் கொண்டிருக்காளே தவிர யேதனும் ஒருவேலைசெய்கிறாளா சும்மாவேயிருக்கிறாள் நீகட்டையிலேபோக வாங்க வேண்டாமென்றாலும் கேட்கிலை நீயாவேலை செய்யச் சொல்லுங்காணும் ஆத்துக்காரரே.

காலகண்டையர் விருத்தம்.

பழுதறத்தேடி வைத்த பணங்கொடுத்தாளினைவாங்கி
விழுகவாதம்போல்நீயும் வீணமுதுண்ணலாமோ
வழுவறவெண்ணெய்காதல் மனைவிசொற்படியேதானே
தொழுதுணர்வேலையெல்லாஞ் சோர்வறச்செய்குவாயே.

ஷடி வசனம்.

அடிவாடி சந்தி நம்முடைய மனையாள் சொல்லுகிற வேலையைநீசெய்துக்கொண்டு வரவேண்டும் நாளையத்தினம் நம்முடைய ஆத்திலே திதியாயிருப்பதால் உன்மகனை காட்டுக்குப்போய்காகா பிரண்டை-முன்னை-புகட்டை-விறகு-தெற்பை இதுகளெல்லாம் சீக்கிரமாய்க் கொண்டுவரச்சொல்லடி சந்தி.

சந்திரமதி-விருத்தம்.

வஞ்சகமாகநீரும் வனத்திலேசென்றுதொர்ப்பை
பிஞ்சுநற்சமித்துதன்னைப் பிடுங்கியேவரச்செல்லென்றீர்
அஞ்சுதான்வயதுமாச்சு அறியாதபாலனையா
நெஞ்சுதானிரும்போகல்லோ நீதியோயுரைப்பீர்சுவாமி,

ஷை வசனம்.

அண்ணா-வாருங்களையா சுவாமி அஞ்சிரெண்டுந்தெரியாதபால
கனைச்சே சமித்துக்கொண்டுவர வனத்துக்கு யெப்படி போவானை
யா சுவாமி,

காலகண்டஐயர் வசனம்

அடி சந்தி உன்மகனை தெற்பையெடுத்துக்கொண்டுவரச்செ
ன்னால் குழந்தை போகமாட்டானென்று சொல்லுகிறாயோடி சந்தி-

சந்திரமதி-விருத்தம்.

மறையவ ரெந்தன்பிள்ளை மனத்துணிந் தனுப்பநீரும்
சிறியவ னென்றுமுந்தன் சிந்தையிலிரக்கம்பாரீர்
வருமமு மனத்தில்வேண்டாம் வனத்துக்கு யேகியாலும்
கதியில்ல சமித்துக்கொண்டு கடுகியேவருவேனையா-

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எத்திசையும் ஆளவந்த புத்திரனையா சுவாமி அவன்
எப்படிவனத்திற்போவான் செப்புமையா சுவாமி
பத்தியுடன்பெற்றெடுத்த பாலகனையா சுவாமி இந்தப்
பாலன்வனத்திற்போக்மனம் ஒப்பாதையா சுவாமி
அஞ்சுவயதுக்குழந்தை அய்யாவே சுவாமி பால
னடவியிலெப்படிப்போவான் செப்புமையா சுவாமி
நெஞ்சிரக்கமில்லையோதா னையாவே சுவாமி உன்
தஞ்சமென்றே நான்வந்தே னையாவே சுவாமி
பல்விழுந்துமுளைக்காத பாலனையா சுவாமி அவன்
பாரினிலெப்படிப்போவான் செப்புமையாசுவாமி
கல்லுமுள்ளுங்கால்களி லழுத்துமையா சுவாமி மேலுங்
காட்டில்போகச்சொல்லலாமோ ஒப்புமோஐயா சுவாமி

...ஞ்சமேமித்திக்கப்பாதம் சேருமையா சுவாமி சிறு
பாலகனெப்படிப்போவான் சொல்லுமையா சுவாமி
வஞ்சகமெண்ணமில்லை அப்பாவே சுவாமி நான்
வனத்திலேபோய்க்கொண்டுவாறேன் க்ஷணத்தினில் சுவாமி

சந்திரமதி விருத்தம்.

போக்குரிக்க சரியாப்பாலன் போவதெப்படியோவையா
மார்க்கமு மறிகுவானோ மாதவாவென்றுசொல்லி
எக்காய் மடந்தைசொல்ல விக்ரமத் காலகண்டன்
அக்கியேயிருக்கக்கொட்டித்தெண்டனைப்போடாவென்றான்

சந்திரமதி வசனம்.

ஆண்டவா ருக்கனை ... ஐந்துவயது குழந்தையாளிதுணுமில்லை காட்டுக்குப்போய்வரத் தெரியாது அடியாள்போய்ச்சமித்துக்கொண்டு வருகிறேனையா சுவாமி.

காலகண்டன்-வசனம்.

அடி சந்தி அவன்தான் வனத்திற்போய்க் கொண்டுவரவேணும் நீவீட்டிலிருக்கிற வேலைகளைச் செய்துக்கொண்டிரு சந்தி.

சந்திரமதி வசனம்.

அப்படியேயிருக்கிறேன் குழந்தையை தேவதாசனை யாரையாவது துணைகூட்டி யனுப்புங்களையா சுவாமி.

விருத்தம்.

காட்டினிற்பாலன்போக கவலையை நினைத்துநெஞ்சம்
வாட்டிய மெழுகுபோலே மயங்கியே நிற்கும்போது
காட்டினி லயர்பாலர் சாலைக்கு போர்கள் கூடி
நாட்டிக முடனேகாட்டிற் றுணைபோகத் தொன்றினரே.

இராகம்-கன்னடா-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தார் பிராமணப்பிள்ளை வனத்திற்போக (வந்தார்

அநுபல்லவி.

அந்தணர்நாமம்போட்டு அழகாய்சோமனுடுத்தி (வந்

சாணங்கள்.

சத்திசெபதபங்கள் தானபானங்கள்செய்து
அந்தியாகுமுன்றே முக்திவனத்திற்போக(வந்தார்)

அசலாத்தும்பிள்ளைகள்-வசனம்.

ஏ தாத்தா இதோ நாங்கள் காட்டுக்குப்போய் சமித்து தெற்பை கொண்டுவரப் போகிறோம் தாத்தா.

காலகண்டையர்-வசனம்.

அடேகிஷ்ணு அடேசேஷா அடேசப்பா நம்முடைய ஆத்தில் நித்தியாசக்கு நம்முடைய கிச்சனையும் கூட்டிக்கொண்டு போங்களடா சப்பா.

அசலாத்தும்பிள்ளைகள்-வசனம்.

அப்படியே கூட்டிக்கொண்டு போகிறோம் தாதா.

காலகண்டர்-வசனம்.

அடி சந்தி இதோபாலகர்கள் காட்டுக்குப்போகிறார்கள் உன்னுடைய மகனையும் இவாள்கூட போகச்சொல்லடி சந்தி.

சந்திரமதி-வசனம்.

அப்படியே போகச்சொல்லுகிறேனையா சுவாமி.

ஷெடி விருத்தம்.

செல்வமிகு மகனைகண்டேனெ சிறுள்ள புதல்வர்களாய்
மெல்லவே வனத்திற்சென்று வேண்டிய சமித்துங்கொண்டு
புல்லது அருந்தக்கூடி பொழுதானவுடனேயன்னை
சொல்லவே லோகிதாசன் கொப்பின பசிக்குதென்றான்

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

மாதாவே பெக்கவாமிருபசிக்குதே அம்மாதாயே எனக்
கேதாகிலும்புசிக்காதாரம் சொன்னுக் கென்தாயே யென்றனம்மணி
அகோரமதாய்ப்பசி யுக்கிரமாகுதே அம்மாதாயே கொஞ்சம்
அன்னமிருந்தால் தந்தாலிட்டுச்சொல்லுந் தாயேயென்றனம்மணி
மெத்தப்பசியெனக் கக்கினியாகுதே அம்மாதாயே கொஞ்சந்
தக்தாகிலுங் கொழீத்துத்தரவேணுந் தாயேயென்தன்தாயே

முத்தானவாயாலே குத்துப்பிகேட்டாயே மகனே உன்னை
பெத்தவயிறெனக்கு பத்தியெரியுதடா லோகிதா யெந்தன்பாலகா
சிரணிமிட்டாயி தேன்குழல்விக்கிதே அம்மா தாயே பரி
பூரணியேயொரு காசாகிலுந்தாருந் தாயே யெந்தன்தாயே
காசென்றுசொல்லிக் கலங்கித்தவிக்கிறாய் மகனே நான்
காசுமுடிந்த துணியுமழியேண்டா லோகிதா யெந்தன்பாலகா
மகனையெடுத்தவள் மார்போடணைத்துமே கொண்டு அந்த
மாபாவிவேதியன் முன்பாகவேவந்துநின்று வந்துநின்று
ஐயரேயென்மகன் பசித்தழுகிறான் சாமி கொஞ்சம்
அன்னமிருந்தாக்கால் தந்துபோகச்சொல்லும்அய்யரேஎந்தன்சாமி
சாதம்வடித்து யிறக்கியிருக்குதோ சந்தி அந்த
சாப்பிட்டுவுன்மகன் சயனிக்கப்போகவோமுந்தி அடிசந்தி
சாதமென்றுசொல்லே நாங்களறிவோமோ சாமி கொஞ்சந்
தண்ணீராகிலுந்தந்து தாகந்தீர்த்துவிடுஞ்சாமி யெந்தன்சாமி
ஊருக்குமேற்கே ஆறுகுளமுண்டு அம்மனே அதில்
ஓடிப்போய்த்தண்ணீரை வாரிக்குடிக்கச்சொல்லும்மைந்தனுடன்
[மைந்தனை

சந்திரமதி வசனம்.

என்னருமைக் குழந்தாய் நீபாலுக்கு சர்க்கரை வேணுமென்று கேட்டதுபோகக் கூழுக்கு உப்புமில்லாமற்போலாயிற்றுகாண் இப்பேர்ப்பட்ட கஸ்தியடையவேண்டியதிருக்கிறது தெய்வதாசா.

லோகிதாசன் விருத்தம்.

கரிபரிகுழுங்காட்டில் கடுகிடுவென்றானாலும்
பரிவுடன்சமித்துதர்ப்பை பங்குடன்கொய்துவாரேன்
தெரியவேசொன்னேனம்மா சிந்தைகள்மயங்கவேண்டாம்
அறிவுடனமயங்கிடாம லனுப்புவாயனுப்புவாயே.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வனம்போகவேனும் மணி மாதாவேதாயே (வனம்)

அநுபல்லவி.

சுணைப்பொழுதிலிப்போது தாயே போயிட்டுவாரேன் (வன)

லோகிதாசன் தர்ப்பைகொய்யபோகிறபாகம்.

அசலாத்தப்பிள்ளோன். லோகிதாசன். சந்திரமதி.

சரணங்கள்.

சங்கர அரகரா பொங்கர வணிபவா
சாம்பசதாசிவ னருளினாற்பெற்றதாயே (வண)
கரிலகண்டிடத்தில் கடுகவிலைகளானேம்
காசிவனத்திற்சென்று பேசியதெதனைக்கொய்ய (வண)
சதியாககாமனையோத்தி கணையாண்டோம்
மதிதயனருளிய மாதேயென்தாயே (வண)

லோகிதாசன் வசனம்.

அகோ வாருமம்மா தாயே காட்டுக்குப்போய் வேண்டிய சமித்து தெம்பைகளை பரித்துக்கொண்டு வருகிறேன் ஏன் மனவருத்தப்படுகிறாயம்மா தாயே.

சந்திரமதி-விருத்தம்.

தன்னகரைவிட்டிருந்த சடவொன்றில்லை
நாசவனத்திற்பட்டிருந்த சடவொன்றில்லை
சொன்னமதாம்வெள்ளைவித்த சடவொன்றில்லை
கந்தரவேளாகித்தபூத சடவொன்றில்லை
மன்னர்மன்னர்பதம்பணியும் ராஜபோஜன்
மண்டலமெல்லாமரசு கொண்டவேந்தன்
என்னைவிட்டு அவ்விடத்த மையாமெத்த
வென்றருறுதாள் சந்திரமதி மகனைநோக்கி.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

கண்ணிணையெல் கண்மணியே எந்தன்
கட்டாணிமுத்தே மரகதமே
பொன்னே நவமணியே ராஜ
புத்திரனேயெந்தன் வைத்துணையே
சொன்னசொல் மீறுதடா புத்தி
சொல்லுகிறேன்கேளடா யென்மகனே
பரசவணந்தனிலே நல்ல
பாம்புகளுண்டடா கண்மணியே

தூரத்திற்போகாதே வருந்
தோழரைவிட்டு விலகாதே
புத்துமேலேருதடா அங்கே
புத்தடிநாகங்கள் மெத்தவுண்டு
பத்திக் கடிக்குமடா வரும்
பாலரையிட்டு விலகாதடா
கானகத்தினிலேதான் விஷக்
காஞ்சிரங்காய்களும் மெத்தவுண்டு
தான்தேசிக்கா யெனவே அதைத்
தானேபரித்துநீ தின்னாதடா
வெங்கை கரடியுண்டு அதை
வெட்டுவமென்றுநீ போகாதடா
ஓங்கியடித்திடுமே கண்டால்
ஓடியொதுங்குவா யென்மகனே
பாங்காகப் போகையிலே சகுனம்
பார்த்துக்கொண்டுபோடா யென்மகனே
தீங்காய்ச் சகுனங்கண்டால் நீ
சீக்கிரமிங்கே திரும்பிவிடு

சந்திரமதி-வசனம்.

அடாபாலா உன்னை காட்டுக்குப் போகச்சொல்லவுங் கலம் வந்ததே நீபோகும்வழியில் [illegible] பார்த்துக்கொண்டுபோய்ச்சீக்கிரம்வாவேணும் லோகிதாசா.

லோகிதாசன்-விருத்தம்.

அமைத்திடும்விதியினாலே அத்தனைக்கடிமையானோம்
நமக்கொருசகுனமுண்டோ நாட்டுள்ளோர்நகைத்திடாரோ
சுமைக்கநான்விறகொடித்துத் துரிதமாய்வருவேனம்மா
உமக்கொருதுயரம்வேண்டா முண்மையாயிருந்திடாயே.

ஷை வசனம்.

அதோ வாருமம்மாதாயே நீயொன்றுக்கும் அஞ்சவேண்டாம் நான்காட்டுக்குப்போய்விட்டு சீக்கிரம் வந்துவிடுகிறேனம்மணி,

சந்திரமதி-விருத்தம்.

வல்லமையானவிப்பிர மைந்தனோபாலர்தம்மை
மெல்லவேகூட்டிச்சென்று விறகுடன்சமித்துதெற்பை

புல்லுடன்பிரண்டைகொண்டு பொழுதுடன்வருவீரென்ன
சொல்லியேயவர்களுக்குச் சுகிர்தமேயுரைக்கின்றேனே.

இராகம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

காத்தருளுந்தோழரே யென்னுடகண்மணிலோகிதனை

அநுபல்லவி.

வேறொருதுணையில்லை காத்தருள்வதுநீரே
விட்டுப்பிரிந்திடாமற் கிட்டத்திருந்துநீங்கள் (கா)

சரணங்கள்.

அரசுபதியிழந்து அரசனுமென்னைவிட்டு
ஆருந்துணையில்லாத அரும்பாவியானேனே (கா)
பிரியமுடனேயித்தப் பிள்ளைகதியில்லாம
பின்னொருகதியில்லை அன்னைபோல்மனம்வைத்து (கா)

சந்திரமதி-வசனம்.

அய்யோவாருங்க ளையமார்களே என்னுடையபாலகன் உங்கள்பின்னாலே வருகிறபடியால் அவனுக்கு சாப்பிடுகிறதற்கு சாதமுங்கிடையாது ஆகையால்நீங்களாவது கொஞ்சசாதங் கொடுத்து காணா பிரண்டை முன்னமுகட்டை விறகு தெற்பை யிதுவெல்லாம்பரித்துக்கொடுத்து உடனே கூட்டிக்கொண்டுவந்து சேர்க்கவேணுமையா அய்யமார்களே.

ஐயமார்கள்-வசனம்.

அப்படியே கூட்டிக்கொண்டுபோய் சாதமுங்கொடுத்து வேண்டியசமித்து தெற்பைகளும் பரித்துக்கொடுத்துக் கூட்டிக்கொண்டுவந்து சேர்க்கிறோமம்மணி.

லோகிதாசன்-வசனம்.

ஆனால் இருமம்மாதாயே நாங்களெல்லோரும் போய்விட்டுவருகிறோமம்மாதாயே.

சந்திரமதி-வசனம்.

யாவர்களும் மகராஜனுகப் போய்விட்டுவாருங்கள்.

பொது விருத்தம்.

கலைதனை யிரச்சிக்கட்டி கையிலே அரிவாளேந்தி
தலமுயர் காசிமாநகர் சதுர்மறைப்பாலனோடே

மலைவளர் வனத்தைநோக்கி மைந்தனும் வழியைக்கூடித்
திலைமக னேகும்போது சந்திரமதிசொல்வாளே.

இராகம்-தன்னியாசி-அட-தாளசாப்பு.

கண்ணிகள்.

வீடுகடந்து வெளியேபோகையில் விச்சுளிகத்துதடா
நாடுகடந்து காடுகடக்கையில் நல்லபாம்போடுதடா
காட்டுக்குப்போவோ மென்றேயடிவைக்கையில்காகமுங்கட்டுதடா
கேட்டுடைக்கும் வழிதனிலேகலம் கீசருடனுங்கட்டுதடா
ஓடிநடக்கும் வழிதனிலேவந்து ஓரிகுறுக்கிடுதே
சோடியதாகவே செம்போத்துவந்து தூரத்திற்கட்டுதடா

சந்திரமதி-வசனம்.

அடா குழந்தாய் தேவதாசா வீடுகடந்துவெளியேவரும்போது பொல்லாச்சகுனமாக யிருக்குதே தேவதாசா.

லோகிதன்-வசனம்.

அம்மா வாருமம்மாதாயே எனக்கெல்லாம் சகுனமேதம்மாசீக்கிரம் போய்வருகிறேன் விடைகொடுமம்மா தாயே.

லோகிதன் காட்டுக்குப்போம்

அறுவத்தொன்றாம்பாகம்.

லோகிதன்-விருத்தம்.

பலபலகத்தைதன்னைப் பாலனுமெடுத்துக்கொண்டு
சிலசிலபழுதைகயோடுஞ் சித்தருவாளுங்கொண்டு
பெலமிலாக்கையுங்காலும் பின்னியாடையுமாகத்
தலைமகன்தாயைவிட்டுத் தான்காட்டுக்கேகுவானே.

இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

காட்டுக்குப்போவோம் வாருங்கோ அண்ணமாரே
காட்டுக்குப்போவோம் வாருங்கோ

அநுபல்லவி.

காட்டுக்குப்போயிராமல் காராபிரண்டை கொண்டு
வீட்டுக்குவந்து விளையாடித்திரியலாம் (கா)

சரணங்கள்.

நாட்டிகமாகவேதான் தார்வனந்தனிற்சென்று
காட்டில்விறகொடித்துக் கூடிவந்துசேருவோம் (கா)

லோகிதாசன் விருத்தம்.

பாலனுந்தோழரோடே பயணமாய்ப்போகும்போது
சிலதாங்கருடன்காடை வெண்பநப்பூனைசாரை
ஏலவேமுன்பாய்வந்து யிடறுதேசகுனமென்ன
காலமோவென்றுமைந்தன் கதறியேபுலம்புவனே.

இராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

ஊரைவிட்டுப்புறப்பட்ட [illegible] தோழமாரே-இப்போ
ஒவ்வாச்சகுனங்கள் கண்டேனேயென்செய்வேன் தோழமாரே
காட்டுமுயலுங் குறுக்கிட்டு ஓடுதே தோழமாரே-இந்தா
காகம்யிடமாச்சேகருவாவிவலமாச்சே தோழமாரே

லோகிதாசன்-வசனம்.

அகோவாரும் என்தோழமார்களே வீட்டைவிட்டும் புறப்படும்போது சகுனமானது சரியாயில்லை வீட்டைக்கடந்து காட்டுக்குள்வருகையிலும் சகுனபேதகமா யிருக்கிறது யென்செய்வேன் தோழமார்களே.

அசலாத்துப்பிள்ளைகள்-வசனம்.

அகோவாருமப்பா தேவதாசா நாங்களும் சகுனபேதகமாகக் கண்டோமப்பா தேவதாசா.

லோகிதாசன் வசனம்.

அகோவாரும் என்தோழர்களே நீங்களென்ன சகுனங்கண்டீர்கள் அதையெனக்கு சொல்லவேணும் தோழர்களே.

இராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

பாதைவழியே நடந்துவருகையில் தேவதாசா-அந்த
காதையைச்சொல்கிறேன் கவனமாய்க்கேளடா தேவதாசா
வேதையாயொருபெண்ணும் விழுந்துஅழுகலாச்சே தே-அப்போ
வாதைதட்டுக்கொண்டு சும்மாயிருந்தோமோடா தேவதாசா
ஊரைக்கடந்து வருகையிலேஅப்பா தேவதாசா-ஒரு
சாரைகுருக்கிட்டுத் தான்போகக்கண்டேன்டா தேவதாசா
காகங்குருக்கிட்டு கட்டவுங்கண்டேன்டா தேவதாசா-இப்போ
வேகமாயொருபூனைகுருக்கோடக்கண்டேன்டா தேவதாசா

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

அகோ வாருமப்பா தேவதாசா நாமானல்காட்டுக்குப் போகிறோம் சகுனபேதகமாயிருக்கிறது மேலையே காசிப்பட்டணந்திரும்புவோம் பிள்ளாய் தேவதாசா.

லோகிதாசன்-வசனம்.

அப்படிக்குநாம்திரும்புவோமேயானால் சத்தியத்துக்குப்பங்கம் வரும் உள்ளபடியிருக்கிறது சும்மாபோவோம் வாருந்தோழர்களே

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

உந்தனுக்கவடந்தம்பி உலோகிதாசாநீதான்கேளாய்
வந்ததோர்விபரமெல்லாம் வகையதாய்ச்சொல்லவேணும்
தந்தைதாய்சேயுமாகத் தரணியையிழந்தாமப்பா
இத்தமாதேரில்வந்த தின்னதென்றுரைசெய்வாயே.

இராகம் முகாரி-ஆதிதாளம்.
கண்ணிகள்.

என்னென்றுசொல்லுவேனெங்கள்தலைவிதியை ஐயமாரே-என்னை
ஈன்றவரிச்சந்திர மகாராஜனென்பார்கள் ஐயமாரே
தன்மையாயெனைப்பெற்றதாய்சந்திரமதியென்பார் ஐயமாரே-நாங்கள்
சத்தியந்தவறாமல் தரணியையாண்டிருந்தோம் ஐயமாரே
வஞ்சனையால்விஸ்வாமித்ரமுனிவர்வந்தார் ஐயமாரே-அவர்
யாகத்துணையாகவொன்று செய்யத்தான்கேட்டார் ஐயமாரே

மகிழ்ந்துகொடுத்தாரதைவாங்கிவைத்தப்போனார் ஐயமாரே-பொல்லா
மாயமிருகங்களால் வனத்தையழிக்கவிட்டார் ஐயமாரே
கொடியநீச்சப்பெண்ணைக்கூடிப்புணரச்சொன்னார்ஐயமாரே-அவர்
கூடாதெனவயோத்தி நாடெல்லாம் வாங்கிக்கொண்டார்ஐயமாரே
வாங்கிக்கொண்டுமுன்னேஸ்வத்தபொருள்கேட்டார்ஐயமாரே-காசி
மறையோர்க்கெங்களைவிற்று மாமுனிகடன்தீர்த்தார் ஐயமாரே
மந்திரியுமவரும் மறுதேசம்போனார்கள் ஐயமாரே-எந்தன்
மாதாவும்நானுமாய் மறையோர்க்கடிமையானோம் ஐயமாரே
சற்றுமிரக்கமுந்தாட்சண்ணியமில்லாமல் ஐயமாரே-எந்தன்
தாய்க்குக்கொடியவேலைசமைத்தார்கள்செய்கின்றாளையமாரே
குழந்தையென்றெந்தனைக்குறியாமலுங்கள்பின்ஐயமாரே-காட்டிற்
கூடப்போய்விறகுகள் கொண்டுவரச்சொன்னார் ஐயமாரே
தாயும்நீங்களென் தந்தையும்நீங்களென் ஐயமாரே-பிர்மா
தலையிலெழுதினது தப்புமோவெவருக்கும் ஐயமாரே

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

அடாய் தே[illegible] சுப்பா காணு இவனுடைய சங்கதியை கேட் [illegible]தில் மெக்கு விசனமாயிருக்கிறது ஆகிலும் நாமானால் காட்டுக்கு வந்துவிட்டோம் பசிரம்ப ஆய்விட்டது கட்டமுதைசாப் பிட்டுப் போட்டு வேண்டிய சமித்துக்களை பரித்துக்கொண்டு போவோம் வாங்களடா.

சுப்பு வசனம்.

அப்பா தேவதாசா நாங்கள்கட்டமுது சாப்பிடப்போகிறோம் நீ வெருணே வந்திருக்கிறாய் இந்தமரத்தடியில் சற்றேயிருநாங்கள் சாதஞ் சாப்பிட்டு மீதமிருந்தால் போடுகிறோமப்பாதேவதாசா.

லோகிதாசன்-வசனம்.

அப்படியேயிருக்கிறேன் கொஞ்சஞ்சாதங்கொடுக்கவேணு க்கோதாபுக்களே.

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

மீதமிருந்தால்போட்டுக் தருகிறோம்பிள்ளாய் தேவதாசா.

அசலாத்துப்பிள்ளைகள் சாப்பிடுகிறபோது வசனம்.

அடா சுப்பா அடா சேஷா உங்காத்தில் யென்னகறி யெங்காத் திலென்னகறியென்று பேசிக்கொண்டு முற்றிலுஞ்சாப்பிட்டார்கள்

யோகிதாசன் வசனம்,

அகோ தோழர்களே யெனக்குப்பசி அதிகமாயிருக்கிறதையெப்படியாகிலுங் கொஞ்சஞ் சாதந்தரவேணுந் தோழர்களே.

அசலாத்துப்பிள்ளைகள், வசனம்.

அப்பா தேவதாசா சாதங்கொஞ்சங்கூடமீதமில்லை வீட்டுக்குப்போனால் சாப்பிட்டுக்கொள்ளுவோமப்பா தேவதாசா.

ஷை. வசனம்.

அடா சேவகா சுப்பா யோகிதாசா நாமானுல்லவனத்துக்கு வந்து வெகுநேரமாய்விட்டது சீக்கிரம் அவரவர்கள் விறகு முன்னை முட்டைகள் வேண்டியதுகளைப் பறியுங்கடா சுப்பா.

விருத்தம்.

காட்டினிற்பாலரோடு கடுகவேவிறகுகட்டி
வீட்டுக்குவருகும்போது வேறுபேர்சொன்னதெல்லை
தீட்டுமாய்க்கொண்டுவாரேன் ஒருத்தனுப்போயினாலும்
[illegible] சீக்கிரம் [illegible].

ஷை. வசனம்.

அகோ வாருங்கள் தோழர்களே காளா பிரண்டை முன்னைமுசுட்டை விறகு முதலானதெல்லாம் பறித்துவிட்டேன் தெங்கை கொய்ய மறந்துபோய்விட்டேன் இதோ சீக்கிரம்போய்வருகிறேன் நான்வருமளவாயிலும் நீங்களெல்லோரும் இந்தவிடத்திலே யிருங்கள் தோழர்களே.

யோகிதாசன் விருத்தம்.

சித்தடிச்சிறுவரெல்லாருஞ் சேர்ந்துமேகிழவில்நிற்க
பத்தியாயவர்கள்தன்னைப் பணிந்துபோய்தேவதாசன்
சுத்தியோனாலுநின்றுஞ் சுருக்கினில்தேடிபோய்க்
கத்தியோ [illegible] கைநிறைய [illegible].

ஷை. விருத்தம்.

மருவியேயோகிதாசன் வனமெல்லாந்திரிந்துசுற்றி
வெருவியேமனக்கலங்கி வெகுதம்பியேயழுதபாலன்
சருவியபுற்றோரத்தில் தானுமேதெத்தைதன்னை
அருள்வனத்தன்னிலெங்கு மன்புடன்தேடுறானே.

இராகம்-க்ருட்டி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

தேடினேன் தேடினேனே தெர்ப்பைப்புல்லைத்
தேடினேன் தேடினேனே.

அநுபல்லவி.

தேடியெங்கும்லோகிதாசன் வாடியே மனங்கலங்கி
காடியயக்கத்திற்சென்று ஓடியே தெற்பைகாணமல் (தேடி)

சரணங்கள்.

பத்தினிசந்திரமதியாள் பாதமதையெண்ணிச்
சத்தியேசாவதிக்கும் வெத்தியாய்வடபுரக் (தேடி)
மாயையேர்விஸ்வாமித்திர மாமுனிசெயலோவென்று
வேகமாய்த்திரிந்துதேடி வெதும்பிமனதுவாடி (தேடி)

பொது விருத்தம்.

தேடியேதிரியும்போது சிறந்தபுற்றடியின்கீழே
மூடியதெற்பைப்புல்லை முன்னெடுத்திட்டதாலும்
ஓடியேவருகும்போது உயர்ந்தகோசிகனார்மாயை
நாடியேயிருந்தசர்ப்பம் சலமுடன்வந்ததன்றே.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

பாம்புவந்ததையா பழிகாரப் பாம்புவந்ததையா

அநுபல்லவி.

வீம்பினால்முனி விடுத்ததேயல்லால்
மேவியதெற்பைக்குள் தாவிக்கடித்திடப் (பாம்பு)

சரணங்கள்.

ஐயமார்தனைவிட்டு ஆரண்யந்தனில்வர
பையவேதெற்பைக்குள் பாலனைத்தீண்டிடப் (பாம்பு)
ஆருமுதவியில்லா ஆரண்யந்தன்னிலே
பாரப்புற்றினில்நாகம் படமெடுத்தாடியே (பாம்பு)
செடிசூழ்ந்தகாட்டிலே தெற்பைக்குள்ளேயிருந்த
படமெடுத்தாடியே பாலனைத்தீண்டிடப் (பாம்பு)

லோகிதாசனை அரவந்தீண்டுகிறபாகம்.

வனம் லோகிதாசனை அரவம்தீண்டுகிறது அசலாத்துப்பிள்ளை

பொது-விருத்தம்.

வுத்தரத்தப்பாம்பு தானும் வளைகயுடனிருக்கும்போது
சித்தையுமகிழ்ந்துபாலன் தெற்பையினருகேசென்று
வித்தையாய்க்கொய்யக்கண்டு வேகமாயெழுந்துசீறி
தத்தல்கள்முறிந்துபோகத் தாவியேகடித்ததையோ.

இராகம்-தோடி-அடதாளச்சாப்பு

பல்லவி.

அய்யய்யோ நானென்னசெய்குவேன்
அரவமெழுந்துகரமதனிற்கடித்ததே (அய்)

அநுபல்லவி.

மெய்யினில்விஷமீறுதே மீறிமனதுதடுமாறுதே
செய்யவிழிகள்சோருதே என்ன செய்குவேனுயிர்போகுதே (அய்)

சரணங்கள்.

அய்யயோவிடஞ் சொல்லதாரிபோ
ஆதரவுயெனக்கேது யே
அன்னையர்க்குரை செய்யுமாதனே
ஆதரவாரிங்கே சோதனே வேதனே (அய்ய)

என்னகொடுமை என்ன காலமோ
இப்படி வந்ததென்ன கோலமோ
எங்குமுடம்புநோக வாகுதே
என்னசெய்வேனுயிர் போகுதே (அய்ய)

இராகம்-செஞ்சுருட்டி-அடதாளம்.

கண்ணிகள்.

அரவமென்கரம் அதனைத் தீண்டிற்றே
அய்யோவென்னசெய்குவேன் இப்போ
அய்யர்க்காசுத்தெந்தை பொய்த்திடும்போதினி
லதற்குள்ளேயிருக்குதே சிவனே அதற்குள்ளேயிருக்குதே சிவனே
அடியனேயேகொடியரவம் அலைந்தெரியச் சினமுடனே
ஆதரப்பதரச் சிதரக்கத (அர)
கையினில்விஷ மீறியென்சிரம்
கண்டமட்டும் ஏறுதே இப்போ

கூாலுந்தமோற மேலும் பதறுதே
கண்கள்பஞ்சடையுதே சிவனே கண்கள்பஞ்சடையுதே
கடுகவரு விடர்வினைப் படுபூழியேன் நடுவினைக்
களைவருதே விழவருதே கடிய கொடிய அரவுகடியால் (கை)
தெற்றையொாய் நாதன் வருவோனென்றன்னை
தேற்றியிருப்பாளே இந்தச்
சேதிகேட்டாலுயிரைப் போக்குவாள்
தெய்வமேயென்னசெய்வேன் சிவனே தெய்வமேயென்னசெய்வேன்
தேறுதலை யார்சொல்லுவா ருரிமையுற ருரிமையே
சிறுவருரு கருமமுரு சிப்பவன்வர விதிவெனமுன் (தெற்)

அசலாத்தாப்பிள்ளைகள்-விருத்தம்.

ஏன்னடா அண்ணமாரே விட்சணம் வாரோமென்று
சொன்னதோர் லோகிதாசன் சுருக்கிலில் வருவதாரேனும்
அன்னோர் முன்னயேதான் அனுப்பினுள் பதனமென்று
சொன்னசொற்படிக்கு நாமன் தேடிக்கேப் பார்ப்போம்வாரீர்.

வேடி வசனம்.

அடா சேஷா சுப்பா யின்னேரம்வரையிலும் தேவதாசனைக் காணோம் அவனன்னையும் நம்மள் துணையாக அனுப்பினுள் ஆகையால் நாமன்போய்த் தேடிப்பார்ப்போம் வாங்களடா சுப்பு.

பொது வசனம்.

இப்படியாக லோகிதாசனைக் காணுமென்று அசலாத்தாப்பிள்ளைகள் அத்தவனத்தில்தேடி லோகிதாசனைக் கண்டார்கள்.

லோகிதாசன்-விருத்தம்.

வடத்தினிக் [illegible] மருவிப்போய் வள்ளல்வீழ்ந்த
இடத்தினி லருகில்வந்து மெள்ளஆற அமைவேயெனைப்
படத்தினுற் பெரியநாகம் கடித்தது பாருமென்று
விடத்தினி லறிவுசேர்ந்த விபரத்தை யுரைக்கின்றுனே.

இராகம்-உசேனி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

அப்போ அண்ணமாரே யானுருக்கதென தம்பக்குள்ளே
அரவமிருக்கிதெனத் தீண்டிட லாச்சே தோழமாரே
மெய்யும்கனங்குதே எந்தன் விழிநீர்சொரிகிறதே
மேலும்கடுக்கிறதே எந்தன்விதியோ தோழமாரே

பொன்னுமுடி சூட்டி நாங்கள் பூமிதனையாண்டோம்
பின்னுமென்னகாலமிது பிரமாசெயல்தானோ
ஆதியிலேவரும்போதிங்கே ஆர்தையலமிட்டதோ
அதுவின்பலனவாச்சுதென் றறிந்தேன்தோழமாரே
அன்னையிதையறிந்தாற் பிரண்டழுவாள்முட்டிவிழுவாள்
அன்னையைமனந்தேற்றுவீர்மனதாற்றுவீர்தோழமாரே

லோகிதாசன் விருத்தம்.

பிறந்தேனுனைப்போற்றி யுலகையாளப்
பெற்றெடுத்ததாய்தந்தை முகம்பாராமல்
இறந்துபோறேனரவு கடித்தகாலே
இனிப்பிழைப்பதரி தென்றே னியம்பக்கேளீர்
அறம்பெரியமாதவர் வீட்டத்திற்சென்று
அவன்வயிற்றில்மறுஜென்மம் பிறப்பேனென்று
மறந்துவிடுமகனையென்று தாய்க்குச்சொல்லி
வாராமல்நிறுத்துவது வசந்தனனடோ.

இராகம்-வராளி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

அய்யோகாவென்னசெய்வோம் லோகிதாசா — உன்னை
அவத்தில்விட்டுப்போகவேதான் கூட்டிவந்தோம்
தையலாள்சந்திரமதிக் கென்னசொல்லுவோம் — உன்னைச்
சர்ப்பனையாக்கடித்ததையோ கிருஷ்ணசர்ப்பமும்
வருகையிற்பொல்லாச்சகுனம் ஆச்சுதென்றுமே — இப்ப
வருந்துதேதசகுனப்பல னுன்தன்பக்கிலே
ஒருவனுக்குன்னை விட்டுப் போகத்தகுமோ — இப்ப
ஒதுங்கிமலைசேருமுன் பதங்களிலவன்.

லோகிதாசன் விருத்தம்.

கயிலைதனில்வாழ்சிவனே னுமைதான்வாழ்கக்
கடவுளருந்தேவர்களும் வசிட்டர்வாழ்க
வயனமடுகோசிகரான் னூழும்வாழ்க
மாசிலாஅயோத்திநகர் வளமும்வாழ்க
மயிலனையாள்சந்திரமதி கற்பும்வாழ்க
மன்னவனரிச்சந்திரன் சத்தியம்வாழ்கச்
செயலருளியெனக்குமுத்தி தருவாயீசா
சிவசிவாயென்றுமைந்தன் சிவித்தானே.

விருத்தம்.

ஆவிபோயகன்றபின்பு அனைவரும்பாரட்டிப்பார்த்துப்
பாவியே அய்யோயிந்தப் பாலகனிறந்துபோனான்
மேவியவிடத்தின் வீழ்வர் தவராவர்விழுந்துகொண்டு
காவியங்கழனீர்சூழுங் காசியம்பதிப்புகீர்.

இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

வீட்டுக்குப்போவோம்வாருங்கோ அண்ணமாரே
வீட்டுக்குப்போவோம்வாருங்கோ

அநுபல்லவி.

வீட்டுக்குப்போயிராமன் விறகுக்கட்டையும்போட்டுக்
காட்டில்நடந்தசேதி கதையாகச்சொல்லவேணும் (வீட்)

சரணங்கள்.

காசிநகரைவிட்டு நேசமாய்க்காட்டில்வந்தோம்
மாசில்லாலோகிதனும் நாசமாய்மாண்டுபோனான் (வீட்)

சோதனையாய்ப்பாலன் துயரமாய்ச்செத்ததெல்லாம்
வேதியரிடத்திற்போய் விதைதயாய்ச்சொல்லவேணும் (வீட்)

உத்தமன்தன்சொன்ன சொல்தவறாமலேதான்
பத்தினி சந்திரமதி பாவையர்க்குச்சொல்லவேணும் (வீட்)

பொது வசனம்.

லோகிதாசன் இறந்துபோனதை அசலாத்துப பிள்ளைகள் பார்த்து இனிமேலென்னசெய்கிறதென்றெண்ணி இலை தழைகளைப்பறித்து வரும்வழியிற் போட்டுக்கொண்டு வரும்பொழுது சந்திரமதி சிறுமூக்கை இன்னம் வரவில்லையேயென்றுயெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதைக்காண்க.

சந்திரமதி விருத்தம்.

பாலர்வந்தாரிற்புக்கார் பானுவுங்கடலிற்புக்கான்
மாலைவந்திறுத்தபின்னர் வழியினைநோக்கியன்னை
பாலன்வாறிலையென்றேங்கிப் பரதவித்தழுதுநொந்து
காலமோவென்றுவாயிற் கடைத்தலைவந்துபார்த்தாள்.

ஷடி விருத்தம்.

போனமகன் இன்னம்வரக் காணேனென்பாள்
பொழுதுபோச்சிவருநேர மாகுதிப்போ
ஞானமறையோன்வீட்டில் வேலைசெய்ய
நடுச்சாமவேளையுமாடு நடந்தேதோழர்
ஆண்மையுடன்வந்தாரோ யிலேயோவென்று
அகம்புகுவள்வெளிப்படுவள் ஐயோவெங்கும்
சனமெனக்கன்றிழந்த பசுவைப்போலே
இயங்குவாள்மகனையெண்ணித் தியங்குவாளே.

இராகம்-முகாரி-ரூபகதாளம்.

பல்லவி.

வனம்போனமகன் வரக்காணேன் மனம்பொங்குதே அய்யய்யோ

அநுபல்லவி.

வனம்போனமகன் வரக்காணேனேயென்செய்வேன்
வழிதனிலேயுங்காணேனே வகையொன்றுந்தெரியிலே (வனம்)

சரணங்கள்.

கனவிலுமறவேனே பாலா எந்தன்
நினைவிலும்வரவில்லை சீலா
கனவிலும்மறவேனே கண்மணிலோகிதனே
குணமில்லா அய்யரிடங் கூலிக்குவென்சொல்வாரோ (வன)
பசியாற்களைத்துமகன் போனான் இப்ப
நிசிவேளையாகுதே காணேன்
பசியாற்களைத்துமகன் படுத்தானோகானகத்தில்
பாம்புபுலியிருக்கும் பாரவனந்தனிலே (வன)
தோழரைவிட்டுப் பிரிந்தானோ காட்டில்
துன்பப்படமுனி செய்தானோ
தோழரைவிட்டுப்பாலன் துயரமாய்நின்றானோ
பாழானவனந்தனிற் படுத்தானோபாலகனும் (வன)

பொது-விருத்தம்.

அந்திநேரமுந்தானச்சு அடவியிற்போனபாலன்
இந்தநள்ளிருட்டிலேதான் இந்நேரமவனையுங்காணேனும்
முந்தியேமறையோன்சொன்ன மொழியுமேமனதிலெண்ணி
சந்திரமதியுமிப்போ தயங்கியேமயங்குவாளே.

இராகம்-பரிசு-தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னம்வரக்காணேனே எத்திசை[illegible]த்துப்போனமகன்
எத்தனை தூரஞ் சென்றானோ (இன்)

அநுபல்லவி.

அன்னமென் றமுதபாலனென்னமாய்வனஞ்சென்றானோ
சின்னவயதுள்ளவெந்தன் கண்மணியானமைந்தன்
சிறுவனித்தப்பெருவனத்தி லொருவனாய்த்திரியானோ (இன்)

சரணங்கள்.

பாலனைப்பிரிந்தானோ பாதையைமறந்தானோ
பட்டபாட்டையெண்ணியெண்ணி விட்டானோவுயிர்தனை
பாலகனும்வேலையினால் காலயர்ந்தின்றிட்டானோ (இன்)

தாமதம்வரானோ தான்பசித்தானோ
தயங்கிமயங்கி மகன் தரையிலுறங்கினானோ
சதிமுனிச்சந்நிதியெதிலோ அறுவர்யென் இறைவனையும் (இ)

இராகம்-அசாவந்தி-தாளம்-ஆதி.

பல்லவி

எப்பமகன் [illegible]வருவானோ வ[illegible]த்தென்மனம்
ஒப்பமுத்[illegible]ந்தருவானோ

அநுபல்லவி.

எப்பமகன்வருவானோ பொன்கலியைத்தீர்ப்பானோ
என்னதக்குக்காண்பேனோ வெந்தனருமைமகன்
இப்படிவேதியர் சொற்படிபோனதன் (டப்)
விற்பனமாகவே தெற்றைமெய்யாயறிவேனோ

சரணங்கள்.

பொழுதோடிப்போகு தெல்லையே எந்தனுட
பிள்ளைவரவு இல்லையே
போட்டவிருவிதிவர மாட்டானென்மைந்தனும் (எப்ப)
கோட்டானேவந்தென்னை நீட்டமாயலறுதே
பிள்ளைகளுடன்கூடியே மனதிரங்கி
போகவும்மனம்வாடியே
புத்திரன்வனமதில் பத்திரமெடுக்கையில்
சித்தமாமுனி மித்திரஞ்செய்தானோ

அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்.

பஞ்சினிற்பட்டதீப்போல் பாலருமலறிக்கொண்டு
அஞ்சியேவருங்கைக்கு அடையாளந்தலைமுகள்போட்டு
நெஞ்சினிற்றயராதீர்தாட்டே கெடுத்தூரம்வாரபோது
சஞ்சலத்துடனேசந்திர மதியுமேகண்டாளப்போ.

சந்திரமதி-விருத்தம்.

மக்களாவுங்கள்பின்னே மைந்தனைவரவுங்காணேம்
ஒக்கவேயழைத்துப்போன லோகிதனெங்கேயப்பா
திக்கெனவென்வயிற்றில் தீக்கனூமூட்டிடாமல்
பக்கெனவுடற்தயோதி பகருவீரய்யமாரே.

இராகம்-பியாக்-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கள்மகன் லோகிதன் எங்கேகாணோம் (எங்)

அநுபல்லவி.

உங்கள்பின்வந்தானே உண்மையாய்ச்சொல்லுங்கள் (எங்)

சரணங்கள்.

பசியாற்களைத்துமகன் போனானோ அய்யா
பாதகியான்கேட்கப் பாலரேசொல்லுங்கள் (எங்)

வழிதிசைதப்பிமகன் போனானோஅய்யா
மன்னீர்யோர்கள்பாலரே மைந்தரேசொல்லுங்கள் (எங்)

பறக்கும்பட்சிகளினல்வாய்சொன்னாகஇரைதேடி
இருக்குமேமதாலதான மெல்லாம்வைத்திருந்தோடி (எங்)

சந்திரமதி-விருத்தம்.

வணங்கியகரத்தாற்சால வாடியேமனத்தால்மக்காள்
இணங்கியும்முடனேவந்த என்மகனெங்கேயென்றாள்
மணங்கமழ்குழலாயுத்தன் மைந்தனையரவுதீண்டி
குணங்கியேயிறந்தானென்றார் குபீரெனத்துவீழ்ந்தாள்.

ஷை விருத்தம்.

அள்ளிகாலனைநர்தான்மார்பி லங்கழுந்தழும்பதாகக்
கொள்ளையோகொடுப்பேனென்று கோவெனக்கதறிவிம்மி
மெள்ளவென்தலையிற்பிர்மா விதித்ததிப்படியோவென்று
துள்ளியேசந்திரமாது துடித்தவள்தரையில்வீழ்ந்தாள்.

ஷை விருத்தம்.

அடக்கிநின்ற துன்பமெலாம் நில்லாமல்
அடியற்ற மரமதுபோ லடித்துவீழ்ந்து
முடக்கியகை கால்கள்சற் றசையாவண்ணம்
முகூர்த்தமொன்று சந்திரமதி மூர்ச்சையாகித்
திடுக்கெனவே யெழுந்திருந்து சோபந்தீங்கிச்
சிறுவர்தமை யருகழைத்துச் செவ்வையாகக்
கடுக்கெனவே மடிந்தவிடம் சொல்லீரென்று
கதறியே தானழுது கலங்கிக்கேட்டாள்,

இராகம்-சகனா-அட தாளச்சாப்பு.

பல்லவி

அம்மாசந்திரமதியே கேளாய் உன்மகன்சேதி
ஆரண்யந்தனில் மாண்டான்

அநுபல்லவி.

அம்மம்மா நாங்களந்த ஆரண்யந்தனிற்சென்றோம்
அருமைலோகிதனும் அரவின்கடியால்மாண்டான் (அம்மா)

சரணங்கள்.

அய்யர்சொன்னதெற்பைகளை அறுக்கவனத்திலிட்டோம
அறுக்கப்போனவிடத்தி லரவின்கடியால்மாண்டான் (அம்மா)
அம்மம்மாவெங்கள்கூட அருமையாய்லோகிதனை
ஆதரவாகூட்டி யனுப்பியேபோகச்சொன்னாய். (அம்மா)

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

ஆனால் கேளுமம்மா. உன்மகன் லோகிதாசனும் நாங்களுங்காட்டுக்குப் போனோமல்லவா வேண்டிய சமித்துக்களையெல்லாம் பறித்துக்கொடுத்தோம தெற்பைபுல்லைமட்டும் அவன்போயறுத்தான் அதிலொரு நாகமிருந்து தீண்டிவிட்டது இறந்துபோனானம்மா,

சந்திரமதி வசனம்.

ஆனால் கேளுமையமார்களே எந்தவிடத்திலிறந்துபோய்க்கிடக்கிறான் அதைமட்டும்விபரமாய்ச்சொல்லவேணும்அய்யமார்களே.

அசலூர்ப்பிள்ளைகள்-விருத்தம்.

மடத்தகைவல்லியின்னும் மைந்தனைநோக்கியொத்த
இடத்திலேயிறந்தானென்னவியாம்வரும்வழியினிற்கும்
வடத்தினுக்கயலேசற்றே வடக்கினிற்றிசைபடர்ந்த
தடத்தினிற்றெற்கேயென்று சாற்றியேயவர்கள்போனார்.

ஷை வசனம்.

அகோவாருமம்மா சந்திரமதி நாங்கள்வரும்வழியிலே நிற்கிற ஆலமரத்திற்குப் பக்கத்தில் தென்றிசையில் தெற்கைபடர்ந்து யிருக்கிற புற்றடிமேட்டுக்கு வடபாரிசம் இறந்துகிடக்கிறான் நாங்கள்வழிதெரியும்படிக்கு வரும்வழியில் இலைகளைப்பிடுங்கிப்போட்டுக்கொண்டு வந்திருக்கிறோம் அந்த அடையாளத்தைப்பார்த்துக் கொண்டுபோனால் உன்மகனைக்கண்டு கொள்ளலாம் நாங்கள்போகிறோமம்மா சந்திரமதியே.

சந்திரமதி வசனம்.

போய்விட்டு வாருங்கள் அய்யமார்களே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

அய்யய்யோ நானென்னசெய்குவேன் பாலபாலகுழந்தை
அய்யய்யோ நானென்னசெய்குவேன்

அநுபல்லவி.

மெய்யினுயிர்த்துணையால் வேந்தன்தன்னையிழந்தேன்
வையகம்ஆளவந்த மகனைப்பாம்புகடிக்க (அய்).

சரணங்கள்.

ஒருமகன்தனைநம்பி உலகிற்றனித்திருந்தேன்
அருமைசெல்வன்போனபின் ஆருதுணையெனக்கு (அய்)

சீரும்புகழுந்தரும் தெய்வந்தனையிழந்து
ஆருங்கெதியில்லாத அரும்பாவியானேனே (அய்)

மன்னவனரிச்சந்திரர் வம்சத்திலுதித்தபாலா
அன்னைதன்வயிற்றினி லனல்தன்னைவைத்திட்டாய் (அய்)

காட்டிலெனைப்பழிக்கக் காட்டிலுனைக்கொடுத்தேன்
நாட்டிகமன்னன்வந்து வீட்டில்மகனைக்கேட்டால் (அய்)
நெஞ்சமும்புண்ணாகி நினைவுந்தடுமாறி
அஞ்சுவயதுதனில் அவதிப்பட்டுச்செத்தாயோ (அய்)

சந்திரமதி-விருத்தம்.

இறந்தாயோமகனேபாவா யென்னையுந்தெருவில்விட்டு
மறந்தாயோவெனக்குச்சொல்லும் மனத்திடமுழுதுமெல்லாம்
பறந்தாயோவென்னைப்பூமிக்குப் பாரமாயிருக்கவைத்துத்
துறந்தாயோதாய்மேலன்பு துடித்தகைவிட்டிட்டாயோ.

இராகம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்.

இறந்தானேயென்மகனும் அவ
னென்னையும்விட்டு வனந்தனிலே
மறந்தானே யான்பாவி அங்கே
மாண்டானென்று அறியேனே
அண்டர்லோகஞ் சென்றானே எனக்
காருதுணையடா லோகிதனே
அய்யாவே யென்குழந்தை ஆ
சாளப்பிறந்தாயே கண்மணியே
துய்யோனே பொற்கிளியே எந்தன்
சுந்தரமைந்தனே லோகிதனே
கையாலுனையெடுத்தாற் உனை
யாருவேண்டா சனந்தேறுவேண்டா
முத்தே மரகதமே எந்தன்
முப்பதுகோடி திரவியமே
ஆவி பதறுதடா இப்போ
அங்கம்பதறித் துடிக்குதடா

சந்திரமதி-விருத்தம்.

முறைமுறைபணிகளெல்லாஞ் செய்துமுடித்தப்பின்பு
மறையவன்தன்னைநோக்கி வாய்திறந்தழுதுவிம்மி
இறைவகேளரவுதீண்டி யென்மகனிறந்துபோனான்
விறகினிலேகிடக்கான விடைதரவேணுஞ்சுவாமி.

சேடி வசனம்.

அகோ சரணஞ்சரணமையா காலகண்டபகவானே அடியாளுடைய குமாரன் தேவதாசன் காட்டுக்குப்போனவிடத்திலரவுதீண்டி இறந்துபோனதாகக் கூடப்போனசிறுவர்கள் சொல்லுகிறபடியால் அடியாள்போய்ப்பார்த்து நல்லடக்கஞ்செய்துவரும்படி உத்திரவு கொடுக்கவேணுமையா சுவாமி,

காலகண்டையர் வசனம்.

அடி சந்தி பாலகன்பாம்பைக்கடித்துப்போட்டானோ

சந்திரமதி வசனம்.

இல்லைசுவாமி பாம்புகடித்து பாலகனிறந்துபோனானையா சுவாமி.

காலகண்டையர் வசனம்

இப்போ அதற்கென்ன மோசம்போச்சுது வேலையைப்பாரடி சந்தி.

சந்திரமதி-விருத்தம்.

அய்யனேகாலகண்டா அடிமையாள்சொல்லைக்கேளீர்
மையமேவகானிற்சென்ற பாலகனிறந்துபோனான்
தாய்யனைச் சுடலைசேர்த்துச் சுட்டுவிட்டிங்குவாரேன்
மெய்யனேவிடைதாவென்று மெல்லியாள்புலம்புவாளே.

இராகம்-தோடி-தாளம்-ஆதி,

பல்லவி.

உத்தாரந்தாருமையா சுவாமி உத்தாரந்தாருமையா எனக்
கொருவருமில்லை வனந்தனில்யான்போக (உத்)

அநுபல்லவி.

குத்தங்களெத்தனை கோடியாள்செய்தாலும்
அத்தனையும்பொறுத் தாதரவாக (உத்).

சரணங்கள்.

என்மகன்லோகிதன் எகினுல் காட்டுக்கு
இறந்துகிடக்கிறு னெடுத்தடக்கஞ்செய்ய (உத்)
ஆருமரியாத ஆரணியந்தன்னிலே
அரவுகடித்திறந் தடங்கிப்போனானையா (உத்)
எங்களையாட்கொண்ட எம்பெருமானே
என்னையனுப்பவேணும் இணையடிசரணம் (உத்)

வாலைப்பருவமாச்சே வயிரவன்காவலாச்சே
பாலன்றனையடக்கப் பாவிநான்போகவேணும் (உத்)

சந்திரமதி-வசனம்.

சரணஞ்சரணமையா காலகண்டபகவானே மகா அருந்தவமிருந்துபெற்ற பாலகனாச்சே போய் எடுத்துத் தகனஞ்செய்துவிட்டுவருகிறேனையா சுவாமி.

கலகண்டையர்-வசனம்.

அடி ஆத்துக்காரி சந்தி ஒடிப்போகப்பார்க்கிறாள் நம்மளாத்தில் இருக்கப்பட்ட பூசவிலங்கையெடுத்து காலிலே போடடி ஆத்துக்காரி.

காலகண்டர்-வசனம்.

அப்படியே மாட்டிப்போடுகிறேன் காணும் ஆத்துக்காரரே.

வேதி வசனம்.

அடிசந்தி இங்கேவாடி உன்காலிலே விலங்குபோட்டு யிருக்கிறேன் எங்கும் ஓடிப்போகாதடி சந்தி.

சந்திரமதி-விருத்தம்.

மாதவாமுகுந்தாகேசா மாண்மழுதரித்தயீசா
வேதனைபிரமதேவா விதியிதுதானோபாவி
காதலாய்ப்பெற்றபாலன் கானகத்திறந்துபோனான்
நீதமில்லாதஅய்யர் நிமிஷத்தில்விலங்கிட்டாரே.

இராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

இப்போ
பாடகந்தண்டைகள் பாதசரமணியுங்காலிலே
பாரவிலங்கணியப் பாமன்விதித்தானோதெய்வமே
இங்கே
காலாழிபீலிகள் கனக்கஅணிகின்றகாலிலே
கோலவிலங்கணியக் குறித்தாரோயென்தலையி லீஸ்பரா
பெருந்
தண்டைசிலம்பு சதங்கையணிகின்ற காலிலே
சங்கிலிபோடத் தலையில்விதித்தாயோ தெய்வமே
துஷ்டக்
எல்லைகடந்து யெடுத்தடிவையாதகாலிலே
கள்ளனைப்போலவே காலில்விலங்கணிந்தாரோ.

சந்திரமதி-வசனம்.

அகோகேளுங்களையா சுவாமி தேவரீருத்தரவு இல்லாதபடிக்கு அடியாள் போகிறதில்லை காலிரண்டும் நோகிறது விலங்கைவெட்டிவிடவேணுமையா சுவாமி.

காலகண்டையர் வசனம்.

அடிசந்தி விலங்கைவெட்டியார்க்கு நாளையத்தின [illegible]தில் திறியாகச்சே அதற்காக வேண்டியவேலைகளெல்லாஞ் செய்யவேணுமடி சந்தி.

சந்திரமதி-விருத்தம்.

அடிமையேயெனினுமையா [illegible]த்திறந்தானென்றால்
கொடியனென்றனக்கு[illegible] வயிறுதான்கொதித்திடாதோ
படியின்மேல்தந்[illegible]ன் தன்னைப் பார்த்தெடுத்தடக்கிக்கங்குல்
விடி[illegible]வருமெவனல்கும் விடையெனத்தொழுது வீழ்ந்தாள்.

ஷெ வசனம்.

அகோவாருங்களையா சுவாமி அடியாளுக்குப்பெற்றவயிறானபடியினாலே பெருந்தணலாயெரிகிறது ஆனதால்மகனைப்பார்த்தெடுத்து தடக்கஞ்செய்து அதிசீக்கிரம் வருகிறேனையா சுவாமி.

காலகண்டையர்-வசனம்.

ஏதடி சந்தி உன்மகனைப் பெரிதாக வெண்ணினையே தவிர வென்வீட்டுவேலை பெரிதில்லைப்போலிருக்கிறதே ஆனதால்வீட்டுவேலை செய்துபோட்டுத் தான்போகவேணுமடி சந்தி.

சந்திரமதி-வசனம்.

வேலை செய்[illegible]றகசலத்து அனுப்புவீர்களா சுவாமி.

காலகண்[illegible]

வேலை செய்துபோட்டல்லோ அந்தப்பேச்சுப் பேசவேணும் ஆத்துக்காரி சொன்னபடிக்கு வேலைசெய்யடி சந்தி.

சந்திரமதி-வசனம்.

அப்படியே செய்கிறேனையா சுவாமி.

காலகண்டி-வசனம்.

அடியே சந்தி வீட்டுவேலையெல்லாஞ்செய்யவேணும் தண்ணீரெடுத்துவையடி சந்தி.

சந்திரமதிவேலைசெய்கிறபாகம்.

காலகண்டய்யர் சந்திரமதிநெல்லுகுத்தல், சந்திரமதிசாணந்தெளித்தல் தண்ணிமொள்ளல். காலகண்டி.

சந்திரமதி.

வேஷசெய்கிறபாகம்.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தண்ணீர்க்குடமெடுக்கத் தாழுவொண்ணுதபாரம்
தலையிற்சுமக்கலைத்தாயோ பரமேஸ்பரா
பாரக்குடமெடுத்துப்பதிவுள்ளசெப்பெடுக்கப்
பரமன்விதித்தவிதியோ பரமேஸ்பரா
பெரியகுடமெடுத்து அரியதலையில்வைத்து
பெரியச்செலமெடுத்தேன் மறையோரே சுவாமி

சந்திரமதி-வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமிதேவரீருத்தரவுப் பிரகாரஞ்ஜெலமெடுத் தாச்சுதையா சுவாமி.

காலகண்டையர் வசனம்.

அடிசக்தி முத்தம் பெருக்கடி சந்தி

இராகம்-முகாரி-தாளம் ஆதி.

கண்ணிகள்.

பெத்தவயிறெரியப் புத்திரசோகத்தாலே
முத்தம்பெருக்கிவைத்தேன் மறையோரே
செத்தமகனைப்போய்க்காணத் தத்தளிச்சுத்தியோரீ
முத்தம்பெருக்கிவைத்தேன் மறையோரே-சுவாமி

சந்திரமதி-வசனம்.

முத்தமெல்லாம் பெருக்கியாச்சுதையா சுவாமி

காலகண்டையர் வசனம்.

அடி சந்தி சாணந்தெளியடி சந்தி

இராகம்-காம்போதி-அடதாளசாபு.

கண்ணிகள்.

சாக்குறுபுணுகுசவ் வாதுஅணிந்தகையால் இப்போ
சாணங்கரைத்துத் தரையில்மெழுகலுமானேன்

குங்குமம்பன்னீர் குளித்தெளித்தகையாலே — இன்று
மங்கியசாணியை வாரித்தெளிக்கவுமானேன்
தங்கச்சரப்பளி தாவடம்பூண்டகையாலே — எந்தன்
அங்கமெல்லாம்நோக அள்ளிதெளிக்கவுமானேன்

சந்திரமதி வசனம்.

அகோ காலகண்டையரே சாணம் மெழுகித் தெளித்துமாச்சுதையா சுவாமி.

காலகண்டையர் வசனம்.

ஆமடி சந்தி விசித்திரவிசித்திரமாய் பேசுகிறாய் கோலமிட்டாயோடி சந்தி.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாலன்செத்தசேதிகேட்டுக் காலயர்ந்துமனம்வாடி
கோலமிட்டு வைத்தேனையா — மறையோரே
ஓலமிட்டழுதாலுமக்கு சாலவுங்கோபமாமென்று
கோலமிட்டு வைத்தேனையா — மறையோரே

சந்திரமதி வசனம்.

கோலமிட்டு ஆச்சுதையா சுவாமி.

காலகண்டையர் வசனம்.

திருவிளக் கேற்றிவையடி சந்தி.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

திருவிளக்கேற்றுவிட்டால் தீவினையொழியா தென்றே
திருவிளக்கேற்றிவைத்தேன் — மறையோரே
ஒருவிளக்கோகோடிவிளக்கு உத்தமகன் தன்னைக்காணத்
திருவிளக்கேற்றிவைத்தேன் — மறையோரே

சந்திரமதி-வசனம்.

திருவிளக்கேற்றி வைத்தாய்விட்டது சுவாமி.

காலகண்டையர் வசனம்.

கண்டடி சந்தி நெல்லுகுத்தவில்லேப்போ இருக்கிறது நெ
ல்லுகுத்து சந்தி.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

ஒருகையிலே பாலமுதம் உண்டிருந்த கைகளோ
 இருகையிலும் நெல்லுக்குத்த எந்தன் தலைவிதிவசமோ
மருவுமுல்லைமல்லிகையும் வாரியணிந்திட்ட கையால்
 பெருவுலக்கையெடுத்துக்குத்தவும் பிரமதேவர்கற்பனையோ
ஒருமகனைவைத்திருந்தேன் உலகமதையாள்வானென்று
 அருமைமகன்கானகத்தி லரவத்தினாலிறந்துவிட்டான்

சந்திரமதி வசனம்.

நெல்முழுதும் குத்திவிட்டேனையா சுவாமி.

காலகண்டையர் வசனம்.

நெல்லைக்குத்திப் போட்டுவிட்டால் அரிசியாய்ப் போய்விடுமா புடைத்துக் கொழித்துவையடி சந்தி.

இராகம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

அன்னிப்பன்னீரிட்டு ஆத்தெளித்திடுங்கையால் இப்போ
 சல்லடைகொண்டு சலித்துப்புடைக்கவுமானேன்
மல்லிகைமுல்லைசுகந்தம் அணிந்தகையாலே இங்கே
 நெல்லுணக்குத்தி சலித்துப்புடைக்கவுமானேன்
சந்தனக்கஸ்தூரி சவ்வாதணிந்தகையாலே இன்று
 தவிடுசலித்துப் புடைத்துக்கொழிக்கவுமானேன்
கந்தபரிமளம் பூசித்திரிந்ததுமேபோக என்
 கையாலரிசியை வாரியெடுக்கவுமானேன்.

சந்திரமதி வசனம்.

அரிசிவேறு உமிவேறு தவிடுவேறு குருணைவேறுமாகப்பிரித்துவைத்துப் போட்டேனையா சுவாமி.

காலகண்டையர் வசனம்.

இதுவெல்லாம் பார்த்ததுசரிதான் மாட்டுக்கொட்டத்தில் இருக்கிற சாணியை யெருமுட்டை தட்டிபோடடி சந்தி.

இராகம்-காம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

சங்கையில்லாமலே சவ்வீர தணிந்தகையாலே இ
சாணமெடுத்துகான் சுட்டவுமாச்சுதே. தெய்
மருவுங்கதம்பமும் மகிழ்ந்து அணிந்தகையாலே இ
எருமுட்டைதட்டவும் என்தலைவிதியோ தெய்

சந்திரமதி-வசனம்.

எருமுட்டை தட்டியாய்விட்டதையா சுவாமி.

காலகண்டன் வசனம்.

சந்தி நேக்குநித்திரைவருகிறது மெத்தையைவிரியடி சந்

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்

நெஞ்சுருகி அறிவழிய நிலைகுலைந்து அழுதழுது
பஞ்சணையலங்கரித்தேன் மறையோனே
பஞ்சையைப்போலிறந்தமைந்தன் பாசத்தாலேபரதவித்து
பஞ்சணைவிரித்துவைத்தேன் மறையோனே

சந்திரமதி வசனம்.

பஞ்சணை மெத்தை விரித்து அலங்கரித்துப் போட்டேனை
சுவாமி.

காலகண்டையர் வசனம்.

நேக்கு நித்திரைவருகிறதில்லை சற்றுநோக் காலாட்டடி சந்தி

இராகம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ராரிரரோ-ராரிரரோ-ராரிரரோ-ராரிரரோ
காலகண்டையருக்குக் கண்பூணியுநாளுமதாய்ச்
சாலவிலையானேனும் சதுர்மறையோர்நித்திரைபோ
விலையாகிப்பாலகனும் வீற்றிருக்குங்காலையிலே
தொலைதூரங்கானகத்தில் தூரத்திவிட்டாய்நித்திரைபோ
வனத்திலேபாலகனை மாலரவுதீண்டினதால்
க்ஷணத்திற்குழக்கதசொல்லத் தான்தெரியும்நித்திரைபோ

பாலகனைப்பார்த்தெடுத்துப் சிங்காரகல்லடக்கஞ்
சாலவேசெய்துவிட்டுத் தான்வாரேனென்றதற்கு
வீட்டினிலுள்ள வேலையெல்லாஞ்செய்யெனவே
தாட்டிகமாய்ச்சொன்ன சதுர்மறையோய்நித்திரைபோ
காட்டினிலேபாலகனைக் கண்டெடுத்தச்செய்கருமம்
தாட்டிகமாய்ச்செய்துவிட்டுத் தான்வாரேன்நித்திரைபோ-

சந்திரமதி-வசனம்.

அகோ சரணஞ்சரணமையா காலகண்டபகவானே தங்களுக்கு நித்திரைவந்துவிட்டாற்போ லிருக்கிறது இனிமேலாவது அடியேன் போய்விட்டுவருகிறேனையா சுவாமி.

ஷெ விருத்தம்.

வீட்டினில்வேலையாச்சு வேறொருமக்கந்தானோ
காட்டினிற்போகவேணுந் தங்குவோர்சாமமாச்சு
ஏட்டில்விதித்தவாரோ இதுக்குநானென்னசெய்வேன்
தாட்டிகத்துணைவேறில்லை தயவுசெய்தனுப்புமையா.

ஷெ வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமி வீட்டிலுள்ள வேலையெல்லாஞ் செய்துவிட்டேன் காலதாமசமாகிறது அடியாள் காட்டுக்குப்போய் வருகும்படி உத்தரவு கொடுத்தனுப்ப வேணுமையா சுவாமி.

இராகம்-அபுரூபம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

போய்வாரேன் காலகண்டையா வணம்
போகவிடைதாருமே

அநுபல்லவி.

பேய்கள்சூழ்வனத்தில் பெண்கொடியாளேகி
பிள்ளைதன்னையெடுத்துக்கல்லடக்கஞ்செய்யப் (போய்)

காலகண்டையர் விருத்தம்.

அர்த்தராத்திரியில்நீயும் அடவியிலோடிப்போயிப்
பத்தியேசீக்கிரமாய்ப் பாலனைப்பார்த்து அங்கே
செத்ததுமெய்யானால் செடிதனிலெரித்துப்போட்டு
நித்திரைவிழிக்குமுன்னே நிமிஷத்தில்வருகுவாயே.

வேஷ விருத்தம்.

அடி சந்தி காட்டுக்குப்போய்க்குழந்தையிறந்தது மெய்யானால் யெடுத்துச்செடியிலெரித்துவிட்டு அதிசீக்கிரமாய்வந்துசேரடி சந்தி

சந்திரமதி-வசனம்.

இப்பவேபோய் குழந்தையையெடுத்துதகனஞ்செய்துபோட்டு வருகிறேனையா சுவாமீ.

கலகண்டன்-வசனம்.

சிக்கிரம்போய்விட்டுவாடி சந்தி.

சந்திரமதி-விருத்தம்.

விடியுமுன்வாபோவென்று வேதியன் சொல்லக்கேட்டு
கடுகியேநடந்துகாசி கடிகொதனைத்தாண்டி
அடியத்தமாம்போலேங்கி யலகியேமயங்கிக்காட்டிற்
கொடியெனத்துவண்டுசென்று கோவெனப்புலம்புவாளே.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

இந்தயிருளிலெங்கேதேடுவேன் பாலனைத்
தேடுவேன் குழந்தையைத்தேடுவேன்
இறந்தயிடத்திலெப்போ தேடுவேன் (இந்த)

அநுபல்லவி.

இந்தவனத்தின்வழி யெதுவோ தெரியவில்லை
என்னசெய்வேனையோ யெப்படிப்பேசுவேன்
எவிடத்தில்மாண்டானோ யென்தனருமைமகன்
யெந்தவிதியிது ஈசனாணினி (இந்த)

சரணங்கள்.

மருதமரக்கிளியே மாமரக்குயிலே
மைந்தனிறந்தவிடம் வழியதுகாணேன்
மாண்டவனமிதுவோ மறுவனந்தானோ
வழியுந்தெரியவில்லை மதனாசனினி (இந்த)

வனத்திலிருக்குகின்ற மாடப்புறாவினங்காள்
வரைக்குயிலேயிப்போ வாய்திறவாயோ
வந்தவழியிதுவோ மறுவழிதானோ
மகனிறந்தவிடம் வாய்திறவாயோ (இந்த)

சந்திரமதி லோகிதாசனைத் தேடி வனஞ்செல்லுதல்

சந்திரமதி விருத்தம்.

மடக்கையும்புலம்பிக்கொண்டு வனந்திரந்தன்னிலேதான்
சடமதுசொரனைதப்பி தா வீயேவரும்போதெந்த
இடந்தனிற்காண்பேனென்று யேங்கியேமனதுவேறாய்
படர்ந்திடுங்கானில்வாழும் பட்சிகள்தனைக்கேட்பாளே.

இராகம்-முகாரி-ஆடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

கானகத்தில்வாழு மானினங்கா ளெந்தன்
கண்மணியைக்கண்ணிற் காட்டொண்ணாதோ
கொஞ்சுங்கிளியன்னப் பட்சிகளா எந்தன்
குழந்தையைக்கண்ணிற்காட்டொண்ணாதோ
ஆருமில்லாப்பாவி யாகினனே இந்த
அடவிதனில்வழி காண்கிலனே
மான்மணாகாள் சற்றேமனதிரங்கி இப்போ
மைந்தனையுங்கண்ணிற் காட்டொண்ணாதோ
காடிகளாபுலி பன்றிகளா எந்தன்
கண்மணியைக்கண்ணிற் காட்டொண்ணாதோ
பூதங்களாகரி பேயினங்காள் பெற்ற
புத்திரனைக்கண்ணிற் காட்டொண்ணாதோ

சந்திரமதி-விருத்தம்.

வழியினுக்கருகேஆல மாமுண்டுவடக்கேசென்றாற்
செழுமையாய்ப்புற்றொன் றங்கே தெற்கினிலிருக்குதென்றார்
வழியதுபிசகினேனோ மாயமோநான்முன்செய்த
பழிவிதுதானோவென்ன பாவமோ அதனைக்காணேன்.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தடமோகொஞ்சித்தலையோ லோகிதனேஉனையிழந்து
இடமுந்தெரிகிலனே வழியெதுவோநானறியேன்
பதிபோயாசனும்போய்புதல் வனும்போய் நானிருக்க
விதியே அமைத்தாயோவென்று விழுவாள் தரைதனிலே
எழுந்திற்பாள்கெடுமரம்போலவள் பொற்பாவைப்போலே
அப்பாலோகிதனேயென்று அலறுவாள் வயிர்தனிலே

வாயுபகவானே யுந்தன்மனமும் மிரங்கலையா
வாரியிறையாதே மழைமாரிபொழியாதே
இடி இடிக்க மழைகாற்றுட னதிரமேகம்பொழிய
அடியெடுத்து வைக்கவழி அரியாதுரிகினனே.

சந்திரமதி-விருத்தம்.

இப்படிப் புலம்பிக்கொண்டு இரவினி லடவிதோறுந்
தப்பாத அபயமென்று தயங்கியே மயக்கங்கொண்டு
எப்படிக் காண்பேனென்று இவ்வனந் தன்னில்யாருஞ்
செப்புவாரிலையோவென்று தேம்பியே தவிக்கின்றாளே.

இராகம்-புகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கேயான்கண்டு தேடுவேன் என்லோகிதாசனை
எங்கேயான்கண்டு தேடுவேன்

அநுபல்லவி.

எங்கேயான் கண்டுதேடி பங்கப்படவே நாடி
அங்கமுருகிவாடி ஆரண்யந்தன்னிலோடி (எங்)

சரணங்கள்,

பத்துமாதஞ்சுமந்துபெற்றவயிறுநொந்து
உத்தமகளிழந்து மெத்தமேனிமெலிந்து (எங்)
எந்தவிடத்தினிலோ எந்தமரத்தினிலோ
வந்தவழியினிலோ மாபாவிபாணதியேன் (எங்)

சந்திரமதி-விருத்தம்.

கருத்தைவிட்டகலாநின்ற கண்மணி மகனேபாலா
ஒருத்தரு மெதிரேகாணேன் உற்றதோர் வார்த்தைசொல்ல
வருத்தமாய்த் தேடுவேனே வனமெல்லாஞ் சுற்றுவேனே
எருத்துமேலேறுமீசா வெங்கேநான் காண்பேனையா.

இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கேகாண்பேனடா மகனே எங்கேகாண்பேன்

அநுபல்லவி.

எங்கேகாண்பேன் பாலாவுனைநான்
இந்தராத்திரி திமிரத்தில்
சிங்கங்கரடி புலிகள்பன்றிகள்
சினந்துவாழும் வனங்கள் தன்னிலே (எங்கே)

சரணங்கள்.

காடுஞ்செடியுந் தலைதனை பிக்குது
கடுவாயெறும்புகள் தேகந்தை மொய்க்குது
மேடோபள்ளமோ அடிதனை பிரட்டுது
விதவிதமாகவே முள்ளுகள் தைக்குது(எங்கே)

ஆலே அகிலே அரசே புரசே
அத்திமாவே நெல்லி வன்னி
பாலேபாதிரி பன்னிரு கோங்கே
பாவியான்பெற்ற பாலனைத் தேடி(எங்)

வனமோதொலையோ நிலையோ அறியேன்
மழையோ இருளோ வழியோ தெரியேன்
அனமேதேனே மயிலே மானே
அருமைமைந்தனை யரவு தீண்டிட(எங்கே)

சந்திரமதி-விருத்தம்.

அப்பனே மகனேகண்ணே அரிவையாளெனக்கு இப்போ
கொப்புளங் காலிற்கொள்ளக் கொத்துடன் முள்ளுத்தைக்கச்
சர்ப்பனைப் பாம்போமெத்தத் தலைவிரிப் பேய்களுண்டே
இப்படி யிருக்குங்காட்டி லெப்படித் தேடுவேண்டா.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இந்தவனத்தி லெங்கேதேடுவேன் என்னருமைமகனே
எந்தவழிகண் டெங்குஞ்சேருவேன்
சிந்தைமிகவும் நொந்துவாடுதே என்னருமைமகனே
தியங்கி மயங்கி வாடலானேனே
காட்டானை மிருகம் காவலாகுதே என்னருமைமகனே
கரடிபுலிகள் கதறிவருகுதே

சிங்கம்புலி சீறிவருகுதே   என்னருமைமகனே
சிறுநாய்நரிக ளோடிவருகுதே
பதறப்பதறப் பாவிவருந்தானோ   என்னருமைமகனே.
கதறக்கதறக் காகங்கொத்துதோ

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கேயென்றுதேடுவேன் என்மகனிறந்தவிடம்   (எங்கே)

அநுபல்லவி.

பங்கயமுகத்தழகனை யென்பாலகனை   (எங்கே)

சரணங்கள்.

கருங்குயில்களாநீங்கள் காணீர்களோஎந்தன்
கண்மணியானதொருபொன்மணிலோகிதனை   (எங்கே)
உந்தனைத்தேடி உருகுதேநெஞ்சம்
உத்தமனேபாலா [illegible]   (எங்கே)
ஆருமறியாத ஆரணியத்தனிலே
அரவினகடியால்மாண்ட அருமைலோகிதனை   (எங்கே)

சந்திரமதி-விருத்தம்.

ஆறெலாமடிகள்வைக்க அடியெலாம்விழிநீர்நின்ற
றாறெலாமரிவைசென்ற சுவடெலாங்குருதிகூந்தல்
மாறெலாம்பிடித்திழுங்க வனமெலாந்துணிகள்யார்க்கும்
தேறெலாந்தகைமத்தன்று செடியெலாந்தேடிச்சென்றாள்.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

அருமைமகனே யெப்பக்காண்பெண்டா பாலா   (அரு)

அநுபல்லவி.

மறுமன்னர்போற்றும் மகிமையயோத்தி
வாலேந்தவந்தவனே லோகிதா   (அரு)

சரணங்கள்.

கருத்தமிருள்தன்னில் கலங்குதேநெஞ்சம்
கண்மணிலோகிதனே பொன்மணியேபாலா   (அரு)

உருகுதேநெஞ்ச முன்னைத்தானுந்தேடி
உத்தமனேபாலா நித்திரையோசிலா (அரு)
சஞ்சலப்படவுந் தலையில்விதித்தானோ
சத்தியத்தால்வந்த புத்திரனேபாலா (அரு)

சந்திரமதி-விருத்தம்.

தேடினளிருட்டிலேதான் தெரியவுமில்லையென்று
வாடியேவசிஷ்டர்தன்னை மனதிலேநினைந்துகொண்டு
மூடியதெற்பைப்புல்கள் முதிர்ந்தபுத்தடியின்கீழே
காடியேவிழுந்தாள்கையால் தடவியேமகனைக்கண்டாள்.

டைபொது-விருத்தம்.

தனியவள்காணும்போது சதிகாரவிஸ்வாமித்திரன்
வினவியேவலாலே வெருவியேபற்கடித்து
இனியுனைவிடுவதில்லை யென்றுதான்பூதப்பேய்கள்
அனை[illegible]கூட வதை[illegible]மந்த்துநின்றே.

சந்திரமதி-விருத்தம்.

[illegible] மோமைந்தா சாமரம்போடுகிப்போ
வண்டல்சந்தனமுமாச்சோ மாந்தளிர்மேனியெல்லாம்
கொண்டல்சேர் பூனுருகெங்கம் குளிர்ந்தவாசனைகள்தானோ
தண்டகாரண்யப்பேய்கள் சத்தமோ நாதகீதம்

இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

பேய்கள்வந்ததே வனந்தனிற் பேய்கள் வந்ததே

அநுபல்லவி.

பேய்கள்வந்ததே பிச்சுத்தின்பேனென்று
பெருக்கத்துடனே முறுக்கிப்பார்த்துக்கொண்டு (பேய்)

சரணங்கள்.

சப்பைசப்பையாகத்தான்பிச்சுத்தின்போமென்
றெப்புடன்பேசி யோங்கிப்பைகவீசி (பேய்)
சதைசதையாகவே சப்பித்தின்பேனென்று
பதைபதையாமலே பல்லைக்காட்டிக்கொண்டு (பேய்)

சந்திரமதியிடம்பேய்கள்வருகிறது.

பிசாசுக்கூட்டங்கள்.

சந்திரமதி.

மயானம்.

பேய்கள் வசனம்.

அடியே பெண்ணே இவடத்தில் மனுஷாளுடைய வாடைதோணு து நாமனைவோரும் போய்ப்பார்ப்போம் அகப்பட்டால் ஆளுக்குக் கொஞ்சந் தின்போம்.

பொது-வசனம்.

இப்படியாகச் சந்திரமதி குழந்தையைத்தேடி கிட்டவரச்சே பேய்கள் விடமாட்டோமென்று சத்தம்போட்டுக்கொண்டு இருக்கிற சமயத்தில் சந்திரமதி புலம்புகிற விதங்காண்க.

சந்திரமதி-விருத்தம்.

ஐயையோ விர்மதேவன் அமைத்திடும் விதிகள்தானோ
பையவே நாய்தகப்பன் பண்ணினதவங்கள்தானோ
மையவே பெண்பிறந்து நாய்களும்பேய்களெங்கன்
கையைத்தொட்டிழுத்திடென்று கலங்கியே புலம்புவாளே.

இராகம்-தேசிகத்தோடி-ஏகதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேன் பெண்மகனே என்செய்வேன் பேய்கள்சுற்றப்பாலா
காளியென்றே பேய்கள்வந்து காலைப்பற்றியிழுக்குதடா பாலா
கூளியென்றே பேய்கள்வந்து குடலைப்பற்றியிழுக்குதடா பாலா
வெட்டவருஞ்சிலது பேய்கள் விரட்டவருஞ்சிலது பேய்கள் பாலா
பையவொருத்தம்வந்து பார்க்குதடா பெண்மகனே பாலா

பசாசுகள்-விருத்தம்.

ஆரடி நீ காலிந்த ஆரண்யந் தன்னில்வந்தாய்
பாரடி யுன்னைப்பிடித்து பச்சையாய் பிச்சுத்தின்போம்
காரிருள் தனிலேவந்த காரணமென்னதென்று
கூறடி யென்றுபேய்கள் கூச்சலாக்கிடுகுதன்றே.

இராகம்-கரகரப்பிரியா-ஆதிதாளம்.

பல்லவி.

பேய்வேதனை சகிக்கத்திப்பாலனே பேய்வேதனை சகிக்

அநுபல்லவி.

விந்தையாய் அரிச்சந்திரன்மகிழ் (பேய்)
எந்தனினுஞ் சிந்தைதவேப்படும்.

சரணங்கள்.

பூதஞ்செய்திடுங் வாதைதீர்க்கு மெய்
போனுஉன்முகம் பாதகிகாணப் (பேய்)
காளிகூளிகிர்த் தாளிசெய்திதழீமுன்
மூளைதாவென ஊளைபோடுதே (பேய்)
காடுமேடுகள் தேடிமெய்தன்முன்
சாடுதேபேய்கள் வாடுகிறேன்சிக்லைதீ (பேய்)

இராகம்-எமுனுகல்யாணி-ரூபகதாளம்.

பல்லவி.

நாதாயிந்தப் பேய்க்கு இரை நானுகினேனையா

அநுபல்லவி.

பாதகியான்செய்த தேதோமுன் ஞளினிற
பத்தினியாள்மன முற்றுங் கலங்கிடப்
பேதகமாக அநேகங்கள் செய்தேனே
பெண்சென்ம மோயிது ஆண்சென்ம மோயிந்தப்
பேயெனைப்பிடுங்க மனம்நடுங்க என்றும்
பிரியாதவ ரிலபோதிலும் நாங்கதிசதியோ இதுவிதியோ (நாதா)

சரணங்கள்.

தங்குந்தலைவிதியால் மைந்தன்
தன்னைப்பரி கொடுத்தேன் முனி
சதிசெய்ததினுலே யுக்தன்
பதியைவிட்டு விடுத்தேன்
சங்கையில்லாமலே சந்திரமதி கண்ணீர்
தாரைவிட்டு அவள்தானும் அழுகவே
அங்குன்னைக்கண்டு விடுவேமென்று வென்று
அய்யோ ஒருபேய் இழுக்குதை பாரிப்போ
ஆ-இது-சூது-உமக்கெனிந்த வாது (நாதா)

சந்திரமதி-விருத்தம்.

இப்படிப்பேய்கள் கூடி இடஞ்சலுஞ்செய்யும்போது
சற்பனைதானேயென்று சந்திரமதியாள்தானும்
கற்பதுகிலேயோயானுல் கணவன்பொய்யுரையாரானுல்
அற்புதமானபேய்கா ளகன்றுமேவிலகிடாயே,

மேற்படி வசனம்.

ஆகாசவாணி பூமாதேவி முப்பத்துமுக்கோடி தேவர்களே, நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்களே அடியாள் கற்புமெய்யேயானால் என்பிராணநாயக நடையும் சத்தியம் நிசமேயானால் இந்தப்பிசாசுகள் விலகிப்போகவேணும் விஸ்வநாதா.

பொது வசனம்.

இப்படியாகச் சந்திரமதி தோத்திரஞ்செய்யச்சே பேய்களாகப்பட்டது யிவளோ மகாபதிவிரதையா யிருக்கிறபடியால் அக்னிச்சுவாலையதிகமா யெரிக்கிறதென்று பேய்முழுவதும் ஓடிப்போவோம்வாருங்கவென்றோடிவிட்டது அதற்குப்பின் சந்திரமதி தன் குழந்தையை தேடுகிறவிதங்காண்க.

சந்திரமதிவிருத்தம்.

சந்திரமதியிவ்வாறு தன்னாடிக்கலங்கியேங்கி
அந்தவல்லிருளிற்காட்டில் அலைந்தலைந்தாளம்வெறும்பிச்
சிந்தையுநொந்தலையும்போது சிறுவன்றன்காலிற்றட்ட
மைந்தனென்றறிந்துமேலே மருண்டுவிழுந்தழுகின்றாளே.

ஷை விருத்தம்.

தடவியேவராச்சேகாலில தட்டியமகனைக்கண்டு
இடமறியாதபாலா இருக்கிறேனெனவொண்ணுதோ
படர்வனக்கல்லுமுள்ளும் பஞ்சணைமெத்தையோடா
சுடர்வனக்காட்டுக்குள்ளே தூங்குறாய் தூங்குறாயோ.

மேற்படி-விருத்தம்.

கண்டனள் கதறிவிழுந்தாள் கழுகல்லா மலரிப்போகக்
கொண்டதோர் மகவினுடைய கூவிய கொள்ளைகொள்ள
முண்டகக் கரத்தாலெடுத்து முருகனைமடிமேல்வைத்து
அண்டரு மருகியேங்க வாய்திறந் தாற்றலுற்றாள்.

இராகம்-மோகனம்-அடதாளம்.

கண்ணிகள்.

(க) சிவசிவாயித்தத் — இனிமேகாணவோ
தவமிருந்து — தனையனைப்பெற்றதும்
விதியைகோவிந்தோ — பதிமையோவிந்தோ (கல)
பதியிழந்தேனோ — பாலகா

(௨) காடுங்கண்ணேசி க்கட[illegible]ப்பிறந்தாயே
காணிலமெங்கும் ஆள்வாயென்றிருந்தேனே-இந்தப்
பாட்டுக்கோயென்னை வைத்தனேபாலா
காட்டுக்குள்வந்து மாண்டாயேயூர் லோகிதா (சிவ)

(௩) அப்பனேயுன்னை யெப்பநான்காண்பேண்டா
ஆரண்யந்தன்னில் வந்துயிர்மாண்டாயே
எப்பக்கண்டு அழைத்தேபோதிலும்
அப்பனேயெதிர்வந்துநீ நிற்பாயே (சிவ)

(௪) அடிக்கடிவந்து அம்மம்மாவென்று
மடிக்குள்ளேவந்து வாய்முத்தந்தருவையே
இடுக்கினாலுன்னை யெடுப்பதெப்பவோ
துடிக்குதேவுயிர் சுந்தராயிப்போ (சிவ)

(௫) பள்ளிக்கூடத்திற் படிக்கிறேன்வையென்று
பாலோடும்வாயாற் பாவிக்குரைத்தாயே
படிக்கத்தான்வைத்து பார்த்தாளு உன்னை
பாம்புவந்து கடிக்குமென்றறியேனே (சிவ)

சந்திரமதி லோகிதனை

எடுத்துப் புலம்புகிறபாகம்

சந்திரமதி விருத்தம்.

தண்டையிட்டுச் சதங்கையிட்டுத்
  தாழ்வடங்கள் கோர்த்தமுத்துச் சரமணிந்து
கொண்டையிலேசுட்டி நவரத்தினமிட்டுக்
  கோகிலம்போல்வார்த்தைசொல்லிக் குலாவிநின்று
அண்டையிலேயிருக்கின்ற மதனைநோக்கி
  ஆசையெல்லாந்தீரவெடுத் தணைந்துக்கொண்டு
மண்டலத்தோர்கொண்டாடு மகனேயென்று
  மார்போடுசேர்த்தணைந்து மயங்குவாளே.

சந்திரமதிலோகிதனைநினைத்துப்புலம்புகிறபாகம்.

இராகம்-அபுரூபம்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அப்பனே யுன்னை யெப்போ நான்கண்டு ஆவல்தீர்ந் திடுவேன்.
மகிழ்ந்திடுவேன் புகழ்ந்திடுவேன் மகனே இனி
ஆர்வனோ மன்னர் சேர்வனோ எங்கே சேர்வனோ மகனே

பாவியரவு கடித்திடும் போதென்ன பாடுபட்டாயோ
கைவிட்டாயோ நொந்திட்டாயோ மகனே முகம்
பாரடா சுகந்தீரடா கண்ணுந்பாரடா செல்வமே மகனே

மன்னன்வந்து மகனெங்கேயென்றால் நான்மாபாவியென்சொல்
வேன்வாயைமெல்லுவேன் எங்கேசெல்லுவேன் மகனே எனை
மறந்தாயோ யெங்கேபறந்தாயோ இங்கேயிறந்தாயோ மகனே

கையினிற் கிளி வளர்த்து உந்தனைக் கார்க்கோடன் கடிக்கப்
பருந்தடிக்க மனந்துடிக்க மகனே யிப்போ காண்பேனோ
எங்கேகாண்பேனோ யிந்த வினைபழிக்கெனசெய்வேன் மகனே

புத்தடி தன்னிற் செத் திறந்தாயோ சித்தடிச்செல்வனே
ராஜன்மகனே லோகிதனனே பாலகா அடா வித்தகா
எந்தன்புத்திர மனம்பதைத்துதே என்செய்வேன் மகனே

என்சென்மம் ஈடேற எவர்வந் தெனக்கு என்னுந்தண்ணீ [னி
ரிறைப்பார் பிண்டங்களை றப்பார் சற்றேறய்ுளைப்பார்மகனே இ
ஏகவோ நீயுஞ்சாகவோ வந்துபோகவோ பிறந்தாய் மகனே

சந்திரமதி-விருத்தம்.

நிறையோசைபெற்றபறையோசையற்றுநிறையாய்கிறைச்சழுகின்
சிறையோசையுற்ற செடியூடிறக்க விதியாரிழைத்த செயலோ
மறையோனிரக்க வளநாடனைத்தும் வழவாகளித்தவடிவேல்
இறையோனளித்த மகனை ... நீதுமேவவிதித்தவிதியே.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

அதிபாவியானேண்டா ஏனைய்யா அதிபாவியானேண்டா

அநுபல்லவி.

மதியாமலே சதிமாமுனி
பதிகொண்டதற் கிதுவோபலன் எண்ணையா (அதி)

சரணங்கள்.

பெற்றவயிர்பத்துதடா மகனே
உத்தமனேயிந்தப் புத்தடியில் என்னையா (அதி)
திங்கள்முகம் மங்குதடா மகனே
செங்கரங்கள் வீங்குதடா என்னையா (அதி)
சுத்திவந்து நாய்நரிகள் பாலா
கத்துதடாயித்திசையில் என்னையா (அதி)
மானிலத்தில் கண்டகளு பாலா
கானகத்தில் மூண்டுதடா மகனே என்னையா (அதி)

சந்திரமதி-விருத்தம்.

சீலனேலோகிதாசா செல்வனேயெந்தன்பாலா
கோலமாய்உங்களையர் குழந்தையைவித்துப்போனர்
சாலவேசெம்பொன்கொண்டு சடுதியில்வந்துஎந்தன்
பாலகனெங்கேயென்றல் பாவிநானென்னசொல்வேன்.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்செய்வேன்மகனே நானிதற்கோபெற்றெடுத்தேன்
இறையவர்சோதனையோ எனக்கிப்படிமுடிந்திட
இறையவர்சோதனையோ.

அநுபல்லவி.

எங்கேகான்செல்வனடா எந்தன் மைந்தனையினிநான்
இதுவோயிறையோ னிருதாளினைபோற்றி
இதுவோயிறையோ னிருதாளினைபோற்றி நான்பாவி (என்)

சரணங்கள்.

ஐயோபாலகனே அருந்தவத்தாலவந்துதித்தாய்
அருமையாய்வளர்த்தேனைக்கே அருமையுள்ளமைந்தனையே
அருமைத்திருமைந்தனே வயறெரியுதடா
அருமைத்திருமைந்தனே வயறெரியுதடா நான்பாவி (என்)
கையினிற்பாம்பு உன்னைக்கடிக்க நீதுடிதுடிக்க
கண்ணுற்பார்த்திருந்தேனடா கள்ளியெனைப்போலுமுண்டோ
கருவிலுருவாய்நீ வந்துபிறந்தாய்
கருவிலுருவாய்நீ வந்துபிறந்தாய் நான்பாவி (என்)

இப்பார்த்தி துரைமகனே எந்தனருமைமகனே
இப்போதுநீ சொல்லும்வகை யேதுமறியேண்டா
இனியேதனியே அனியாயமதாக
இனியேதனியே அனியாயமதாக நான்பாவி (என்)

சந்திரமதி-விருத்தம்.

காரிழை வனத்திற்பிள்ளை கலங்கியே சொரணை தப்பி
ஆரியப் பாவைப்போலே அழுதவள் புலம்பிக்கொண்டு
சரியாய்க் கண்ணீர்விட்டுத் தலைதனிலடித்துவீழ்ந்து
மார்பின்மேலேதந்துபெற்ற மகனைவைத்துருகுவாளே.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்குவேன் எங்கண்மணியே (என்)

அநுபல்லவி.

எந்தன்சென்மத்தி லுங்கனைக்காண்பேன் (என்)

சரணங்கள்.

தனியேநீதெற்பை கொய்யச்சென்றுமே
சர்ப்பந்தீண்டிநீ யிறந்தாயே
முனிசெய் தவஞ்சகமோ தெரியேன்
முன்னைநான்செய்த வினையோ அறியேன் (என்)

அப்பனேஉன்னை யெப்போநான்காண்பேன்
ஐயோகோரிக்க அவதிக்குள்ளானேன்
எப்பிறப்பிலென்னைத் தாயென் றழைப்பாயோ
என்னகாரணமோ அறியேன் (என்)

நாடாள்வாயென்று நானிருந்தேனே
நாடுஞ்செல்வமும் நீமறந்தாயே
காடுதனிற்சென்று நீமடிந்தாயே
கண்மணீநானென்ன செய்குவேன்பாவி (என்)

சந்திரமதி-விருத்தம்.

மன்னவர் மன்னனாக வரிச்சந்திரன்பெற்ற
சொர்ணமே யுனையிக்காட்டில் தோற்றிறந்த விதத்திலுய்வேன்

முன்னமே பிரிந்தவுந்தன் மூர்த்திவுடைய தந்தைக்
கென்னநான் சொல்வேன்கண்டா வென்செய்வேன் சுதனேநானே.

இராகம்-இந்துஸ்தான்-காபி-அட-தாளச்சாப்பு.

பல்லவி.

என்செய்வேன் சுதனே இனிலோகிதனே

அநுபல்லவி.

மன்னர்மன்னவரையும் பிரிந்தேன்
வளர்மதிமைந்தனே உந்தனியிழந்து (என்)

சரணங்கள்.

உந்தனைப் பாரா வொருமுத்தந்தாராய்
புகழ்மதிபெண் நகர்பணிந்திடும்
பூவலரருளிய துரையே இனி (என்)
உயர்குலப் பையருடன்தெற்பை கொய்ய
அய்யருடன் சென்று இரவுதனிலே
அரவினால் விரவுதனி லுயிரிழந்தாய் (என்)
வடிவுயர் மதனா வளர்மதி வதனா
கொடிய பாவி குறைமொழி கூறின
கோபமோ யார்செய் சாபமோவென் பாபமோ இனி (என்)

சந்திரமதி-விருத்தம்.

அருந்தவம் புரிந்துஉன்னை அருமையாய் மடிமேல்வைத்துப்
பொருந்தவே பணிகள்பூட்டி பொற்றட்டின் மீதிலேற்றி
இருந்ததோர் மேனியெல்லா மிருண்டதோர் வனத்திில்மேவும்
பருந்துடன் கழுகுநாய்கள் பற்றியே யிழுக்கலாச்சே.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னை யுவந்தாளீ யிவ்வனந்தன்னி
லிறந்தாயோபாலா இதற்கென்செய்வேன்சிலா
இதற்கென்செய்வேன் சிலா

அநுபல்லவி.

மன்னவனரிச் சந்திரன்பெற்ற சொர்ணமேகோவே
வீர்ணத்தெற்பையைக் கொய்யும்போதினில்

வந்துதோபாவி நாகங்கடித்துதோதாவி
நாகங் கடித்துதோ தாவி (என்னை)

சரணங்கள்.

மல்லிகைமுல்லை வாசமுந்தென்றல் வந்துமேல்வீசச் செல்வ
மகனேநீயும்இங்கிறந்திட மயங்கியான்கூச அந்குமறையவரேச
அந்கு மறையவரேச (என்னை)

அருமைமகனே அரவத்தால்மிக அவதிப்பட்டாயோ
மருவில்லாததேக மண்ணிலே புரளவிட்டாயோ என்னைத்தெ
என்னைத் தெருவில்விட்டாயோ என்னை [ருவில்விட்டாயோ

ஆருந்துணையில்லாதபாவி யாகினேன்பாலா இந்தப்
பாரினிலுள்ள காளிகூளிகள்பாடச் சங்கீதம்நித்திரை
பண்ண இங்கிதம் நித்திரைபண்ண இங்கிதம் (என்னை)

சந்திரமதி விருத்தம்.

இரவினி லிறந்தாயோடா இவ்வனந்தன்னிற்பாலா
புரவலர் உந்தன்சிவன் போனதுஅறியேனையா
நரைநிலா வாழ்வைவிட்டுக் கோசிகர்க் கடிமையாகி
த்ரைதனிற் அங்குறுமோ தங்கமே மகனேபாலா.

இராகம்-நாதநாமக்கிரியை-அடதாள்சசாப்பு.

பல்லவி.

சாமிதுரைபெற்ற மைந்தா ஐயா,
சாமிதுரைபெற்ற மைந்தா

அநுபல்லவி.

சாமிதுரைபெற்ற லோகிதனும் பாம்பாற்
சாகவுமென்னுயிர் போகாமல் நிற்குமோ (சாமி)

சரணங்கள்.

வாசவனும் ரிஷிகேசவனும் வெகு
நேசமதாய்த் தானிருந்து
தேசாதி தேசங்கள் நேசமாய்ப் போற்றிடச்
சீமை அயோத்திக்குப் பூமனெனவளர் (சாமி)

ஆதிபிர்மா மனு நீதியினால் அவர்
சோதனையால் வந்துதித்து

வேதியரும் நம்மை விரதனை செய்யவும்
விஸ்வாமித்திரர் சொற்பிசகாமல் நாட்டிய (சாமி)

வேதமுனிசெய்த சூததனால் யிப்போ
யேதோ காலன் ருனெழுந்து
காதியதாக அரவங் கடித்திடக்
காசினி யுள்ளோருந் தோஷியென் லேசிடச் (சாமி)

சந்திரமதி விருத்தம்.

மன்னிய முலையின்பாலை மறந்தாயே மகனேபாலா
பொன்னிறச் சதங்கைதண்டை புரிந்துமே விளையாடாமல்
என்னைநீ தனியேவிட்டு இங்குதான் வந்துயிப்போ
மண்ணையும் வாயிற்போட்டு மடிந்தாயோ மகனே மண்மேல்.

இராகம்-காதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி

மைந்தனேநீ யிவ்வனந்தனில் வந்திறந்தமாயமென்னடா ()

அநுபல்லவி.

வெந்துயராலே நொந்துமண்மேலே மின்கொடிபோல வாடியே
வெம்பியேகண் ததும்பியே உயிர்விடுத்தபாலனைக்கொடுத்தேன்சிலை [னை (மை)

சரணங்கள்.

பஞ்சணை மீதினி லஞ்சிய பாதம்
பார வனந்தனில் நடக்கவோ
கொஞ்சிநாளும் வளர்த்தேனே இந்தக்
கொடுமைக்கென் செய்வேன் கடுமையரவால் (மை)

வெம்பசியாலே அம்புவிமேலே
வேதனைகொண் டுளம்வருந்தியே
மேகமிருளிற் பாவியரவம்
மீறிவந்து கடித்ததோ பாலா (மை)

பாவிநாளும் வளர்த்ததற்கு நீ
பட்சமறப்பது நாயமோ
கோபமோ மனஸ் தாபமோவுயான்
கும்பிதுராத கொடுமையோ ஐயமோ (மை)

சந்திரமதி-விருத்தம்.

எத்தனை விதத்தினாலு மெழுப்பியே யெழுந்திராமல்
புத்தடி தன்னிற்சிவன் போயிற்றோ மகனேயிப்போ

வித்தகன் மாயஞ்செய்த விதிவசமோடாபாலா
பெற்றதாய் வயிற்றிலேதான் பெருந்தணல்மூட்டலாமோ.

இராகம்-காதாராமக்கிரியை-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வாயைத் திறந்து பாலா மகனேபேசடா
மறையோ ரேசுவீரடா மகனேயெழுந்திராய்
துய்யகாட்டிலே பாலா தூங்க நேரமோ
பையவே வயிறடைக்குதென்செய்வேன்
காட்டில் சாய்கரி பாலா காவலோவுனக்குத்
தாட்டிகமாகவேதான் பாலா தானிறந்தாயோ
காய்நரிகளும் பாலா நாடியே இங்கே
ரேய்க்க ஆர்த்திடப்பாலா பேதைகாண்பேனோ
பங்கயமுகமும் உந்தன் பாவனையழகும்
எங்கும் காணேனேபாலா யெழுந்திராய்மகனே.

சங்கிராமதி-விருத்தம்.

என்னடா மகனேநானு மிப்படிப் புலம்பக்கேட்டு
ஒன்றுமே பேசாமல்நீதா னுறங்குறாய் கானகத்தில்
அன்னவ னெழுத்துத்தானோ அமைத்திடும் விதியிதாமோ
முன்னம்நான் செய்வினைகள் முடிந்ததோ மகனேபாலா.

இராகம்-முகாரி-அடதாளம்.

கண்ணிகள்

அப்பாமகனே யெனக்கொரு ஆதரவுசொல்லடா
மைப்போரினுங் கண்ணழகாமகனே மரகதமாணிக்கமே
தாவுதனஞ்சியமே மகனே சனியாமல்வாழ்ந்திருந்தோம்
சாகிறகாலமடா மகனே தார்வனஞ்சென்றுமே
ஓயாத் துயரம்வைத்தாய் மகனே உள்ளநா ளுள்ளமட்டும்
உன்னையும் எவ்விதமாய்மறந்து உயிர்வைத் திருப்பேனோ
முப்பழிசற்பமேயோ மகனே முக்கண்ணர் தன்செயலோ.
சற்பத்தினாலிறக்கமகனே முக்கண்ணர் தன்செயலோ
வேதன் விதிப்படியோ மகனே சோதிச்சுடரொளியே
பாதகஞ் செய்ததினால் இந்தப் பாடுகள் பட்டாயோ

மஞ்சனீராட்டி மடிமீதில்வஞ்சியர் தாலாட்டக்
கொஞ்சி யிருப்பாயே அரவத்தினஞ்சாலிறந்தாயே
பாம்புட வாய்தனிலே மகனே நீ தான்படுங்காலமிதோ
நான்செய்த தீவினையோ மகனே தான்படும் வேதனையோ
சிம்மாதனந்தனிலே மகனே நீ செங்கோல் செலுத்தாமல்
இங்கேயிறந்தாயோ மகனேயித்தற்குநானென்னசெய்வேன்

சந்திரமதி-விருத்தம்.

பனியால்நனைந்து வெயிலாலுலர்ந்து பசியாலலைந்தபுதல்வா
அனியாயமிங்கு அரவாலிறந்த அதிபாவமென்கொலறியேன்
தனியேகிடந்து விடநோய்செறிந்து தரைமீதுருண்டமகனே
இனியாரைநம்பியுயிர்வாழ்வமென்ற னிறைநம்பொழுமயானுமவமே

இராகம்-பந்துவராளி-அடதாளச்சாப்பு

பல்லவி.

ஸேமந்தனெங்பாலகா மைந்தனே நீ இந்த
வனந்தனிலே மாய்ந்ததென்ன (மை)

அநுபல்லவி.

சொந்தக்காலகண் டையமென்னசொன்னார்
சூதினாலேமுனி தூங்கிடச்செய்தனரோ
சொல்லுகுவாய்பாலகா சொல்லுகுவாய்மகனே
சொல்லுகுவாய்கண்மணியே சுந்தரமேயென்குழந்தை (மை)

சரணங்கள்.

நாடினெனெங்குந் தேடினுங்கேனேபாலா
வயிற்றிற்சுமந்துபெற்ற மாபாவியெந்தனுடன்
வாய்திறவாய் குழந்தை வாய்திறவாய்
வாய்திறவாய் கண்மணியே பேய்பிடிக்குதே யரசே (மை)

தெற்றைனீகொய்யவென்று செப்பிநீவந்தாயே
தீராகுமாராயிங்கு திரும்பிவாராதிருந்த
சேதியென்ன பாலகா சேதியென்ன குழந்தை
சேதியென்னகண்மணியே ஆதியில்நான்செய்வினையோ ()

எத்தனைநாந்தனோ உன்தன்முகங்காண்பேன்பாலா
எ[illegible]நான்செய்தபிழை யிப்படிமுடிந்ததையோ

என்னசெய்வேன் பாலகா யென்னசெய்வேன் குழந்தை
என்னசெய்வேன்கண்மணியே மன்னவனீன்றெடுத்த (மை)

சந்திரமதி-விருத்தம்.

சூரியகுலத்துதித்த சுந்திரலோகிதாநீ
பாரினி லரவுதீண்டிப் படுத்தாயோ வென்றுசொல்லி
மார்பினிலறைந்துகொண்டு மனமிகப்புண்ணாய்நொந்து
காரிழைகானகத்தில் கதறுவாள்பதறுவாளே.

இராகம்-தேசிகதோடி-தாளம்ஆதி.

பல்லவி.

என்னசெய்குவேன் நானினி என்னசெய்குவேன்
இறந்தாயோ வனந்தனிலே (என்)

அநுபல்லவி.

சொன்னமொழிதவறாத சுந்தரமே எந்தன்பாலா (என்)

சரணங்கள்,

கால்களும்நடுங்க மேல்மிகவொடுங்கக்
காலம்போல் பாம்புனைப் பிடுங்க மனம்நடுங்க நானினி (என்)
இருந்திடும்பாவி வருந்திடமேவி
இனித்தரிக்குமோ எந்தனுவி படுபாவி நானினி (என்)

வேறு.

கோசிகன்செய் மாய்கையால்ப்பர
தேசியைப்போ லானேனடா (என்)
தனிமையான பாலகனே உந்
தன்னையு மிழந்துநா (என்)

சந்திரமதி-விருத்தம்.

இதற்கோநான் வளர்த்தேன் பாலா என்னையுந்தெருவில்விட்டு
சதிக்கவே வாயில்மண்ணைச் சாத்தினாய் மகனேயிப்போ
கொதிக்கவே தணலைமூட்டியுன் கூடவே மடிந்துபோவேன்
பதைக்குதே எந்தனுவி பாலகா என்னசெய்வேன்.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

மகனேநீ தனியனாக மாளலாகுமோ பாலா (மகனே)

அநுபல்லவி.

புகழிடமெங்குந்தப்பி புக்கினதற்கு உனக்கிதுவோமிக்க (மகனே)

சரணங்கள்.

தந்தையரொந்தன் மைந்தனெங்கேயென்றால்
சர்ப்பினைக்கெப்படிச் செப்புவேண்டா அய்யா (மகனே)
காலன்போல்நாகங் கடித்ததோ பாலா
காட்டினில்கிடட்ட பாட்டைச்சொல்லாமல் (மகனே)

அகவல்

என்னையா ளுயிரோ எனதுகண் மணியே
மூன்னு ளுங்கையர் முக்கணணை நோக்கி
அன்ன முண் ணும லருந்தவஞ் செய்து
வெள்ளை விடையோன் விமலனு ரருளால்
கருவுரு வாகிக் காரண மாகத்
திருவுரு வாகிச் செனிக்கயென் வயிற்றில்
ஓரா மாதம் உடம்பு பூரித்து
ஈராமாதம் இடையது பெருத்து இருதனம் பூரித்து

அடா நான்பெற்றமகனே.

மூன்றுமாதம் முகமெலாம் வெளுத்து முலைநுனிகறுத்து
பலவித மாகப் பச்சைசாரம் போடி
நாலாம் மாதம் நழுவியமசக்கை நவமணிமலா
அலங்காரமாக அவர்கள் வைத் திருந்தார்
ஐந்தா மாதம் அங்கமே தங்கம்
ஐம்பொற் சதங்கை அன்புட னணிந்து
ஆறு மாதம் அடிவயிர் கனத்து

அடா நான்பெற்றமகனே

ஏழா மாதம் என்மாமன் மார்கள்
தாள வரிசை சகலமு மனுப்ப
சம்பா வரிசி சமைத்து வடித்து
கட்டித் தயிரும் கலந்து பிசைந்து
வத்தல் வகையு மாமன் மார்கள்
எடுத்து அனுப்ப யென்தோழி மார்கள்

கொண்டுவந் தெனக்குக் கொடுக்கவே நாளும்
இச்சையாய் நாவுக் கினியது புசித்து
அடா நான்பெற்றமகனே.

எட்டாமாதம் திட்டமாயெனக்கு ஸ்ரீமந்தஞ்செய்ய
மட்டா ருலகில் மன்னர்கொண்டாட
முத்துகால் பந்தல் முயற்சியாய்ப் போட்டு
மாணிக்க ரத்தினம் வயிரநாற் காலிமேல்
மன்னவருடனே மகிழ்ந்தென்னை வைத்து
வந்திடும் வசிஷ்டர் வல்லசோசியரும்
ஓமம் வளர்க்கவும் உத்தமர் வாழ்த்தவும்
இப்படி யெனக்கு இயாவருஞ் சேர்ந்து
சீமந்தந் தானும் சிறப்புடன் செய்தார்
அடா நான்பெற்றமகனே.

ஒன்பதா மாதம் தினபதை மறந்து
ஒலைபோற் சுழன்று உலாவி நடந்து
பத்தாமாதம் பால்முலைசுரந்து பாலகா வுனக்கு
மருத்துவச் சியரும் வந்துமே சூழ
மோசமில் லாமல் முக்கண்ணர் செயலால்
பெற்றே னுன்னையிப் புவியது விளங்க
அடா நான்பெற்றமகனே.

பிள்ளைதான் பிறந்த புகழ்ச்சி யதனால்
விரைவுடன் சர்க்கரை விரைதா னங்களும்
சொர்னமும் பலவுந் தொகையிலா தளித்து
தானமுங் கோடி தருமமுஞ் செய்து
திஷ்டி கழித்துத் தேசத்தோர் மெய்க்க
பாலமு தூட்டிப் பசும்பொற் றொட்டியில்
சிறக்கத் தாலாட்டிச் செம்பொற் சதங்கை
அன்புட னணிந்து அனைவர்கொண் டாட
அடா நான்பெற்றமகனே.

அண்டர் முனிவர் யாவரும் வந்து
நிகரிலாத் தேவ தாசனென் றுனக்கு
தனிப்பெயரிட்டுத் தாதியகொடுத்து தயிலங்க ளாட்டி
மாசிலாத் தொட்டிலில் மங்களமாகமகிழ்ந்துதா லாட்ட
இப்படிக் கெல்லாம் இருந்தாயே மகனே
இந்தநல் வனத்தி லிறந்துபோனாயே
அரவத்தின் வாயா லழிந்துதுன் னேலை

கருதிய கண்ணைக் கறையா னரிக்க
நரியது யிழுக்க நானதைப் பார்க்க
நாதன்கற் பனையோ நான்பெற்ற மகனே
மாதவன் செயலால் வந்திறந் தாயோ

சந்திரமதி-விருத்தம்.

பத்துமாதஞ் சுமந்து பரிவுடன் மகனேஉன்னைப்
பெத்துநான் வளர்த்ததெல்லாம் பெருந்தனல்க் கிடவுமாச்சே
மற்றொரு குழந்தையுண்டோ மனக்குறை யாற்றுதற்கு
செத்துநான் மடியுமட்டுந் தேர்வனோ ஆறுவேனோ.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

போவோ மெழுந்திரடா பாலா
பொன்னே நவமணியே.

அநுபல்லவி.

போவோமெழுந்திரு கோபமெல்லாம்விட்டு
மேவிவனந்தனில் நீயுநானுமாகப் (போ)

சரணங்கள்.

கண்களிருட்டுதடா மழைகாத்துமரங்கள் பிரளுதடா
காடியானைபுலி கதறிவருகுதே காலமடா மகனே (போ)
இடிகளிடிக்குதடா பால்லா முழிகள் தெரிக்குதடா
இவ்வனந்தனிலே கண்ணாலேபார்க்க இங்குநான்வந்தேனடா(போ)
மைந்தனேமேலாகிதனே உன்னைத்தேடி வந்தேனேயான்பாவி
எந்தவிடங்கண்டு உந்தனையடக்க ஏகுவேன்டா மகனே (போ)

சந்திரமதிமகனைமயானம்

கொண்டுபோகிறபாகம்.

சந்திரமதி-விருத்தம்.

மைந்தனே இந்தக்காட்டில் மகனுவ தறியேனேநான்
கந்தரத் திருளிலேதான் கானகந் திருந்துநானும்
ஏந்தெந்த வழியைக்கண்டு ஏகுவேன் பாவியிப்போ
சுந்தர மகனேநாமள் சுடலைக்குப் போவோம்வாடா.

சந்திரமதி லோகிதாசனையெடுத்து மயானஞ்செல்லுகிறது.

காவலன். லோகிதாஸனை மயானத்தில்வைத்தல். சந்திரமதி லோகிதாசனையெடுத்துச்செல்லுதல்.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சுடலைக்குப்போவோம் வாடா
என்னருமைமகனே இப்போ (சுடலை)

அநுபல்லவி.

படவிதியோ சுடத்திதியோ அடா
பாலகனே இப்போ (சுடலை)

சரணங்கள்.

உனையெடுத்து விறகெடுத்து மனம்
பிடித்தெப்படிச் சுடுவேன் (சுடலை)
வருவாயே அடாசேயே இந்த
வனத்தைக் கடந்துதானும் (சுடலை)
சுந்தரனே எந்தன்மகனே சுடு
காட்டில் தகனஞ்செய்யச் (சுடலை)

பொது வசனம்.

இப்படியாகச் சந்திரமதி புலம்பி குழந்தையை மயானத்தில் கொண்டுபோய்த்தகனஞ்செய்வதற்காகப்பிறப்படுகிறவிதங் காண்க

சந்திரமதி-விருத்தம்.

எனமருகி யிவனுடனா மிறந்தோமானால்
இவனையெடுத் தெடுத்தடக்க வரியாரில்லை
மனமுருகா னம்மைவிலை கொண்டோன்சால
வன்கண்ணன் மனைவியவள் தனிமாபாவி
சினமுடையார் விடியுமுன்னே செல்லேலனுகிற்
சிறுவரிவன் றனைக்கருக்கிச் செல்வனென்று
தனதுதிரு மகனையெடுத் தனிதோள் வைத்துத்
தன்னாடி மதிதயனார் தனையேமீண்டாள்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எந்தவழியைக் கண்டு உன்னைத் தூக்கிக்கொண்
டேகுவேண்டா மகனே.

இங்கிதமொழி சொல்லிக் கொங்கைப்பாலுண்டிட
எப்பவருவாய் சுதனே
ஏதுமாயகெதியோ முனிவன் சூதுசெய்த சதியோ நகரம்
பதிையரண்ட மதியோ வேதன் எழுதின திப்படியோ (எந்த)
காடுமேடுபள்ளந் தாண்டிநடக்கையில்
கால்கள் தத்தளிக்குதடா
கண்மணிமகனேநீ வரஞ்க் கனக்குறாய்
களைமிகப்பெருகுதடா
காரிருள்கொண்ட இருண்டவனத்தினிற்
கழுகுடநாய்நரி உறவோடா வுன்னை (எந்த)
காடுநெருங்க கரிகள்வந்திழுக்க
நாட்டமுங் கொள்ளுதடா
நற்றவத்தால்வந்த புத்திரனேவுன்னை
நாய்க ளிழுக்குதடா
நாட்டமுடன்மிருகக் கூட்டம் வருகுது
நங்கையுமிங்கே செங்கையிற்கொண்டு (எந்த)
கூந்தலின்மயிர்தனை இண்டமுள்ளுகள்சிக்கி
குனிக்கியே யிழுக்குதடா
கோசிகன்கொடுத்திடுங் காவிவஸ்திரந்தன்னை
கொடிமுள்ளு கிழிக்குதடா
கூட்டமாய்நாய்நரி ஓட்டமதாய்வந்து
கூச்சல்களிட்டுமே பாச்சலில்வருகுது (எந்த)
ஏகமாய்த்தலை மண்டைவெடிச்சத்தங் கேட்குது
எடுக்குது பிணவாடை
இரைச்சலிட்டுப் பூதகணங்கள் கூத்தாடுதே
ஏகினல்வெகு மோசம்
இந்தவனந்தனிற் சிந்தைகலங்குதே
விந்தையதாகவே உந்தனை தூக்கியே (எந்த)
மானமும்பூமியுங் கொழுந்துவிட்டெரியுதே
மயானமு மிதுதானோ
மாமுனிசெய்த மாய்கையோவெளிச்சமோ
மாபாவி யானறியேன்

வரும்விதியிதுவென மலரயனமைப்பிதோ
மைந்தனே உந்தனை யிந்தயிருட்டிலே (எந்த)

சந்திரமதி-விருத்தம்.

காடுமேடுஞ் செரிந்த செந்நாய்முன்னே
கௌவியிழுத் திடப்பருந்து கழுகுமோதப்
போடுபோ டெனப்பலபேய் தொடரக்கொண்டு
போகேனீ யெனக்கொடிய பூதஞ்சூழ
மாடுதோ றும்பரிக்க நரிகடாவ
வார்குழலுஞ் சோர்துகிலும் வனத்தொட்டீர்க்க
ஈடுபா டித்தனையும் பொருத்துநீண்முள்
ளிடுகாடு நீந்திநெடுஞ் சுடுகாடுற்றாள்.

ஷை வசனம்.

அடாபாலா இந்தவனத்தில் பசாசுகளோ உன்னைப்போடுபோ டென்று வழிமறிக்குது மயானம் இன்னவிடமென்பதுந் தெரியவி ல்லை நானென்னசெய்வேன்பாலா.

சந்திரமதி-விருத்தம்.

பிணங்கள்சுடும் கடம்புலைய ரரவத்தாலும்
பிளந்துதலைவெடித்திடும்பேரமலையாலும்
நிணங்கருகிச் சுடுகாரும் முடையினாலும்
நெடுந்தழலின் கெழுந்தெரிந்த நிவப்பினாலும்
கணங்கள்மிகக் களித்தாடுங் கழனியாலும்
கணற்பொறியின் மலிவாலும் புகையினாலும்
சுணங்குபல பிணங்குபெருங் குரைப்பினாலும்
தோகையறிந் துணர்ந்துகொடுஞ் சுடலைசார்ந்தாள்.

இராகம்-சங்கராபரணம்-அடதாளச்சாப்பு.

பல்லவி.

அப்பா உனைக்கொடுத்து இப்படியான்சகித்து
ஆரிடத்தினிற் சேர்குவேன்.

அநுபல்லவி.

செப்புமொழிதவறாத திருச்சந்திரமைந்தன்பெற்ற
செல்வனையரவம் மாயமாய்க்கடித்ததோ

தேவருமுனிவரும் யாவருந்துதிசெய்யச்
சிறந்தநமததுசெல்வம் ஒழிந்துதோயிந்தமட்டும் (அப்)

சரணங்கள்.

உலைவாய்மெழுகுபோலே அலைவாய்த்துரும்புபோலே
ஓடி உருகிறேண்டா இப்போ
உன்தலையில்மகுடம் சூட்டி அரசாளாமல்
உயிர்போய் மடிந்தாயடா
கொலைமரணங்கேட் டொன்னுடதந்தை
கோவித்துவருட ஆவியும்போக
நிலையுள்ளசூரிய குலம்பழுதாச்சோ
நீடித்தசெல்வமும் உன்னுடன்போச்சோ (அப்பா)
அய்யாவுனைத்தகனஞ் செய்யமயானஞ்செல்ல
அறியாதபேதை நானடா
துய்யாவுனைக்கடித்த பையரவமென்னைத்
தூரத்திக்கடிக்கா தேனடா
அயனுடையமகிமை யானதினாலே
அவரிட்டவிதிகளும் நேருதலாக
பையரவு உன்னைக் கடித்துதே பாவிநாண்
பார்த்தால் விடுவனடா
பருத்தநமததுசெல்வம்
வெருத்ததோ யிந்தமட்டும் (அப்பா)

சந்திரமதி குழந்தையை மயானத்தில்வைத்து

தகனஞ்செய்கிறபாகம்.

சந்திரமதி-விருத்தம்.

கண்டனளீ தீமமெனக் கருத்திலுன்னிக்
 கடவுளர்தங் காவலிற்றன் மகனைவைத்துப்
பண்டுவெந்த கரிந்தகுறைக் கட்டையெல்லாம்
 பலதிசையும் விரைந்தோடிப் பார்த்தெடுத்துக்
கொண்டுவந்து பிணங்கள்சுடுஞ் சுடலைநண்ணிக்
 கொள்ளியெடுத் தோடியனல் கூட்டிமூட்டி
மண்டுதழற் கட்டையின்மேல் மகனைவைத்தாள்
 வளர்ந்தெரியுங் கனல்விளக்க மன்னன்கண்டான்.

சந்திரமதி குழந்தையை தகனஞ்செய்கிறதும்
மயானக்காவலன் காலாலுதைக்கிறபாகம்.

மயானக்காவலன் காஷ்டத்தையுதைத்தல் [illegible] குழந்தையை தூக்கிக்கொண்டுபோய் தகனஞ்செய்தல்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலகா பாலகா பாலகா பாலகா
பாலகா நானென்னசெய்குவேன் பாலகா

அநுபல்லவி.

காலமடாமகனே நான்செய்தபாவத்தினுல்
கட்டையில் வைக்குறண்டா (பாலகா)

சரணங்கள்.

இப்படிவருமென்று யானறியேனே
எதுகால மோடா (பாலகா)
பெத்தவயிறுதானும் பத்தியெரியுதடா
செத்து மடிந்தாயோடா (பாலகா)
உத்தமகனையுன்னை யெத்திசையோரறியப்
பெத்து வளர்த்தானடா (பாலகா)
[illegible]ளிகூளிகள்வந்து காலைப்பற்றிழுக்குதே
[illegible]னல்தனை மூட்டுறண்டா. (பாலகா)

அனிச்சத்தோடி-விருத்தம்.

இரவினில் நடுச்சாமத்தி லிங்குள்ள சுடலைதன்னில்
திருடிபோல் வந்தநீயார் செத்ததோர் பிணமிதேது
மருவுமென்காவலுக்குள் மறைந்துநீ சுடுவதேது
[illegible]நீ செய்ததாலே தீயினி மூட்டவொட்டேன்.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆரடி மயானத்திலே துணிந்துவந்த
தத்தராத்திரி நேரத்திலே (ஆரடி)

அநுபல்லவி.

காரணம்விளங்கியமெய் வீரவாகுதீரன்சொந்தக்
காரியநானெனை யூரிலுள்ளோர்சொலும்
நேரறியாமலகாரணமாகவே. (ஆரடி.)

சரணங்கள்.

அந்தராத்தலையும்பேயோ பிணங்களுண்ண
வந்திடுங் கழுகுநாயோ

உந்தனுருவந்தனை நானெந்தவிதமாயறிவேன்
ஓதடிபாதகி நீதனியாய்வருஞ்
சூதெனமோதெரி யாதிதுவேளையில் (ஆரடி)

மையேநிமிர்ந்தென்னைப் பாரடி பதியைவிட்ட
தையலே யெந்த வூரடி
செய்யதாமரைநிகர்த்த கையினிற் குழந்தையேது
திட்டுகிறேனுனை வாட்டுகிறேனிசை
நாட்டுகிறேனுயிர் தாட்டிகமாக்வே (ஆரடி)

தெண்டனையுனைச் செய்வேன் கடல்வளைந்த
மண்டல மறியத்தானே
பெண்டுபிள்ளைத்தமைக்கால கண்டரிடங்கொண்டுவித்த
பித்தனெனத்தெளி வுற்றமனத்தினில்
மெத்தநினைத்தும லைத்திடாதிக்கதி (ஆரடி)

அனிச்சத்தோட்டி-வசனம்.

ஆரடி நடுச்சாமநேரத்திலே என்காவலுக்குள்ளே இந்தச்சுடு காட்டில் என்னுத்தரவுமில்லாமல் பிணஞ்சுடுவதேது நீயார் பிணமேது இத்தனைநீளித்தனமாக நீ எனக்கறிக்கை பண்ணு கஷ்டமூட்டினதால் இதோ இந்தக்காஷ்டத்தையும் பிள்ளை தைத்துத்தள்ளிவிட்டேன் நீ இங்கேசுடக்கூடாது அப்புறம்

சந்திரமதி-விருத்தம்.

அடவிகா வலரேகேளீர் ஆருயிர்ப் புதல்வன் றன்னை
திடமுள மறையோர்தானும் செப்பினார் வனத்துக்கேக
விடமது கடித்துமாண்டு விட்டுயி ரிழந்தான்பாலன்
படர்வனக்காடுதாண்டிப் பாலனை யடக்கவந்தேன்.

ஷ் வசனம்.

அகோவாரும் மயானகாவலா யென்னுடைய குழந்தை வனத்திலே அரவுகடித்து இறந்துபோய்விட்டான் அக்குழந்தையைத் தகனஞ்செய்யவந்தேன் தயவுசெய்து குழந்தையைத் தகனஞ்செய்யவேணும் மயான காவலா.

அனிச்சததோட்டி வசனம்.

ஒருக்காலும் தகனஞ்செய்யமாட்டேன்.

சந்திரமதி-விருத்தம்.

காவல்நீ யிருப்பாயென்றுங் காட்டிலே பிறந்தபிள்ளை
சாவனக் கறியச்செய்து சபந்தனைச் சுடுவதென்றுந்
தவிச்சொல் வாருண்டானாற் றனியநான் வருகுவேனோ
பாவிநா னேழையிந்தப் பாலனைச்சுடுகுவாயே.

ஷை வசனம்.

அகோ மயானகாவலா காட்டிலிறந்தபிள்ளையைச் சுடுகாட்டிலேகொண்டுவந்து கொளுத்தவேணுமானால் நீ இங்கே காவலிருக்கிறதென்றும் உனக்கறியச்செய்து கொளுத்துகிற தென்றும் தெரிந்துசெய்ய ஒரு மனுஷாதிக்குண்டானால் இந்த அர்த்த ராத்திரியிலே நானே பிணத்தைச்சுமந்துவந்து சுடுவேனோ நான் ஆருமற்ற பாவியாகையால் யிறந்த குழந்தையைத் தகனஞ்செய்யச் செலவுகொடுமையா மயானகாவலா.

லாவணி கண்ணிகள்.

அனிச்சத்தோட்டி சொல்லல்.

[illegible]த்தராத்திரியிற் கத்தியழுது வருவானே வருவானே அரை
[illegible]யி லிவடம்விட்டு அகலப்போவதினித் தானேயினித்தானே.

சந்திரமதி-சொல்லல்.

அ[illegible]லப்போவெனவுந் திகழு மடவிகாவலரோ காவலரோ அருள்
வ[illegible]த்திற் பாலனுயிர் அழைக்கில்போனது நீர்பாரும் துயர்தீரும்.

அனிச்சத்தோட்டி சொல்லல்.

ஆயா[illegible]யிருள் அதிகமானவ[illegible]ந்தனிலே வனந் தனிலே யிங்கு
துணிவதாக[illegible]வந்து பணிவதேது அறியேனே தெரியேனே.

சந்திரமதி சொல்லல்.

பணிவதெந்தன்விதி அயனெழுத்துயிது தானே யிதுதானே சிறு
பாலகன் பாடுமுடியாது தகனம்பண்ணுவீரோ பண்ணுவீரோ

அனிச்சத்தோட்டி சொல்லல்.

தகனம்பண்ணுமென்ற தன்மையெனக்குத் தெரியாது என
தரசன்வீரவாகு உத்தரவுகள் தப்பாது தப்பாது

சந்திரமதி சொல்லல்.

உத்தரவோ எனக்கு ஒருத்தராதரவுமில்லை அய்யாயில்லை மன
துருகிவாடுதெந்தன் சிறுவன்வாடுவது தொல்லை இதுதொல்லை.

அனிச்சத்தோட்டி சொல்லல்.

சிறுவன்வாடுவது துயரமென்றால் நீதானும் நீதானும் யிப்போ
சிறந்தவாய்க்கரிசி கால்ப்பணந்துண்டுகளும்வேணும் அதுவேணும்

சந்திரமதி சொல்லல்.

முளத்துண்டுவகையறுத் தாமனிதரில்லை அய்யா யிதுபொய்யாகா
முனிவரா லெனது நாடுநகர மிழந்தேனே இழந்தேனே [ங்கள்

அனிச்சத்தோட்டி சொல்லல்.

இழந்தோம்நகரமென்றும் குழந்தைதகனஞ் செய்யு மென்றாய்நீ
எடுத்துக்கொண்டுசானுந்தடுத்துப்பேசாமற் போவாயேபோவாயே

சந்திரமதி சொல்லல்.

போவதேதுனதுபாத தஞ்சமினிநானே இனிநானே வெகு
புண்ணிய முண்டுனக்கு ஆருந்துணை யுமினிக் காணேன் இனிக்கா
[ணேன்

அனிச்சத்தோட்டி-விருத்தம்.

ஆருமில்லாதபாயி யானேனென்றுரைத்ததாலே
தீரமாய் நீதான்செய்த தீமையைப் பொறுத்தேன்கண்டாய்
வாரமாமரிசிதுண்டு வளங்குகாற்பணந்தானுண்டு
...மா விதைக்கொடுத்துன் பாலனைக்கொளுத்துவாயே

சந்திரமதி விருத்தம்.

வருத்தமாய் நொந்துவந்தேன் மயானகாவலரோவீர்
ஒருத்தரா தரவுமில்லை ஒருகாசுக் கிடமுமில்லை
கருத்தினிற் றயவுவைத்துக் கனல்மூழவைத்தீரானால்
தரித்திடு மனேகபுண்ணியந் தருமமும் லபிக்குமையா.

இராகம்-கும்பகாம்போதி-அடதாளம்.

கண்ணிகள்.

இந்தக்
கையினிற்காசுகிடையாது நானென்னசெய்குவேன்
கானகமேவியகாவலா நானென்னசெய்குவேன்
பொய்சொல்லெனக்குத்தெரியாது யென்செய்வேன்காவலாஎந்தன்
புத்திமயங்கியேமெத்தப் பிரமைகொண்டேன் காவலா
இப்போ
என்னைப்போல்பாவியுமிருப்பாரோ யிந்தவுலகினில்
ஏழைக்குத்தெய்வமும் யிரக்கமுமில்லையோ காவலா

காவலன்கைதனிற் சிக்கிடச்செய்தாயே தெய்வமே ஒரு
காசுங்கிடையாது மறையோருந் தரவுமாட்டாரோ

சந்திரமதி வசனம்.

அகோவாரும் மயானகாவலா யெனக்குயாதொரு கெதியுமில்லை உன் மனதிரங்கி என்குழந்தையைத் தகனஞ் செய்யவேணுங் காவலா.

அரிச்சந்திரன்-வசனம்.

நீ காசு யில்லையென்றால் ஒருக்காலுந் தகனஞ் செய்யப்போகிறதில்லை காசுகொடுத்தால்தான் தகனஞ்செய்வேன்.

சந்திரமதி-விருத்தம்.

அய்யோகோ புலையாகேளாய் ஆருமில்லாதமைந்தன்
டையவேஅரவுதீண்டிப் பார்வனமிறந்தான்பாலன்
னையவே மனதுநொந்து நாடிவந் திடுகாட்டுள்ளே
கையினி லொருகாசில்லை கலங்குறேன் தயவுசெய்வாய்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வித்தைநீ பேசவேண்டா மின்னுதுன் கழுத்திற்றாலி
உத்தமங் கிலியமிந்த உலகெலாம் விலையேகொள்ளும்
வைத்துநீ பூண்டுகொண்டு வகையில்லை யென்பதேது
கைத்தலந் தன்னிற்றந்தால் கனலைநான் மூட்டுவேனே.

லாவணி.

கண்ணிகள்.

ஒன்றுமில்லையென்று ஓதுவதேதடி மங்கையே நீ
சென்றுவிடு அப்புறம் சற்றுநேரமில்லா திங்கையே
கண்டேன்கழுத்தினிற் கட்டியிருக்கின்ற தாலியை அதைக்
கொண்டுவிலைசெய்து யெந்தன்கையிற்கொடு மங்கையே
வித்தைநீபேசவேண்டாம் மெல்லியரேநீயுந் தாலியை உன்
சித்தமகிழ்ந்துநீயும் வித்துக்கொடுத்துவிடு இங்கையே

அரிச்சந்திரன்-வசனம்.

அகோவாரும்பெண்ணே உன்னைப்பார்த்தால்நீலிபோலேதோணுகிறது உன் கையிலே ஒருகாசுமில்லையென்று சொல்லவந்தாயே

உன்கழுத்தில் தரித்திருக்கப்பட்ட மங்கிலியம் இந்தப்பூமண்டலமெ ல்லாம் விலைமதிக்கக்கூடாது அப்பேர்ப்பட்ட மங்கிலியத்தையணி ந்துகொண்டுயேழையென்று சொல்லவந்தாயே யிந்தக்காசிப்பட்ட ணத்திற்கொண்டு போய்விலைசெய்து எனக்குச்சேரவேண்டிய வா ய்க்கரிசிதவிர கால்பணமும் முளத்துண்டும் கொண்டுவந்தால்தகன ஞ்செய்வேன் யில்லாவிட்டால் தகனஞ்செய்யமாட்டேன்.

சந்திரமதி-விருத்தம்.

தாலியைக் கண்டபின்பு தான்விலைப் பட்ட துக்கம்
பாலகன் மடிந்ததுக்கம் பட்டதோர் துக்கமெல்லாம்
சாலவே மறந்துவிட்டு தையலாள் மதிமயங்கி
ஆலிலைவயிறுநோக அடித்தடித் தலறிவிழுந்தாள்.

ஷை விருத்தம்.

அல்லியே கீழ்விழுந்து அரகரா சிவனேஊரில்
பலர்களு மறியாதெந்தன் பத்தாவைத் தவிரத்தாலி
மலருறைப் பிரமனும் மாதவ முனிவராலும்
புலனறி யாரேயிந்தப் புலையனே காண்பதென்றாள்,

இராகம்-மோகனம்-அடதாளச்சாப்பு

பல்லவி.

இதுவென்னபாவம் எவர்செய்தசாபம் (இது)

அநுபல்லவி.

புதுமைகள்கண்டதும் பூலோகம் ஆண்டதும்
புத்திரன்பட்டதும் புலையன்தாலிகண்டதும் (இது)

சரணங்கள்.

அரிகரிபிர்மா அண்டர்முனிவர்
ஆதவன்காணாத தாலி நீசன்காண (இது)

சந்திரமதி-விருத்தம்.

ஈசன்மா லயன்முதலோ ரிமையவ ரெவருங்காணா
வாசமா யிருக்குமிந்த மங்கிலிய சூஸ்திரந்தன்னை
பாசமா யிருக்குமெந்தன் பத்தாவே காண்பதல்லால்
நீசனே காணவைத்தாய் நிமலனே காசிநாதா.

இராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

சண்டாளன்தாலியை கண்டுமேவிண்டுகேட்டானே நான்
சத்தியந்தவிழ்ந்தேனே பத்தினிநிலைகுலைந்தேனே
கொண்டகணவரல்லால் அண்டர்முனிவரறியாரே இப்போ
கோலப்பறையன்கண்ணிற் காணவுமாச்சுதே தெய்வமே
அண்டர்முனிவர்கள் யாவருங்காணாததாலி நீ
இன்றையத்தினத்திலே யிப்படிக்காண்பித்தாய் தெய்வமே

அனிச்சத்தோட்டி-விருத்தம்.

பொருமிநின் றழுதபெண்ணே பொன்னினால் மின்னுந்தாலி
அரியஉன் கணவரல்லால் மற்றொருவரு மறியாரென்றாய்
அரியஉன் கணவனெங்கே யாரவன் பேர்தானென்ன
தெரியவே யெனக்குநீதான் செப்புவாய் செப்புவாயே.

ஷை-வசனம்.

அகோ வாரும்பெண்ணே உன்மங்கிலியத்தைக்கண்டவுடனே திருமூர்த்திகள்கூடக் காணாததாலியென்றும் விசனப்படுகிறா யல்லவா உன்கணவன் பேர்தானென்ன இந்தக்காசியில்வரவேண்டியது தானென்ன அதுவிபரஞ் சொல்லவேணும் பெண்ணே.

சந்திரமதி-விருத்தம்.

செப்பிய அயோத்திநாடன் திருச்சங்கு ராஜன்மைந்தன்
அற்புத விவேகன்சத்திய அரிச்சந்திர ரவர்பேராகும்
மற்புய வலுத்ததோழன் மதிதயன் மகள்தானென்பேர்
கற்பனை கோலங்கொண்ட சந்திர மதியென்பேரே.

ஷை வசனம்.

அகோவாரு மயானகாவலா என்னுடைய பத்தாவின்பெயர் அயோத்தியாபுரியை யாளப்பட்ட திருச்சங்குராசாவின் குவாரர் சத்தியவாக் கரிச்சந்திரர் என்பேர் மதிதயன்மகள் சந்திரமதி யென் குழந்தைபேர் லோகிதாசனப்பா மயானகாவலா.

இராஜா-பொது வசனம்.

இவள் சொல்லுகிறதைப்பார்த்தால் நமதுமனைவிபோல்காண் கிறது அல்லது ஒருவேளை முனிவருடைய மாய்கையாயிருந்தாலு

மிருக்கும் இன்னம் விசாரிப்போமென்று அரிச்சந்திரன் விசாரிக்கி றவிதங்காண்க.

அரிச்சந்தோட்டி-விருத்தம்,

பேர்பெரும் அரிச்சந்திரன்றன் பிராணநா யகனென்றேயே
சீர்பெரும் அயோத்திநாடு தேசமு முன்னுதென்றாய்
கார்குழல் பெண்ணேயிந்தக் காசியில் வருகுவானே
நேர்மையா யுன்கணவ னிருக்கின்ற விடஞ்சொல்வாயே.

சந்திரமதி-விருத்தம்.

எங்கனே போயினரோ யில்லையோ யிருக்குறரோ
சங்கரா அறியமாட்டேன் தவமுனி தனக்குநாடு
பொங்கா விட்டுக்கொஞ்சம் பொருள்கட னுலேயிப்போ
எங்களைவித்தாரென்று வியம்பினள் சந்திரமாது.

அரிச்சந்தோட்டி-விருத்தம்.

மடக்கொடி யுரைத்தவார்த்தை மன்னவன் மிகவுங்கேட்டுத்
திடுக்கிட்டு வெழுந்திருந்து தேவியு மிவள்தானென்று
கடைக்கண்ணு லூற்றுப்பார்த்து காளையோ யிறந்தானென்று
இடிவிழுந் தாப்போல் மன்ன னேங்கியே புலம்புவானே.

மகனே உனக்கிந்தத் தலைவிதியிந்நாளில்

இராகம்-சஹானு-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வருமென் றறியேனடா மகனே மகனே
ஜெகதலமெல்லாம்நீ யாள்வாயென்றிருந்தேனே
செத்துமடிந்தாயோடா மகனே மகனே
என்வயிற்றிற்பிறந்து என்னபலனைகண்டாய்
இந்தப்பலன்காணவைத்தாய் மகனே மகனே
முன்னமொருபூதம்வந்தால் முந்திநானிற்பென்நீங்கள்
முடுகிநடந் தேகுமென்றாய் மகனே மகனே
காட்டுக்குவருவாயென்று கடிப்போமென் றெண்ணிப்பாம்பு
காத்திருந்த மாயமென்ன மகனே மகனே
மேட்டுப்புற்றிற்பாம்பு பார்த்துக்கடித்தபோது
விதியைநினைந் தழுதாயோடா மகனே மகனே

செத்தபிணஞ்சுட்டகட்டை சித்தினதைசேர்த்ததின்மேற்
தீயைமூட்டி வைக்கலாச்சே மகனே மகனே
சற்றுமிதையாரென்றெண்ணி யுற்றுப்பார்த்தறிந்திடாமல்
தரையில்விழ வுதைத்தேனப்பா மகனே மகனே

அரிச்சந்திரன் தோட்டி-விருத்தம்.

மாணிக்கக் கிரீடம்பூண்டு வையகம் ஆள்வாயென்று
காணிக்கை கொடுத்தே தெய்வக் கடாட்சத்தி லுன்னைப்பெற்றேன்
வீணுக்கோ வளர்த்துப்பாம்பின் விஷத்துக்கோ தாரைவார்த்தேன்
காணக்கிட டரீதசெல்வங் கண்டிழந் தவர்போலானேன்.

இராகம்-காம்போதி-அடதாளச்சாப்பு.

கண்ணிகள்.

ஐயையோவென்செய்வேன் அரும்பாவியானேனே யீஸ்பரா என்
னருமைமகனுமே அரவத்தாலிறந்தானே யீஸ்பரா
நாடுநகரமும் ஆள்வாயென்றிருந்தேனே லோகிதா இப்போ
நாகத்தால்மடிந்தாயோ பாவிநானென்செய்வேன் லோகிதா
பாவியரவுகடிக்குமென்றறியேனே லோகிதா இந்தப்
பாட்டுக்கோஉந்தனைப் பெத்துவளர்த்தேண்டா லோகிதா
செத்துமடிவாயென் றொருக்காலுமறியேனே லோகிதா உன்னைச்
சிறுமைப்படவோநான் வித்துவந்தேனடா லோகிதா
என்சென்மமீடேற யிருப்பாயென்றிருந்தேனே லோகிதா எனக்
கெள்ளுந்தண்ணீரும்நாளை யாரெனக்கிறைப்பாரோ லோகிதா
மகனென்றுபாராமல் மாபாவிநானுமே லோகிதா உன்னை
வலதுகாலாலெகா னெத்திவிட்டேனடா லோகிதா

ஷை வசனம்.

ஐயையோ மகனே அனேகந்தெய்வ ஸ்தலங்களுக்கெல்லாம்பிரா
ர்த்தனைசெய்து தெய்வகடாட்சத்தினாலே உன்னைக்கண்டேன் இப்
போ பாம்புக்கிரைகொடுத்து பாவியாகிப்போனேனடாலோகிதா.

இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

போனாயோ மகன்றானென்னைவிட்டுப்
போனானே மகன்றான்

அநுபல்லவி.

போனானேஎன்மகன் பொய்சொல்லமாட்டாமல்
மானேமகனே வழிதிசைதப்பியே (போ)

சரணங்கள்.

ஒருநூரல்கூப்பிட வருகிறேனென்பாயே
ஓயாமல்கூப்பிடப் பேசாதிருந்தாயே (போ)

சந்திரமதி பொதுவசனம்.

ஐயையோ தெய்வமே என்னுடைய கணவனுக்கு இவ்வேஷம்வரச்செய்தாயோ யென்செய்வே னீஸ்பராவென்று அனேகவிதமாய்ப் புலம்பிக் கணவனைப்பார்த்துக் கேட்கிறவிதங்காண்க.

சந்திரமதி-விருத்தம்.

எங்களை வித்தபின்ன ரிந்தவா றுமக்குவந்த
சங்கட மேதுமன்னா தலைவிதிக் கழுவாருண்டோ
தங்குமோ காயம்வாழ்வும் தவறுமோ தெய்வமெண்ணம்
பங்கமாஞ் சத்தியத்தைப் பழுதுவா ராமற்காரும்.

ஷை வசனம்.

அகோ யென்பிராணநாதா எங்களை வித்ததின்பிறகு தாங்களுக்கு இந்தவிதி வந்தகாரணந் தெரியச்சொல்லவேணும் பிராணநாதா

அரிச்சந்திரன் விருத்தம்.

மகனையுமுனையும்வித்தேன் மாமுனி கடனுக்காகத்
தகைபெறுந்தரகுகூலி தரச்சொல்லிமறித்துக்கொண்டார்
புகைபடுஞ்சுடலைகாக்கப் புலையனுக் கடிமையானேன்
மகிழ்வுடன் றரகுகூலி வந்ததென் றவரும்போனார்.

ஷை வசனம்.

பெண்ணே சந்திரமதி யிந்தக் காசிப்பட்டணத்தில்வந்து உன்னையும் மகனையும் காலகண்டையருக்கு வித்தபின்பு நட்சேத்திரத்தநகன் தரகுசம்பளத்துக்காக வீரவாகுபட்டத்தில் என்தேகத்தை வித்துத்தரகுகொடுத்தேன் வீரவாகு என்னையிந்தமயானங்காக்கும்படிசொன்னான் நான்வந்து சுடலைகாத்தேன் பெண்ணே சந்திரமதி.

இராகம்-சங்கராபரணம்-அடதாளம்.

கண்ணிகள்.

துரைமக்கள்நவரத்தின முடிபட்டிடப்பணிந்த பாதம் இந்தச்
சுடலையெலும்புகள்பட் டிடவந்ததென்ன விநோதம்
சரிகைப்பட்டயஞ்சுழ தாடுசெங்கோல்கொண்ட பாணி இந்தச்
சுடலைக்கரையிற்பிணஞ் சுடவந்ததோமனம் நாணி
அரசர்பந்திபந்தியாய்ச் சூழக்கொலுவிருந்த வீரா இந்தச்
அடிமைப்படவும்விதி யமைந்ததோராஜகெம்பீரா
இரத்தினபுஜகிருது பெற்றிலகியராஜ தீரா இந்தச்
செத்தபிணங்களிடை யுற்றிருப்பாயோ வசீரா
[illegible]கிரக்குடையின்கீழ் பூமியையாண்டவல் லாசா இந்தப்
புகைசூழ்பிணநாற்றம் பொருத்திருப்பாயோமக ராஜா
சத்தியவானென்று நெஞ்சமிரங்காதோ தெய்வம் இந்தச்
சவஞ்சுடவிதித்தானே அயன்விதி யிதற்கென்னசெய்வம்
பத்தியெரியுதெந்தன் பாழ்நெஞ்சம்புண்ணாக அய்யோ இந்தப்
பாடுவருமென்று நானறியேனிது மெய்யோ
பரதேசிபோலநீர் பரதவித்தவதைத் தானும் இந்தப்
பாவிகண்ணாலேதான் பார்த்துயிருப்பேனே நானும்

சந்திரமதி-விருத்தம்.

பாவியென் பவர்களுக்குட் பாவிதானெனைப்போலுண்டோ
தேவியென் றறிந்தீர்பிள்ளை செத்ததுங் கண்ணுற்கண்டீர்
சிவன்போ னுலுஞ்சத்தியஞ் சிதறவொண் ணுதுமேதவித்
தாவியே மகனைவைத்துத் தகனஞ்செய்ய திடுகுவீரோ.

அரிச்சந்திரன்-விருத்தம்.

செய்வனேதகனம்யான்தான் தெய்வத்தின்செயலினாலே
பொய்சொல்லாதிருக்கவெண்ணிப் புலையனுக்கடிமையானேன்
ஐயமே காசுந்துண்டுந் தரச்சொல்லி மறையோன்கையில்
மையப்போய்வாங்கிவந்தால் பாலனைத் தகனஞ்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

பொல்லாதபாவியவன் பொருளெய்வானே
புத்திரனைப்புதைத்துநீ வாடியென்பான்

நில்லாமல்வேலைசெய்யச் சொல்வான்பாவி
நீதியில்லான் றன்னிடத்திற் போய்நான்வாரேன்
மல்லாருந்திண்புயனே இடுகாட்டுள்ளே
மகாகெணங்கள்மெத்தவுண்டு மைந்தன் றன்னை
பொல்லாங்கு வாராமற் காருமையா
போய்வாரேனென் றவளுஞ் சரணஞ்செய்தாள்.

இராகம்-எமுனாகல்யாணி-ஏகதாளம்.

பல்லவி.

போய்வாரேன்சுவாமி பிள்ளைபதனம் (போய்)

அநுபல்லவி.

வாய்மைமிகுந்த மறையோரிடத்தில்
மன்னுநான்போயி யின்னாளினில்வாரேன் பிள்ளைபதனம்(போய்)

சரணங்கள்,

காசில்லாப்பாவி கலங்குதென்னாவி
கூசியென்னாவி கொற்றவாவுன்காவல் பிள்ளைபதனம்(போய்)

நாய்நரிகழுகு நலிந்திடுங்காட்டில்
பேய்களுந்தசையை பிச்சுதின்னும்போடும் பிள்ளைபதனம்(போய்)

பூதபேய்கணங்கள் மாயஞ்செய்துபோடும்
ஏதும்வராம லிருந்துநீர்காரும் பிள்ளைபதனம்(போய்)

சந்திரமதி வசனம்.

அகோ சரணஞ் சரணமையா சுவாமி அடியாள் போய்வரும் வரையிலும் குழந்தையை நாய்நரிதீண்டாமல் பாதுகாத்துக் கொள்ளவேணுமையா சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணேசந்திரமதி நம்முடையகுழந்தையென்று காத்துக் கொண்டிருந்தால் இந்தமயானத்தில் அனேகம்பேர் சவங்கொண்டு வருவார்கள் அப்படிவந்தால் அந்தக்காரியமும்போய் பார்க்கவேண் டியதாகவரும் ஆனதால் ஒருமுகூர்த்தவேளையில் வந்தாலாச்சுது இல்லாவிட்டால் என்பேரில் குற்றஞ்சொல்லக்கூடாதுபெண்ணே சந்திரமதி.

சந்திரமதி-விசனம்.

அப்படி ஒருமுகூர்த்தவேளையில் வருகிறேனையா சுவாமி.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

போய்வாரேன்நாய்நரிகள் புத்திரனைத்தீண்டாமலே
பேய்கணங்கள்திண்ணாமல் பிள்ளைதனைக்காருமையா
மன்னன்முன்னேமகனைவைத்து மாபாவிநான்போரேனையோ
என்னைப்போலேபெண்பிறந்து மிருப்பாரோபூவுலகில்
அன்னம்போலேசந்திரமதி அரிவையரும்போய்வாரேன்
மன்றுவுங்காவலையா மகனைப்பார்த்துக்காருமையா
கொள்ளிக்காசுவாங்கிவாரேன் கொற்றவனேபதனையையா
கள்ளியென்றுசொல்லும்படி கடவுள்தானும்யெழுதினனே
தணலிலிட்டமெழுகதுபோல் சந்திரமதிமனதுநொந்து
பிணங்கள்சுடுஞ்சுடலையில்விட்டு பெண்கொடியும்போரேனையோ.

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சந்திரமதி சுடலையிலே மகனைவைத்துப் போட்டு வரும்போது இங்குள்ளவர்களையாவது பிச்சைகேட்போமாவென்று பிச்சைகேட்கிற விதங்காண்க.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

பெண்ணுக்கிரங்கிப் பிச்சைதாரீரையே
பெண்ணுக்கிரங்கிப் பிச்சைதாரீர்

அநுபல்லவி.

அய்யர்தாராரே பணக்கா நேராரோ
தயவுள்ள ஆராரே அய்யே (பெ)

சரணங்கள்.

மதனசொரூபனைப் பெற்றேனே தொண்டனானேனே
தெற்பைகொய்யப்போனானே சாகவளர்த்தேனேனே அய்யே (பெ)
சமகாவலன் கோவிப்பாரே கையிலில்லாதே
தகனிக்கச்செல்லாதேதடையொன்றுஞ்சொல்லாதேஅய்யே. (பெ)

பொது-வசனம்,

இப்படியாகப் பிச்சைகேட்டுக்கொண்டு காசிப்பட்டணம்போய்ச்சேர்ந்தாள் அப்போது விஸ்வாமித்திரனேவலால் கள்ளர்களைத் தருவித்து காசிராஜாகுழந்தையை திருடிவரும்படி செய்துசந்திரமதிவருகிறவழியில் போடுகிறவிதங்காண்க.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தாரே விஸ்வாமித்திரருஞ் சடைமுடியிலங்கிட (வந்தா)

அநுபல்லவி.

விந்தையுடனேவெகு விசனமுடனாகவேதான்
சங்கரவிசுவந்தனைத் தொழுதுநமஸ்கரித்து (வந்தா)

சரணங்கள்.

எந்தவிதமாயரிச் சந்திரன்தன்னையுந்தான்
தந்திரமாகப்பொய்கள் தான்சொல்லச்செய்வோமென்று (வந்)

விஸ்வாமித்திரன் வசனம்.

அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் என்னவிதமான அவஸ்தை செய்தபோதிலும் பொய்சொல்லவழியைக்காணோம் ஆகிலும் இன்னமொரு தந்திரஞ்செய்வோம் கள்ளர்களைத்தருவித்துக் காசிராஜாவின்குழந்தையை எடுத்துவரச்சொல்லி சந்திரமதி முன்பாகப் போடும்படிசெய்து திருடியென்று பிடித்தாவது பொய்சொல்லும்படி செய்வோமாவென்று கள்ளரைத் தருவித்தான்.

கள்ளர்-விருத்தம்.

படைத்தெழு புயங்கள்தட்டிப் பற்கடித் துருகிச்சீறித்
துடுக்கமாய்க் கன்னக்கோலுஞ் சூரியு மிடுப்பிற்கட்டு
இடக்கையில் தடியுமூன்றி இலங்கவே திலகமிட்டு
திடத்துடன் விஸ்வாமித்திர ரேவலால்த் திருடர்வந்தார்.

இராகம்-பந்துவராளி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

கள்ளர்வந்தாரே மாயக் கள்ளர்வந்தாரே

அநுபல்லவி.

கள்ளர்வந்தாரே மெல்லநடைநடந்து
கிள்ளைகள்மொழிகள்பேசி உல்லாசமாகவே (கள்)

சரணங்கள்.

கோசிகன்மாயையாற் காசிப்பதிதனக்கு
பேசிமனங்கலந்து யோசித்துக்கொள்ளவே (கள்)
கோர்ணக்காலுங்கையுங் குல்லாவுந்தான்போட்டு
மானங்கெட்டபையல் மாறுவேடம்பூண்டு (கள்)
கன்னக்கோலுங்கொண்டு கத்திகபாலங்கொண்டு
உன்னிநடைநடந்து ஒதுங்கிப்பதுங்கிகொண்டு (கள்)

கள்ளர்கள்-வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமி யெங்களைத் தருவித்த விதமின்னதென்று சொல்லவேணுமையா சுவாமி.

விஸ்வாமித்திரர் வசனம்.

அகோவாருங் கள்ளர்களே அரிச்சந்திரனுடைய பெண்சாதிசந்திரமதி தன்மகனைத்தகனஞ்செய்யக் கொள்ளிக்காசு வாங்கவருகிறாள் அவள்வருகிறதுக்குள் இந்த ஊரையாளப்பட்ட காசிராசாவின்குமாரன் கனகவேந்தன் தன் தாயார் அண்டையில் படுத்துக்கொண்டிருக்கிறான் நீங்கள் அரண்மனைக்குள் சென்று குழந்தையையெடுத்துக் கழுத்தைமுறித்து சந்திரமதிவருகிறவழிற் போடுங்கள் கள்ளர்களே.

கள்ளர் வசனம்.

இப்பவேபோய் குழந்தையையெடுத்துக் கழுத்தையொடித்துக்கொண்டுவந்து போட்டுவிடுகிறோமையா சுவாமி.

பொது வசனம்.

இப்படிச்சொல்லி அரண்மனைக்குள்ளே கள்ளர்களேகிகுழந்தையையெடுத்துக் கழுத்தையொடித்து சந்திரமதிவருகிற வழியிற்போட்டுவிட்டார்கள் சந்திரமதிவந்தவழியிற் காலிற்றட்டவேஅந்தக்குழந்தையைத் தன்குழந்தைதானேவென்று எடுத்து மடியில் வைத்துக்கொண்டு புலம்புகிறவிதங்காண்க.

இராகம்-தோடி-அடதாளம்.

கண்ணிகள்.

டாமகனே யிங்கேவந்த தாரடாசுதனே
டாஆசை திருவாய்திரவடா

அங்கேயுன்தந்தையிடம் மகனே அடைக்கலம்வைத்துவந்தேன்
இங்கேயென்முன்பாக மகனே யெப்படிவந்தாயோ
அங்கமுருகுதடா மகனே ஆவிபதைக்குதடா
சங்கரன்றன்செயலோ மகனே சதாசிவன்கற்பனையோ
மாமுனிமாயையிதோ மகனே லோகிதாயிங்குவர
நான்செய்ததீவினையோ முனிதான்செய்தகோலமிதோ

சந்திரமதி-விருத்தம்.

இந்தவிதஞ்சந்திரமதி யழுதுயேங்கி
இறந்தமகன்லோகிதனை மென்றெடுத்து
வெந்தழலின்மெழுகதுபோ லுருகிவாடி
மெய்சோர்ந்து விதியதனை வெறுத்துக்கொண்டு
சுந்தரஞ்சேருமைபாகா யெமையாளாயோ
சோதனையோ உன்னையல்லாற் றுணைவேறில்லை
வந்தவினைக்கென்செய்வே னென்றுவிம்மி
மனம்பதைத்து விசாரமுடன் வருந்துவாளே.

இராகம்-தோடி-அடதாளச்சாம்பு.

பல்லவி.

என்னசெய்வேனேதுசெய்வேன் இந்தவினைவந்தசென்ன

அநுபல்லவி.

உண்மையாகப்பெற்றெடுத்த என்மகனேலோகிதனே
நன்மையானபாலகனே நாயகனைவிட்டுவந்தாய் (என்)

சரணங்கள்.

சுடலைசுடுகாடுதன்னிற் றுரையரசன்தன்னிடமாய்
அடவுடனேவைத்துவந்தேன் அங்குவிட்டுவந்ததென்ன (என்)
பொய்சொல்லாதராசருட புத்திரனேயென்மகனே
கையிற்காசில்லையென்று காலகண்டரிடத்தில்வந்தேன் (என்)
[illegible]முனிவிஸ்வாமித்திரர் பண்ணிவைத்தமாய்கைதானோ
பாருலகிலென்னைப்போலே பாதகியைக்காணேனையோ (என்)

பொது-வசனம்.

இப்படியாகச் சந்திரமதி புலம்பிக்கொண்டு இருக்கிறபோது காசிராஜாவின்குழந்தையைக்காணோமென்றுதேடுகிறவிதங்காண்க.

காசிராஜாசபை.

காசிராஜா-விருத்தம்.

மாசிலாக் காசியில் வேசர்பாதம்
மறவாத மன்னவனே வந்துகாணத்
தேசசன மெல்லோரும் பணிந்துபோற்றச்
சிங்கார மண்டபத்திற் சேனைசூழ
வீசியவெண் சாமரைகள் வெகுபேர்போட
வேந்தர்குழாம் மந்திரிமார் மிகக்கொண்டாடக்
காசிமகா ராஜனுமுல் லாசமாகக்
கனகசிம்மா தனக்கொலுவிற் றான்வந்தாரே.

இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி

ராஜராஜேந்திரன் வந்தான் காசிமா
ராஜராஜேந்திரன் வந்தான் (ராஜ)

அநுபல்லவி.

ராஜராஜேந்திரன்வந்தான் நவநீதமாகவே
தேசத்தோர்புகழ்ந்திடச் சிறப்பாய்க்கொலுவிருக்க (ராஜ)

சரணங்கள்.

தம்பூருவீணையுடன் புள்ளாங்குழல்சங்கீதம்
கெம்பீரமாகவே ரம்பையர்வாசிக்க
கீர்த்தனம்பாடப்பெண்கள்
நாற்றிசையோர்கொண்டாட

மதனவல்லி-விருத்தம்.

பதிதனிற் சிறந்தகாசிப் பதியெனு மதனையாளும்
அதிபதி காசிராஜ னன்புள்ள சமுகந்தன்னிற்
சதிருடன் கவரிவீசத் தாதிய ரோடுல்லாச
மதிநுதல் மங்கைநல்லாள் மதனவல் லியும்வந்தாளே.

காசிராஜன் சபை.

காசிராஜன்.   சந்திரமதி.   மணவல்லி.   வீரவாகு.   காவலன்.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

மதனவல்லியும் வந்தாளே மகிபன்முன்னே (மதன)

அநுபல்லவி.

விதவிதமாகவே வேணநகைகள்பூட்டி
சுதனைக்காணோமென்று சஞ்சாரமாகவே (மதன)

சரணங்கள்.

கொடிமல்லிகைமுடித்துக் கொந்தளப்பொன்னோலைசூடி
கோலாகலமாகவே கொலுவினில்ராஜன்முன்பாய் (மதன)
சங்கீதராகம்பாடி தாதியர்புடைசூழ
இங்கிதமாகவேதான் இராஜன்சமுகந்தன்னில். (மதன)

பாங்கியின்-வசனம்.

அம்மா சரணஞ்சரணமம்மா தாயே நமதரண்மனையில் நித்திரை செய்த குழந்தையைக் கள்ளர்கள் கன்னம்வைத்துக் கொண்டு போய்விட்டார்களம்மா.

மதனவல்லி-விருத்தம்.

மாலெனுங் காசிராஜன் மனைவியாள் மதனவல்லி
பாலனைத் தேடி நெஞ்சம் பரதவித் துருகிவாடி
ஓலமிட் டலறிக்கையை யுதறியே பதறிவீழ்ந்து
காலமோ மகனேயென்று கதறுவாள் பதறுவாளே.

இராகம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

பாங்கிநானென்னசெய்வேண்டி பச்சைப்
பாலகனெங்கேகாணோம் (பாங்)

அநுபல்லவி.

பாங்கிநானென்னசெய்வேன் பாலனைக்காணோமென்றாய்
ஆவிபதைக்குதடி அய்யோ நானென்னசெய்வேன் (பாங்கி)

சரணங்கள்.

கோதில்லாதகுலத்திற் குறைசொல்லவந்தாயிப்போ
தாதிகளறியாத சேதிகளொன்றுமில்லை (பாங்கி)

இந்தஇருள் தனிலே இப்படிச்சொல்லவந்தாய்
தந்திரமென்னடியோ மைந்தனைக்காண்பதற்குப் (பாங்கி)
கூசாமலெந்தனிடங் குழந்தையைக்காணோமென்றாய்
ஈசானென்னசெய்வேன், இரவுதனிலேயிப்போ (பாங்கி)

மதனவல்லி விருத்தம்.

வரும்விதிப்பயனோயென்ன மாயமோமகனேயென்று
சருவியே கன்னம்வைத்துச் சற்பனை செய்தாரென்று
அருகினிலதன்காவி லலறியேபதறிவீழ்ந்து
உருகினாள்கண் ணீர்விட்டு உள்ளமும்பதறுவாளே

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கைப்பிடித்தமன்னவரோ கணவரோநானென்னசெய்வேன்
பொற்பஞ்சணைமீதில் நம்மள் புத்திரனைக்காணோமென்று
சொற்பெரியபாங்கிவந்து சொல்லினாளேயெந்தன்முன்னே
கற்பனையாய்க்கள்ளர்செய்யுஞ் சற்பனைக்கியென்னசெய்வேன்
கள்ளருந்தானரண்மனையில் கன்னம்வைத்துக்கொள்ளையிட்டார்
அய்யோகோயென்கணவா அருமைமன்னாஎன்னசெய்வேன்.

மதனவல்லி வசனம்.

அகோ வாரும் என்பிராணநாதா நம்முடைய அரண்மனை அந்தப்புரத்தில் பஞ்சணைமெத்தையில் நித்திரைசெய்த குழந்தையைக்கள்ளர்கள் கன்னம் வைத்துக் கொண்டு போய்விட்டார்களையா சுவாமி.

காசிராஜா வசனம்.

ஓ ஆசைநாயகி யென்ன ஆச்சரியம் பட்டத்துக்குழந்தையை கள்ளர்கள் யேதுக்காக கன்னம்வைத்துக்கொண்டு போனார்கள்அல்லதுவளர்த்துக்கொள்ளவோ அல்லது பிசாசுகளுக்குப் பலிகொடுக்கவோ அரகராவிஸ்வநாதர்.

காசிராஜன் விருத்தம்.

மந்திரிமாரேகேளீர் மனதினிற் பயமில்லாமல்
பந்தமாய்க்கள்ளர்தாமும் பார்த்துமேஅரண்மனைக்குள்
வந்துமேபாலன்தன்னை வஞ்சமோசஞ்செய்தாரிப்போ
அந்தமாய்க் காவலோரை அழைத்திடு மழைத்திடுமே.

ஷி வசனம்.

அகோவாருங்கள் மந்திரி நம்முடைய அரண்மனையில் நித்திரைசெய்த குழந்தையைக் கள்ளர் திருடிக்கொண்டு போய்விட்டார்கள் ஆனதால்நம்முடையகோட்டை காக்கிற காவலாளர்களை அழைப்பியும் பிள்ளாய் மந்திரிகளே.

மந்திரி வசனம்.

அப்படியே தருவிக்கிறேனையா சுவாமி.

இராகம்-தன்னியாசி-ஏகதாளம்.

கண்ணிகள்.

நல்லசல்லடயகச்சைகட்டி நாகரீகப்பொட்டுமிட்டு
எல்லைகார்க்குந்தலையாரிகள் இதோவந்துதோன்றினர்
சாய்ந்தகொண்டையுங் குலுங்கக்கட்டி சந்திரகாவிஉருமாலிட்டு
பாய்ந்தபுலிபோல்தலையாரிகள் பாங்குடன்வந்துதோன்றினர்
கள்ளர்களையும்பிடித்துக் கட்டகையிற் கயிறுங்கோலுமாக
வில்லுங்கதையும்பிடித்துக்கொண்டு வேகமாய்வந்துதோன்றினர்

தலையாரிகள் வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமி எங்களை அழைப்பித்த காரியம் இன்னதென்று திருவுளம்பற்றவேணுமையா சுவாமி.

காசிராஜன் வசனம்.

அகோவாருந் தலையாரிகளே நம்முடைய அரண்மனையில் கள்ளர்கள் சுரங்கம்வைத்து என்னுடையகுழந்தையைத் தூக்கிக்கொண்டுபோய்விட்டார்கள் அந்தக்கள்ளர்களை இட்சணத்தில்கொண்டு வராவிட்டால் உங்களுயிரைவாங்கிவிடுவேன் தலையாரிகளே.

தலையாரிகள்-வசனம்.

இந்தட்சணமே அந்தக்கள்ளர்களைப் பிடித்துக்கொண்டு வருகிறோமையா சுவாமி.

இராகம்-தன்னியாசி-ஏகதாளம்.

கண்ணிகள்.

கத்திகேடயங்கையிற்கொண்டு கனகவேநதனைத்தேடியே
வெத்தியாகவீரசூரர் வேகமாகந்தேடினர்

தெத்தெருவாய்த் தலையாரிகள் தேடியெங்குங் காணாமலே
ஒருமையாகப் புலம்புகிற ஒண்டொடியைக் கண்டார்களே
ஆரோவென்றுபார்ப்போமென்று அனைவருமொன்றுகூடியே
ஊரினில்வாழுங்காளியோவென்றுஉற்றுப்பார்ப்போம்வாருங்கள்

தலையாரிகள்-வசனம்

அடாதம்பி வீராசூரா நாமள்கோட்டைவாசலெல்லாஞ் சுத்திப்பார்த்தோம் ஒருவரையுங்காணோம் இந்தவீதியில் ஒரு கறுப்புத்தட்டுப்படுகுது அதுஎன்னவென்று பார்ப்போம்வாங்கடாவீரா.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

கண்ணிகள்.

பேசாதீர்கள்பேசாதீர்கள் அண்ணமாரேநான்போய்
பிசாசோவென்றுபார்த்துவாரேன் அண்ணமாரே
பேயுமில்லைபிசாசுமில்லை அண்ணமாரே ஒரு
பெண்ணைப்போலே தோணுதடா அண்ணமாரே
பொன்னுருக்கிவார்த்தாப்போலே அண்ணமாரேஒருத்தி
பிள்ளைவைத்திருக்குறாடா அண்ணமாரே

வீரசூரன் வசனம்.

அடேமாமா நான்பார்த்ததில் ஒரு பெண்பிள்ளை மடியில்குழந்தையை வைத்துக்கொண்டு இருக்கிறாளடா மாமா.

பொது வசனம்.

இப்படியாகத் தலையாரிகள் பார்த்துக்கொண்டு வரும்போது சந்திரமதி குழந்தையைமடியில்வைத்துப் புலம்புகிறவிதங்காண்க.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஆரடாமகனே உந்தன்முகம் பாலொழுகுதடா
பாரடாமகனே மெத்தப் பாவிநானடா
தீரடா ஆசை திருவாய்திறவடா
கூறடா மொழிவயிர் கொதிக்குதென்செய்வேன்
ராஜாராஜவேளரிச்சந்திர ரிடத்திலே
வாசமாய்வைத்தேன் வந்தவகைகளேதடா

மோசஞ்செய்தாரே பாலா முனிவன்மாய்கையோ
கூசுதென்மனங் கூளிகொண்டுவந்துமேதோ

பொது வசனம்.

இப்படியாகச் சந்திரமதி புலம்பிக்கொண்டு யிருக்கும்போது தலையாரிகள் சந்திரமதியைப் பிடித்துக்கட்டிக்காசிராஜாவிடங்கொண்டுபோகிற விதங்காண்க.

வீரசூரன் விருத்தம்,

பிணந்தின்னிப் பேய்தானிப்போ பிள்ளையைக் கொன்றுதின்று
அணங்கெனும் பெண்போலிந்த அர்த்தராத் திரியிலிங்கே
நிணந்தின்று குமித்தபேயை நிமிஷத்தில் பிடித்துக்கட்டி
வணங்கிமன் னவன்பாலிட்டு மனத்துயர்நீக்குவோமே.

ஷை வசனம்.

அடேயப்பா இவள் பேயானுலுஞ்சரிபிசாசானுலுஞ்சரிபிடித்துக்கட்டி ராஜாமுன்பாகக்கொண்டுபோய்விட்டுவிட்டால்நம்முடைய தொல்லை தீர்ந்ததடாமாமா.

தலையாரிகள் வசனம்.

அடே சிற்றப்பா அப்படியேசெய்வோமடா

சந்திரமதி-விருத்தம்.

கள்ளியுபிலவன் தானென்று ...
வள்ளலே சிவனேயென்று வாய்திறந் தழுதுவிம்மி
மெள்ளயென் றலையிற்பிர்மா விதித்ததிப் படியோ வென்று
துள்ளியே சந்திரமாது துடித்தவள் தரையில்வீழ்ந்தாள்.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்வேன்பாவி யுயிரேங்குதேந்தனுவி

அநுபல்லவி.

மன்னன்மகனைநானே வதைத்தேனென்றுசொன்னேனே
மறுபடியே னடிக்குறீர் (நானெ)

சரணங்கள்.

பெண்பழிபொல்லாது பிராணனினிநில்லாது
பொறுக்கமுடியு தில்லையே (நானெ)

அரசன்முன்செல்லுவோம் அனைத்தையுஞ்சொல்லுவோம்
அதற்குள்ளேயே னடிக்குரீர் (நானெ)
காசிராஜன்மகனைக் கழுத்தறுத்த நம்நானே
கட்டிவைத்து ஏனடிக்குரீர். (நானெ)

தலையாரிகள்-வசனம்.

அகோ சரணஞ்சரணமையா சுவாமி நம்முடைய குழந்தையைக்கொலைசெய்தகள்ளியைப்பிடித்துவந்தோம் இதோகையில்குழந்தை யிருக்குதையா சுவாமி.

காசிராஜா-விருத்தம்

கொண்டுவந் தெதிரோநின்ற கோதையை யரசன்பார்த்து
தெண்டிரா மன்னன்பிள்ளை செத்ததுக் கழமறந்து
மண்டலந் தன்னிலிந்த மங்கைபோற் காணேனென்று
அண்டையி லழைத்துநீர்தான் ஆர்பெண்ணே யென்றுகேட்டான்.

ஷை விருத்தம்.

ஆரம்மா உன்பேரென்ன ஆதியி லுன்னையிங்கே
தீரமாய் நிசிநேரத்திற் றெருவினில்வருகுவானேன்
கோரமாய்ச்சிறுவன்றன்னைக்கொன்றதார்சவத்தைக்கீழ்வை
சாரமா யெனக்குநீயுஞ் சந்தேகந் தெளியச்சொல்வாய்.

ஷை வசனம்.

அகோவாரும் பெண்ணே உன்பெயரென்ன ஊரென்ன நீயிங்கே சுமந்துவரவேண்டிய விபரமென்னபெண்ணே.

சந்திரமதி வசனம்.

ஆனால்கேளும் மகாராஜாவே இனிமேல் ஊரும்பேருஞ் சொல்லுகிறதில் என்னபிரயோசனம் தங்களுடைய மகனைக் கொன்றவள்நானே.

ஷைவி ருத்தம்

காசிமா நகரம்வாழுங் கூர்த்தனே சொல்லக்கேளீர்
தேசத்தில்வந்துஉந்தன் சிறுபிள்ளை தன்னைக்கொன்ற
மோசகி நான்தான்வேறே முன்பின்பா ராமல்யென்னை
வாசவனே யிப்போது மகிழ்வுடன் தண்டிப்பாயே.

காசிராஜா-விருத்தம்.

பழியிவள் மேலேசாட்டப் பாவனை யில்லைக்கண்டாய்
தழுவிய பாலன்றன்னை தான்முறித் தேகுவாளோ

அழிம்பதுசொல்லமன்னர்க் கடுக்குமோ வென்றுராஜன்
மொழிந்திடு மமைச்சரேநீர் முகம்பார்த்துச் சொல்லுவீரே.

ஷை வசனம்.

அகோவாருந் தலையாரிகளே இவள்தான் குழந்தையைக்கொன்றவளென்று சொல்லுகிறீர்களே இவளைப்பார்த்தால் ஆதிலட்சுமியைப்போலே தோணுகிறது முகக்குறிப்பையுங் காணோமென்றுயைப்பார்த்துச் சொல்லுந் தலையாரிகளே.

தலையாரிகள்-வசனம்.

நம்முடைய குழந்தையைக் கொன்றவள்யிவளேயொழியவேறில்லை யாதொருசந்தேகமுமில்லை சுவாமி.

காசிராஜன் விருத்தம்.

காசிகா வலரேகேளீர் கடவுளுக் கொப்பதாகப்
பேசிடும் முடிமுன்னே பெண்பாளந் தப்புரத்தில்
கூடிடா தடமெடுத்துக் கோலதயி னடியாமென்று
ராசிய மாகவந்து நமக்குநீ யுரைமெசயவாயே.

ஷை வசனம்.

ஓ தலையாரிகளே நீங்கள் கடவுளுக்கொப்பாக அந்தப்புரத்தில்கள்ளவாசற்படியிடத்தில் இந்தப்பெண்கொடியாள்தடஞ்சரியாயிருக்கிறதாவென்று பார்த்துவாருங்கள் தலையாரிகளே.

தலையாரிகள்-வசனம்.

அப்படியேபோய்ப் பார்க்கிறேமையா சுவாமி

பொது-விருத்தம்.

அடியெடுப் பதற்குமுன்னே அருமுனி விசுவாமித்திரர்
துடிதுடித் தோடிவந்து சொன்னதோ ரடிகளெல்லாம்
படிமுழு திவள்கால்வைத்த பாவனைபோலே செய்து
கடிதியே முனிமறைந்த காரண மறிகிலேமே.

தலையாரிகள்-வசனம்.

இப்படியாக ராஜன் அடிபார்த்துவிட்டு வரச்சொல்லவேவிஸ்வாமித்திரர் மாய்கையினால் திருடர்கள்பார்த்த தடமும் சந்திரமதிதடமும் ஒன்றாகத்தோற்றிற்று அதைவந்து ராசனிடத்தில் சொல்லுகிறவிதங்காண்க.

தலையாரிகள்-வசனம்.

கன்னவாசல்தட்டமும் இந்தக்கள்ளியினுடைய தட்டமுஞ்சரியா யிருக்கிறது சுவாமி,

காசிராஜன்.வசனம்.

அகோவாரும் பெண்ணே உன்னைப்பார்த்தால் ராஜஸ்திரீயைப் போலத்தோணுகிறது நீ உள்ளதைச்சொல்லவேணும்பெண்ணே.

சந்திரமதி விருத்தம்.

ஒடித்தனன் கழுத்தைதானே உன்மகன் வயிற்றைறக்கீறிக்
குடித்தன னுதிரமெல்லாம் குழந்தைதனைவைத் திருக்கும்போது
பிடித்தனர் கைமெய்யாகப் பிணந்தின்னிப் பூதம்நானே
முடித்திட வேணும்நீதி முறைப்படி செய்வீர்சுவாமி.

இராகம்-தன்னியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

இனியென்சொல்வேன்
இனியென்சொல்வேன்

அநுபல்லவி.

கனிவுள்ளமைந்தனுங் கைதனிலிருக்கையில் (இனி)

சரணங்கள்.

கொன்றதுநானில்லை யென்றதினால்விடுமோ
கொலைசெய்தமுகக்குறி தோணாமலேபோகுமோ (இனி)
ஆவிபதைக்குதையோ அங்கமுருகுதிப்போ
பாவிபடுந்துயரம் பாலகாமெத்தவடா (இனி)

பொது-வசனம்,

இப்படியாகச் சந்திரமதிசொல்லி புலம்பிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் மதனவல்லியெழுந்திருந்து சந்திரமதியை மடியைப் பிடித்திழுத்துச் சொல்லுகிறவிதங்காண்க.

மதனவல்லி விருத்தம்.

அடியடியென்றுசொல்லி அதட்டியே யெழுந்திருந்து
மடிதனைப்பிடித்துசந்திர மதிதனைமதனவல்லி
துடிதுடித்தோடிவந்து சுருக்கெனச்சொல்வாயென்று
இடியிடித்ததுபோலேதான் பேசுவாள் பேசுவாளே.

இராகம்-லாவணிமெட்டு-தாளம்ஆதி.

கண்ணிகள்.

பட்டணத்தில்பழியிட்டு வருவாயோடிகள்ளி அடிகள்ளி எந்தன்
பாலகனைக்கொல்லவுஞ் சாலமறிந்தாயோடி கள்ளி அடிகள்ளி

சந்திரமதி சொல்லல்.

இட்டவிதியோயிதுயென்செய்குவேனடி யம்மா அடியம்மா எனக்
கிந்தபாலனைக்கொல்ல மனம்வருகுமோடி யம்மா அடியம்மா

மதனவல்லி சொல்லல்.

கள்ளியேநான்பெற்றபாலனைநீவதைத்தாயேவதைத்தாயே இப்போ
கன்னமிடச்செய்யயென்னமந்திரம் படித்தாயோ படித்தாயோ

சந்திரமதி சொல்லல்.

கள்ளியென்றுயென்னை வையாதேயடி யம்மா அடியம்மா ஒருக்
காலமாகிலும் கொலைசெய்குவேனோஅடி யம்மா அடியம்மா

மதனவல்லி சொல்லல்.

தோதகியாகியபாதகிநீயொரு கள்ளி அடிகள்ளி உண்மை
சொல்லென்றுராஜன்கேட்டால் இல்லையென்றாயோடி கள்ளி அடி
[கள்ளி

சந்திரமதி சொல்லல்.

கொன்றாலெனக்குதெய்வங்கொடுக்குமேகூலியடியம்மாஅடியம்மா
கொல்லவில்லையென்றால் செல்லுமோஎன்பேச்சுசும்மாஅடியம்மா

மதனவல்லி சொல்லல்.

சும்மாயில்லையென்றுபொய் சொல்லாதேயடிபாவி அடிபாவி துடி
துடித்திடயெந்தனுட பாலனைக்கொன்றாயடி பாவி அடிபாவி

சந்திரமதி-சொல்லல்.

தேடிஎனக்கு முன்னாள் போடும்புள்ளிபோட்டானேபோட்டானே
சிந்தைகலங்கியே சிறுபன்பழியைக்கொண்டேனம்மாஅடியம்மா

மதனவல்லி வசனம்.

அடிகள்ளி யென்குழந்தையை நீ கொன்றதற்கு யாதொருச
ந்தேகமில்லையடி கள்ளி.

ஷெ வசனம்.

அகோயென்பிராணநாதா நம்முடையகுழந்தையை இந்தத்தி
ருடி கொன்றதற்கு யாதொருசந்தேகமுமில்லை பிராணநாதா.

சந்திரமதி-விருத்தம்.

பாவிசண்டாளியானும் பாதகியானே னிப்போ
ஆவியை வாங்குங்கள்ளி யாகினே னினிமேலுந்தன்
தேவிதன் கருத்துப்போலே தெண்டனை செய்யச்சொல்லி
பாவியென்னுயிரைவாதை பண்ணுவீர் பண்ணுவீரே.

ஷை வசனம்.

அயோவாரும் மகாராஜனே தங்கள்தேவி கருத்துப்போலவே குழந்தையைக் கொலைசெய்தது நான்தான் யென்னைக்கொலைசெய்துபோடும் மகாராஜனே,

காசிராஜன்-விருத்தம்.

நண்ணியநகரிகாக்கும் நகரிகாவலரேகேளீர்
புண்ணிய வழியாளிந்தப் பொற்கொடி வதைக்கும்போது
திண்ணமாய்க் கண்டீராகில் சேரியில் வீரவாகு
தன்னிடம்ஒப்பிவித்து தான்வதை செய்யச் சொல்வாய்.

ஷை வசனம்.

அகோவாருந்தலையாரிகளே இந்தப்பதிவிரதையின் பேரில் எனக்குயாதொரு சந்தேகமுமில்லை நீங்களும்நமுதுதேவியும் இவள்தான் கொலை செய்தவளென்று சொல்லுகிறபடியினாலே நீங்கள் இந்தவூர் மயானக்காவலனிடத்திற் கொண்டுபோய் இந்தஉத்தரவைக் காண்பித்துவெட்டிப்போடச்சொல்லும்பிள்ளாய் தலையாரிகளே.

தலையாரிகள் வசனம்.

அப்படியே வெட்டிப்போடச்சொல்லுகிறோம் மகாராஜனே,

வொ வசனம்.

இப்படியாகச் சந்திரமதியை பின்கட்டாகக்கட்டி தலையாரிகள் வீரபாகுவிடத்தில் கொண்டுபோய்விட்டார்கள் வீரவாகு அனிச்சத்தோட்டியிடம் கொண்டுபோய் வெட்டிபோடும்படி சொல்லத்தலையாரிகள் அனிச்சத்தோட்டியிடங் கொண்டுபோகிறபோது சந்திரமதி புலம்புகிறவிதங்காண்க.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

செட்டிகுலமன்னவரே தெருவிலே நில்லாதேபோங்கள்
பட்டணத்தரசைக்கொன்ற பாதகி நான் வாரேனிப்போ

மன்னவனுர்செய்தவமோ மாமுனிவர்சோதனையோ
என்னசெய்வேன்விதிவசமோ என்தலையிலெழுதினனோ
ராஜகுலவம்மிசமோ நானடியாள்போனேனேயோ
தேசமதிலுள்ளோரே தெருவிலேநில்லாதேபோங்கள்

சந்திரமதி-வசனம்.

அகோபுண்ணியவான்களே நானோ இராஜன்மகனைக் கொன்ற பாவியாகச்சே என்னைக் கட்டியடித்துவெட்டப்போகிறார்கள் ஆகையால் நீங்களெல்லாம் விலகிக்கொள்ளுங்கள் புண்ணியவான்களே.

இராகம்-தோடி-ஆதி.தாளம்.

கண்ணிகள்.

கட்டும்பெற்றேனடியும்பெற்றேன்கள்ளியென்றுபேரும்பெற்றேன்
வெட்டவென்னைக்கொண்டுபோறார்வேதியர்க்குச்சொல்லவேணும்
நான்தானோபெண்பிறந்தேன் நானிலத்திற்பெண்ணில்லையோ
என்தாயோமாமுனியும் இப்படியேன்செய்துவைத்தார்
சுடுகாடுகாத்திருக்குந் துரந்தராஜன்முன்னே
இடுகாட்டிலென்னைவெட்ட வெழுதினனோபிர்மதேவன்

விஸ்வாமித்திரர் வசனம்.

வாரும்பெண்ணே சந்திரமதி உன்கணவன் அரிச்சந்திரன்கையால் வெட்டப்படுவானேன் எனக்குநாடுநகரத்தை தாரைவார்க்கவில்லையென்று சொன்னால் வெட்டாதபடிக்குநிறுத்திப்போடுகிறேன்பெண்ணே.

சந்திரமதி-வசனம்.

என்னுடைய சிரசுபோனாலும் போகிறதேதவிர ஒருக்காலுந் தாரைவார்க்கவில்லையென்று சொல்லமாட்டேனையா சுவாமி.

இராகம்-தன்னியாசி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

முடிவாச்சோ காலம் கெதி முடிவாச்சோகாலம்.

அநுபல்லவி.

முடிவாச்சோ சந்திரமதியெனும் பேர்போச்சோ
விடிவாச்சோஉலகாசை விடலாச்சோமகனாலே (முடி)

சரணங்கள்.

என்னுடைய பிராணேசன் தன்னையும்விட்டிழந்து
பின்னுசைவையாமற் பிள்ளையுமாண்டானே
மன்னுசைவையாமல் மாமுனிசெய்தானே (முடி)

தலையாரிகள் வசனம்.

அகோ வாருமப்பா அனிச்சத்தோட்டி இந்தக்கள்ளிமகாராஜா பட்டத்துக்குழந்தையைத் திருடிவந்துகொலை செய்ததினால் இராஜா சிரசாக்கினை செய்ய உத்திரவு கொடுத்திருக்கிறார் இதோவாசித்துப்பார்த்துக்கொண்டு உன்னுடையசந்திரவாளினாலே வெட்டிப்போடும்பிள்ளாய் அனிச்சத்தோட்டி.

அனிச்சத்தோட்டி-வசனம்.

எங்கே ராஜாவுத்தரவைப்பார்ப்போம் கொடுங்கள்தலையாரிகளே.

தலையாரிகள்-வசனம்.

இதோவாசித்துப்பார்த்துக்கொண்டு வெட்டிப்போடும் நாங்கள்போகிறோம் பிள்ளாய் அனிச்சத்தோட்டி.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே ஆகட்டும் போய்விட்டுவாருங்கள் தலையாரிகளே.

அரிச்சந்திரன் வசனம்.

அகோவாரும் பெண்ணே சந்திரமதி உன்னை யடிமைகொண்ட வேதியரிடத்தில் கால்பணமும் முழத்துண்டும் வாங்கிவரும்படி கட்டளையிட்டேனல்லவா இப்போது இவ்விதமாகவந்தகாரணந்தெரியச்சொல்லும் பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி-விருத்தம்.

சத்தியகுலத்தவ மிகுத்தபரிசுத்தபுய தக்கவனிவுற்றமன்னு
சந்ததமிகுத்தவள ரந்தணரிடத்தினிற் றக்கபுகழ்கூலிவாங்கப்
புத்தியறிவித்தபடி யுற்றுவழிகற்றுவரும்போதுயென்காலடியினிற்
பிள்ளைகண்டந்தவழிவல்லர்சிலர்வைத்துளப்போதுவந்தமிகிலேனே
பத்தியதடத்தினிலெடுத்தனன் வருத்தமொடுபக்கென்று அலறியா
பாலாவெனக்கதறிஓலமிட்டழுதயான்பதறியேயங்கிருந்தேன்[னும்
வெத்திபுரிகாசிபதி புத்திரனைவதைத்ததிவளாமெனஇழுத்தடித்து
வெட்டென்றுரைத்தபடி கட்டினாடிக்கிங்குமே வந்தேனிறைவ
[னே

ஷி வசனம்.

அகோவாருங்களையா சுவாமி தேவரீருத்தரவுப்பிரகாரம் நான் காலகண்ட அய்யரிடத்தில் கால்பணமும் முழத்துண்டும் வாங்கப்

போகும்வழியில்யாவரோ இந்தவூர் காசிராஜனுடைய குமாரனைவ தைசெய்து வழியிற் போட்டிருந்தார் அதுயென்காலில்தட்டுப்பட வே அந்தக்குழந்தையை நம்முடையபாலன்தானோவென்றும்பேய் பிசாசுகள் தூக்கிக்கொண்டுவந்து போட்டிருக்குமென்றும் யெடுத் துவைத்து பார்த்துக்கொண்டிருக்குஞ்சமையத்தில் காவலாளிகள் யென்னைப்பிடித்துக்கட்டியடித்து இராஜனிடத்திற் கொண்டுபோ ய்விட்டார்கள் அந்தராஜனும் ராஜனுடையபெண்சாதியுங்குழந்தை யைநான்தான் கொன்றவளென்று இந்தமயானத்திற்கொண்டுபோ ய்சிரசாக்கினைசெய்யச்சொல்லி உத்தரவுயெழுதிக் கொடுத்தார்கள் அதற்குப்பின் காவலாளிகள் கட்டினகட்டுடனேதங்களிடத்தில்கொ ண்டுவந்து சிரசாக்கினைசெய்யச் சொன்னார்களையா சுவாமி.

அரிச்சந்திரன் வசனம்.

ஐயையோ காசிவிஸ்வநாதா யென்னுடைசமனைவியானசந்திரம தியை சிரசாக்கினைசெய்யும்படி வைத்தாயேதெய்வமே.

விருத்தம்.

கையோசெழுங்கமல முகமோநிறைந்தமதி
காலோவிளஞ் சினைவரால
மெய்யோகலாபமயி லிடையோதுடீக்குகொடி
விழியோ கடைந்தவடிவேல்
மையோசுருண்டகுழல் மலையோதிரண்டமுலை
வனிதைக் கெனப்புகலுவார்
ஐயோவிவட்குவிதி கொலையோவெனக்கதறி
யழுவா ரறைந்துவிழுவார்.

இராகம்-தன்னியாசி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

உன்னைவெட்டமனது எனக்கென்னமாய்க்கூடும் பெண்ணே

அநுபல்லவி.

அன்னநடையாளே கன்னல்மொழிமானே
உன்னிதமானதோர் வர்னக்கிளியாளே (உன்னை)

சரணங்கள்.

பட்டபாடுகளெல்லாம் முனியிட்டபடியாலே
கட்டழகியாளே அயனிட்டவிதியாலே
வட்டமுலைமாதே திட்டமுடன்வாளால் (உன்னை)

வேதன்விதிப்படியோ விஸ்வ நாதர்சொற்படியோ
மாதவன்சோதனையோபெண்ணே வந்தபழியிதுவோ
நீதமறவாதென் னுசைக்கிளிமானே (உன்னை)

முன்செய்ததீவினையோ முனிதான்செய்தசோதனையோ
கஞ்சமலர்மேனி நொந்துமிகவாட
என்சொல்மறவாத வஞ்சிக்கொடிமானே (உன்னை)

காசிநகரம்வந்தோம் விஸ்வேசர்பதம்பணிந்தோம்
நீசன்றனக்கடிமை யாகி வீசுஞ்சுடலைகாத்தேன்
நேசமானபெண்ணே ஆசைக்குயிலாளே (உன்னை)

சந்திரமதி-விருத்தம்.

பிறந்திடும் விதியினாலே பெண்டீரும் புருடன்கையால்
பொருந்தியே வெட்டுமென்று பூபாலா சம்மதித்தேன்
வருந்தியே மன்னாஉன்கை வாளாலே மடிவேனானால்
அரும்பதங் கிடைக்குமிப்போ ஆக்கினைசெய்வீர்சுவாமி.

இராகம்-தன்னியாசி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

இன்னம்யோசனையோ என்மன்னவா இன்னம்யோசனையோ

அநுபல்லவி.

சொன்னசொல்தவறாத துரந்தரா
துய்யமணாளா சுகம்பெருஞ்சுந்தரா (இன்ன)

சரணங்கள்.

நாடானுஞ்செங்கோல் நகர்முனிக்கீய்ந்ததும்
நான்விலையாகியே பாடுகள்பட்டதும்
நாடறியாதோ பிணஞ்சுடுங்
காடறியாதோ
நாடாளனேதோடாளனே வாடாமுடி-சூடாளனே (இன்ன)

பொன்னகரயோத்தி பூமிதனையாண்டோம்
இன்னகர்காசியில் லிவ்வேஷமாகினோம்
இன்னம்யோசனையோ இராஜன்சொல்
லென்னதான் மலையோ
இப்பாரினிற் றப்பாமொழி செப்பாமலே வைப்பாயினி.()

சொன்னசொல் மறுக்காத யென்னேசனே
  சுந்தராயெந்தன் துரைராஜமன்னவனே
  இன்னமுமேதோ என்மீதினி
  லென்னென்னவாதோ
  எண்ணுதிரு ஒண்ணுதிரு இன்னுள்வதைபண்ணுமலே (இ)

பொது-வசனம்.

இப்படியாக அரிச்சந்திரன் சந்திரமதியை வெட்டுவதற்குயோசனைசெய்து கொண்டிருக்குஞ்சமையத்தில் விஸ்வாமித்திரர் வருகிறவிதங்காண்க.

விஸ்வாமித்திரர் வசனம்.

ஓ அரிச்சந்திரா ஏன் உன்மனைவியை வெட்டவேணும் நீ மெனக்கு உன்னுடைய ராச்சியத்தைமட்டுக் தாவார்க்க வில்லையென்றுசொல்லிப் போடுவீராகில் காசிராஜா குழந்தையும் உன்குழந்தையையும் எழுப்பித் தருகிறேன் சந்திரமதியை வெட்டாதிருக்கும்படிக்குஞ்செய்கிறேன் உன்னுடைய ராச்சியத்தையும் விட்டுவிடுகிறேன் இப்போதே உனக்கு பட்டாபிஷேகஞ் சூட்டிவிடுகிறேன் அரிச்சந்திரமகாராஜனே.

அரிச்சந்திரன் வசனம்.

அகோ வாருங்களையா சுவாமி நீர்செய்த மாயையினுலே என்னுடைய நாடுநகரமுந்தோற்று என்னுடைய மனைவிமக்களையிழந்து நான் சுடுகாடுவந்து காத்தும் ஆச்சுது இனிமேலா நான்பொய்சொல்லப்போகிறேன் ஒருக்காலுஞ் சொல்லமாட்டேனே சுவாமி.

சந்திரமதி வசனம்.

அகோ யென்பிராணநாதா தாங்கள் ஒன்றும் யோசிக்கவேண்டாம் காசிராசாவினுடைய ஆக்கினைப்படிக்கு வெட்டிப்போடும் பிராணநாதா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

பெண்ணிள மயிலேமித்திர பேதமோ யெவர்செய்சூதோ
மண்ணில்யான் செய்ததர்மம் வகைதப்பி நடத்தினேனோ
அன்னீத மாகப்பாரி லர்சுநான் புரிந்திட்டேனோ
நண்ணியிவ் குன்னைவெட்ட நாடுமோயென்கைவாளும்

இராகம்-தும்பகாம்போதி- ஆதிதாளம்.

கண்ணிகள்.

இராஜன் சொல்லல்.

பாவிதுணிந்துவெட்டக் கைவருமோ இந்தப்
பாதகத்தைப்பார்க்கவோநான் காத்திருந்தேன்
ஆவிபதருதடி மின்னரசே இந்த
அநியாயந் தானுமுண்டோ பெண்ணரசே

சந்திரமதி-சொல்லல்.

மன்னமன்னர் துரையே வாடாதே அயன்
வகுத்தவிதியைத்தள்ளக் கூடாதே
முன்னாள்வினைப்பயனுக் கென்னசெய்வோம் என்னை
முன்பின்யோசியாமலே வெட்டுமையா

இராஜன் சொல்லல்.

எல்லார்ந்தெரிந்த சந்திரமதி மானே உன்னை
இவ்விதிக்கோ அயன்படைத்தா ரதிமானே
பொல்லாதகாலமிதோ பெண்ணரசே நாமள்
பூருவத்திற செய்வினையோ மாதரசே

சந்திரமதி சொல்லல்.

அய்யோயென்மன்னு இந்தக்காசிதனில் என்னை
அடவுடனே வெட்டுமையா யோசியாமல்
சையோகமாயிருந்தோம் இருபேரும் அந்தைத்
தானினைத்தா லிப்போதென்ன அருவாகும்.

அரிச்சந்திரன்-விருத்தம்.

வழக்கமாயினி வழிபடுந் தெய்வத்தை வணங்கி
கிழக்குநோக்கியே கிரிகைசேர் தலைதனைநீட்டு
வழுக்குபடாதநம் மரபினிற் சத்தியம்வளர
முழக்குகெக்கனி யிட்டுனை வெட்டுவேன் முனிந்தே.

ஷை வசனம்.

அகோவாரும் பெண்ணே சந்திரமதிநான்வெட்டுவதற்குமுன்
னமே நாம்கூடியிருந்த இஷ்டபோகங்களைமனதிலெண்ணமல்கடவு

சந்த்ரமதியை வெட்டுகிறபாகம்.

லைத்தியானித்து வேண்டியவரங்களைப் பெற்றுக்கொள்ளும்பெண் ணே சந்திரமதி.

சந்திரமதி விருத்தம்.

வருவரு பிறப்புக்கெல்லாம் வசிஷ்டரே குருவாய்வேணுந்
திருவுரு மாமனுகத் திருச்சங்கு வரவேவேணும்
மருவரிச் சந்திரருக்கு மாலைநான் சூடவேணும்
பெருகியே லோகிதாசன் பிள்ளையாய் வரவேவேணும்.

ஷை விருத்தம்

மதியுள்ள சத்தியகீர்த்தி மந்திரி யாகவேணும்
பதிவுய ரயோத்திபூமி பார்தனை யாளவேணும்
துதிமிகு உமையாள்பாதந் துதிக்கயென் கற்பும்வேணும்
இதுவன்றிப் பின்னைவேறு யில்லையென் சிந்தைதானே.

ஷை வசனம்.

அரகரா சர்சிவிஸ்வேசா ஆகாசவாணி பூமாதேவி முப்பத்து முக்கோடி தேவர்களே நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியீஸ்பரர்களே அடியாள் பதிவிரதாதர்மம் அழியாதவளானல் மூவேழிருபத்தொருபிறப்புக்கும் வசிஷ்டரே குருவாகவேணும் திருச்சங்குமகாராஜா வேமாமனுகவேணும் சத்தியவாக் [illegible] யென்பத்தாவாக வேணும் லோகிதாசனே யென்பிள்ளையாகவேணும் சத்தியகீர்த்தியே மந்திரியாகவேணும் அயோத்தியாபுரிபட்டணமே யெங்கள் சீமையாகவேணும்என்னாளும் என்கற்புநிலைநிற்கவேணும்ஜெகதீசா

அரிச்சந்திரன்-விருத்தம்.

இப்படி மனதிலெண்ணி யெந்திழை குனிந்துநிற்க
கைப்பிடி வாளெடுத்துக் கடவுளை நினைந்துகொண்டு
எப்படி வெட்டுவேனென் றேங்கியே ராஜன்றனும்
செப்பிடு ந்தேவர்தம்மைத் தியானித்துக் கொண்டுமன்னன்.

ஷை விருத்தம்.

சந்திர வாளெடுத்துத் தன்கையிற் பிடித்துக்கொண்டு
இந்திரர் வானோர்பார்க்க எந்திழை குனிந்துநிற்க
விந்தையாய் வசிஷ்டர்தம்மை சிரலும் நமஸ்கரித்துத்
தொந்தமா யோங்கிவெட்டத் தோரணமாலையாச்சே.

பொது வசனம்.

இப்படியாக அரிச்சந்திரன் மனைவியைவாளாலோங்கிவெட்ட அது சந்திரமதிகழுத்தில் மாலையாகவிழுந்தது அதை அரிச்சந்திரன் பார்த்து வெட்டிவிழுகையில் [illegible]

இராகம்-தன்னியாசி-அடதாளச்சாப்பு.

பல்லவி

பொய்யாய்ப்போச்சே சந்திரயுகம் பொய்யாப்போச்சே

அநுபல்லவி.

மெய்யுங்கடுங்கிறதே கையுங்கடுங்கிறதே
அய்யோவிஸ்வநாதா அரனேநானென்னசெய்வேன் (பொ)

சரணங்கள்.

உறுதிசெய்துநானோங்கிவெட்டாமலே
தருகின்றேனே தவிக்கிறேனிப்போது (பொ)

சத்தியந்தவறேனே சந்தேகம்நினைந்தேனே
புத்தினிசந்திரமதி பதறியழுதிட்டாளோ (பொ)

பத்தியாகநானும் பண்புடன்வெட்டினேன்
வெத்தியாய்வெட்டிட்ட விழுந்ததேமாலையாய், (பொ)

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரமதி யேதுகாரணத்தினாலோ நான்வெட்டின வெட்டு மாலையாக உன்கழுத்தில் விழுந்தது ஆகிலும்இன்னொருதபா உன்னைவெட்டுகிறேன் குனிந்துநில்லும்பெண்ணேசந்திரமதி.

சந்திரமதி வசனம்.

ஆ என்பிராணநாதா மனதில்நானொன்றும் வித்தேசமாகநினைக்கவில்லை இது எதுகாரணமோ தெரியவில்லைஅப்படியே குனிந்துக்கொண்டேன் பிராணநாதா,

பொது-வசனம்.

இப்படியாக அரிச்சந்திரன்மனைவியைவெட்டத்துணிந்துகொண்டிருக்குஞ்சமையத்தில்திருமூர்த்திகளறிந்து-ஆகா அரிச்சந்திரன்

சத்தியத்துக்காக மனைவியை வெட்டத்துணிந்தானென்றுஞானதிருஷ்டியினால் தெரிந்து அவாளவாள்மனைவிசமேதராய்பிரப்பட்டுவருகிறதைசுப்பிரமணியக்கடவுளுமறிந்துவள்ளியம்மை தெய்வானைசமேதராய் பிரயாணப்பட்டார் அதையறிந்து முப்பத்துமுக்கோடிதேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியீஸ்பரர்களும் வசிஷ்டர் விஸ்வாமித்திரர் முதலான முனிவர்களும் தேவேந்திரன் முதலான தேவர்களும் அந்தரவாசியாக வந்துநிற்கப் பரமசிவன் அரிச்சந்திரனை வெட்டக்கூடாதென்று தடுக்கிறவிதங்காண்க.

திருமூர்த்திகள்-விருத்தம்.

சத்தியவா ளெடுத்துவேந்தன் தாங்கியேயோங்கும்போது
கர்த்தனு மயனுமாலுங் கண்டுமே கிழிறங்கி
பத்தினி மாதைவெட்டப் பதறாதே மன்னாநீயும்
வெற்றியுன் காரியமாச்சு வேந்தனே நிறுத்துமென்றார்.

இராகம்-முகாரி-அடதாளச்சாப்பு.

பல்லவி.

பொறுபொறுவெட்டாதே அரிச்சந்திரா
பூலோகம் ஆண்டமன்னா (பொ)

அநுபல்லவி.

பொறுபொறுவெட்டாதே புண்ணியகதியடைவாய்
உறுதியுனைப்போலே உலகத்திலாருங்காணேன் (பொ)

பரமசிவன்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அரிச்சந்திரா வெட்டவேண்டாம் நில்லுநில்லு முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியீஸ்பரர்களும் ஒவ்வொரு காரணத்திலேயும் பொய்சொல்லியிருக்கிறார்கள் பிர்மாவும் விஷ்ணுவும் நானும் பொய்சொல்லியிருக்கிறேன் ஆகையால் நீர் விஸ்வாமித்திரனாலே அனேகஅவஸ்தைப்பட்டும் உன்வாக்கிலே பொய்பிறக்கவில்லை ஆனதால் நீ சத்தியவந்தன் தான் வெட்டுகிறதை நிறுத்தும் உன்மகனையும் காசிராஜன் பிள்ளையையும் யெழுப்பித்தருகிறேன் பிள்ளாயரிச்சந்திரா.

திருமூர்த்திகள் சபை.



சுப்பிரமணியர்.

பரமசிவம்.

விஷ்ணு

பிர்மா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

கங்கையும் பிறையுந் தும்பையு மறுகுங்
  கடுக்கையு மெருக்கமிச் சடையுங்
கணபணு டவினீ ருபசக்[illegible] கணமுங்
  காதினிற் கவசகுண் [illegible]முஞ்
செங்கையில் மானும் மழுவுமே தரித்துச்
  சிரமுடன் சூலமு மேந்திச்
செக்கர்வான் மேனிதவளநீ றணிந்து
  செம்புலி யுரியுடை யுடுத்தி
மங்கையோர் பாகந் தன்னையே வைத்து
  மதியுறு வெள்விடை யேறி
மலரடி தன்னி[illegible] சிலம்பொலி யார்ப்ப
  வந்தெனை [illegible]ண்டரு ளிதயத்
தங்கிருந்தருளும் அம்பலத்தரசே
  அமரர்கள் தேடியுங் காணு
ததிசயவடிவே சதுர்மறைப் பொருளே
  அய்யனே ஞானதே சிகனே.

ஷை வசனம்.

சாக்ஷாத் எம்பெருமானே நான் அனேககோடிகாலந்தவஞ்செய்தபோதிலும் இவ்வளவுபேர்களையுங்கண்ணாலேகாண்பேனு விஸ்வாமித்திர சுவாமிகளாலே தாங்களையெல்லாங் காணும்படி யாயிற்றே ஜெகதீசா.

அரிச்சந்திரன் விருத்தம்.

கௌசிக முனியேஅய்யா கபடமாய்ப் பிறட்டுச்செய்தீர்
தவமதுகோடி செய்தும் தலைவனைக் காண்பதில்லை
சிவனுட பாதங்கண்டேன் தேவர்மா லயனுங்கண்டேன்
பவமது தொலையக்கண்டேன் பரகதியடையுவேனே.

ஷை வசனம்.

அகோவாருங்களைய்யா சுவாமி நீர்செய்த இம்சையின்பொருட்டால் அனேககோடிகால் தபஞ்செய்த போதிலுங் காணக்கூடாத

திருமூர்த்திகளையுங் கண்டேன் இனிமேலடியேன்சென்மசாபல்லி யமடையுமேனையா சுவாமி.

பரமசிவன் வசனம்.

அகோவாரும் பிள்ளாய் அரிச்சந்திரா மற்றகாரியமெல்லாமிருக்கட்டும் இப்படியே அயோத்தியில் நாங்களெல்லோருமிருந்துஉனக்கு ராச்சியபட்டாபிஷேகஞ் செய்யுகிறோம் நீர் பொய்சொல்லவேண்டாம்பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

காசிமாநகரில்வந்து கட்டுண்டு அடிபுண்பட்டு
வாசமாமனைவிபிள்ளை மறையோர்க்கு விற்றுமாயாலும்
நீசனுக்கடிமையாகி நெடுஞ்சுடுகாடு காத்துப்
பூசிதநகரையாண்டால் பூதலத்தோர் நகைப்பார்.

ஷெடி வசனம்.

ஜெகதீசா நாங்கள் யிவ்வளவு பாடுபட்டபின்பு இனிமேல்ராச்சியம் ஆளுகிறதைப்பார்க்கிலும் தங்களுடையபாதாரவிந்தஞ்சேர்த்துக் கொள்ளவேணுமையா சுவாமி.

பரமசிவன் வசனம்.

அகோ வாரும்பிள்ளா யரிச்சந்திரா உன்மனைவியும் நீயும்மனகஷ்டப்பட்டீர்கள் உங்களுடைய மனதைச் சோதிக்கும்பொருட்டுசெய்த காரியமாகத்தெரிகிறது அதைப்பத்தியோசிக்கவேண்டியதில்லை நீர்அயோத்தியாபுரியை பட்டாபிஷேகஞ் சூட்டிக்கொள்ளும்பிள்ளாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி இனிமேல் தாங்களுடைய பாதாரவிந்தந்தான் கிடைக்கவேணுமையா சுவாமி.

பரமசிவன்சொல்-விருத்தம்.

சந்திரமதியைக்கொண்டார் தயவுள்ள அக்கினிதேவன்
வந்துன்னை அடிமைகொண்டார் வாசவன்எமராசன்

மூர்த்தியுன்கூட வந்தார் தகன்மையாய்சுக்கிராச்சாரி
பந்தமா மயானந்தானும் பார்த்திடா யெக்கியசாலை.

ஷை வசனம்.

அகோவாரும் பிள்ளாய் அரிச்சந்திரா சந்திரமதியை விலைக்கு வாங்கினவன் அக்கினிபகவான்உன்னைச்சிறையத்துக்குவாங்கினவன் எமதர்மராஜன் நீ மயானங்காத்தது யெக்கியசாலை ஆதியிலேஉன்கூடத் தாருக்குவந்தவன் சுக்கிரபகவான்பிள்ளாய் அரிச்சந்திரா.

சுக்கிரபகவான்-வசனம்.

ஓ அரிச்சந்திரா உன்னைக் கோமதியாற்றங்கரையிலேகிட்டிகட்டினது யாதிருக்கிறதா நான்தான்பிள்ளாயரிச்சந்திரா.

அக்கினிபகவான்-வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அரிச்சந்திரா உன்பெண்சாதியும்பிள்ளையும் நான்தான்வாங்கினேன் இந்தாரும் நீரெழுதிக்கொடுத்தவிலைமுறிபார்த்துக்கொள்ளும் பிள்ளாயரிச்சந்திரா.

எமதருமராஜன்-வசனம்.

ஓ அரிச்சந்திரா உன்னைச் சிறையத்துக்குவாங்கினது நான்தான் இந்தாரும் நீரெழுதிக்கொடுத்த விலைமுறி பார்த்துக்கொள்ளும் மயானங்காத்தது யெக்கிய சாலையென்று அறியும்பிள்ளாயரிச்சந்திரா.

பொது வசனம்.

இந்தப்படிக்கி இவர்கள்கொண்டுவந்து கொடுத்தவிலைமுறியிரண்டும் நம்மதுதானென்று அரிச்சந்திரன்பார்த்துப் பின்பு மயானத்தை யேரிட்டுப்பார்க்கும்போது அங்கே லெட்சுமிதேவிவாசமாகவும் அந்தயிடங்களெல்லாமவேழ்விச்சாலைகள்போலவும் இருக்கக்கண்டு மகிழ்வடைந்தா னரிச்சந்திரன்.

பரமசிவன்-வசனம்.

அகோவாரும்பிள்ளாயரிச்சந்திரா இதோகாசிராஜன்குழந்தை வந்துவிட்டான் உம்முடைய மகன் லோகிதாசனும்வந்துவிட்டான் உனக்குவந்த விபத்துகளெல்லாம்நீங்கிவிட்டது பட்டாபிஷேகம் சூட்டிக்கொள்ளும் பிள்ளா யரிச்சந்திரா.

வசிஷ்டர் விருத்தம்.

என்னுடன் விஸ்வாமித்திர னடக்காகவாதுபேசி
உன்னையிவ்வாறுசெய்தான் ஊழ்வினைய நுபவித்தாய்
மின்னியகயிலைவாசர் விளம்பியநெறியேசென்று
மன்னியநாட்டையாள்வாய் மாமுடிதரித்தேமன்னா.

ஷடி வசனம்.

அகேள் அரிச்சந்திரா யென்னுடன் விஸ்வாமித்திரன் சபதம் போட்டு உன்னை யிவ்வாறு செய்தான் நீர்பரமசிவன் திருவாய்மலர்ந்தருளியபடி பட்டாபிஷேகஞ் சூட்டிக்கொள்ளும் பிள்ளாய் யரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே சூட்டிக்கொள்ளுகிறேன் எங்கள்குலக்குருவே.

பரமசிவன்-விருத்தம்.

வானவர்க்கரசேநீயும் வாரணவாசிவேந்தன்
தானுமேயிந்தமன்னன் றன்னை அயோத்திசேர்த்து
தேனெனுமொழியாளோடு திகழ்சிங்காதனத்தில்வைத்தே
நீணிலமகுடஞ்சூட்டி நிலையினுக்கேகுவீரே.

ஷடி வசனம்.

கேளுந் தேவராஜனே நீரும் காசிராசனும் வசிஷ்டர்விஸ்வாமித்திரரும் அரிச்சந்திரனை அழைத்துப்போய் முன்புராச்சியஞ்செய்ததுபோலவேசிங்காதனத்தில்வைத்து மகுடாபிஷேகஞ்செய்து விஸ்வாமித்திருடைய தவத்திற்பாதி தத்தம்பண்ணிவித்து உம்முடையலோகத்துக்குப்போய்ச் சேருந் தேவராஜனே.

வசிஷ்டர்-வசனம்.

தேவர்கள் சொன்னபடிக்கு அரிச்சந்திரன் சந்திரமதி லோகிதன் இவர்களை அயோத்திக்குக் கூட்டிக்கொண்டுபோய் நாங்களெல்லோரும் பட்டாபிஷேகஞ் சூட்டிவைத்துவிட்டு வருகிறோம் கர்த்தனே.

பொது வசனம்.

இப்படியாகப் பரமசிவன் சொல்லியபின்பு அவரவர்கள் இருப்பிடம்போனார்கள் அதற்குப்பின் தேவேந்திரனும் காசிராஜாவும்வசிஷ்டர் விஸ்வாமித்திரரும் அரிச்சந்திரன சந்திரமதி லோகிதாசன்சத்தியகீர்த்தி இவர்களெல்லோரும் அயோத்தியாபுரிபட்டணம் வந்துசேர்ந்து விஸ்வாமித்திரர் தவத்தின்பொதி தாரைவார்த்து அரிச்சந்திரனுக்குப் பட்டாபிஷேகம் சூட்டுகிறவிதங்காண்க.

ஸ்ரீ ராகம்-அட தாளச்சாப்பு.

பல்லவி.

இராஜன்வந்தானே அயோத்திக்கி ராஜன்வந்தானே.

அநுபல்லவி.

வாசவனாகியமுனிதன்னுடன் (இரா)

சரணங்கள்.

பெரியக்குறையாத புண்ணியனரிச்சந்திரன்
பொற்கொடிமாதுடன் புத்திரனுங்கூட (இரா)

வையம்புகழ்ந்திட [illegible]க்கிரியுங்கூட்டி
ஐயமில்லாமலே அரசாட்சிசெய்திட (இரா)

தேசத்தோர்மெய்க்கச் சிறப்புடனெல்லோரும்
சிங்காரமாகவே சிந்தைமகிழ்வுடன் (இரா)

இராகம்-அடாணா-அடதாளச்சாப்பு.

பல்லவி.

பட்டமுங்கட்டினனே அரிச்சந்திரற்குப் பட்டமுங்கட்டினனே

அநுபல்லவி.

பட்டமுங்கட்டினர் பாருலகோர்பார்க்கத்
திட்டமுடனேதானும் தேவேந்திரன்கையால் (பட்)

பொது-வசனம்.

இப்படியாகத் தேவராஜனும் தேவர்களும் வசிஷ்டர் முதலாகிய முனியீஸ்பரர்களும் காசிராஜனும் அரிச்சந்திரனுக்குப்பட்டாபிஷேகஞ்செய்து பல ஆசிகள்கூறி அவரவர்களிருப்பிடத்திற் கேகினார்கள்.

அரிச்சந்திரன்

பட்டாபிஷேகம்.

இராகம்-நாட்டை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மங்களம் மங்கள மங்களம் ஜெயசுப மங்களம் மங்கள (மங்களம்)
அம்பிகைமீனாள் தனக்கும் ஆலவாய்ச்சொக்கேசருக்கும் (மங்களம்)
வாசவனு மரிச்சந்திரன் வசிஷ்டர் கோசிகருக்கும் (மங்களம்)
பத்தினி சந்திரமதிக்கும் பாலகன் லோகிதனுக்கும் (மங்களம்)

அரிச்சந்திர நாடகம்.
முற்றிற்று.

பலவேஷம்வருகிறபாகம்.

இராகம்-கமாஸ், தாளம்.

பல்லவி.

வந்தாளேதெக்குத்தியாள் மதுரைப்பட்டணம்பார்க்க
வாராளேதெக்குத்தியாள் மதுரைப்பட்டணம்பார்க்க (வந்தா)

அநுபல்லவி.

பந்துமுலையைக்காட்டி பசப்பிமுகத்தைக்காட்டி
கொந்தளப்பொன்னேலைமாட்டி கோகிலம்போலேசீமாட்டி (வந்தா)

சரணங்கள்.

பச்சைவளையல்தொட்டு பாங்கானபொட்டுமிட்டு
கொச்சிமஞ்சள்தானணிந்து குலுங்கநடைநடந்து (வந்தா)
ச[illegible]மாகவேதான் சாயச்சேலையுடுத்தி
மந்தாரை[illegible]சிமுல்லை மலரைக்கொண்டையிற்சூடி (வந்தா)
சாந்துக்காரையுந்தொட்டு சவ்வாதுப்பொட்டுமிட்டுப்
பாந்தமுடன்வங்கணப் பையலைக்கூட்டிக்கொண்டு. (வந்தா)

இராகம்-அபுரூபம்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மதுரைத்திருநாட்கூத்துப்பார்க்க வாரமின்னியடி
குட்டிகுட்டி வாரமின்னியடி இப்போ
வங்கணக்காரப்பயலைச்சேர்ந்து மாட்டேனின்னியடி
குட்டிகுட்டி மாட்டேனின்னியடி
ஸ்ரீவிலிபுத்தூருத்திருநாள்பார்க்க வாரமின்னியளே
மச்சான் மச்சான் வாரமின்னியளே இப்போ
சிவத்தச்சிரிக்கியை வைத்துக்கிட்டு மாட்டோமென்னியளே
மச்சான்மச்சான் மாட்டோமெனனியளே
திருவாத்தூருத்திருநாள்பார்க்க வாரமின்னியடி
குட்டிகுட்டி வாரமின்னியடி இப்போ
சேர்க்கைக்காரப் பயலைச்சேர்ந்து மாட்டேனென்னியடி
குட்டிகுட்டி மாட்டேனென்னியடி
தஞ்சாவூருத்திருநாள்பார்க்க வாரமின்னியளே
மச்சான்மச்சான் வாரமின்னியளே
சவங்கச்சிறுக்கியை வைத்துக்கிட்டு மாட்டோமென்னியளே
மச்சான்மச்சான் மாட்டோமென்னியளே

இராகம்-பந்துவாளி-அட தாளம்.

கண்ணிகள்.

வந்திடுங்கோ திருநாளுக்கு ஏ மச்சான் மச்சான் (வந்)
வரமாட்டேன் திருநாளுக்கு ஏ மச்சி மச்சி (வர)
காதுக்குக்கடுக்கனில்லை கணடைபோட்டசோமனில்லை (வர)
காதுக்குக்கடுக்கன் தாரேன்கண்டைபோட்டசோமன் தாரேன்(வ)
கையிலொருகாசுமில்லை [illegible]ன்கொடுப்பாராருமில்லை (வர)
கையினிலேகாசு தாரேன்கண்டைபோட்ட உருமால் தாரேன்(வந்)

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தஞ்சாவூருச் சரபோகிமகராஜா
தம்பூருக்காரனை வைத்திருந்தேன் அவர்
அண்ணன்தம்பிமாரை வைத்திருந்தேன் அவர்
மாமன்மைத்துனன்மாரைவைத்திருந்தேன் நான்
எத்தனைபேரோடே போனாலும் என்னை
ஏனென்றுங்கேளானே என்கணவன்.
ராம ராஜாபுரம் ராஜரீகஞ்செய்யும்
நல்லமநாய்க்கரை வைத்திருந்தேன் அவர்
அண்ணன்தம்பிமாரை வைத்திருந்தேன் அவர்
மாமன்மைத்துனன்மாரை வைத்திருந்தேன் நான்
எத்தனைபேரோடே போனாலும் என்னை
ஏனென்றுங்கேளானே என்கணவன்.
சாயச்சேலைக்கிசா [illegible]கைசப்பட்டுவெகு
சாயக்காரரை வைத்திருந்தேன் அவர்கள்
அண்ணன்தம்பிமாரை வைத்திருந்தேன் அவர்கள்
மாமன்மைத்துனன்மாரை வைத்திருந்தேன் நான்
எத்தனைபேரோடே போனாலும் என்னை
ஏனென்றுங்கேளானே என்புருஷன்.

இராகம்-அபுரூபம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னடி யெண்ண[illegible]ய் கண்டார ஒளி
என்ன சொன்னே னென்று ஏசுறாய்

அநுபல்லவி.

உப்புக்கும அவனுடைய நட்புக்குங் கன்னுன்கடைந்த
செப்புக்குந்தட்டானடித்த கொப்புக்கும்போனசிரிக்கி (என்)
சோத்துக்கும் முருங்கைக்கீரைச் சாத்துக்கும் அழுகத்தேங்காய்க்
கூத்துக்கும் வண்ணான்கொடுத்த மாத்துக்கும் போனசிரிக்கி (என்)
மாலைக்குங் கிழிந்தசாயச் சேலைக்கும் நகாசினுட
வேலைக்கும் பித்தாளைக்கம்பி ஓலைக்கும்போனசிரிக்கி (என்)
பூசைக்கும் நறை... மீசைக்கும் பொருள்கொடுத்த
ஆசைக்கும் சோளக்குரு...த தோசைக்கும்போனசிரிக்கி (என்)
குளிக்கும் மஞ்சளுங் கொட்டைப் புளிக்கும்கிலீட்டுநகை
வெளிக்கும் கொம்புத்தேனின் துளிக்கும்போனசிரிக்கி(என்)

இராகம்-புன்னாகவராளி-அடதாளம்.

பல்லவி.

...ளம் மங்களம் மங்களம் - ஜெயசுப
மங்களம் மங்களம் மங்களம்.

அநுபல்லவி.

பொங்கமுடனே அயோத்தி பூமிதனை யாண்டதொரு
பூபால னரிச்சந்திர புண்ணியமக ராஜனுக்கு (மங்களம்)

சரணங்கள்,

சத்தியத்தை நிலைநிறுத்துந் தையலாள் சந்திரமதிக்கும்
சர்வலோகம் பேருபெற்ற லோகிததா சன்றனக்கும் (மங்களம்)
மந்திரிசத்திய கீர்த்திக்கும் வசிஷ்டமா முனிவருக்கும்
விந்தையாய்ச் சோதித்ததொரு விஸ்வாமித்திரமாமுனிக்கும்(மங்)
பத்தியைச் சோதிக்கவந்த பரமசிவன் பார்வதிக்கும்
சித்தமகிழ்ந் தேஅயோத் திருமுடிசூட்டினோர்க்கும் (மங்களம்)
நாடகத்தை மனதுகந்து நாட்டமுடன் படிப்பவர்க்கும்
பாடியதை ஆடுவோர்க்கும்பட்சமுடன்சொல்பவர்க்கும்(மங்களம்)

விருத்தம்.

வாசவனரிச்சந்திரன் றன் மன்னவன்கதைதயைநன்றாய்
ஆசையாய்ப்படித்தோர்கேட்டோர் ஆடினோர்வாழ்ந்திருக்கத்
தேசத்தோர்மெய்க்கவேதான் சிறப்பாகஉறுங்குசெய்தோன்
நேசமா யெந்தனாளும் நேர்மையாய் வாழ்வர்தாமே.

அரிச்சந்திர நாடகம்.

முற்...றது.

உ

ஸ்ரீராமஜெயம்.

விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதியாதெனில்மதுரை - அணஞ்சபெருமாள் பிள்ளையவர்கள் - சிவகங்கைசிவசாமி அவர்கள் - திருவாடானை துரைச்சாமி அவர்கள் - ஆரப்பாளையம்மூக்கவேளாளரவர்கள் நாடகமாடக்கூடிய இந்த அரிச்சந்திரநாடகமும், ஷை சிவசாமி அவர்கள் சபா, நடத்திய அழகே[illegible]கமும் உயர்ந்த கிளேஸ்கடிதத்தில் அச்சிட்டு ஆங்காங்கு படங்களும் போட்டு தயாராயிருக்கிறபடியால் அடியில்கை[illegible]யொப்பமிட்டிருக்கிறவர்களிடத்தில் கிரையத்துக்கு பெற்றுக்கொள்ளலாம்.

		ரூ.	அ.	பை
அரிச்சந்திரநாடகம்	1-க்கு	1	[illegible]	0
அழகேந்திரசபாநாடகம்	1-க்கு	0	12	0
முத்துச்சாமிமுனிவர்விஞ்ஞானதீப	1-க்கு	0	8	0
வேலாயுததாசரவர்களியற்றிய மன்மதசரித்திரலாவணி	1-க்கு	0	4	0
புஸ்த[illegible]ம்-1-க்கு [illegible]பால்சார்சு.		0	4	0

பதில்வேண்டுவோர் ரிப்ளேகார்ட் அனுப்பவேண்டும்.

மதுரை-புதுமண்டபம்

புஸ்தகக்கடை.

☞ ஆவுடையப்பபிள்ளை.

இப்படிக்கு,

☞ இ [illegible]ா. ம. குருசாமிக்கோனார்.

[illegible]க்ஷாப். புதுமண்டபம்.

மதுரை.

இந்த அரிச்சந்திர நாடகவர்னமெட்டுகளும். ராகங்களும்

அழகேந்திரநாடக வர்னமெட்டுகளும் ராகங்களும்

தெரிந்துக்கொள்ள வேணுமானால்

ம - ா - ா - ஸ்ரீ,

தெற்கு மாசிவீதியில்

மதுரை, அணஞ்சபெருமாள்பிள்ளை யவர்களிடத்திலும்
மதுரை, மேல்மாசிவீதி ஆறுமுகபண்டார மிடத்திலும்
மதுரை, அழகர்சாமி பாகவதரவர்களிடத்திலும்
மதுரை, பூக்கடை முத்தையக்கோனரவர்களிடத்திலும்
ஆரப்பாளையம், மூக்கவேளா ரவர்களிடத்திலும்
கல்லனை, முத்தழகரய்யங்கா ரவர்களிடத்திலும்
கோரிப்பாளையம், முத்துக்கருப்பமுதலியாரவர்களிடத்திலும்
திருவாடானை, துரைசாமிசேர்வைகாரவர்களிடத்திலும்
சொரிக்குளம், தம்புசாமிதேவரவர்களிடத்திலும்
வடபட்டி, ராமசாமிதேவரவர்களிடத்திலுல்
சிவகங்கை, சிவசாமி அவர்களிடத்திலும்
மானாகுடி, முத்துகிருட்டிண உபாத்தியாயரவர்களிடத்திலும்
பட்டமங்கலம், பெரியதம்பியாபிள்ளையவர்களிடத்திலும்
அட்டபட்டி, அழகவேளாரவர்களிடத்திலும்
ஓரங்காப்புளிபட்டி, இராமநாசாரியவர்களிடத்திலும்
காரக்குடி ஒக்கூர், சுப்பனாசாரியவர்கள் குமாரர்
முத்துச்சாமி ஆசாரியவர்களிடத்திலும்
பலவாங்குடி, இராமாயணபா...
சுப்பராய அய்யரவர்களிடத்திலும்
சிவகாசி, ச. மாணிக்கநாடாரவர்களிடத்திலும்
ஸ்ரீ வில்லிபுத்தூரைச்சேர்ந்த சுந்தரபாண்டியங்கிராமம்
அகத்தாபட்டி, நா. இராமசாமிதேவரவர்களிடத்திலும்
வத்திராயிருப்பு, கருப்பணத்தேவரவர்களிடத்திலும்
கல்லுப்பட்டியைச்சேர்ந்த காடநெரிகிராமத்திலிருக்கும்
சுந்தரமாசாரி யவர்களிடத்திலும்
மதுரை, தெற்குவாசல் இராமநாசாரிமகன்
நாகப்பனாசாரி யவர்களிடத்திலும்
காமாக்ஷிபுரம், பொ..ாம்பிள்ளையென்ற
வீரபத்திரனம்பலகாரவர்களிடத்திலும்

ஷை யூர் கிஸ்ட்ணாராவுமகன், ஸ்ரீமோசிராவு அவர்களிடத்திலும்
கீளமாத்தூர் மைதீன், இராவுத்தரவர்களிடத்திலும்
சமையநல்லூர், பெரியசாமிதேவரவர்களிடத்திலும்
ஊமச்சிகுளம், சுப்பிரமணியபிள்ளையவர்களிடத்திலும
மண்டலமாணிக்கம், சங்கரனாசாரியவர்களிடத்திலும்
ஷையூர், சு. பாடலிங்கமுதலியாரவர்களிடத்திலும்
ஷையூர், கீ. கிஷ்டணத்தேவரவர்களிடத்திலும்
ஷையூர், க. அய்யம்பெருமாள்பிள்ளையவர்களிடத்திலும்
அலங்காநல்லூர், க. பெரியகெங்கை அண்ணாவி அவர்களிடத்தி

வர்ணமெட்டுகளும் இராகங்களும் தெரிந்துக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோன்.

புக்ஷாப் புதுமண்டபம்.

மதுரை.